அரசடியான்

125ஆவது ஆண்டு நிறைவு மலர்

1888 - 2013

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன்

தமிழ் கலவன் பாடசாலை

கரவெட்டி.

அரசடியாள்

125 ஆவது ஆண்டு நிறைவு மலர்

J/NELLIYADY M.M.T.M. SCHOOL
கற்றாய்ந் தொழுகு
KARAVEDDY

நூற்று இருபத்தைந் தாண்டுமுன் கல் விச்சுனை
யூற்றை மெதடிஸ்த மிஷன் தன் - ஆற்றுப்
படுத்தலையா ரம்பித் தரசடியில் ஏற்று
எடுத்த ''அரசடியாள்'' ஏடு.

1888 - 2013

**யா// நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்
கலவன் பாடசாலை
கரவெட்டி.**

மலரின் பெயர்	:	அரசடியாள்
வெளியீடு	:	யா/ நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
மலராசிரியர்	:	திரு. கந்தசாமி முரளீதரன் (ஆசிரியர்)
பதிப்பு	:	2013.11.30
அச்சுப்பதிப்பு	:	தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி.
அட்டை வடிவமைப்பு	:	யூ. யூ. பற்றிக்
புகைப்படம்	:	நிதுஷா ஸ்ரூடியோ, நெல்லியடி.
பிரதிகள்	:	600
பக்கங்கள்	:	214
அளவு	:	B5
தொலைபேசி	:	0212262500
email	:	nmmtms@mail.com

மகுட வாசகம்

"கற்றாய்ந்தொழுகு"

MOTTO

BE DISCIPLINE WITH VIRTUOUS LEARNING

தொலைநோக்கு

நவீன கலைத்திட்ட மாற்றங்களுக்கு ஏற்ப தரமான கல்வியினூடாக எதிர்கால சவால்களுக்கு இயலுமையாகுதல்

VISION

ADAPTING TO THE CHALLENGES THROUGH QUALITY EDUCATION IN COMPLIANCE WITH MODERN CURRICULAR CHANGES.

குறிக்கோள்

- மாறும் நவீன கலைத்திட்ட மாற்றங்களை ஏற்றல்.
- மாணவர் மையக்கல்வியை உறுதிப்படுத்தல்.
- உச்ச பயன் தரும் வகையில் ஆசிரியர் வாண்மை விருத்தியை வலுப்படுத்தல்.
- இணைந்த மகிழ்ச்சிகரமான முறைசார் கல்வி நிறுவன மயமாதல்.

MISSION

- *RECOGNIZING THE DYNAMIC MODERN CARRICULAR CHANGES.*
- *ENSURING STUDENT CENTERED EDUCATION.*
- *EMPOWERING PROFFESSIONAL DEVELOPMENT OF TEACHERS AT OPTIMUM LEVEL.*
- *INSTITUTIONALIZATION OF INTEGRATED PLEASURABLE FORMAL EDUCATION*

பாடசாலைக் கீதம்

பல்லவி

வாழ்க வாழ்க வாழ்கவே - பாலர்
வாழ்வின் கூடமான பாடசாலை வாழ்கவே

அனுபல்லவி

நெல்லியடி மெதடிஸ்த நேரில்லா நம் பாடசாலை
எல்லையேதும் இல்லையென்று வாழ்க வாழ்க வாழ்கவே.

சரணம்

அன்பு தேடும் பாலர் நாம் அருமைத் தமிழின் நிழலிலே
இன்பினோடு இதயகானம் இனிமையாகப் பாடியே
இன்ப வாழ்வு பெற்று நாம் இறைவன் பாதம் சூடியே
தென்பு பெற்ற மனிதராய் தெளிவினோடு வாழுவோம்.

சாஸ்திரங்கள் கற்று நாம் தரணியெங்கும் ஓங்கியே
நேத்திரமாய் எண்ணெழுத்து நேர்த்தியாக நாம் பெற
அகத்தகத் தகத்திலே ஒன்றிணைந்த கல்வியை
தகத்தக நமக்கருள் தாயதான பாடசாலை.

வைத்த கால் எடுத்திடாமல் வாழ்வில் முன்னெடுத்துமே
நித்த நித்த நீடு நாங்கள் நீர்மை மேவு கல்வியை
சித்த மீதுருத்தியே சீரிதான நம்மினம்
மெத்த மெத்த மேலிட கற்ற வாறொழுகுவோம்.

ஆக்கியோன்

திரு. சி. வேலாயுதம்

முன்னை நாள் அதிபர்

(சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்)

தமிழ்த்தாய் வணக்கம்

(ஒற்றாழிசைக் கொச்சகக்கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

மனோன்மணியம்

பேராசிரியர் பொ. சுந்தரம்பிள்ளை

தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

- மகாகவி பாரதியார்

மலரில் மலர்ந்துள்ளவை

1.	இதழாசிரியர் உள்ளத்திலிருந்து	i
2.	அரசடியாள் அடியிலிருந்து	iii
3.	ஆசிச் செய்திகள்	iv - vi
4.	வாழ்த்துச் செய்திகள்	vii - xxxviii
5.	பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்	1 - 4
6.	பாடசாலை ஆளணி விபரம் - 2013	5
7.	அதிபரின் உள்ளத்திலிருந்து	6 - 13
8.	வாழ்த்து	14 - 15
9.	வாழும் வகுப்பறைகள்	16 - 17
10.	தொழில்நுட்பவியல் பாடத்துறையின் அறிமுகம்...	18 - 24
11.	குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்கு...	25 - 27
12.	ஆரம்பக்கல்வி அற்புதமானது	28 - 29
13.	சிறுவர்களும் உணவுப் பழக்கமும்	30 - 31
14.	ஆனந்தமான ஆரம்பக்கல்வி	32 - 33
15.	The art of the storytelling	34 - 37
16.	மாணவர்களின் கற்றல் திறன் வளர்ச்சி	38 - 40
17.	மாணவர் ஒவ்வொருவரதும் தேர்ச்சி நோக்கியனவாக...	41 - 48
18.	சிறுவர் அரங்கு - பண்பும் பயனும்	49 - 55
19.	Children learn English faster...	56 - 63
20.	ஆரம்பக் கல்வியின் விழுமியங்கள்	64 - 67
21.	பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டில் குடும்பங்களின் ...	68 - 72
22.	தொற்றா நோய்களை வருமுன் தடுப்போம்	73 - 74
23.	வாய்ச் சுகாதாரத்தைப் பேணுவோம்	75 - 81
24.	ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உளநலம் பேணுதலில்...	82 - 90
25.	சிறந்த வெற்றிக்கு முறையான கற்றல்...	91 - 93

26.	உளவியலும் உதாசீனமும்	94
27.	தொடர்பூடக மொழிகளில் கணிதத்தின் ...	95 - 96
28.	சிறுவர் உரிமைகள் ஓர் அறிமுகம்	97 - 100
29.	நாமும் சைவமும்	101 - 102
30.	பிள்ளைகளின் உளநலமும் பரீட்சைகளும்	103 - 105
31.	வதிரியில் ஓர் கலங்கரை விளக்கம்	106 - 108
32.	பனை மரம் - குறி சுட்டும் வாழ்வியல்	109
33.	பாடசாலைக் கணிதத்தை விளங்கிக் கொள்ளல்...	110 - 112
34.	ஆசிரியர் கீதம்	113
35.	கடந்தகால புலமைப்பரிசில் பெறுபேறுகள்	114 - 118
36.	போட்டி விபரங்கள்	119 - 122

இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...



திரு. க. முரளீதரன்
ஆசிரியர்,
யா/ நெ. மெ. மி. த. க. பாடசாலை.

எமது வித்தியாலய அன்னை இற்றைக்கு 125 ஆண்டுகளுக்கு முன் மெதடிஸ்த மிஷனரிமாரால் உருவாக்கப்பட்டு ஆண்டுதோறும் பல்துறை ஆற்றல் மிக்க மாணவர்களை உள்வாங்கி தரம் 5 நிறைவடையும் போது நிறைவான மாணவர் சமூகத்தை இடைநிலைக் கல்விக்காக பிரபல பாடசாலைகளுக்கு அனுப்பிப் பெருமை சேர்க்கின்றமை யாவரும் அறிந்ததே.

தொடக்க காலத்தில் ஓர் பிரதேச பாடசாலையாக ஆரம்பித்து இன்று வடமராட்சியில் அனைத்து பகுதி மாணவர்களையும் ஈர்க்குமளவிற்கு சிறப்பார்ந்த ஓர் அறிவுக்கூடமாக எம் அன்னை விளங்குவது குறிப்பிடத்தக்க சிறப்பு எனலாம்.

இத்தகைய அன்னை 125 வருடங்களாக ஆயிரக்கணக்கான மாணவர்களை உயர்நிலைக்கு இட்டுச் சென்றாள் என்றால் அது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஓர் விடயம் ஆகும்.

இத்தகைய வரலாற்றுப் பெருமைமிகு பாடசாலையில் முதன் நூலாக வெளிவரும் ''அரசடியாள்'' என்ற நூலுக்கு நூலாசிரியராக நான் இருப்பதையிட்டு பெருமை கொள்வதோடு என்னை அவையத்து முந்தியிருக்கச் செய்த பெற்றோருக்கே இப் பெருமை சாரும்.

இந்நூலை இந்த நிறைவு நாளில் வெளியிட வேண்டுமென எம் பாடசாலை முதல்வரின் மனதில் உதித்த சிந்தனைக்கு இன்று நாம் செயல் வடிவம் கொடுத்துள்ளோம். இந்நூலுக்கான பெயரை தீர்மானிப்பதில் பாடசாலைச் சமூகம் பெரும் பங்காற்றியது. இப் பள்ளிக்கு இருக்கின்ற கோட்டுப் பெயரான யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை என்ற பெயரை விட அரசடிப் பள்ளிக்கூடம் என்பதே செல்லப் பெயர். அனைவருக்கும் தெரிந்த பெயர். எனவேதான் அப்பெயர் மிளிர வேண்டும் என்பதற்காக ''அரசடியாள்'' என்ற திருநாமத்தை சூட்ட முனைந்தோம். எமக்கு அகரம் சொல்லித் தந்து ஆளாக்கிய இப் பாடசாலையை தாயாகப் போற்றி இப் பெயரை நாம் சூட்டிப் பெருமை அடைகின்றோம்.

இந்நூலில் பல்வேறுபட்ட துறைப் பெரியோர்களின் வாழ்த்துச் செய்திகள், அருளாசிச் செய்திகள், அனைவருக்கும் அவசியமான துறைசார் வல்லுநர்களின் கட்டுரைகள், பாடசாலையின் கடந்த கால நிகழ்வுகளின் புகைப்படங்கள் அனைத்தையும் தாங்கி அழகிய முகப்புத் தோற்றத்துடன் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பாடசாலையின் நூற்றாண்டு காலத்தில் முதலாவது மலர் என்ற பெருமையை இது பெறுகின்றது. இயன்றவரை வரலாற்றை உள்ளூர் அறிஞர்கள், பெரியோர்கள், பழைய மாணவர்கள் ஊடாக தொகுத்துள்ளோம். இதில் ஏதாவது குறை நிறைகள் இருப்பின் எதிர்வரும் ஆண்டுகளில் வெளிவரும் மலரில் இது திருத்திக் கொள்வதற்கும் உரித்துடையது.

இம் மலர் சிறப்புற மலர்வதற்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய மத பெரியோர்களுக்கும், ஏனைய துறைசார் வல்லுநர்களுக்கும் மலர் சிறப்புற அமைய அரும்பாடுபட்ட மலர்க்குழுவினருக்கும் எம் ஏனைய ஆசிரியர்களுக்கும் இதனை சிறப்புற நடாத்த பண உதவிகள் மற்றும் உதவிகள் வழங்கிய பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்களுக்கும், அரச வங்கிகள், வணிகத் தாபனங்கள் அனைவருக்கும் நூலாசிரியர் என்ற வகையில் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூலாக்கத்தில் முன்னின்று உழைத்த பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும் சிறப்பாக அட்டையை வடிவமைத்த Y. பற்றிக், சிறந்த அச்சுப்பதிப்பு வேலைகளைச் செய்த தமிழ்ப்பூங்கா அச்சகத்திற்கும் அதேவேளை சிறப்பாக புகைப்படங்களை வடிவமைப்பு செய்த நிதுஷா போட்டோ தாபனத்தாருக்கும் என் இனிய நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

அகரம் சொல்லித் தந்த - அன்னை
அரசடிப் பாடசாலை ஆண்டு பல
அறிஞர்களை உருவாக்கி
அளப்பரிய சேவை செய்ய
வாழ்த்துகின்றேன்
வாழ்க வாழ்க வாழ்க பல்லாண்டிங்கே.

அரசடியாள் அடியிலிருந்து...

மலர்க்குழுவினர்

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் 125ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு 'அரசடியாள்' என்கின்ற மலர் இன்று உங்கள் கைகளில் விரிந்துள்ளது.

இப்போது அதிபராக பணிபுரியும் துடிப்பும் ஆர்வமும் மிகுந்த திரு. ந. தேவராஜா அவர்களின் சிந்தனையில் கருக்கொண்ட 'அரசடியாள்' பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விமான்கள், ஊரவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் ஆதரவாலும் ஊக்கத்தாலும் இன்று உருக்கொண்டு மலர்ந்துள்ளது.

அதிபரின் சிந்தனையும் தீர்க்கமும் தூரநோக்கும் துடிப்பும் எம் பாடசாலையை என்றும் உயர்த்தும் என்பதில் ஐயமில்லை என்பதற்கு 'அரசடியாள்' சான்று பகர்கிறாள்.

இந்த அரசடியாள் கடந்த கால நினைவுகளை கரைபுரண்டோட வைக்கிறாள். நிகழ்காலத்தில் நிமிர வைக்கிறாள். எதிர்காலத்துக்கான சிந்தனைகளை தருகிறாள்.

பல்லாயிரம் புத்திஜீவிகளை உருவாக்கிய ஆலயத்தில் இருந்து மலர்ந்துள்ள மலரின் நறுமணம் எல்லோரின் உழைப்பில் இருந்து உதித்தது.

இவ்வாறான முயற்சிகள் ஆவணமாய், ஆய்வாய், படைப்பாய் தொடர வேண்டும் என்பதற்காக முதலடி இது. இன்னும் செய்ய வேண்டும், தொடர வேண்டும் என்ற ஊக்கம் எல்லோரின் மனங்களிலும் உறுதியுடன் எழுகிறது.

வதிரி உல்லியனொல்லை
கண்ணகை அம்பாள் ஆலயக் குருக்களின்
ஆசிச் செய்தி



வே. கந்தசாமிக் குருக்கள்
ஆலய பிரதம குரு

எமது பாடசாலை இவ்வருடம் 125 ஆவது வருட நிறைவு செய்வதை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது பாடசாலை ஆரம்பக் கல்வியை சிறப்பாக புகுத்தி மாணவர்களை நல்வழிப்படுத்தி எமது ஊரிலே சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது.

125 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு செய்ய முன்வந்த அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை கல்விசார் ஊழியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்பாளின் அருள் ஆசி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

லோக சமஸ்தா
சுகினோ பவந்து

ஆசியுரை



பிரம்மஸ்ரீ ரா. ரெங்கசாமிக் குருக்கள்

நெல்லியடி தடங்கன் புளியடி

முருகன் ஆலயம்

யா/ நெல்லியடி மெ. மி. த. க பாடசாலையினுடைய 125 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியிடுவதை அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இற்றைக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறிய பாடசாலையாக இருந்தது. ஆனால் இப்பொழுது மிகவும் புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு அழகான தோற்றத்துடன் ஒரு பிள்ளைநேய பாடசாலையாக திகழ்கின்றது. ஆலயம் என்றால் ஆன்மாக்கள் லயித்திருக்கின்ற இடம். இது போன்று பாடசாலையிலும் சரஸ்வதிதேவி கல்விக்கு அதிபதியாக இருக்கின்றாள். சரஸ்வதிதேவியை போற்றி வழிபட்டு அவளுடைய சக்தியால் நாம் கல்வி என்னும் பொக்கிஷத்தை பெறுகிறோம். இப்படியாக இந்த பாடசாலை மேன்மேலும் முன்னேற்றம் பெற்றிருக்கின்றது என்பதை நினைத்து பெருமிதம் அடைகிறேன். அந்த வகையிலே இப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக இருக்கின்ற அதிபர் அவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், கிராம மக்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது ஆசியை நல்கி மேன்மேலும் இப் பாடசாலை வளர்ச்சிபெற வேண்டும் என்றும் மற்றும் 125 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற நடைபெற வேண்டும் என்றும் எல்லாம் வல்ல முருகப் பெருமானுடைய திருவருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்துகொண்டு எனது ஆசியை கூறி அமைகிறேன்.

சர்வேஜனா சுகினோ பவந்து

ஆசிச் செய்தி

அருட்திரு. சு. வி. தேவகுமார்

சேகர குரு

பருத்தித்துறை - கட்டைவேலி சேகரம்



யா/ நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையானது தனது கல்விப் பயணத்தில் 125ஆவது அகவையை நினைவுகூர்ந்து வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

இப் பாடசாலையின் கல்விப் பயண வரலாற்றை திரும்பிப் பார்க்கின்றபோது 1814 இல் இலங்கைக்கு வந்த மெதடிஸ்த மிசனரிமார், அவ்வாண்டிலேயே யாழ் வடமராட்சியிலும் தமது பணியை ஆரம்பித்தனர். அவர்களின் பணியில் முக்கியமான பணிகளில் கல்விப் பணியும் ஒன்றாகும். இதற்கமைய இப் பகுதியில் மங்கி எரிந்து கொண்டிருந்த கல்வியை சுடர்விட்டு பிரகாசிக்க 1829இல் வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து பாடசாலைகளில் இப் பாடசாலையும் ஒன்றாகும் என்கிறது வரலாறு.

எனவே வரலாற்று சிறப்பு மிக்க மிகவும் பழமை வாய்ந்த இப் பாடசாலையின் பயணத்தில் தற்காலம் ஒரு பொற்காலமாக 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சைக்கு பெயர்பெற்ற ஒரு பாடசாலையாக திகழ்வது பெருமைக்குரிய ஒன்றாகும். எனவே தனது முதலாவது சிறப்பு மலரை வெளியிடும் இத் தருணத்தில் இப் பாடசாலைக்கு ஆசி வழங்குவதில் மகிழ்வதோடு, தொடர்ந்து எதிர்காலத்தில் இச் சமுகத்திற்கு ஒரு கலங்கரை விளக்காக, மலையின்மேல் வைக்கப்பட்ட தீபமாக இருந்து சூழ்ந்திருக்கும் மக்களின் அறியாமை எனும் இருளை நீக்கி அறிவு, நற்பண்பு எனும் ஒளிக்கீற்றுக்களை ஒளிரச்செய்து தனது பயணத்தை தொடர இறை ஆசி நல்கி உளமார ஆசிக்கின்றேன்.

வாழ்த்துச் செய்தி

த. குருகுலராசா

அமைச்சர்,

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகாரம்,

வடக்கு மாகாணம்,

யாழ்ப்பாணம்.

ஒரு நாட்டின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் பாரிய பணி பாடசாலையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் வடமராட்சி என்ற தமிழ் மணம் கமழும் மண்ணில் நறுமணம் மிக்க சோலையாக யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷின் தமிழ் கலவன் பாடசாலை விளங்குவது சிறப்பிற்குரியதாகும்.

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்ற வாசகத்திற்கேற்ப அன்பு தேடும் கண்ணின் மணிகளான பிஞ்சுச் சிறார்களின் அகக் கண்களைத் திறக்கும் அரிய பணி ஆரம்ப பிரிவு கற்பிக்கும் ஆசான் பணியாகும்.

கரவெட்டிப் பகுதியின் மகுடமாக விளங்கும் இப் பாடசாலை 125 ஆவது அகவையை நிறைவு கண்டு விழாக் காண்பது மகிழ்வுக்குரிய விடயமாகும்.

கல்வி என்பது கருப்பையிலிருந்து கல்லறை வரைக்கும் வியாபிக்கும் ஒரு முயற்சியாகும். இக் கல்வியை ''குன்றிலிட்ட தீபம் போல்'' குறைவற்ற நெய்யும் கருகாத திரியுமிட்டு வழிகாட்டி வருகின்ற அதிபரின் ஆளுமை தலைமைத்துவத்தின் சங்கமமாகும். அவரின் அயராத முயற்சியும், அர்ப்பணிப்பும் பயணித்துக் கொண்டிருப்பது பெருமைக்குரியது. எதிர்காலத்தின் முதுகெலும்பாக விளங்கி வரும் மாணவச் செல்வங்களின் கல்வி, ஒழுக்கம், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றில் தழைத்தோங்கி மிளிர ஆசான்களின் வழிகாட்டல் கல்வியின் மிளிர்ச்சிக்குக் காரணமாகும். இவ் ஆசான்கள் நாளைய சமூகத்தைத் தாங்கிடும் தூண்களாக மாணவர்களின் கல்வியில் ஆழமாக வேர் பதித்து நிற்கின்றனர் என்பது கண்கூடு.

மாணவர்களின் திறமைகளை இனங்கண்டு உயர்ச்சிக்கு ஏணியான தமிழ்மொழித் தினப்போட்டி புலமைப் பரிசில் பரீட்சை போன்றவற்றில் விரல் எடுத்து எண்ணும் பாடசாலைகளில் இப் பாடசாலையும் விளங்குவது பாராட்டிற்குரியதாகும்.

காத்திரமான முறையில் தடம் பதித்து வித்தகத்தில் விடியலைக் காணும் இப் பாடசாலை என்றும் அறிவிலே கார்மழையாய்ப் பொழிந்து நாடறியும் வித்தகர்களை பிரசவிக்க வேண்டும். இவ்வினைத்திறனால் தமிழ் பேசும் நல்லுலகு இன்பமும் இனிய பயன்களும் நல்கவேண்டும் என மனம் நிறைந்த ஆசியினை இம்மலர் வெளியீட்டினூடாகத் தெரிவிப்பதில் உவகை அடைகின்றேன்.

வட மாகாண கல்வி அமைச்சுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சி. சத்தியசீலன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத் துறை அமைச்சு,
வட மாகாணம்.

யா/ நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவினை ஒட்டி வெளியிடப்படும் 'அரசடியாள்' என்னும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

1888 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது வடமராட்சி கல்வி வலயத்திலே ஆரம்ப பிரிவிற்கென தனித்துவம்மிக்க பாடசாலையாக திகழ்கின்றது. வடமராட்சியின் பல பாகங்களில் இருந்தும் வரும் ஆரம்ப பிரிவு மாணவர்களிற்கு அறிவுப் பசியூட்டி பல கல்விமான்களையும் பேராசிரியர்களையும் மற்றும் பல பல்துறைசார் விற்பன்னர்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கும் பெருமை இப் பாடசாலையையே சாரும்.

இப் பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளிலும் மற்றும் இணைப் பாட விதான செயற்பாடுகளிலும் முன்னணியில் நிற்பது ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனான கற்பித்தல் செயற்பாடுகளும் தலைமைத்துவம் மிக்க அதிபரின் வழிநடத்துதலுமே ஆகும்.

பாடசாலையின் வரலாற்றினை ஆவணப்படுத்தும் நோக்கிலும் செயற்பாடுகள், சாதனைகள் மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக 'அரசடியாள்' முகிழ்வது பாராட்டத்தக்க விடயமாகும். இம் மலர் வெளிவர உழைத்த அதிபர், ஆசிரியர் குழாம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்விச் சமூகம் மற்றும் நலன் விரும்பிகள் என்பவற்றின் பணியை உளமார பாராட்டுகின்றேன். மலர் வெளியீடு சிறப்புற அமையவும், விழா சிறக்கவும் எனது நல்லாசிகளை வழங்கி நிற்கின்றேன்.

வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரது வாழ்த்துச் செய்தி



திரு. இ. வரதீஸ்வரன்
முதலமைச்சரின் செயலாளரும்
உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும்
வட மாகாணம்.

யா/ நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலையின் 125ஆம் ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடும் இத்தருணத்தில் எனது மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அறியாமை எனும் இருளினை அகற்றுவது கல்வி. கல்வியினை குழந்தையானது தான் கருவறையில் இருக்கும்போதே கற்கத் தொடங்கி விடுகின்றது. குழந்தையின் மூளை வளர்ச்சிப் பருவத்தில் ஆரம்பக் கல்வி அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. இந்தவகையில் ஆரம்பப் பாடசாலையான யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை வடமராட்சிப் பகுதியில் முன்னணிப் பாடசாலையாக விளங்கி அளப்பரிய சாதனைகளை ஈட்டி வருவது பாராட்டுக்குரியது. இவ்வாண்டு வடமாகாண ஆரம்பப் பாடசாலைகளுக்குள் சிறந்த பெறுபேற்று வீதங்களைக் கொண்ட முதல் ஐந்து பாடசாலைகளுக்குள் இப் பாடசாலை அடங்குவது மேலும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக ஆரம்ப காலத்திலிருந்தே தம்மை அர்ப்பணித்த அதிபர்களுக்கும் தற்போது மேலும் சிறப்புற அயராது பணியாற்றும் அதிபர் திரு. ந. தேவராஜா அவர்களுக்கும் சிறந்த பெறுபேறுகளுக்கான வழிகாட்டிகளாக திகழும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் பாடசாலையின் வளர்ச்சிப் பணிகளுக்கு என்றும் ஊக்கமளிக்கும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை சமூகத்தினர் மற்றும் பாடசாலையின் பெருமையினை உச்சத்திற்கு இட்டுச்சென்ற மாணவமணிகளுக்கும் எனது நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் அனைவருக்கும் இறையாசி நிறைவாகக் கிடைக்க வேண்டுகின்றேன்.

மெதடிஸ்த மிசனறியின் பாலகியே நீ வாழி

திரு. வ. செல்வராசா
மாகாண கல்விப் பணிப்பாளர்,
வட மாகாணம்.



''வளமிகு வடமராட்சியில் வளமிகு கல்வியை
வளமிட்டு வளர்க்கும் மெதடிஸ்த பள்ளியே
மிசனறியின் புத்திரியே மீயுயர் இலக்கியமே
வரலாறு உனை வாழ்த்தும் வாழி! வாழி!

ஆரம்பப் பள்ளிக்கோர் அடையாளம் நீ
ஆண்டு தொறும் சாதனைகள் படைப்பவள் நீ
ஏந்தல்களை எம்மண்ணுக் கீந்தவள் நீ
இதயத்தால் வாழ்த்துகிறேன் வாழி! வாழி!

125 ஆவது ஆண்டு நிறைவைக் காணும் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் நினைவைப் பதிக்கும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதிற் பெரு மகிழ்வடைகிறேன். வடமராட்சியில் ஆரம்பப் பள்ளிக்கான அடையாளச் சின்னமாக விளங்கும் பாடசாலையாக இதனை அடையாளம் காண்போர் பலர். அத்திவாரக் கல்விக்கு உகந்த பள்ளியாக இதனைக் கூறுவோர் பலர். பலரால் உச்சரிக்கப்படும் ஆரம்பப் பாடசாலை இது.

இப் பாடசாலையில் இடப்பட்ட அத்திவாரமே பல மாணவர்கள் உயர்கல்வி கற்கவும், சாதனை படைக்கவும் வழிவகுத்தது. இப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றுச் சாதனை படைத்தவர்கள் பலர். இவர்களிற் பலர் இம்மண்ணில் பொறியியலாளர்களாக, வைத்திய கலாநிதிகளாக, சட்டவாளர்களாக, கல்வியாளர்களாகச் சேவையாற்றி வருகின்றனர். இவ்வகையில் பலரை வாழவைத்த, வழிகாட்டிய பெருமை இப் பாடசாலைக்குண்டு. இப் பாடசாலையின் 125 ஆண்டு காலக் கல்விப் பணியில் தம்மை இணைத்துச் சேவையாற்றிய அதிபர்களும், ஆசிரியர்களும் இந்நாளில் நினைவுகூரப்பட வேண்டிய தெய்வங்களாவர்.

நெல்லியடி மெதடிஸ்த மிசன் பாடசாலை மேலும் பல்லாண்டுகள் இப்பிரதேச மக்களின் கல்விக்கு ஒளியூட்ட வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. சி. புஸ்பலிங்கம்
பிரதிப் பணிப்பாளர் (கல்வி),
கல்வி அமைச்சு
வட மாகாணம்.

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

நாடிவரும் பலருக்கு அறிவு என்னும் ஒளி கொடுத்து அவர்தம் வாழ்வில் மனிதராய் வாழ்வதற்கு அடியெடுத்துக் கொடுக்கும் அறிவுப் பூங்கா இது.

வடமராட்சி கல்வி வலயத்தில் காணப்படும் 35 ஆரம்பப் பாடசாலைகளில் முதன்மை நிலை வகிக்கும் பாடசாலைகளில் ஒன்றாக உள்ளது. இப் பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்கு இங்கு கடமையாற்றிய அதிபர்களதும், ஆசிரியர்களதும் அர்ப்பணிப்பான சேவையுடன் பெற்றோரின் ஆர்வமும் காரணமாகும். புலமைப் பரிசில் பரீட்சையிலும், தமிழ் மொழித்தினம், ஆங்கிலத் தினம், சிறுவர் அரங்கம் உட்பட பல்வேறு இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முத்திரை பதித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்று பெற்றோர்களால் விரும்பப்படும் ஒரு பாடசாலையாக உள்ளது. இப் பாடசாலைகளில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்களில் பெரும்பாலானோர் யா/ ஹாட்லிக் கல்லூரி, யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆகிய முன்னணிப் பாடசாலைகளில் தரம் 6 இற்கு இலகுவாக அனுமதி பெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் இது சிறந்த ஒரு ஊட்டப் பாடசாலையாக விளங்குகிறது.

இப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்று வெளியேறிய மாணவர் பலர் பொறியியலாளர்களாக, வைத்தியர்களாக, கணக்காளர்களாக இன்னும் பல நிபுணர்களாக இருப்பது பெரு மகிழ்வைத் தருகிறது.

மேலும் பாடசாலையின் வரலாற்றுப் பின்னணியை திட்டவட்டமாக அறிய முடியாதிருப்பது மனவருத்தமே. எனினும் இன்றைய அதிபரின் இம் முயற்சி எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு பதிவாக இருக்கும் என்பது மட்டுமன்றி ஆய்வுக்கும் இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

இப்புது மலரை வெளியீடு செய்வதற்கு முன்னின்ற பாடசாலை சமூகத்திற்கு பாராட்டுகளை தெரிவிப்பதுடன், இப் பாடசாலை தொடர்ந்தும் சிறப்பான பணியை தொடர அம்மன் அருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

வாழ்த்துரை

திரு. சி. நந்தகுமார்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

வடமராட்சி கல்வி வலயத்தின் முன்னணி ஆரம்ப பாடசாலையான யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை தனது 125 ஆவது ஆண்டு விழாவை இன்று கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கரவெட்டிக் கோட்டத்தில் நெல்லியடி பிரதேசத்தின் அரசடிப் பகுதியில் அமைந்து அறிவொளி பரப்பி வருகின்ற இவ் வித்தியாசாலையை அரசடிப் பாடசாலை என்றாலே எல்லோரும் அறிந்துகொள்ளக் கூடியதாக இன்றும் இருந்து வருவது இதன் தொன்மையையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் ஓர் குறியீடாக காணப்படுகின்றது.

1988 ஆம் ஆண்டு மெதடிஸ்த மிஷனினால் உருவாக்கப்பட்ட இப் பாடசாலை இன்று 125 ஆண்டுகளைக் கடந்து அழகிய கட்டிடங்களுடன் புகழ்பூத்த ஆரம்ப பாடசாலையாக வடமராட்சி பிரதேசத்தில் நிமிர்ந்து நிற்பது இப் பாடசாலையின் வரலாற்று சாதனைகளாலேயாகும்.

இவ் 125 ஆண்டு காலத்தில் பதினொரு அதிபர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையை இப் பாடசாலைக்கு வழங்கி தமது பெயரையும் இதன் வரலாற்றோடு ஒன்றித்திருக்கின்றார்கள். தற்போதைய அதிபர் திரு. N. தேவராஜாவின் காலத்தில் இப் பாடசாலை தனது 125 ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுவதனூடாக இப் பாடசாலையும் பெருமைபெற்று திரு. N. தேவராஜாவும் பெருமை பெறுவது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

இப் பாடசாலை தனது 125 ஆவது ஆண்டு விழாவின் வரலாற்று ஆவணமாக வெளியீடு செய்கின்ற ''அரசடியாள்'' என்னும் நூற்றாண்டு மலர் பாடசாலையின் பெயரை தன்னுள்ளடக்கி வெளிவந்திருப்பது பாராட்டுக்குரியது.

வடமராட்சி கல்வி வலயத்தின் தொடர் கல்விச் சாதனைகளுக்கு அத்திவாரம் இப் பாடசாலையில் இருந்தும் உருவாக்கப்படுவது பாராட்டுக்குரியது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனைகள் படைத்து வருவதுடன் தமிழ்மொழித்தினம், ஆங்கிலமொழித்தினம், சிறுவர் அரங்கு, வினாடிவினாப் போட்டி, விளையாட்டு என பல்துறைசார்

சாதனைகளை நிலைநாட்டி வரும் இப் பாடசாலைக்கு எனது வாழ்த்துக்கள்.

2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 29 மாணவர்கள் சித்தி யடைந்திருப்பதுடன் வினாடி வினா போட்டியில் வலய மட்டத்தில் முதலிடம் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியதையிட்டு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பாடசாலை என்றும் மாணவர்களின் ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றில் உறுதியான அக்கறையோடு சேவையாற்றி தனது கல்விச் சாதனைகளை தொடர்ந்து வழங்குவதோடு நல் மாணவர்களை இம் மண்ணுக்கு என்றும் வழங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

தோன்றிற் புகழொடு தோன்றுக

ச. சிவஸ்ரீ
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

வடமராட்சி மண்ணின் புகழ்பூத்த முன்னணி ஆரம்ப பாடசாலையாக விளங்குகின்ற நெல்லியடி மெதடிஸ்த மிசன் பாடசாலையின் 125 ஆவது ஆண்டு விழாவிற்கு எனது வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கீழைத்தேச நாடுகளில் கல்வி அபிவிருத்திக்கூடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்திய நிறுவனங்களில் கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு அதிக பங்குண்டு. இந்தவகையில் ஆரம்ப காலந்தொட்டு எமது பிரதேசத்தில் தமது பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வந்த மெதடிஸ்த மிசன் திருச்சபையினரால் பரிபாலிக்கப்பட்டு வந்த அரசடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையானது அரசாங்கம் கையேற்ற பின்பும் சிறப்பாக இயங்கி சாதனை பல படைத்த பாடசாலைகளில் ஒன்றாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளது.

வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தின் பின்னணியிலுள்ள முன்னணிப் பாடசாலைகளின் கல்விப்புல சாதனையாளர் பலருக்கு அத்திவாரம் அமைத்துக் கொடுத்த பெருமை இப் பாடசாலைக்குரியது. இந்த வகையில் இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்றவர்களாக இருப்பது இதற்குச் சான்றாகவுள்ளது.

எமது பிரதேசத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளில் முதன்மைப் பாடசாலையாக தன்னை இனங்காண வைத்துள்ள இப் பாடசாலையின் 125 ஆண்டுகால வெற்றிப் பயணத்திற்கு படிக்கற்களாக அமைந்திருந்த பாடசாலைச் சமூகத்தினையும் பௌதிக வளங்களினையும் சிறப்பாக முகாமை செய்துவந்த நிருவாகத்தினரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இப் பாடசாலையின் நூற்றிருபத்தைந்தாண்டு கால கல்விப்பணியின் அடையாளங்களை ஆவணப்படுத்துமுகமாக வெளியிடப்படும் அரசடியாள் சிறப்புமலர் சிறப்புற மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

125 வது ஆண்டு மலருக்கான வாழ்த்துச் செய்தி

திரு. செ. உதயகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையினது 125 ஆவது ஆண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

''அரசடிப் பள்ளிக்கூடம்'' எனப் பலராலும் கூறப்படும் இப் பாடசாலையானது பல்லாண்டு காலமாக இப்பிரதேச மாணவர்களுக்கு சிறப்பான ஆரம்பக் கல்வியை வழங்கி வருகின்ற பாடசாலையாகத் திகழ்கின்றது. இதன் காரணமாக பெற்றோர்கள் பலரும் இப் பாடசாலையிலேயே தங்களது பிள்ளைகள் கற்பதை விரும்புகின்றனர்.

கடந்த சில வருடங்களிற்கு முன்பு இப் பாடசாலையினது பௌதிக வளங்கள் குறைவாக இருந்தபோதிலும் தற்போது புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டு பாடசாலை புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. காணியொன்றினை கொள்வனவு செய்ததன் மூலம் பாடசாலையினது நிலப்பரப்பும் அதிகரித்துள்ளது. பாடசாலையினது வளர்ச்சியில் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோர் மிகுந்த பங்களிப்பினை அண்மைக் காலத்தில் வழங்கி வருகின்றனர்.

இப் பாடசாலை மாணவர்கள் கல்வி அடைவுகளில் சிறந்து விளங்குவதோடு, இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் முன்னிலை வகித்து வருகின்றனர். ஆண்டு தோறும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வருவது பாடசாலையினது சிறப்பான செயற்பாடுகளிற்குக் கட்டியம் கூறிநிற்கின்றது.

அதிபர், ஆசிரியர்களது அயராத உழைப்பினாலும் பாடசாலைச் சமூகத்தினரது பங்களிப்பினாலும் பாடசாலை அடைந்துவரும் வளர்ச்சியினைக் கண்டு அனைவரும் மகிழ்வடைந்துள்ளனர். இப் பாடசாலையினது பழைய மாணவன் என்ற வகையில் பாடசாலையினது வளர்ச்சி கண்டு மகிழ்வடைவதோடு 125 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வெளிவரும் இந்நூலானது பாடசாலையினது வரலாற்றினை எடுத்தியம்பும் ஒரு ஆவணமாகத் திகழும் என எண்ணுகின்றேன்.

இப் பாடசாலை மென்மேலும் வளர்ச்சிபெற்று இப்பிரதேச மாணவர்களுக்கு சிறந்த கல்வியை அள்ளி வழங்க இறைவனை வேண்டுகின்றேன்.

வாழிய பல்லாண்டு....

திரு. கு. செல்வன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வட மாகாணம்.

1888 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்வித்தாய் குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி அணைத்து தன் அன்புக் கரத்தினால் வளர்த்தெடுத்து செம்மைப்படுத்தி வீறுநடை போட்டு இன்று தன் சீரிய பணியில் உயர்ந்து ''அரசடியாள்'' எனும் தன் முதலாவது மலரை வெளியிடுகின்றது. இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

இக் கல்வித்தாயால் வளர்த்தெடுக்கப்பட்ட பலரில் நானும் ஒருவன். இப் பாடசாலையின் தோற்றத்திலும் அதன் வளர்ச்சியிலும் ஆக்கமும், ஊக்கமும் கொண்டு அயராது உழைத்தவர்கள் அநேகர். மாணவர்கள் சமநிலை ஆளுமையுடையவர்களாகவும், பல்வேறு திறன்களை உடையவர் களாகவும் வளர்த்துக் கொள்ளும் இடமாக விளங்குவதில் இப் பாடசாலைக்கு காத்திரமான பங்குண்டு.

இவ்வாறான திறன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே இக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழா மலரான அரசடியாள் உங்கள் கைகளில் தவழவுள்ளது. இவ்வாறு வெளியிடப்படும் மலர்கள் பாடசாலையின் பாரம்பரியம், வரலாறு என்பவற்றை எக்காலத்திலும், எல்லோராலும் அறிந்துகொள்வதற்கான சான்றாக அமையும்.

இம்மலர் வெளியிட முனைந்த அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர்கள் பணி சிறப்புடன் தொடரவும், கல்லூரி மேலும் பல வளங்கள் பெற்று நீண்டதொரு வரலாற்றுடன் கூடிய மாணவருக்கு கலங்கரை விளக்கமாகவும் சிறந்து விளங்க இறை ஆசியை வேண்டி என் மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''வீடுகள் தோறும் கலையின் விளக்கம்
வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி''

வாழ்க வளர்க வளமுடன்

சி. நற்குணலிங்கம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
கரவெட்டி.

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

வாழ்க்கையின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடியவாறு பிள்ளைகளது ஆளுமை விருத்திக்காக வலுவான அத்திவாரமிடுதல் ஆரம்பக் கல்வியின் பிரதான இலக்காகும். இப் பாடசாலையின் நீண்டகால வரலாற்றில் இவ் இலக்கை நோக்கிய நகர்வுகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இப் பாடசாலை ஆரோக்கியமானதும், பயனுறு விதத்திலான கற்றல் பின்னணியைக் கொண்டதும், ஒவ்வொரு பிள்ளையும் தரமான கல்வியைப் பெறுவதற்கான சூழலைக் கொண்டதும், விளைதிறன் மிக்க கற்றல் முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலையாகவும் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல் காணப்படும் பாடசாலையாகவும் விளங்குவது பெருமைக்குரியதாகும்.

கரவெட்டிக் கோட்டத்தில் தரம் ஐந்து புலமைப்பரீட்சைப் பெறுபேற்றில் பெயர்பெற்ற பாடசாலையாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சளைக்காத தன்மையும் கொண்ட புகழ்பூத்த, பெருமை தேடித் தரும் சிறந்த பாடசாலையாக விளங்குகின்றது.

இரண்டாம் நிலைக் கல்வியில் பிரவேசிக்கும் இப் பாடசாலை மாணவர்கள் ஆரம்பக் கல்வியை ஆக்கபூர்வமாக பூர்த்திசெய்து தேவையான அடிப்படை ஆற்றல்களை பெற்றுக் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

ஆளுமை மிக்க அதிபர், அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள், உயிரோட்டமான செயற்பாடுகளும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு என்பவற்றின் ஒழுங்கமைப்பான ஆற்றலின் வெளிப்பாடுகளும் இப் பாடசாலை வளர்ச்சிக்கு அன்றுதொட்டு தூண்களாக விளங்குகின்றன.

பேரறிஞர்களையும் அதிகாரிகளையும் கல்விமான்களையும் பிரசவித்து வரும் இப் பாடசாலை மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து வளர்ந்து ஒளிபரப்ப மனமார வாழ்த்துகின்றேன்.

முன்னாள் அதிபர் திரு. சி. வேலாயுதம் அவர்களின் வாழ்த்துரை



திரு. சி. வேலாயுதம்

சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர், SLPS-I

ஓய்வுநிலை அதிபர்.

மனிதப் பிறவியின் விழுமிய நோக்கம் முற்றும் அற்றுப் போகா வண்ணம் காக்கவல்லது அறிஞர்களின் உள்ளுணர் வோடு கலந்த அமுதசுரபியான வாழ்த்து என்பர். வாயே வாழ்த்து கண்டாய் என்பதற்கு அமைய எனக்கும் ஒரு வாய்ப்புத் தந்த அதிபர் திரு. N. தேவராசா அவர்களை முதற்கண் வாழ்த்தக் கடப்பாடுடையேன்.

இன்றைய விழா போற்றப்படவேண்டிய அரியதோர் முயற்சியாகும். ''எழுத்தறிய தீரும் இழி தகைமை", ''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்", ''எழுமைக்கும் ஏமாப்புடையது கல்வி". அன்று குருகுலங்கள் இன்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இக் கல்விப் பணியை ஆற்றுகின்றன. அறிவே தெய்வம் என்பதை உணர்ந்து நெல்லியடி மெதடிஸ்த மிஷன் சபையினர் 125 ஆண்டுகளுக்கு முன் கல்வி வளர்ச்சி வேண்டி இப் பாடசாலையை அமைத்தனர். இது காலத்தின் கோலம். ''காரணம் இன்றேல் காரியம் இல்லை". அருகே ஆலயமும் அமைந்தது ஆண்டவன் கிருபை. அடிக்கல் நாட்டியவர் பாக்கியசாலி. இசைபட வாழ்தல் உயிரின் ஊதியம் என்பது குறள்.

முடிவில்லாக் கீர்த்தியோடு நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் வளர்ந்து வரும் இப் பாடசாலையில் சேவையாற்றிய, ஆற்றுகின்ற ஆசிரியர், அதிபர் அவர்களையும் தொடர்ந்து உறுதுணையாக அமைந்த பெற்றோர்களையும், மாணவர்களையும் வாழ்த்துகின்றேன். ''ஆகு", ''ஆக்கு". வளர்ச்சி தொடரட்டும், அதிபரின் சேவை மலரட்டும்.

ஆக்கம் என்பதும் அழிவு என்பதும் பொருளின் நிலை மாற்றம் ஆகும். நூற்றிருபத்தைந்து ஆண்டு காலங்களில் இடையிடையே வளர்ச்சியும் தளர்ச்சியும் காணப்பட்டது. இது பெற்றோரின் மன மாற்றம்.

எனது எட்டு ஆண்டுகள் சேவைக் காலத்தில் என்னுடன் இணைந்து கால நேரம் பாராது நேர்த்தியாகப் பணிபுரிந்த ஆசிரியர் களையும் பக்கபலமாயிருந்த பெற்றோர்களையும் எனக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது இறந்தவர், இருப்பவர் யாவர்க்கும் எனது காலங்கடந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

பெரிய நகரப் பாடசாலைகள் போல மாணவர்கள் நாட்டியம், நாடகம், விளையாட்டு, கல்வி, கலாசாரம், ஆங்கிலம், பண்பாடு போன்ற விழுமியங்களைக் கற்று, ''கற்றாங்கு ஒழுகி'' திண்ணிய நெஞ்சமும் தெளிந்த அறிவும் உடையவராய் பாடசாலை அன்னையின் பெயர் துலங்கி வாழ்வாங்கு வாழ என் மனத்தினிய வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. சு. வரதராஜசர்மா
S.L.P.S-I
ஓய்வுநிலை அதிபர்.

நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுபெற்ற யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வடமராட்சியில் முன்னணி வகிக்கும் ஓர் ஆரம்பப் பாடசாலையாகும். ஒரு பிள்ளை சமூகத்தில் நற்பிரஜையாக இணைவதற்கு கல்வி மிக அவசியமான தாகும். கல்வியில் சிறந்து வருவதற்கு அத்திவாரமாக அமைவது ஆரம்பக் கல்வியாகும். இவ் ஆரம்பக் கல்வியை மிகச் சிறப்பாக திறம்பட ஊட்டுவது இப் பாடசாலை. இதற்கு சான்றாக அமைவது மாணவர்களை இப் பாடசாலையில் சேர்ப்பதற்கு பெற்றோர்கள் முண்டியடிப்பதாகும். வடமராட்சியில் புலமைப் பரிசில் பரீட்சையில் வருடாவருடம் அதிக மாணவர்கள் சித்திபெறுதல் இப் பாடசாலையின் தனிச் சிறப்பாகும். புலமைப்பரிசில் பரீட்சைக்காக மேலதிக வகுப்புக்களை வைத்து மாணவர்களை பயிற்றுவித்தலில் முன்னணி வகிக்கின்றது.

பாடசாலைச் சமூக உறவுகளைப் பேணி திறம்பட நடைபெறும் இப் பாடசாலை இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றது. மாணவர்கள் வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறுதல் காணக்கூடியதாக உள்ளது.

ஆண்டு ஒன்று மாணவர்களை வரவேற்கும் விழா மிகச் சிறப்பாக இப் பாடசாலையில் நடைபெறுகிறது. வருடாவருடம் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, வாணி விழா போன்ற நிகழ்வுகள் பெற்றோரின் ஒத்துழைப்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இப் பாடசாலை மேலும் சிறப்பாக வளர்ச்சியடைந்து எமது சமூகத்திற்கு பயன் தரவேண்டுமென வாழ்த்தி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திரு. வ. கணேசமூர்த்தி
S.L.P.S - I
ஓய்வுநிலை அதிபர்.

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை தனது நூற்று இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு இப் பாடசாலையில் ஒரு தசாப்த காலம் அதிபராகக் கடமைபுரிந்தவன் என்னும் வகையில் பெருமிதமும் பெரு மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

யாழ். மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் மெதடிஸ்த மிஷனரிகளினால் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. வடமராட்சியில் ஆரம்பப் பிரிவிலும் இடைநிலைப் பிரிவிலும் முதன்மைப் பாடசாலைகளாகத் திகழ்பவை இம் மிஷனரிகளினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை களாகும். அந்தவகையில் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையே வடமராட்சியின் முதன்மை ஆரம்பப் பாடசாலையாகத் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது.

இப் பாடசாலையானது ஒரு கிராமப்புற பாடசாலையாக இருந்தபோதும் இப் பாடசாலை கல்வி அபிவிருத்தியிலும் மற்றும் விளையாட்டுத்துறை, கலைப் பண்பாட்டுத் துறை, சாரணியம் போன்றவற்றில் பல்பரிமான வளர்ச்சியைப் பெற்று யாழ் நகரிலுள்ள நகர்ப்புறப் பிரபலமான பாடசாலைகளுக்கு இணையான பாடசாலையாக விளங்குகிறது.

இப் பாடசாலையின் அபரிதமான இவ்வளர்ச்சிக்கு,

- இப் பாடசாலையை காலங்காலமாக வழி நடாத்திய ஆளுமை மிக்க அதிபர்களின் அர்ப்பணிப்பான சேவை.
- அர்ப்பணிப்புடன் பாட விதானச் செயற்பாடுகளிலும் இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபடும் ஆற்றல் மிகு ஆசிரியர்களின் அயராத உழைப்பு.
- கல்வியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட பெற்றோர்களின் பங்களிப்பு.
- பழைய மாணவர்களினதும், பெரு மனம் கொண்ட நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பு.

என்பனவே முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

இப்பாடசாலையின் தற்போதைய ஆற்றல்மிகு அதிபர் திரு. ந. தேவராசா அவர்களின் சீரிய தலைமைத்துவத்தில் ஆற்றல் மிக்க, ஆளுமை மிக்க மனிதப் பண்புகளைப் பேணுகின்ற நன் மாணவர்களை இப் பிரதேசத்துக்கு வழங்கவேண்டுமென வாழ்த்துவதுடன் இப் பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சி பெற்று வடமராட்சி மண்ணின் பெருமையை மேலோங்கச் செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல உல்லியனொல்லை அம்பாளை வேண்டுகிறேன்.

வாழ்த்துச் செய்தி



திரு. ஐ. நடராசா
ஓய்வுநிலை அதிபர், S.L.P. S. I.
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை நூற்று இருபத்தைந்தாவது ஆண்டைப் பூர்த்திசெய்து விழாக் கொண்டாடுவதையிட்டு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

வடமராட்சிப் பிரதேசம் கல்வியில் மேலோங்கிய நிலையில் காணப்பட்டு வருகிறது. அந்தவகையில் இப் பிரதேசத்தின் கல்வி கலாசாரப் பாரம்பரியங்களில் சிறந்து விளங்கும் வதிரிக் கிராமத்தில் அமைந்துள்ள யா/ நெல்லியடி மெ.மி.த. கலவன் பாடசாலை ஆரம்பக் கல்வியில் நீண்ட காலமாக முன்னிலை வகித்துவருகிறது. குறிப்பாக தேசியப் பரீட்சைகளில் ஒன்றான தரம் 5 புலமைப்பரிசிற் பரீட்சையில் மிகக் கூடுதலான மாணவர்களைச் சித்தி அடையச் செய்து நகர்ப் புறப் பாடசாலைகளுக்கு ஈடு இணையாக திகழ்ந்து மாணவர்கள் உயர் கல்வியைப் பெறுவதற்கு அடித்தளம் இட்டுள்ளது.

மேலும் இப் பாடசாலை கல்வி வளர்ச்சியிலும் ஆங்கில தினப் போட்டிகளிலும் கலை நிகழ்வுகளிலும் சிறப்புற்று விளங்கி இப் பிரதேச மாணவர்களை உன்னத பண்புகளும் உயர்ந்த அறிவியல் பலமும் கொண்டவர்களாக உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

இப் பாடசாலையின் 125 ஆவது ஆண்டு விழா சிறப்புற நிகழ்வதற்கும் மேன்மேலும் கல்வி வளர்ச்சியில் மேலோங்குவதற்கும் எல்லாம் வல்ல இறைவன் பேரருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இப் பாடசாலையில் எனது சேவைக்காலம்
15.12.2002 - 15.06.2010 வரை

பெருமையுடன் வாழ்த்துகின்றேன்



திரு. மு. ச. சுப்பிரமணியம் (மகான்)

தலைவர்,

பழைய மாணவர் சங்கம்

காலத்துடன் வளர்ச்சியடைந்து இன்று நூற்றி இருபத்தைந்தாவது அகவை காணும் எமது அரசடிப் பள்ளிக்கூடத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் புளகாங்கிதம் அடைகின்றேன்.

எனது ஆரம்பக் கல்வியினைக் கற்பதற்காக ஆறு வயதில் சிறுவனாக இந்தப் பாடசாலை வளாகத்தில் அடி வைத்திருந்தேன். இன்று எனது அறுபது வயதிலும் இங்கு நுழைகின்றபோதும் சிறுவனாகவே உணர்கின்றேன். நான் கல்வி பயின்ற காலத்தின் பசுமையான நினைவுகள் இன்னும் என் மனக்கண் முன்னே நிழலாடுகின்றன. அக் காலத்தில் பருத்தித்துறை, கிராமக்கோட்டடி யினைச் சேர்ந்த திரு. செல்லத்துரை அவர்கள் தலைமை ஆசிரியராக பாடசாலையில் அமைந்திருந்த விடுதியில் குடும்பத்தோடு தங்கியிருந்தார். அவ்வேளை எமக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் திரு. இரத்தினசிங்கம் அவர்களாவார். அவர் பள்ளிக்கூடத்திற்கு மாட்டு வண்டியிலேயே வருவார். அப்போது அந்த வண்டில் மாடுகளை அவிழ்த்து கட்டுவதற்காக நாம் போட்டிபோட்டுக்கொண்டு வாசலிலேயே நிற்போம். அது மட்டுமன்றி பள்ளிக்கூடத்திற்கு வருகை தராது படிக்க பின்னின்று வீட்டில் இருக்கும் மாணவரை தேடிப்பிடித்து அழைத்து பள்ளிக்கூடத்திற்கு கொண்டுவரும் பொறுப்பும் எமக்கு. எல்லோரையும் ஒருவாறு அழைத்துக்கொண்டு வரும்போது நண்பகலைத் தாண்டிவிடும். பின்பு சிறிது நேரம் மட்டுமே படிப்பு. இப்படியாக அன்று எமது ஆரம்பப் பள்ளிப் பருவம் அமைந்திருந்தது.

அவ்வாறிருந்த பள்ளிக்கூடத்தினையும் இன்று அபரிதமான வளர்ச்சியடைந்து என் முன்னே நிற்கும் பள்ளிக்கூடத்தினையும் நினைத்துப் பார்க்கின்றேன். இன்று கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளை நிலைநிறுத்தி வருகின்றமையினையிட்டு நான் பெருமிதமும் மகிழ்ச்சியுமடை கின்றேன். எமது பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்திச் செயற்பாடுகளில் காலங்காலமாக நானும் இணைந்து பங்காற்றுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தமை தெய்வ அனுக்கிரகமே!

திரு. சி. வேலாயுதம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் இப் பாடசாலைக்காக ப. மா. சங்கத்தினரால் பிரதேச மக்களின் நிதிப் பங்களிப்புடன் இரு பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

அத்தருணம் ப. மா. சங்கத் தலைவராக திரு. மு. கதிரவேற்பிள்ளையும் பொருளாளராக திரு. க. செல்வராசா ஆசிரியரும் செயலாளராக நானும் இணைந்து, பழைய மாணவரும் இப் பாடசாலை நலன்விரும்பியுமான பிரபல சட்டத்தரணி திரு. அ. க. நடராஜா மற்றும் ஏனைய நலன் விரும்பிகள் ஆகியோரது வழிநடத்தல்களின் கீழ் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதே போன்றதொரு காணிக் கொள்வனவில் தற்போதும் ப. மா. ச. தலைவராகவிருந்து பங்குகொண்டமை எனது காலத்தில் பள்ளிக்கூடத்திற்கு சேவைசெய்ய கிடைத்த பெரும் வாய்ப்பேயாகும்.

அது மட்டுமன்றி காலங்காலமாக எமது பள்ளிக்கூடத்திற்கு சேவையாற்றிய அதிபர்கள் அனைவரும் தன்னலமற்ற சேவையினை வழங்கியிருக்கின்றனர். அவர்களது பாதையில் இன்று எமது பாடசாலை அதிபராக திரு. ந. தேவராஜா அவர்கள் திறம்பட தன் சிறப்பான பணியினை அல்லும்பகலும் வழங்கிவருவதுடன் எம்முள் ஒருவராக செயற்பட்டு ப.மா.சங்கம் முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளுக்கும் பூரண ஒத்துழைப்பினை வழங்கிவருகின்றமை சிறப்பான விடயமாகும். இவரது காலத்திலே எமது தற்போதைய ப.மா.சங்கம் நீண்டகாலத்தின் பின்னர் புத்துயிர் பெற்று முனைப்புடன் செயற்பட்டுவருவதுடன், இதனூடாக பாடசாலை வள அபிவிருத்திப் பணிகள் பல திறம்பட முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பல பழைய மாணவர்கள் நேரடியாகவே பாடசாலைக்கு வருகைதந்து, தேவைகளை கேட்டறிந்து தம்மாலான உதவிகளை மனமுவந்து வழங்கியுள்ளமையும் நன்றியுடன் குறிப்பிடவேண்டிய ஓர் விடயமாகும். இவை அனைத்தும் நூற்றியிருபத்தைந்தாவது அகவையில் அடியெடுத்து வைக்கும் எமது பள்ளிக்கூடத்திற்கு அதன் ஒளிமயமான எதிர்காலத்திற்கு கிடைத்த தெய்வத்தின் நிறைவான ஆசிகள் என்றே கருதுகின்றேன்.

மேலும், எமது அதிபர் அவர்களது முகாமையின் கீழ் இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் தியாக மனப்பான்மையுடனும், அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்குவதையும், விடுமுறை நாட்களில் கூட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக செயற்பட்டு வருகின்றமையினையும் நான் இப் பாடசாலைக்கு வரும் வேளைகளிலெல்லாம் அவதானித்திருக்கின்றேன்.

இவை அனைத்தும் எமது பாடசாலை இன்னும் பல இமாலய சாதனைகளை நிலைநாட்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. இந்த இலட்சிய கனவு நனவாக எல்லாம் வல்ல உல்லியனொல்லைக் கண்ணகை அம்பாளின் நல்லாசிகள் துணையிருக்கப் பிரார்த்தித்து தனித்துவமானதொரு ஆரம்பப் பாடசாலையாக மேலும் மிளிர்ந்து சாதனை படைக்க வாழ்த்துகின்றேன்.

செயலாளரின் உள்ளத்திலிருந்து...



திரு. சு. சிவபாலன்

செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை தனது 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ''அரசடியாள்'' எனும் மலரை வெளியிடுவதையொட்டி பேருவகை அடைகின்றேன்.

இப் பாடசாலை வடமராட்சியின் முதல்தர ஆரம்ப பாடசாலையாக திகழ்ந்து வருகின்றது. ''அரசடிப் பள்ளிக்கூடம்'' என்ற செல்லப் பெயருடன் இயங்கும் இப் பாடசாலையின் வரலாறு தொடர்பான ஆவணம் ஒன்றும் இல்லாத குறையை நிவர்த்திக்கும் பொருட்டு அதிபரின் எண்ணத்தில் உதித்த இவ் 125 ஆவது ஆண்டு விழாவும், மலர் வெளியீடும் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் நிறைவேறியுள்ளமை பாராட்டப்படவேண்டியது.

அரசடியின் ''யாழ்'' இசையாக ''அரசடியாள்'' வரலாற்றுத் தகவல்களுடனும், கல்வியியலாளர்களின் ஆக்கங்களுடனும் வெளிவருகின்றமை பெருமைக்குரியது.

125 ஆண்டுகள் பழமை வாய்ந்த இப்பாடசாலை பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களை தாண்டி வந்தபோதிலும் தற்போதைய அதிபர் மதிப்பிற்குரிய திரு. ந. தேவராஜா அவர்களின் காலத்தில் பல்வேறு பரிணாமங்களில் எழுச்சி பெற்று வருகின்றது.

இப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளராக கடந்த இரண்டாண்டுகள் சேவையாற்றக் கிடைத்தமையை பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

இப் பாடசாலை கல்வித் தரத்திலும் விளையாட்டிலும் இணைப் பாட விதான செயற்பாடுகளிலும் வலய, மாகாண, தேசிய மட்டங்களில் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது. இவற்றையெல்லாம் ஒரு வரலாற்றுத் தகவல்களாக தாங்கி வெளிவரும் ''அரசடியாளை'' வரவேற்கின்றேன்.

''அரசடியாள்'' பிரசவிப்பதற்கு பல்வேறு வழிகளில் ஆக்கமும், ஊக்கமும் அளித்த பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, கல்வியியலாளர்கள், நலன் விரும்பிகள் எல்லோருக்கும் பா. அ. சங்க செயலாளர் என்றவகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இப் பாடசாலையின் இமாலய வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக காலம் நேரம் பாராது உழைக்கும் அதிபருக்கும் அவருக்கு உறுதுணையாக தோளோடு தோள்கொடுத்து அயராது உழைக்கும் தன்னலம் கருதாத ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

125 ஆவது ஆண்டு விழா சிறப்புறவும், ''அரசடியாள்'' இசை மணம் எங்கும் பரவவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

நுகர்வும் நகர்வும் நீயே!

திருமதி கவிதா தவேஸ்வரன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC)

பண்பாடு ஊற்றெடுக்கும் பண்ணோடு இசை முழங்கும்
எண்ணற்ற கலைகளுடன் கல்வித்திறம் அறம் பேசும்
விண்ணோடு விளையாடும் மழைமேகம் மலர்தூவும்
என்னவென்று சொல்ல எம் ''தாய்''ச் சிறப்பை இங்கே?

சிந்தூரப்புன்னகை வளர் சீர் சேர்க்கும் எம்பிராட்டியும்
சாந்தமுடன் அன்பு காட்டி அரவணைக்கும் தேவனும்
அருகிருந்து இணையில்லா ஆசிகளை வழங்குகையில்
எக்கணமும் எவ்விடமும் வெற்றிமுரசின் முழக்கம் சூழ
எம்மூர் அரசியிவள் ''அரசடி''யாய் ஆளுகின்றாள்!

என்னே இவள் மாண்பு! என வியக்கும் போதினிலே....
பின்னே என் நினைவுகள் ''அரசடியாளு''டனான பொழுதுகள்!
பரவசத்தில் திளைக்கின்றேன்! பாலகியாகத் துடிக்கின்றேன்!
மீண்டிடுமோ இப்பிறவி? தீண்டிடுமோ என் கனவை?!

பள்ளிப்பருவங்கள் வாழ்வின் நித்திய வசந்தங்கள்!
சொல்லித்தந்த சான்றோர் சத்தியவேந்தரே!
தொல்லை மிகு மறதியும் சோம்பலும் கவிகையில்
விஸ்வரூபமாய் வெ(ம்)ண்மைப்பிரம்புகள் பிரம்மாஸ்திரமாகவே!....
தொலையும் புள்ளிகளில் விளையும் அழுகைகள்
அலைபாயும் எங்கும் முகாரி ராகமாகவே!

செம்மண் புழுதியில் விழுந்து புரண்டு
எம்மண் அழகை உடையில் சுமந்து
கொட்டும் மழையினில் கும்மியடித்து
வீட்டினில் நிதமும் பட்டுத்தெளிந்ததும்....
புத்தகத்துள் பதுக்கிய மயிலிறகின் குட்டிகளை
இரகசியமாய் அடிக்கடி பிரித்துப்பார்த்ததும்....
உச்சஸ்தாயியில் பாடல்கள் பாடியும்
உச்சுக்கொட்டியே பல்சுவை பகிர்ந்ததும்....

பள்ளிவாயிலிலே கலர்ப் பப்படம் சுவைத்ததும்
கையில் தடியிலே ''இழுப்பாணி'' எனும் இனிப்புடன்
வலம் வரும் மனிதரிடம் இனிப்பை வாங்கி இழுத்துண்டு
பெரும் பாடுபட்டு பற்களில் ஒட்டிய இனிப்பை கழற்றி
திக்கித்திணறி இனிக்க இனிக்க கதைகள் சொன்னதும்....
சொல்லி முடியா ஜனரஞ்சக நினைவுகள்!

பிரமிப்பாயிருக்கின்றது! பெருமிதமும் பிறக்கின்றது!
கடந்தது என்னவோ நூற்றியிருபத்தைந்து ஆண்டுகளே - ஆயினும்
தடங்களில் நிலைத்த சாதனைகள் அதனிலும் பன்மடங்கு!
தலைமுறைகளில் மாற்றமின்றி தனியூற்றெனவே திகழும்
கலையரசி எமதரசடியாள் எனும் விதியிலும் மாற்றமில்லை!

தவழ்ந்தோம் இவள் மடியில்! நிமிர்ந்தோம் இவள் கவினழகில்!
உள்ளொளி ஏற்றி உணர்ச்சிப்பெருக்குத் தந்தாள்!
செம்மை அடைவுகள் தந்தாள்! இளமை வனப்புத்தந்தாள்!
இம்மைப்பயன் தந்தாள்! இன்னும் இனியன தந்தாள்!
எம்மை செதுக்கியே எமக்கோர் அடையாளம் தந்தாள்!

''உயிராகி மெய்யாகி உயிர்மெய்யும் அவளாகி
மெய்ம்மை உணர்த்திடுவாள்! எம்மை நகர்த்திடுவாள்!
எழுமையிலும் அம்மையாயிருந்து அகரத்தின் சிகரமாவாள்!''
அவள் தரிசிப்பில் உணர்விறங்கிய நிதர்சனமிது!

என்னுள் ஒளிர்ந்து எண்ணம் நிறைந்து என்னை ஆளும்
எனதரிய பேரரசியிவள் பெருமைகளை பகிர்வதற்கு
என்ன தவம் செய்தேனோ?! ஏது யான் செய்தேனோ?
மின்னு புகழ் ஓங்கி வளர் அரசடித் தடங்களிலே
இன்னும் இனியும் ஞானமும் வெற்றியும் பல்கிப்பெருக
கன்னல் மொழி மின்னலிடை அபிராமி பதம் பணிந்து
வாழ்க வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றேன்! வாழி!

பழைய மாணவர் சங்க செயலாளரின் உள்ளத்திலிருந்து....

வ. மகீபன்

கல்வியின் நாமமாகக் கருதப்படும் வடமராட்சியின் முன்னணி ஆரம்பப் பாடசாலையொன்றாகத் திகழும் எம் அன்னையவள் உருப்பெற்று இவ்வருடம் 125ஆவது அகவையில் காலடி பதிக்கும் இவ்வேளையில் வாழ்த்தி எமது நிர்வாகக் காலப்பகுதியில் கொண்டாடுவதை இறைவன் தந்த பாக்கியமாகக் கருதுகின்றோம்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் எம் முன்னைய சந்ததியினர் கடந்துவந்த பாதைகள் கரடுமுரடானவை, பல சவால்கள் மிக்கவை. அவர்கள் அந்த தடைக்கற்களையெல்லாம் படிக்கற்களாக மாற்றியதனால்தான் இன்றைய சந்ததியினர் வசந்தத்தை அனுபவிக்கின்றனர்.

இன்று பாடசாலையொன்றைப் பொறுத்தவரையில் பல சங்கங்கள் இயங்குகின்றன. ஆனால் அவையொவ்வொன்றும் ஒன்றுக்கொன்று ஒவ்வாமைத் தன்மையுடனும் மாறுபட்ட கருத்துடையதாகவும் பாடசாலையின் வளர்ச்சிக்கு பயனுறுதியற்றதாகவுமே காணப்படுகின்றன. ஆனால் எமது பாடசாலையில் அங்கத்துவம் வகிக்கும் சங்கங்கள் அனைத்தும் ''பாடசாலையை முன்னேற்றப் பாதையில்" இட்டுச் செல்வதையே குறிக்கோளாக கொண்டு செயற்படுகின்றனர். பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்தாய்வுகளில் அனைத்துச் சங்கங்களின் உறுப்பினர்களையும் இணைத்து முடிவுகளை நாம் எடுத்துக் கொள்கின்றோம். இதுதான் எமது வெற்றியின் இரகசியம்.

தற்போது இடைநிலை, பெரிய பாடசாலைகளிலுள்ள சங்கங்களின் அங்கத்துவத்திற்கும் நிர்வாகத்திற்கும் போட்டிபோடும் பலர் தமக்கு அத்திவாரமிட்ட ஆரம்பப் பாடசாலையிலுள்ள சங்கம் ஒன்றில் அங்கத்தவராகச் சேருவதற்குக்கூட முன்வருதில்லை. இந்நிலை மாற்றமடையவேண்டும்.

இவ்வருடமும் பழைய மாணவர்களின் நிதியுதவிகளுடன் பாரிய பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். குறிப்பாக கலவன் பாடசாலையொன்றில் பால்நிலை சமத்துவம் பேணப்படவேண்டும். எமது பாடசாலையில் பான்ட் அணியில் இதுவரை காலமும் பெண்

பிள்ளைகளே அங்கத்துவம் வகித்தார்கள். இது பலருக்கும் குறையாகத் தோன்றியது. இவ்வருடம் இந்நிலையை மாற்றியமைத்தோம். பழைய மாணவர் ஒருவரின் நிதியுதவியுடன் பான்ட் வாத்தியக்கருவிகளை கொள்வனவு செய்து ஆண் பிள்ளைகளுக்கும் தனியாக பான்ட் அணியை உருவாக்கி அவர்களின் முதல்நடை பவனியை 125ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நிகழ்த்தி வரலாற்றுச் சாதனை படைத்தோம். அதேபோல பாடசாலையின் தெற்குப்புறத்தே உள்ள காணியை பழைய மாணவி ஒருவரின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்துள்ளோம்.

125ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் எமது பாடசாலை வளர்ச்சியில் கிறிஸ்தவ மிஷனரியினர், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆற்றிய பங்கை என்றென்றும் நினைவுகூர்ந்து அடுத்துவரும் இரண்டாம் நூற்றாண்டு விழாவையும் எமது எதிர்கால சந்ததியினர் சிறப்பாக கொண்டாடுவார்கள் என்பது திண்ணம்.

''அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னவாயினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

வாழ்த்துச் செய்தி

அ. க. நடராசா

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்

வதிரி, கரவெட்டி.

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை தனது 125 ஆவது வருட ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இக் கல்லூரியில் 55 ஆண்டுகளுக்கு முன் கல்வி கற்றவன் என்பதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இங்கிலாந்தின் மெதடிஸ்த மிசனால் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி ஆரம்பக் கல்வியில் வடமராட்சியிலே சிறந்து விளங்கும் ஓர் உன்னத கல்லூரியாகும். இக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியினை கற்ற பலர் மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும் பல்வேறு துறை சார்ந்த விற்பன்னர்களாகவும் உள்ளனர். புலமைப்பரீட்சை பெறுபேறுகளில் இக் கல்லூரியே முதன்மையாக வுள்ளது. தேசிய மட்டத்தில் இக்கல்லூரி புலமைப் பரிசில் பரீட்சையில் 1984 ஆம் ஆண்டு 1ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது. பல புகழ்பூத்த அதிபர்கள், ஆசிரியர்கள் இக் கல்லூரியில் பணிபுரிந்திருக்கிறார்கள். இவர்களின் தன்னலமற்ற சேவையினால் இக் கல்லூரி புகழ்பெற்று விளங்குகின்றது.

இக் கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவரும் இக் கல்லூரியின் காணியை கொள்வனவு செய்தல் மற்றும் கல்லூரியின் அவசிய தேவைகளை மனமகிழ்ச்சியுடன் பூர்த்தி செய்கிறார்கள். மேலும் இக் கல்லூரியை கடந்த காலத்தில் நிர்வகித்து வழிநடத்தி பேரும் புகழும் பெற உதவியவர்களை நன்றியுணர்வோடு நினைவுகூர்ந்து 125 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இக் கல்லூரியை வாழ்த்தி இக் கல்லூரி மென்மேலும் சிறப்புப் பெற்று உன்னத நிலையை அடைய ஆண்டவனை மனதார பிரார்த்திக்கிறேன்.

மழலைகள் பூங்காவாக மணம் பரப்பிட்டும்

திரு. அ. ஸ்ரீகரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வி முகாமைத்துவம்.

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வடமராட்சி வலயத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளுள் முன்னணிப் பாடசாலையாக நீண்டகாலம் நிலைபெற்று விளங்குவது யாவரும் அறிந்ததே. இப் பாடசாலை ஆண்டுதோறும் பல உயர்வான சித்தி பெற்ற மாணவர்களை இடைநிலை கல்விக்காக இடைநிலைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வருகின்றது.

தேசிய மட்டத்தில் அளவிடப்படும் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் இப் பாடசாலை மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மாகாண மட்டத்திலும் உயர்வான பெறுபேறுகளைப் பெற்று தொடர்ந்தும் அச் சாதனையை நிலைநிறுத்தியிருப்பது, இப் பாடசாலையின் தொடர்ச்சியான உயர்விற்கு காரணம் எனலாம்.

மேலும் கல்விச் செயற்பாடுகளோடு மாத்திரம் நின்றுவிடாது இணை பாடவிதான செயற்பாடுகளிலும் அபரிமிதமான வளர்ச்சிகளையும் மாற்றங்களையும் அண்மைய காலத்தில் ஏற்படுத்திக் கொண்டு இருப்பது பலராலும் பாராட்டப்படும் ஓர் விடயம் ஆகும். எந்த ஒரு செயற்பாட்டிலும் தனித்துவத்தை வெளிக்கொணர்வது இப் பாடசாலைக்குரிய பண்பு என நான் கூறுவேன்.

குறிப்பாக இப்பாடசாலை அதிபர் திரு. ந. தேவராஜா சிறந்த முகாமைத்துவ திறன் கொண்டவராக விளங்குவதினால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் ஒத்துழைப்பை மிகவும் இலகுவாகவும் சாதுரியமாகவும் பெற்று பாடசாலையின் செயற்பாடுகளை மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் முன்னெடுத்துச் செல்கின்றார். இவருடைய காலத்தில் பாடசாலை மேலும் உயர்வு பெற என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஆண்டு 125 ஆவது ஆண்டு நிறைவினை ஒட்டி வெளியிடப்படும் ''அரசடியாள்'' என்ற மலர் இப்பாடசாலையின் திறன்கள் செயற்பாடுகளின் பதிவு தடயங்கள் கொண்ட ஆவணமாக விளங்குவதில் பெருமைகொள்கிறேன். இத்தனை உயர்விற்காகவும் பாடுபடும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர் ஆகியோரை பாராட்டுவதுடன் அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும். எதிர்வரும் காலங்களில் இப் பாடசாலையின் மேன்மை ஓங்கி நிற்க எல்லாம் வல்ல இறைவனின் அருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை 125 ஆவது ஆண்டு நிறைவும் சிறப்பு மலர் வெளியீடும்

திரு. யோ. சசிகாந்தன்

கிராம அலுவலர்,

நெல்லியடி வடக்கு - J/ 375

வடமராட்சியின், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையானது தனது 125 ஆவது ஆண்டு நிறைவையும் சிறப்பு மலர் வெளியீட்டினையும் பெருமையுடன் கொண்டாடும் இத்தருணத்தில், பிரிவின் கிராம அலுவலர் என்ற வகையில் மனம் நிறைந்த வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கடந்த ஐந்து வருடங்களாக பாடசாலையுடன் பல்வேறுபட்ட வகையிலும் தொடர்புகளை பேணிவருகின்றவகையில், கடந்த சில வருடங்களாக பாடசாலையின் செயற்பாடுகளின் வளர்ச்சி மிகவும் பாராட்டத்தக்கதாக உள்ளது. தற்போது அதிபராக உள்ள திரு. நடராசா தேவராஜா அவர்கள் தான் பொறுப்பெடுத்த காலத்தில் இருந்து, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு, சிறப்பான புலமைப்பரீட்சை அடைவு, மாணவர்களுக்கு ஆங்கிலப் புலமைக்கான ஒழுங்குபடுத்துகை, சதுரங்க பயிற்சி மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் சிறந்த வகையில் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைய காலத்தில் பாடசாலை மண்டபம் விரிவாக்கம் செய்தமை, மலசலகூடம் சிறப்பாக மீள்திருத்தம் செய்யப்பட்டமை, புதிதாக காணி கொள்வனவு செய்து பாடசாலை நிலம் விரிவாக்கம் செய்து சுற்றுமதில் அமைக்கப்பட்டமை, மாணவர் விளையாட்டு பூங்கா வசதியான இடத்திற்கு மாற்றப்பட்டமை, பாடசாலை பெயர் வளைவு அமைக்கப்பட்டமை, பெற்றோரின் ஒத்துழைப்பில் உட்புற, வெளிப்புற மதில் சித்திரங்கள் வரையப்பட்டமை போன்றவற்றை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அத்துடன், தேர்தல்கள் காலத்தில் பாடசாலையானது வாக்களிப்பு நிலையமாகவும் செயற்பட்ட வேளைகளில் கடமைக்காக இங்கு தங்கிய மற்றும் வருகைதந்த உயர் அதிகாரிகளும் ஆரம்ப பாடசாலையாக இருந்தும் அதன் வசதிகள், சுற்றாடல் சுத்தம் தமக்கு பூரண திருப்தியாக இருந்ததாக தெரிவித்தமையையும் இவ்விடத்தில் பதிவு செய்து, வடமராட்சியின் சிறந்த ஆரம்ப பாடசாலையாக நிலைநிறுத்தியிருப்பதையிட்டு எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை பாடசாலைக்கு வேண்டி, பாடசாலை சமூகத்திற்கு மீண்டும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது பார்வையில் இன்றைய மெ.மி.த.க. பாடசாலை

சமூகச் சுடர் ந. பாஸ்கரன் J.P

பிரபல தொழிலதிபர்

மெதடிஸ்த மிசனரிமாரின் வருகை யாழ்ப்பாண மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒரு ஆரம்ப மைல்கல்லாகும். அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் மெதடிஸ்த மிசனரி மார்களே. அவர்கள் ஆங்காங்கு பாடசாலைகளை நிறுவி ஆங்கிலக் கல்வியையும் தமிழையும் கற்பித்தார்கள். ''கல்வியே யாழ்ப்பாண மக்களின் செல்வம்'' என்பதற்கிணங்க எம் மக்களும் ஆவலோடு கற்றார்கள். அதன் பயனாக இலங்கையில் பல துறைகளிலும் பெரும்பெரும் பதவிகளைப் பெற்றார்கள். அரசாங்கத் திணைக்களங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பதவிகளை வகித்தார்கள். பல்கலைக்கழகங்களில் கூடிய அனுமதியைப் பெற்றார்கள். ''இலங்கையின் மூளை யாழ்ப்பாணம்'' என எம் மக்கள் பெயர் எடுத்தார்கள். யாழ் மக்கள் இப் பெயரைப் பெற்றுக்கொள்வதற்கு மெதடிஸ்த மிசனரிமாரின் அர்ப்பணிப்பான சேவையே காரணமாகும். தங்கள் சமயத்தைப் பரப்பும் நோக்கோடு கல்வியையும் ஊட்டி எம் மக்களை வளர்த்தார்கள். அவர்களாலேதான் எம் மக்கள் நிலவளம் குன்றியிருந்த போதும் கல்வியால் ஓங்கிப் பதவிகளை வகித்து வீறுநடை போட்டார்கள். நெஞ்சை நிமிர்த்தி, தோள்களை உயர்த்தி நடந்தார்கள். இந்த நிலைக்குக் களம் அமைத்து வழிகாட்டி உயர்த்திவிட்ட மெதடிஸ்த மிசனரிமாரை நன்றியுடன் நினைவுகூருவோமாக. அவர்கள் எங்களுக்குச் செய்த நன்றியை எமக்கு தந்துவிட்டுச் சென்ற கல்விச் செல்வத்தை எங்கள் மனதில் வைத்து பூசிப்போமாக. அவர்களை என்றென்றும் மனதில் வைத்துப் போற்றுவோம். என்றென்றும் நன்றியுடன் இருப்போமாக.

மெதடிஸ்த மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் கல்வியில் பிரசித்தி பெற்ற பல கல்லூரிகளையும் பல ஆரம்பப் பாடசாலைகளையும் பெண்கள் பாடசாலைகளையும் நிறுவியுள்ளார்கள். அதில் ஒன்றுதான் எங்களின் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஸ்தாபித்து 125 ஆண்டுகள். இது ஒரு நீண்ட காலம். 125 ஆண்டுகளில் கால வெள்ளத்தால் அழியாமல், மாற்றங்களுக்கு இடங்கொடுத்து, நலிவடையாமல் செழித்து வளர்ந்து நிற்கிறதே வியப்பாக இல்லை?

இந்த 125 ஆண்டுகளில் எத்தனை நூறு அதிபர்களை எத்தனை ஆயிரம் ஆசிரியப் பெருமக்களை எம் கல்வித்தாய் கல்வியூட்டி வளர்த்திருப்பாள். இவர்கள் எல்லோரின் பங்களிப்பும் நல்லாசியும் காரணமாகத்தான் இன்று எம் கல்வி அன்னை உயிர் ஓவியமாகக் காட்சி தருகிறாள்.

அதிபர் ஐ. நடராசா அவர்கள் இப் பாடசாலை அதிபராக இருந்த காலத்திலிருந்து எனக்கு இப் பாடசாலையோடு நெருங்கிய தொடர்பு

ஏற்பட்டது. அதற்கு முன் என் தொழில் நிமித்தம் நான் வெளி மாவட்டங்களில் இருந்தேன். அவரின் காலத்திலிருந்து 5ஆம் தரப் புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள் சிறப்பாக இருந்து, 10ஆம் ஆண்டில் தொய்வடைந்து பின் இன்றைய அதிபர் 15.06.2010 ஆம் ஆண்டு பாடசாலையைப் பாரமெடுத்து பின் புலமைப் பரிசில் பெறுபேறுகளில் கவர்ச்சிகரமான முன்னேற்றம் கண்டுள்ளது. 2010ஆம் ஆண்டு 10 மாணவர் சித்தியடைந்தார்கள். 2011 இல் 21 மாணவர்களும், 2012 இல் 23 மாணவர்களும், 2013 இல் 29 மாணவர்களும் சித்தியடைந்துள்ளார்கள். அத்தோடு 68 பிள்ளைகள் 100 இற்கு மேல் புள்ளிகள் பெற்றுள்ளார்கள். இது ஓர் போற்ற வேண்டிய சாதனை. அதிபரும் அர்ப்பணிப்போடு கற்பித்த ஆசிரியர்களும் போற்றப்பட வேண்டியவர்கள் அவர்களை நான் நன்றியுடன் பார்க்கிறேன்.

மேலும் இன்றைய அதிபர் ந. தேவராசாவின் காலத்தில் பாடசாலையின் பௌதீக வளமும் நிறைவு பெற்றிருக்கிறது. 02 மாடிக் கட்டிடமும் நிறைவு பெற்று வகுப்புக்கள் இப்போது நடைபெறுகிறது. 40 x 25 அளவுள்ள அழகான நூலகமும் கற்றலுக்கான வளநிலையமும் இவரது பெரும் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ளது. பாடசாலையின் தெற்குப் புறமாக பாடசாலையோடு இணைந்து 02 பரப்புக் காணி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் வாங்கப்பட்டுள்ளது. கிழக்குப் பக்கமாக ஒரு அழகான நுழைவாயில் அமைக்கப்பட்டிருக்கிறது. பாடசாலை முற்பக்கத்தில் ஒரு அழகான வளைவு போடப்பட்டுள்ளது. பாடசாலை முன் சுற்று மதிலில் வர்ணம் பூசப்பட்டு சித்திரங்கள் வரையப்பட்டிருக்கிறது. பாடசாலையின் தோற்றம் எழுச்சி பெற்றிருக்கிறது என்று கூறவேண்டும். இந்த எழுச்சிக்கும் பாடசாலையின் கவர்ச்சிக்கும் அதிபரின் ஆற்றலும் அர்ப்பணிப்புமே காரணம் என்று உறுதியாகக் கூறமுடியும். அத்தோடு அதிபர், ஊர் மக்களோடும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்களின் பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களுடனும் ஆசிரியர்களுடனும் அவர் கொண்ட இனிமையான தொடர்பையும் பாடசாலையின் எழுச்சி எடுத்துக்காட்டுகிறது.

பாடசாலையின் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளும் சிறப்பாக இருக்கிறது. ஆங்கில எழுத்தாக்கப் போட்டியில் தரம் 03 மாணவன் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாகாண மட்டத்தில் ஆங்கிலக் குழுப் பாடல் 3ம் இடத்தையும், வினாடி வினா தரம் 5 மாணவர்கள் 2ஆம் இடத்தையும் பெற்றிருக்கிறார்கள். மாணவர்கள் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவதையும் காணமுடிகிறது. இவற்றை நோக்கும்போது பாடசாலை வளர்ச்சிப் பாதை உயர்வை நோக்கிச் செல்வதைக் கண்டு மனம் பூரிப்படைகிறது.

இன்றைய அதிபர் திரு. ந. தேவராசா அவர்கள் ஆளுமை மிக்கவர்; ஆற்றலுடையவர். அவர் காலத்தில் பாடசாலை வளர்ச்சியின் உச்சத்தை அடையும் என்ற நம்பிக்கையோடு, கல்வி அன்னையின் 125 ஆண்டு நிறைவிலே அவரை வாழ்த்துகிறேன். கல்வி அன்னையையும் வணங்குகிறேன்.

தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

பொ. வியாகேசு
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு,
பிரதேசசபை.



இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வித்துறை வளர்ச்சி மிக உயர்ந்த நிலையில் இருந்ததென்றால் அதற்கு கிறிஸ்தவ மதக் குழுக்களின் பங்களிப்பே முக்கிய காரணம். வடமராட்சியில் பெயர் பெற்று விளங்கும் கல்லூரிகள் பல கிறிஸ்தவ மிஷனரிமாரினாலேயே உருவாக்கப்பட்டது. அந்த வகையில் மெதடிஸ்த மிஷனால் உருவாக்கப்பட்ட நெல்லியடி வதிரி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆரம்பப் பிரிவு கல்வி வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்பு மிக உயர்வானது. இன்று நூற்று இருபத்து ஐந்து ஆண்டு கால வளர்ச்சியை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வடமராட்சியில் மட்டுமன்றி அகில இலங்கையிலும் புகழ்பூத்த ஆரம்ப பாடசாலைகளில் இதுவும் ஒன்று. இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் கல்விக்கு அத்திவாரமிட்டு உரமூட்டியதை எவரும் மறந்துவிட முடியாது. கற்றறிந்த மக்கள் வாழும் சமுதாயத்தில் பள்ளிகளின் உயர்வு தவிர்க்க முடியாது. இப் பாடசாலை மரபுவழி வந்த பாடசாலை. இங்கு முதலாண்டு வகுப்பு அனுமதிக்கு பெரும் போட்டி நிகழ்வது இதற்கு சான்று பகரும். மனித இனத்தின் விருத்திக்கும் தனி மனிதனின் நிறைவான வாழ்விற்கும் ஆதாரமான அழியாச் சொத்து கல்வி என்பதை இப் பாடசாலை மாணவர்கள் மறந்ததேயில்லை.

''கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான்'' என்ற கல்விச் சிந்தனையை கருத்திற் கொண்டு பல்லாண்டு பாடசாலையின் புகழ் வாழ்க, வளர்க, வளம் பெறுக எனப் பிரார்த்திக்கின்றேன்.

125TH ANNIVERSARY MESSAGE TO MY PRIMARY SCHOOL

(J/ Nelliady Methodist Mission Tamil-mixed School
Old Student 1980 – 1984)



I consider it a great pleasure to have been given a chance to write a few wordson this special year Book about my Primary School which has a great tradition in academic excellence.

As I look back my days at the school 30 years ago, Our Principal Mr. Rajaratnam, Teachers – Mrs. Theivanaipillai Panchadcharam, Mrs. Pooma Panchadcharam, Mrs. Saraswathy Rajaratnam, Mrs. Saraswathy Balakrishnan and late Mrs. Kathiramalai Muthulingam come to my mind. They helped to mould our young minds, so that later we had the courage and a modicum of wisdom to face the intensity of our secondary and advanced level studies as well as Medical and post graduate medical studies.

With due respect, on behalf of my brothers, sister, friends and myself I would like to render our humble gratitude to all our teachers and Principals who had retired and who are currently providing their service for guidance and discipline which gave us a firm foundation to climb the difficult ladder in our lives.

We stand today, as tall, proud, young professionals; ready to face the world and deal with all that challenges throws in our path. Now, I must say apart from the learning as a mere subject, we were given a golden opportunity of realizing who we ourselves are in this small unit of society among others. We learnt so much the moral values, attitudes and interest of other people and their behavior towards us both good and bad contributed to the moulding of our own characters.

I am extremely glad that I started my primary education at J/ NMMTMS with my there brothers and my little sister. We always treasure the warm memories of our days at our school. It was our pleasure to share those beautiful five years of our life with all our friends who studied with us. When I recall my days at school, these memorable moments come to my mind;

The special day that my great achievement was announced on the assembly stages; I was awarded the first place in all-Island for the 5th grade Scholarship exam.

My father's happiest moments when we all receive Term test-reports on assembly stages at every school

I would like to take this opportunity to thank all our beloved parents, Principals, Vice-principals, teachers, well-wishers and old students for your immense help and encouragements for the children at the primary school. Without your undying support, we would not be standing where we are today.

And finally, I would like to conclude by wishing great success in the years ahead to all the children at primary school and old students who are at different levels of their studies at secondary schools and universities.

May you all have great success in all your collective and individual goals!

Kind Regards,
Dr. Gowry Kathiravetpillai/ Balakumaran MBBS (Riga) MRCGP
(United Kingdom)

The Island - 26.11.84

First place at scholarship exam

(From Our Point Pedro Corr.)

K. Gowry of Nelliady Methodist Mission Tamil School, in the Udupiddy circuit has won the first place in the All-Island Grade 5 examination for the selection of students for scholarship and awarding of bursaries. She obtained an aggregate of 181 marks. 45 candidates from 20 schools in the Udupiddy Circuit have been successful in the examination.

Mr. M. Simiampillai Director of Education Northern Region has commended the performance of these students despite the prevalance of an acute shortage of teachers in the area.

திரு. நடராசா தேவராசா B.A. Dip in Edu, MA, SLPS - III

மலர்க்குழுவினர்

இடமிருந்து வலம் :

நிரை 1 : திரு. இ. உதயகுமார், திரு. க. முரளீதரன் (நூலாசிரியர்), திரு. மு. ச. சுப்பிரமணியம் (தலைவர்), திரு. ந. தேவராசா (போஷகர்), திரு. கு. சுரேந்திரன் (செயலாளர்), திரு. சி. கணேசலிங்கம், திரு. அ. சதீஸ்

நிரை 2 : திருமதி க. தவேஸ்வரன், திருமதி. பா. தனபாலசிங்கம், செல்வி இ. அமிர்தலிங்கம், திருமதி ற. தர்மலிங்கம், திருமதி சி. விஜயகுமாரன், திருமதி சி. சத்தியசீலன், திருமதி ந. உதயகுமார் (பொருளாளர்)

திரு. எஸ். கந்தவனம்

திரு. ஆ. தாவீது சுப்பிரமணியம்

திரு. சி. மயில்வாகனம்

திரு. ஜே. க. செல்லத்துரை

திரு. த. கந்தவனம்

திரு. க. இராசரத்தினம்

திரு. சி. வேலாயுதம்

திரு. சு. வரதராசசர்மா

திரு. வ. கணேசமூர்த்தி



திரு. ஐ. நடராஜா

திரு. ந. தேவராஜா

ஆசிரியர் குழாத்துடன் முன்னை நாள் அதிபர் திரு. ஜே. க. செல்லத்துரை



ஆசிரியர் குழாத்துடன் முன்னை நாள் அதிபர் திரு. வ. கணேசமூர்த்தி

ஆசிரியர் குழாத்துடன் முன்னை நாள் அதிபர் திரு. ஐ. நடராஜா

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

ஈழவள நாட்டின் சிரசெனப் போற்றப் படும் யாழ்ப்பாணக் குடாநாடு தமிழர்கள் செறிவாக வாழும் இடமாகவும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் கலை கலாசாரங்களுக்கும் கல்விக்கும் என்றுமே நிகரில்லாத ஓர் புண்ணிய பூமியாக சைவமும் தமிழும் இரண்டறக் கலந்த பிரதேசமாக விளங்கு கின்றது. யாழ் குடாநாட்டின் வடபால் அமைந்து இருப்பது வடமராட்சி. இவ் வடமராட்சியானது வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி கிழக்கு என்ற மூன்று பிரதேச பிரிவுகளை தன்னகத்தே கொண்டது.

இத்தகைய வடமராட்சிப் பிரதேசம் இன்று வடமராட்சி கல்வி வலயம் என்ற பிரிவினை மூன்று பிரதேச செயலர் பிரிவு களையும் உள்ளடக்கி அமைந்ததோடு மூன்று பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் மூன்று கல்விக் கோட்டங்களைக் கொண்டது. இது கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி என்பனவாகும். இவற்றுள் கரவெட்டிக் கோட்டத்தைச் சார்ந்த ஆரம்பப் பாடசாலை களில் ஒன்று எமது பாடசாலை ஆகும்.

வடமராட்சி என்றால் சிறந்த கல்விமான்களால் நிறைந்த பூமி என்று கூறுவர். கல்விக்கும் கலைக்கும் வடமராட்சி நிகரில்லாத பங்களிப்புக்களை வழங்கி நிற்கின்றது. இந்தவகையில் கல்வியில் உன்னதநிலை பெற்றுள்ள பெரிய பாடசாலைகளும் அவற்றின் ஊட்டல் பாடசாலைகளாக ஆரம்ப பாடசாலைகளும் விளங்குகின்றன. அந்த வகையில் ஆரம்பக் கல்வியில் வரலாற்று தடம் பதித்து அனைவரும் போற்றுகின்ற தங்கள் பிள்ளைகளையும் சேர்த்துவிட வேண்டுமென பெற்றோர்கள் பலரும் ஆதங்கப்படும் பாடசாலையாக இது விளங்குகின்றது. இப் பாடசாலையை யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை என்று அழைப்பதைவிட அரசடிப் பாடசாலை என்ற செல்லப் பெயராலேயே அனைவரும் அழைப்பர்.

1796 இல் இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தமது ஆட்சியை நிலை நிறுத்தியபோது ஆட்சி மையமான கொழும்பு அக்காலத்தில் அங்கு வந்த மிஷனரி மாரையும் அவர்களது சபைகளையும் தங்களுடன் வைத்திராது வடக்கு நோக்கியே அனுப்பினர். இதனால் யாழ் குடா நாட்டில் தமது ஆதிக்கத்தை செலுத்திய ஆங்கில மிஷனரிகள் பலதரப்பட்ட சேவைகளை எமக்கு சிறப்பாக ஆக்கித்தந்தனர். அந்த வகையில் சிறப்பான கல்விக்கு அதுவும் ஆங்கிலக் கல்விக்கு வித்திட்டு ஈழத்து தமிழ் அறிஞர்கள் ஆங்கிலத்தை சரளமாக பேசவும் எழுதவும் வழிசமைத்தனர் என்றால் அது மிகையாகாது. நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு அவரது ஆங்கில அறிவு பெரிதும் உறுதுணையாக இருந்தது. இவரைப் போல பல அறிஞர்களை நாம் குறிப்பிடலாம்.

ஆங்கிலேயர் தமது சமயக் கருத்துக் களை பரப்புவதற்கு கல்வியை ஒரு கருவி யாக கொண்டனர். அவர்களது மிஷனரி களான மெதடிஸ்த மிஷன், அமெரிக்கன் மிஷன் போன்ற இன்னோரன்ன மிஷன் அமைப்புக்களினூடாக சமயத்தை பரப்ப எத்தணித்தனர். அவர்கள் அச்சமய நிறுவனத்துடன் இணைந்து பாடசாலைகளை தொடங்கினர். தொடக்க காலத்தில் வழிபாட்டிடமே வகுப்பறையாக இருந்ததுடன் ஆங்கிலமும் கிறிஸ்தவமும் சிறப்பாக போதிக்கப்பட்டன. இந்தவகையில் 1816 ஆம் ஆண்டு மெதடிஸ்த திருச்சபையின் ஆசிய மாநாட்டைத் தொடர்ந்து அருட்திரு R. Carver அவர்கள் பருத்தித்துறையிலும்

யாழ்ப்பாணத்திலும் பாடசாலைகளை ஆரம்பித்து முன்னெடுத்து செல்லும்படி ஈழத்திற்கு அனுப்பப்பட்டார்.

இந்த செயற்பாட்டின்படி 1826 இல் இலங்கைக்கு வந்த அருட்திரு. பீற்றர் பேசிவல் பருத்தித்துறைக்கு திருப்பணி யாளராக நியமிக்கப்பட்டார். இவரது பணிக்காலத்தில் பருத்தித்துறை என அவர்கள் குறிப்பிடும் வடமராட்சியில் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தவகையில் கற்கோவளம், புலோலி, தம்பசிட்டி, தட்டாதெரு, மந்திகை, அல்வாய், கட்டைவேலி, நவுண்டில், துன்னாலை, கரவெட்டி, நெல்லியடி, வதிரி போன்ற இடங்களில் மெதடிஸ்த மிஷன் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இத்தகைய பாடசாலைகள் வரிசையில் எமது பாடசாலையும் உருவாக்கப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. கிடைக்கக்கூடிய தகவல்களின்படி 1829 இல் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தேவாலயம் ஆரம்பிக்கப்பட்டு அங்கு வழிபாடுகள் நடைபெற்ற வேளையில் கல்விச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதாக கட்டைவேலி சேகரத்தின் ஊடாக கிடைக்கக் கூடிய தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும் எமக்கு கிடைக்கக் கூடிய முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் கருத்துக்களை தேடி அறிந்த அளவில் எமது இப் பாடசாலை 1888 இல் பாடசாலை என்ற அந்தஸ்துடன் மெதடிஸ்த மிஷனரிமாரால் தொடங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஆண்டை நாம் ஆரம்ப ஆண்டாகக் கொண்டு பார்க்கும்போது இன்று 125 ஆண்டுகள் தனது கல்விப் பணி கண்டு உயர்ந்து நிற்கின்றது நம் பாடசாலை என்றால் அது பெரும் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

இற்றைக்கு 125 வருடங்கள் இப் பாடசாலை தனது கல்விப் பணியில் ஆயிரக் கணக்கான மாணவர்களை உள்வாங்கி, ஆரம்பம் தொடக்கம் ஓர் ஆரம்பக்கல்வி பாடசாலையாக மிளிர்கின்றது என்பது எமக்கெல்லாம் பெருமை சேர்த்த விடயம். எத்தனையோ கல்விமான்கள் அறிஞர்களை உருவாக்கி பெரும் சாதனை படைத்து இன்றும் சாதனையில் முதற்தர பாடசாலை யாக விளங்குகின்றது என்றால் அதன் பணியை நாம் எவ்வாறு போற்றுவோம்.

அன்றுமுதல் இன்றுவரை பதவியேற்ற அதிபர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களும் இப் பாடசாலையின் வளர்ச்சியை கண்டு கவனித்து கல்வியில் உயர்வடைய வைத்தனர். அந்தவகையில் 1888 ஆம் ஆண்டு தொடக்கம் பணியாற்றிய அதிபர்களை நாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும் எமது பழைய மாணவர்கள், பெற்றோர்கள், முன்னைய ஆசிரியர்கள் ஆகியோரது ஒத்துழைப்புடன் குறிப்பாக திரு. சுரேந்திரன் (லவன்) அவர்கள் ஊரூராக, வீடுவீடாக அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து ஆரம்ப காலத்து அதிபர்களான திரு. எஸ். கந்தவனம், திரு. ஆ. சுப்ரமணியம், திரு. ஜெ.க. செல்லத்துரை, திரு. சி. மயில்வாகனம் ஆகியோரது புகைப்படங்களையும் தகவல்களையும் சேகரித்த பெருமை அவரைச் சாரும். 1900 ஆம் ஆண்டின் பின் கிட்டத்தட்ட தற்போதைய அதிபர் பதவி ஏற்ற காலம் வரை பத்து அதிபர்களை இனங் கண்டுள்ளோம். எனினும் அவர்கள் சேவையாற்றிய ஆண்டுகள் சரியாக எம்மால் எடுக்க முடியாது போனமை பெரும் குறைபாடாக உள்ளது. இது பற்றிய தகவல்கள் யாராவது தரும் பட்சத்தில் இவ்வரலாற்றில் அதனை சேர்த்துக்கொள்ள நாம் தயங்கமாட்டோம். அந்தவகையில் இங்கு பணியாற்றிய அதிபர்களாக,

திரு. எஸ். கந்தவனம்
திரு. ஆழ்வாப்பிள்ளை தாவீது சுப்ரமணியம்
திரு. சின்னத்தம்பி மயில்வாகனம்
திரு. ஜேக்கப் கதிர்காமு செல்லத்துரை
திரு. தம்பு கந்தவனம்
திரு. கந்தவனம் இராசரத்தினம்
திரு. சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்

திரு. சுப்பிரமணிய ஐயர் வரதராசசர்மா
திரு. வல்லிபுரம் கணேசமூர்த்தி
திரு. ஐயாத்துரை நடராஜா
திரு. நடராஜா தேவராஜா
இவர்களின் அயராத பணியே இன்று இத்தகைய உயர்விற்கு காரணம் எனலாம்.

இவ் அதிபர்கள் ஒவ்வொருவரது காலப்பகுதியிலும் இருந்த ஆசிரியர்கள், மாணவர்களின் எண்ணிக்கைகள் சரியாக கிடைக்கவில்லை. ஆயினும் இவர்களின் மகத்தான சேவையால் இப் பாடசாலை அன்றுதொட்டு முன்னணி பாடசாலையாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 1952 புதிய தேவாலயம் அமைக்கப்பெற்றதாகவும் அதனைத் தொடர்ந்து வகுப்புக்களில் நடைபெற்ற வழிபாடுகள், தேவாலயத்திற்கு மாற்றப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. ஈழத்தில் மெதடிஸ்த திருச்சபையால் உருவாக்கப்பட்ட 177 பாடசாலைகளில் இப் பாடசாலையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

1960 களில் மிசனரிகளிடமிருந்து அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றபோது இதுவும் பொறுப்பேற்கப்பட்டது. தொடர்ந்து, மிஷனரியால் அன்று வழங்கப்பட்ட காணிக்குள் இருந்த கட்டடம் அதாவது பிரதான மண்டபத்துடன் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. படிப்படியாக பாடசாலை களுக்கு அரச உதவிகள் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பங்களில் இதுவும் சற்று விஸ்தீரணப் படுத்தப்பட்டது.

அந்தவகையில் திரு. சி. வேலாயுதம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் தற்போதுள்ள அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தின் முதல் தளம் அமையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அவரது அயராத செயற்பாடும் பாடசாலை சமூகத்தினது பெரும் முயற்சியால் பாடசாலைக்கு தெற்கே உள்ள 3 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டு அதற்குள் தற்காலிக கொட்டகை போடப்பட்டு வகுப்பறைகள் சற்று விரிவுபடுத்தப்பட்டன.

உண்மையில் மிகவும் முக்கியமான காலகட்டம் என்றுதான் இதனைக் கூற வேண்டும். இவ்வளவு பெரிய நிலப்பரப்பை அதிபர் திரு. சி. வேலாயுதம், பழைய மாணவர் சங்கத்தின் மு. ச. சுப்பிரமணியம், திரு. மு. கதிரவேற்பிள்ளை, திரு. க. செல்வராசா ஆகியோருடன் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் பலரும் இணைந்து செயற்பட்டனர். இவர்களை வழிப்படுத்துபவராக சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய A. K. நடராஜா அவர்களின் பணியும் மகத்தானது. இவர்கள் அன்று வீடுவீடாக சென்று பணம் சேர்த்து கொள்வனவு செய்தனர். இவ்வாறு அக் காணியைக் கொள்வனவு செய்த அனைவரையும் நாம் தெய்வமாக போற்ற வேண்டும். ஏனெனில் அப்படி ஒரு காணி கொள்வனவு செய்யப்பட்டு இருக்காவிடில் எமது பாடசாலை இன்று இத்தகைய எழுச்சி பெறுமா, அக்காலத்தில் அதற்காக பாடுபட்ட அன்புள்ளங்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் நாம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

திரு. சி. வேலாயுதம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் விளையாட்டுப் போட்டி, மாணவர்களுக்கான ஒழுங்கு விதிகள் என்பன வகுக்கப்பட்டு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதுடன் பாடசாலைக் கீதத்தை ஆக்கிய பெருமை அவரையே சாரும். இவருடைய காலத்தில் தண்ணீர் தாங்கியும் நிர்மாணிக்கப்பட்டது.

தொடர்ந்து அதிபர் இடமாற்றத்தின்படி இவர் மாற்றலாக வேறு பாடசாலை சென்ற பின் திரு. சு. வரதராஜசர்மா அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று குறைந்த காலம் மாத்திரமே நிருவகித்தார். அவரைத் தொடர்ந்து திரு. வ. கணேசமூர்த்தி அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலை

மேலும் பௌதிக வளங்களாலும் கல்வியிலும் உயர்ந்து நின்றது. இவர் சிறப்பான வழிநடத்தலில் விளையாட்டு விழாக்கள் மற்றும் பல்வேறு செயற்பாடு களை சிறப்பாக முன்னெடுத்து பாடசாலை யின் புகழை மேலும் உயர்த்தினார் என்றால் அது மிகையாகாது.

தொடர்ந்து இவர் மாற்றலாகிச் செல்ல திரு. ஐ. நடராஜா அவர்கள் பாடசாலையை பொறுப்பேற்று திறம்பட நடாத்தினார். இவருடைய காலத்தில் புதிதாக வாங்கப்பட்ட காணியில் இருந்த தற்காலிக கொட்டகை அகற்றப்பட்டு புதிய கட்டடத்தின் அடித்தள வேலைகள் தொடங்கப்பட்டு முதல் இரு வகுப்புகள் நடாத்தப்பட்டு வந்தன. எனினும் பாடச் செயற்பாடுகளிலும் பாடப்புறச் செயற் பாடுகளிலும் சளைக்காது முன்னேறியது. 2007 ஆம் ஆண்டில் தரம் 5 இல் 32 மாணவர்கள் சித்தியெய்தி யாழ்ப்பாண பாடசாலைகள் அளவிற்கு உயர்ந்த நிலையை அடைந்த பெருமை உண்டு.

தொடர்ந்து அதிபர் ஐ. நடராஜா அவர்கள் மாற்றலாகிச் செல்ல திரு. ந. தேவராஜா அவர்கள் பொறுப்பேற்ற காலத்தில் தரம் 5 புலமையில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டாலும் தொடர்ந்த அவரது செயற்பாடும் ஆசிரியர்களின் விடாமுயற்சியும் பெறுபேறுகளின் உயர்ச்சிக்கு காரணமாயின. இன்று பௌதீகவளத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியான ஓர் நிலையே இங்கு காணப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பெற்ற அதிபர் அலுவலகம் அதனைத் தொடர்ந்து EKSP திட்டத்தின் மூலம் புதிதாக அமையப்பெற்ற இரண்டுமாடி கட்டடத்தின் கீழ் தள வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 40 x 25 அளவுடைய நவீன நூலகம் அமையப் பெற்றது. தொடர்ந்து 2011 ஆம் ஆண்டில் EKSP திட்டத்தின் மூலம் புதிய மாடிக் கட்டடத்தின் மேல்தள வேலைகள் பூர்த்தியாகி 4 வகுப்பறைகள் கிடைக்கப்பெற்றன. இது இப் பாடசாலையின் மாணவர்கள் சிறப்பாகக் கற்க வழிசமைத்தது எனலாம்.

தொடர்ந்து பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வலய கல்வித் திணைக்களம், மாகாண கல்வித் திணைக்களம் என்பவற்றின் ஒத்துழைப்போடு பல பௌதீகவளத் தேவைகள் பூர்த்தியாக்கப் பட்டன.

2012 ஆம் ஆண்டில் 5000 பாடசாலைகள் செயற்றிட்டத்தின் கீழ் எமது பாடசாலையும் தெரிவுசெய்யப்பட்டு பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்தும் எமது பாடசாலை கரவெட்டி கோட்டத்தில் சிறந்த பிள்ளை நேயப் பாடசாலையாக மிளிர்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

தற்போது பெற்றோர்களதும் பழைய மாணவர்களதும் உதவிகள் சீரான முறையில் கிடைப்பதனால் சகல தேவை களையும் பூர்த்திசெய்யும் அளவிற்கு சிறப்பாக விளங்குகின்றது. பாடசாலை அபிவிருத்தி சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் என்ற முச்சங்கங்களும் போட்டியாக சிறப்பாக இயங்குகின்றமை பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் உந்து சக்திகளாய் உள்ளன எனலாம்.

இதேவேளை பாடசாலையின் தெற்குப் புறத்தில் இருந்த 2 பரப்பு காணியையும் எட்டு இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்வதற்கு கனடா வாழ் பழைய மாணவியான திருமதி ஜீவகுமார் வானதி முன்வந்தமை பாடசாலைக்கு கிடைத்த பேறு எனலாம். எனவே இப் பாடசாலை இன்று சகல வளங்களையும் கொண்ட ஓர் முன்னணி முன் மாதிரியான ஆரம்ப பாடசாலையாக விளங்குவது எமக்கு பெரும் ஆனந்தத்தை தருகின்றது என்றால் அது மிகையாகாது.

பகுதித்தலைவர்

திருமதி றஞ்சினி தர்மலிங்கம் Primary Trained, SLTS - I

பாடசாலை முகாமைத்துவ அணியினர்

இடமிருந்து வலம் :

திரு. க. முரளீதரன், செல்வி இ. அமிர்தலிங்கம், திரு. ந. தேவராசா (அதிபர்), திருமதி ற. தர்மலிங்கம் (பகுதித் தலைவர்), திருமதி பா. தனபாலசிங்கம்

வருட ஆரம்பத்தில் பாடசாலை ஆளணியினர்

இடமிருந்து வலம் :

நிரை 1 : திருமதி வி. தவேந்திரராசா, செல்வி இ. அமிர்தலிங்கம், திருமதி பா. தனபாலசிங்கம், திருமதி ற. தர்மலிங்கம் (பகுதித் தலைவர்), திரு. ந. தேவராசா (அதிபர்), திருமதி ச. தேவரஞ்சன், திரு. இ. சுரேஷ்குமார், திரு. க. முரளீதரன், திரு. வீ. லோகநாதன்

நிரை 2 : திருமதி கீ. முருகதாஸ், திருமதி தே. கதிர்காமலிங்கம், செல்வி ஞா. இராஜசிங்கம், திருமதி ரே. கருணாகரன், திருமதி ந. கந்ததாசன், செல்வி ம. நடராசா, செல்வி நி. சிவஞானசுந்தரம், திருமதி ஜெ. சிவநடராசா, செல்வி து. துரைராசா

தற்போதைய பாடசாலை ஆசிரியர் குழாம் - 2013

இடமிருந்து வலம் :

நிரை 1 : திரு. க. முரளீதரன், திருமதி வி. தவேந்திரராசா, செல்வி இ. அமிர்தலிங்கம், திரு. ந. தேவராசா (அதிபர்), திருமதி ற. தர்மலிங்கம் (பகுதித் தலைவர்), திருமதி பா. தனபாலசிங்கம், திரு. இ. சுரேஷ்குமார்

நிரை 2 : திருமதி ச. தேவரஞ்சன், செல்வி து. துரைராசா, செல்வி ஞா. இராஜசிங்கம், திருமதி தே.கதிர்காமலிங்கம், செல்வி ம. நடராசா, திருமதி ந. கந்ததாசன், செல்வி சி. விமலநாதன், செல்வி நி. சிவஞானசுந்தரம், திருமதி ஜெ. சிவநடராசா

பாடசாலை உள்ளக மேற்பார்வைக் குழு

இடமிருந்து வலம் :

திருமதி வி. தவேந்திரராசா, செல்வி இ. அமிர்தலிங்கம், திரு. ந. தேவராசா (அதிபர்), திருமதி ற. தர்மலிங்கம் (பகுதித் தலைவர்), திருமதி பா. தனபாலசிங்கம்

பாடசாலையின் மாணவர் ஒழுக்காற்றுக் குழுவினர்

இடமிருந்து வலம் :

திருமதி ஜெ. சிவநடராசா, செல்வி இ. அமிர்தலிங்கம், திரு. ந. தேவராசா (அதிபர்), திருமதி ற. தர்மலிங்கம் (பகுதித் தலைவர்), திருமதி பா. தனபாலசிங்கம்

பாடசாலை ஆளணி விபரம் - 2013

1.	திரு. நடராஜா தேவராஜா	SLPS III
2.	திருமதி றஞ்சினி தர்மலிங்கம்	SLTS I
3.	செல்வி இராஜசுலோசனா அமிர்தலிங்கம்	SLTS 2:I
4.	திருமதி பாமினி தனபாலசிங்கம்	SLTS 2:I
5.	திருமதி விமலேஸ்வரி தவேந்திரராசா	SLTS 2:I
6.	திருமதி சறோஜினி தேவறஞ்சன்	SLTS 2:I
7.	திருமதி ஜெயமணி சிவநடராஜா	SLTS 2:I
8.	செல்வி மேரிதிரேசின் ஞானராணி ராஜசிங்கம்	SLTS 2:I
9.	திரு. கந்தசாமி முரளீதரன்	SLTS 2:II
10.	திருமதி நந்திகா கந்ததாசன்	SLTS 2:II
11.	திருமதி ரேணுகா கருணாகரன்	SLTS 2:II
12.	செல்வி மனோராணி நடராஜா	SLTS 2:II
13.	செல்வி துரைராசா துஷ்யந்தினி	SLTS 3:I
14.	திருமதி தேவறஞ்சனி கதிர்காமலிங்கம்	SLTS 2:II
15.	திரு. இரட்ணசபாபதி சுரேஷ்குமார்	SLTS 3:I
16.	செல்வி நித்யா சிவஞானசுந்தரம் உள்ளக பயிற்சி ஆசிரியர்	
17.	திரு. வீ. லோகநாதன் இரவு காவலாளி	

தற்காலிக ஆசிரியர்கள்

திருமதி யமுனா லோகேஸ்வரன்	ELRTC
திருமதி யசோதா அரவிந்தன்	ELRTC
திருமதி தயாரதி விஜயபாரதி	ELRTC
செல்வி சியாமளா உதவி ஆசிரியர்	
செல்வி தர்சிகா பாக்கியதாசன்	ELRTC

இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

திருமதி கீதாஞ்சலி முருகதாஸ் ஆ.க.	SLTS 2:II
திரு. கந்தையா இலங்கேஸ்வரன் ஆ.க.	SLTS 2:II
திரு. உதயகுமார் தனுஷாந் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்	

அதிபரின் உள்ளத்திலிருந்து....

யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையானது இந்த ஆண்டு 125 ஆண்டுகளை தனது கல்விப் பணியில் நிறைவு செய்து வெற்றிநடை போடும் இவ்வேளையில் இன்றைய ஆண்டு விழாவும் நாளை நடைபெற உள்ள வருடாந்த பரிசில்தின விழாவும் இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு எமக்கு அருள்பாலித்திருக்கும் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியான அன்னை வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து,

இன்றைய விழாவில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதம அதிதி அவர்களே, கௌரவ விருந்தினர்களே, சிறப்பு விருந்தினர்களே, ஏனைய கல்விசார் உத்தியோகத்தர்களே, எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே, எமது ஆசிரியர்களே, அன்பான மாணவர்களே, பெற்றோர்களே, நலன் விரும்பிகளே, பாடசாலை அதிபர்களே, முன்னை நாள் அதிபர்களே, ஆசிரியர்களே அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்து கொள்வதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டுடன் 125 ஆண்டுகளை நிறைவு செய்வது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கும் விடயம். இத்தகைய நீண்ட வரலாற்றை கொண்ட எமது பாடசாலை அன்னை இதுவரை ஆயிரக்கணக்கான கல்விசார் அறிஞர்களை உருவாக்கி இன்றும் கல்விப் பணியில் அனைவரும் வியக்கும் வண்ணம் சாதனை படைத்துக் கொண்டு இருப்பது யாவரும் அறிந்ததே.

நான் இந்த பாடசாலையை பொறுப்பேற்று இந்த ஆண்டுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் பாடசாலையானது எத்தகைய உயர்நிலை பெற்றுள்ளது என்பதனை நான் கூறவேண்டிய தேவையில்லை. பாடச் செயற்பாடுகளின் முன்னேற்றம், பாடப் புறச் செயற்பாடுகளின் சிறப்பான செயற்பாடு, பாடசாலைச் சமூகம் பாடசாலையுடன் ஐக்கியமாக செயற்படும் விதம் அனைத்தையும் கொண்டு அனைவரும் அறிந்து கொள்வீர்கள். எனவே ஓர் பாடசாலையின் முன்னேற்றம் அப் பாடசாலையின் சமூகத்தின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பாடசாலை நகர்ப்புறப் பாடசாலைகள் போல உயர்வு பெற்று மிளிர்வதற்கு நான் என்னாலான அனைத்து அர்ப்பணிப்புக்களையும் செய்து எதனையும் திட்டமிட்டு திணைக்களத்தினதும் பாடசாலைச் சமூகத்தினதும் ஒத்துழைப்புடன் செய்வதற்கு தயாராக இருக்கின்றேன் என்பதை இச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மெதடிஸ்த மிஷனரியால் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோதும் அன்று முதல் இன்றுவரை இங்கு கல்விகற்று வெளியேறும் மாணவர்களுள் பெரும்பாலானவர்கள் இந்துக்களாகவே காணப்படுகின்றனர். காரணம் இப் பிரதேசம் அத்தகைய சைவ பாரம்பரியத்தை கொண்டு மிளிர்வதே ஆகும். இருந்தும் இப் பாடசாலை ஆரம்பித்த மெதடிஸ்த மிஷனுக்கு நாம் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம்.

அரசடிப் பாடசாலைப் பிள்ளைகள் என்றால் அவர்களது சீருடை, அவர்களது நடையுடை பாவனைகள் அவர்களை வேறுபடுத்திக் காட்டுமளவிற்கு சிறப்பான பண்பாட்டு கோலங்கள் அன்று முதல் இன்றுவரை மிக நேர்த்தியாக வளர்த்தெடுக்கப்படுகின்றன. ஒரு போட்டி

நிகழ்விற்கு சென்றால் அங்கு அரசடி வந்ததா என மற்றவர்கள் சற்று மிரளுமளவிற்கு பிள்ளைகள் போட்டியில் கலந்துகொள்வர். இதற்கு காரணம் சிறப்பான தயார்ப்படுத்தல்கள். ஆசிரியர் களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள். அதற்கு பெரும்பாலான பெற்றோர்கள் உந்துசக்தியாக மிளிர்வது என்றால் அது மிகையாகாது.

பாடசாலைச் செயற்பாடுகள்

வடமராட்சி வலயத்தின் ஆரம்ப பாடசாலைகளுள் தலையாய பாடசாலை யாக விளங்கும் இப் பாடசாலை கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகள் போல சகல நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாகவும் திட்டமிடப்பட்டும் நடாத்தப்படுவதோடு கோட்ட வலய மற்றும் மாகாண உயர் அதிகாரிகள் கலந்து சிறப்பிப்பது யாவரும் அறிந்ததே.

வருட ஆரம்பத்தில் தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவுடன் நிகழ்வுகள் தொடங்கினால் அடுத்து மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் இடம்பெறும். அடுத்து, இல்ல மெய்வன்மைப் போட்டி இடம்பெறும். இப் போட்டியில் எமது மாணவர்களின் Band அணிவகுப்பு மற்றும் அணிநடை நிகழ்வு இடைவேளை நிகழ்வுகள் மற்றும் போட்டி நிகழ்வுகள் யாவும் பெரிய பிரபல பாடசாலைகளில் நிகழ்வது போல எம்மால் ஒழுங்கமைக்கப்படும்.

தொடர்ந்து வெள்ளி ஆராதனை நிகழ்வுகள் வாரம்தோறும் இந்துமா மன்றத்தினரால் சிறப்பாக ஒழுங்கமைக்கப் படுவதோடு ஆசிரியர் தினம் பெற்றோர் களால் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு ஆசிரியர்கள் அனைவருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்படுவர். இதனைத் தொடர்ந்து வாணிவிழா, நவராத்திரி கால சிறப்பு போட்டிகள் மிகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப் படுவது குறிப்பிடத்தக்கது. இறுதி நாள் கலை நிகழ்வுகள் மிகவும் சிறப்பானதாக அனைத்து வகுப்பு மாணவர்களாலும் சிறப்பான நிகழ்வுகள் நிகழ்த்தப்படும். தொடர்ந்து நவம்பர் மாத இறுதியில் பரிசில் தின விழாவும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வுகளும் மிகவும் கோலாகலமாக அனைத்து பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இனிதே சிறப்புற நடாத்தப்படுவது குறிப்பிடத் தக்கது.

இன்று வடமராட்சி வலயத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் மாதிரி பிள்ளை நேயப் பாடசாலை என்ற அமைப்பில் (CFS) உள்வாங்கப்பட்டு பாடசாலை அழகுடன் புதுப்பொலிவு பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. இதற்கு பாடசாலை சமூகம் வழங்கும் ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

நான் இப் பாடசாலையை 2010.06.15 அன்று பொறுப்பேற்றபோது பாடசாலையின் பௌதீக வளம் பற்றாக்குறை பெருமளவு காணப்பட்டது. அன்று முதல் எனது பெரும் பணியாக இருந்தது பாடசாலை சமூகத்தை பாடசாலையில் உள்வாங்கி பௌதீக வள விருத்தியில் அவர்களை பங்காளிகள் ஆக்கிக் கொள்வதே ஆகும்.

அன்று பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக இருந்த திரு. இ. உதயகுமார் மற்றும் உறுப்பினர்களது பெரும் முயற்சியால் பாடசாலையின் பெற்றோர் நலன்விரும்பிகளின் உதவியுடன் சிறப்பான தொரு அதிபர் அலுவலகத்தை நிர்மாணித்து அனைவரும் ஏன் இது இவ்வளவு காலமும் உருவாக்கப்படவில்லை என்ற கேள்வியை கேட்குமளவிற்கு வடிவமைத்தோம்.

தொடர்ந்து திரு. வ. மகீபன் அவர்களின் முன்முயற்சியால் வெளிநாடு களில் வாழும் பழைய மாணவர்களின் உதவியை பெற்று பலதரப்பட்ட பௌதீக தேவைகளை நிறைவு செய்யுமளவிற்கு முன்னேற்றம் கண்டோம். இன்று பழைய மாணவர் சங்கத்தை (OSA) உருவாக்கி நிறைவான பணியை ஆற்றுகின்றோம்.

இதற்கு தலைவராக இருக்கின்ற மு. ச. சுப்ரமணியம் (மகான்) அவர்களின் அயராத உழைப்பும் அவரது பணியும் பேருதவியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. எந்தவொரு வேலையையும் அவர் பொறுப்பெடுத்தால் அதில் வெற்றிபெறாது ஒருபோதும் பின்வாங்கார். அத்தகைய சிறப்புமிகு தலைவர் எமது சங்கத்திற்கு வாய்த்தது அம்பாளின் கொடை என்றுதான் கூறுகிறேன்.

மேலும் எமது பாடசாலையின் பௌதீக வள விருத்தியில் பல பெற்றோர் களின் மகத்தான பங்களிப்புக்கள் உறு துணையாக அமைந்துள்ளன. இதேவேளை எமது பழைய மாணவனும் தற்போதைய யாழ் வலயக்கல்விப் பணிப்பாளருமான திரு. செ. உதயகுமார் Sir அவர்களின் பெரும் முயற்சிகளினால் புதிய மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு இன்று வகுப்பறைகள் மற்றும் நூலக வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. இதேவேளை இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தாவாக இருந்தவர் எமது பழைய மாணவனும் மாகாண கல்வித் திணைக்கள முன்னைநாள் பிரதம கணக்காளருமான திரு. T. இராஜேந்திரன் என்பது குறிப்பிடத் தக்கது.

தொடர்ந்தும் பௌதீக வள விருத்தி யில் எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. நந்தகுமார் Sir அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க இடம் வகிக் கின்றது. 2012 இல் எமது பாடசாலையை 5000 பாடசாலை திட்டத்தின்கீழ் உள்வாங்கி பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உதவியுள்ளார். பாடசாலை யின் தேவையறிந்து பௌதீக வளப் பங்கீடு களை கணிசமாக ஒதுக்கி உதவி புரிகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் வெற்றியளிப்பதற்கு எமது பக்கபலமாக இருந்தவர் எமது பிரதேச செயலர் திரு. ச. சிவஸ்ரீ அவர்களின் செயற்பாடுகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் வழிகாட்டுதல்கள் அனைத்தும் எம்மை மிக சிறப்பாக வழிநடத்தின என்றால் அது மிகையாகாது.

மேலும் எமது பாடசாலையின் தற்போதைய பாடசாலை அபிவிருத்தி சங்க செயளாளர் திரு. சு. சிவபாலன் அவர்கள் தன்னை அர்ப்பணித்து இப் பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவதுடன் எமக்கு வேண்டிய வழிகாட்டுதல்களையும் முறையாக திட்ட மிட்டு வழங்கி வருகின்றார். இவருக்கு உதவியாக பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் திருமதி தவேஸ்வரன் கவிதா அவர்களது பங்களிப்பு மிகவும் வேண்டிய தொன்றாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் எமது பாடசாலையின் பழைய மாணவி திருமதி நந்தினி உதயகுமார் (பாடசாலைப் பல் வைத்தியர்) அவர்கள் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப் பதற்கு உறுதுணையாக இருப்பதுடன் இன்றைய ஆண்டுவிழா நிகழ்வின் வரவு செலவுகளை கணக்கிட்டு வழிநடத்துபவராக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது பணி பாடசாலை செயற்பாட்டிற்கு மிகவும் வேண்டியதொன்றாக உள்ளது.

பாடசாலையின் பௌதீக வளம்

இப் பாடசாலையை நான் பொறுப் பேற்றபோது பல பௌதீக வளங்கள் பற்றாக்குறையாக காணப்பட்டன. அவற்றை இன்றுவரை நாம் திணைக்களங்களுடன் அணுகியும் அதேவேளை பெற்றோர் பழைய மாணவர்களின் பெரும் முயற்சியால் நிறைவு செய்துள்ளோம். இப் பாடசாலையின் 1992 ஆம் ஆண்டு பெற்றோர்கள் கொள்வனவு செய்த 3 பரப்பு காணி இன்று இப்பாடசாலை யின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்காணி யுடன் இணைந்திருந்த மிகுதி 2 பரப்பு காணி, இந்த ஆண்டில் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இதனை நெல்லியடி யைச் சேர்ந்த கனடாவாழ் பழைய மாணவி திருமதி வானதி ஜீவகுமார் கொள்வனவு செய்வதற்கு முன்வந்தமை எமது

பாடசாலைக்கு கிடைத்த பெரும் வெற்றி. இத்தகைய பழைய மாணவர்களை நாம் வணங்குகின்றோம். அவர்களுக்கு சிரம் தாழ்த்திய நன்றிகளையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இதற்கான பணம் 2014 ஜனவரியில் வழங்கப்படுமென உறுதியளித்துள்ளார். எனினும் காணியை உடனடியாக கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது இதற்கான வழி என்னவென பலவாறும் நான் சிந்தித்தேன். எனினும் எமது பழைய மாணவரும் பெற்றோரும் உடனடியாக கைகொடுத்தனர். ரூபா எட்டு இலட்சத்தினை நான் உட்பட திரு. மு. ச. சுப்ரமணியம், திருமதி நந்தினி உதயகுமார், திரு. சி. பாலமுருகன், திரு. ம. மகீபன், Dr. குமரன், Dr. செந்தூரன், திரு. ஐ. தபேந்திரன், திரு. அ. சதீஸ், திருமதி ம. மகேஸ்வரன், Dr. ப. சியாமளன், Dr. ந. சத்தியராஜ், கட்டட ஒப்பந்தகாரர் திரு. சோ. யாதவன், திரு. கிருஷ்ணராஜா (சின்னத்தம்பி) , திரு. ப. நிர்மலன், திரு. சி. கணேசலிங்கம் ஆகியோர் தலா ஐம்பதாயிரம் ரூபா வீதம் பங்களித்து இக்காணியை கொள்வனவு செய்தோம். இதற்காக உதவிய அனைவருக்கும் எனது நன்றிகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பௌதீக வளத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டபோதும் பாடசாலையின் பிரதான ஒன்றுகூடல் மண்டபம் மிகவும் பழைமை வாய்ந்தது. இம் மண்டபம் அகற்றப்பட்டு அவ்விடத்தில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படுமாயின் எமது பாடசாலையின் அழகும் இடவசதிகளும் ஒழுங்கும் மிகமிக சிறப்பாக அமைந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது மாத்திரமன்றி அவசிய மானது ஒன்றென்பதனை எமது பாடசமூகம் உணர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் இதனை மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

மூன்று வருட காலத்தினுள் நிறைவேற்றப்பட்ட பௌதீக வளத் தேவைகள்

2010

நவீன வசதி கொண்ட அதிபர் அலுவலகம் அமைக்கப்பட்டது. (பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

நீர்வழங்கல் குழாய்கள் புனரமைப்புச் செய்யப்பட்டமை.

நெல்லியடி சனசமூக நிலைய கனடா கிளை பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்கு உதவியமை.

நிலையான தொலைபேசி இணைப்பு பெறப்பட்டமை.

DVD Playar, Ceiling fan, வகுப்பறைகளுக்கான பெயர்ப்பலகைகள் அன்பளிப்பாகக் கிடைத்தமை

2011

பாடசாலை அழகுபடுத்தல் வேலைத்திட்டம்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 20 மாணவர்களின் பெற்றோர் புலமை பரிசில் நிதியம் ஒன்றை உருவாக்கியமை.

மல்ரி டொங்கிள், மின் விசிறி, திரைச்சீலை, பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பாகக் கிடைத்தமை.

EKSP திட்டத்தின்கீழ் நவீன நூலகம், புதிய மாடிக் கட்டடத்தின் மேற்தள வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டமை.

2012

பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பு செய்யப் பட்டமை.

5000 பாடசாலைகள் செயற்றிட்டத்தின் பிரகாரம் பிரதான மண்டப அரங்கு விஸ்தரிப்பு, வகுப்பறைகளுக்கான மின்சார இணைப்பு குழாய்நீர் விநியோக திருத்தம் என்பன மேற்கொள்ளப்பட்டமை.

பிரதான மண்டப வர்ணப்பூச்சு வேலைகள் முன்னெடுக்கப்பட்டமை.

சிறு திருத்தத்தின் கீழ் மலசலகூடம் மாபிள் பதித்து அழகுபடுத்தப்பட்டது.

சிறுவர் முற்றம் புனரமைப்பு செய்யப்பட்டமை.

தரம் 5 இல் சித்திபெற்ற மாணவர்களின் பெற்றோர் பரிசளிப்பு விழா நிதியம் ஒன்றை ஏற்படுத்தினர்.
சரஸ்வதி சிலை புதிதாக அமைக்கப்பட்டமை.
விளையாட்டுப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணங்கள் அன்பளிப்பு.
வடகிழக்கு மூலையிலுள்ள பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யப்பட்டமை.
பன்முகப்படுத்தப்பட்ட நிதியூடாக வர்ணப் பூச்சு வேலைகள், நூலக அலுமாரிகள் கிடைக்கப்பெற்றமை.

2013

கிழக்குப்புற நுழைவாயில் கேற் புதிதாக அமைக்கப்பட்டமை.
கொடிக் கம்பங்கள், கொடிகள் அன்பளிப் பாகக் கிடைக்கப் பெற்றமை.
சகல வகுப்புக்களுக்குமான ஒலி வசதி ஏற்படுத்தப்பட்டமை.
கணனி அறைக்கு காப்பெற் பொருத்தப் பட்டமை.
நவீன விளம்பரப் பலகை, திறப்பு கொழுவி, Camara, DVD Player கிடைக்கப்பெற்றமை.
வெளிமதில் வர்ணப்பூச்சு வேலைகள் மேற் கொள்ளப்பட்டமை.
புதிய காணிக்கான சுற்று மதில் அமைக்கப் பட்டமை.
பன்முகப்படுத்தப்பட்ட நிதியூடாக ஒரு போட்டோ பிரதி இயந்திரம் கிடைக்கப் பெற்றமை.
இந்த ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டியைப் பெற்றோரே பொறுப்பேற்று நடத்தியமை.
வடக்கு வாசலின் பெயர் வளைவு பொருத்தப்பட்டமை.

பாடசாலைச் செயற்பாடுகள்

பாடசாலையின் வளர்ச்சிப்படியின் ஒவ்வொரு கட்டத்திலும் இந்த மூன்று வருட காலத்தில் பாடசாலைச் சமூகம் என்னோடு கைகோர்த்து செயற்படுவது இப் பாடசாலையின் உயர்ச்சிக்கு காரணம் என்று கூறுவேன். இந்த வகையில் இங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் அயராது உழைத்து வருகின்றமை எமது பாடசாலையின் பாடச் செயற்பாடுகளும், பாடப் புறச் செயற்பாடுகளும் உயர்நிலை பெற்று மாகாண மட்டம், தேசிய மட்டம் வரை செல்வதற்கு காரணமாகின்றது.

இந்த வகையில் வருட ஆரம்பத்தில் கால்கோள் விழாவும் அதனைத் தொடர்ந்து மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டல் இடம்பெறும். தொடர்ந்து வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி வெகு சிறப்பாக கொண்டாடப்படும். அதனை நான் கூறவேண்டிய தேவையில்லை, அனைவரும் நேரில் பார்த்திருப்பீர்கள். தொடர்ந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனைகள் படைப்போம். தொடர்ந்து பாடசாலைக்காக உழைக்கும் உத்தமர்களான ஆசிரியர்களை பாடசாலைச் சமூகம் கௌரவிக்கும் ஆசிரியர் தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்படும். இதேவேளை நவராத்திரி விழா போட்டிகள் மிகச் சிறப்பாக திட்டமிட்டு நடாத்தப்படும். அதில் வெற்றி பெற்றவர் களுக்கான பரிசளிப்பும் வாணிவிழா கலை நிகழ்வும் அனைத்து மாணவர்களும் பங்கெடுக்கும் வண்ணம் சிறப்பாக ஏற்பாடு செய்து நடாத்தப்படும்.

இத்தகைய விழாக்களில் இடை யிடையே கற்றல் கற்பித்தல் சாதன உருவாக்க பொருட்காட்சியும் நடாத்தி பாராட்டு பெற்றோம். வருட இறுதியில் வருடாந்த பரிசில் தினமும் மாணவர் கௌரவிப்பும் மிகவும் சிறப்பாக திட்டமிடப்பட்டு உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளுமளவிற்கு சிறப்பாக நடாத்தப்படும்.

எனவே ஆரம்ப பாடசாலையாக இருந்தபோதும் அனைத்து நிகழ்வுகளும் மிகவும் சிறப்பாக திட்டமிட்டு அனைவரது பாராட்டை பெறுமளவிற்கு சிறப்பிடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. இதற்காக அனைவரும் சிறப்பாக ஒத்துழைத்து பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் எமது பாடசாலையை பொறுத்த

மட்டில் பலருடைய அபிப்பிராயம் இங்கு கற்கும் மாணவர்கள் திறமையானவர்களாக தேர்ந்து எடுப்பதாக கூறினார்கள். அது மாத்திரமன்றி இங்கு மெல்லக் கற்கும் மாணவர்களையும் காணமுடியும் என்றபோது பெரியவர் ஒருவர் வியப்படைந்தார். இதனால் இங்கு அனுமதி பெறுவது பற்றி நான் சில கருத்துக்களை முன்வைக் கின்றேன்.

எமது பாடசாலை எவரையும் தேர்வு வைத்து ஆட்களை பார்த்து தெரிவுசெய்வது இல்லை. பாடசாலையில் அனுமதி பெற தகுதி உள்ளவர்களை உரிய சட்ட திட்டங்களின் படி நியமிப்போம். ஆனால் இங்கு வந்த பிள்ளை எமது ஆசிரியர்களின் அயராத முயற்சியால் நன்கு பக்குவப் படுத்தப்பட்டு மிகத் திறமைசாலிகளாக வெளியேறுவர். எனினும் பெற்றோர் கவனம் எடுக்காத ஒரு சில பிள்ளைகள் மெல்லக் கற்போராக வெளியேறும் ஒரு துர்ப்பாக்கிய நிலையும் உண்டு. வெளியே எதுவித மேலதிக வகுப்புக்களுக்கும் செல்லாது எமது ஆசிரியர்களின் தனித்த கற்பித்தலில் மிகவும் நேர்த்தியாக வெளியே அனுப்பும் வல்லமை எமக்கு உண்டு என்பதனை துணிந்து கூறுகின்றேன்.

விளையாட்டு

ஆரம்ப பாடசாலையாக இருந்தாலும் எம் பிள்ளைகளின் விளையாட்டு விழா பெருமெடுப்பில் மிகவும் கோலாகலமாக விளையாட்டு பொறுப்பாசிரியர்களால் நன்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படும். இத்தகைய பயிற்சிகள் யாவும் எமது ஆசிரியர்களால் சிறப்பாக வழங்கப்பட்டு நிறைவான ஓர் விளையாட்டு விழாவாக இது இடம்பெறும். அத்தகைய சிறப்பு எமது பாடசாலைக்கு தனித்துவமானது. மாவட்டம், மாகாணம் வரை சிறப்பான சாதனைகள் படைத்துள்ளோம். இந்த ஆண்டு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான போட்டியினை வலய மட்டத்துடன் நிறுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நிதியங்கள்

எமது பாடசாலையில் மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு நிதியங்கள் சிறப்பாக செயற்படுத்தப்படுகின்றன. தொழில் அதிபரும் சமாதான நீதவானுமான திரு. ந. பாஸ்கரன் அவர்கள் முதன்முதலாக இந்திராணி பாஸ்கரன் புலமைப்பரிசில் நிதியத்தை உருவாக்கி ரூபா 100000 வை நிலையான வைப்பிலிட்டு அதன் வட்டிப் பணத்தை ஆண்டுதோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு வழங்குவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2011 இல் தரம் 5 மாணவர்களின் பெற்றோர் ரூபா 100000 ஐ புலமைப் பரிசில் நிதியத்தை உருவாக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை 2012 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர் ரூபா 110000 இனை நிலையான வைப்பில் இட்டு இதன் வட்டிப் பணத்தை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடாகியுள்ளது.

இந்த ஆண்டு பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக ரூபா 300000 ஐ நிலையான வைப்பிலிட்டு வறிய மாணவர்களின் கல்வி ஊக்குவிப்பு நிதியம் ஒன்றை உருவாக்கி உள்ளமை குறிப்பிடத் தக்க சிறப்பு எனலாம்.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்

எமது பாடசாலை கற்றல் மற்றும் பாடப்புற செயற்பாடுகளில் சிறப்பான பெறுபேறுகளை ஆய்வுகளில் கூட நிரூபணமாகி உள்ளது. இந்த ஆண்டு பரீட்சைத் திணைக்களம் தேசிய ரீதியில் 20 மாணவர்களுக்கு மேல் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 82 பாடசாலைகளை எடுத்து ஆய்வு செய்ததில் எமது பாடசாலை வடமாகாணத்தில் தெரிவான ஐந்து பாடசாலைகளில் ஒன்றாக திகழ்வது பெருமைதரும் விடயம். இதேவேளை 1984 ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலாமிடத்தை கௌரி கதிரவேற்பிள்ளை அவர்கள் பெற்று சாதனை

நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2008 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மோகன் சங்கீர்த்தனா தமிழ்மொழி மூலம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடமும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடமும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை சென்ற ஆண்டு வலயமட்ட முதல் மாணவியாக செல்வி மாதுமை இராஜகுரு தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து நூலகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் வடமராட்சி வலயத்தில் எமது நூலகம் முதலாமிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தரம் 5 மாணவர்களின் உயர் பெறுபேற்றிற்கு அவர்களை தரம் 01 இல் இருந்து பயிற்றுவித்த ஆசிரியர்கள் அனைவரது செயற்பாடுகளும் பங்களிப்பு செய்யும் அதேவேளை தரம் 5 இல் அவர்களை நெறிப்படுத்தி பரீட்சைக்கு தயார்ப்படுத்தும் ஆசிரியர்களது பணி மகத்தானது. ஒரு வருடத்திற்குள் அதிகளவான தயார்ப்படுத்தல்கள் மேலதிக வகுப்புக்கள் என்பன இதற்கு காரணம் எனலாம். இதற்காக ஆண்டுதோறும் அயராது உழைக்கும் எமது ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

இதேவேளை இந்த ஆண்டில் 29 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்தனர். இதற்காக உழைத்த ஆசிரியர்களான திருமதி பா. தனபாலசிங்கம், திருமதி ற. தர்மலிங்கம், திரு. க. முரளீதரன் ஆகிய ஆசிரியர்களுக்கு எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆங்கில பாடம் கற்பிப்பதற்கு ஆரம்பக் கல்வி ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது. ஆனாலும் இந்த ஆண்டு வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையில் இடைநிலை வகுப்பு ஆங்கில ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு வலயக்கல்வித் திணைக்களத்திற்கு எனது நன்றிகள். இதேவேளை இந் நியமனத்திற்கு முன்பு இங்கு தற்காலிக இணைப்பில் இருந்த திருமதி யமுனா லோகேஸ்வரன் ஆசிரியையின் பணி மகத்தானது. ஆங்கில தினப் போட்டியில் மாவட்ட மட்ட தரம் 1, 2 மாணவரின் குழுப் பாடல் 3 ஆம் இடம் பெற்றமை அவரது பெரும் முயற்சி என்றே கூறமுடியும். இதேவேளை தரம் 3, 4, 5 மாணவர்களின் குழுப் பாடலும் வலய மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நூற்றி இருபத்தைந்தாவது ஆண்டு விழாவும் மலர் வெளியீடும்

எமது பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதுடன் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட வேண்டுமென எண்ணிய வேளை பாடசாலைச் சமூகம் எமக்கு உறுதுணையாக முன்வந்தது. பாடசாலையின் வரலாற்றை தொகுப்பதே முதல் சவாலாக இருந்தது. எனவே எமது பெரும் முயற்சியாக இயன்றளவு தகவல்களைப் பெற்று இதனை தொகுத்துள்ளோம். இதில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் அல்லது புதிய விடயங்கள் சேர்க்கப்பட வேண்டுமாக இருந்தால் அடுத்த மலரில் இவற்றை செய்வதற்கு பூரண சுதந்திரம் அனைவருக்கும் உண்டு.

மேலும் இது 125 ஆவது ஆண்டுக்கு மேற்பட்டது எனவும் கருத்துக்கள் கூறப்பட்டாலும் எமக்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 125 ஆண்டுகளை நிறைவாக கண்டது எமது பாடசாலை என அகம் மகிழ்கின்றோம். இங்கு பணியாற்றிய அதிபர்களையாவது முழுமையாக திரட்டலாம் என நாம் முனைந்தோம். ஆனாலும் பத்து அதிபர்களின் தகவல்கள்

கிடைத்துள்ளன. ஆனால் அவர்களது பதவிக் காலங்கள் கிடைக்காமை பெரும் குறைபாடு ஆகும். இந்த அதிபர்களின் உறவினர்களைத் தேடி அவர்களின் புகைப்படங்களை பெற்று அதிபர்களை வரிசைப்படுத்துவதற்கு எமக்கு உறுதுணையாக இருந்தவர் திரு. கு. சுரேந்திரன் (லவன்) அவர்கள். யாழ் மாவட்டத்தின் பல இடங்களுக்கும் தனது சொந்த வாகனத்தில் திரிந்து தனது சொந்த செலவில் தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தி வெற்றிகரமாக இதனை தொகுக்க உதவினார். அவருக்கு எமது பாடசாலை சமூகம் என்றென்றும் கடமைப்பட்டது. இதற்காக நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றது.

பாடசாலைச் செயற்பாடுகள்

இந்த ஆண்டின் முதல் நிகழ்வாக கால்கோள் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதற்கு பிரதம விருந்தினராக திரு. அ. ஸ்ரீகரன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் கலந்து கொண்டார்.

மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வு நடைபெற்றது. இதன் பிரதம விருந்தினராக எமது பழைய மாணவரும் பிரபல சட்டத்தரணியுமான திரு. நடராஜா ராஜீவன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

தரம் மூன்று மாணர்களுக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதன் பிரதம விருந்தினராக திரு. ஐ. செல்வராசா ஆங்கில உதவி கல்விப் பணிப்பாளர் கலந்து சிறப்பித்தார்.

வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி மிகவும் சிறப்பாக கொண்டாடப் பட்டது. இதற்கு பிரதம விருந்தினராக பிரதேச செயலர் திரு. ச. சிவஸ்ரீ அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு. சண்முகநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

2013 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் தினம் பெற்றோர்களால் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதற்கு பிரதம விருந்தினராக திரு. அ. ஸ்ரீகரன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நிர்வாகம் அவர்கள் கலந்து கொண்டார்.

2013 ஆம் ஆண்டிற்கான வாணிவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதன் பிரதம விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் திரு. சி. நவரட்ணம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

தரம் 05 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது. இதற்கு பிரதம விருந்தினராக திரு. யோ. ரவீந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர், நிர்வாகம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

பாடசாலையில் இயங்கும் குழுக்களும் மன்றங்களும்

1. பாடசாலை முகாமைத்துவக் குழு
2. மாணவர் ஒழுங்காற்றுக் குழு
3. ஆசிரியர் ஒழுங்காற்றுக் குழு
4. தர உள்ளீட்டு கொள்வனவுக் குழு
5. தர உள்ளீட்டு மதிப்பீட்டுக் குழு
6. பாடசாலை கட்டாய கல்விக் குழு
7. பாடசாலை சுகாதாரக் குழு
8. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
9. பாடசாலை அபிவிருத்திக் குழு
10. பாடசாலை பழைய மாணவர் சங்கம்
11. மாணவர் மன்றம்
12. இந்துமாமன்றம்
13. அதிபர், ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
14. அனர்த்த முகாமைத்துவக் குழு

வாழ்த்து



திரு. வ. ஆ. தங்கமயில்
உத்தரவு பெற்ற நில அளவையாளர்,
சைவப் புலவர், சைவ சித்தாந்த பண்டிதர்,
சைவ சித்தாந்த முதுகலை மாணி.

இராகம் : சண்முகப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

அரசடியாள் அரிச்சுவடி அரங்காகுதே
அரவணைத்து அனைவருக்கும் அமுதூட்டுதே.

அனுபல்லவி

அரசடியின் புலமை உயர் கணிப்பாகுதே
அரசரெனும் மதிப்பாசிரியப் பணி ஓங்குதே

சரணம்

வந்தவரும் போனவரும் வளம் காட்டவே இங்கு
மந்தகதி துரிதகதி உளம் கொள்ளுமே பொங்கு
நந்தவன மலர்போல விகர்சிக்குமே மாணவர் பொங்கும்
வந்தன மனம் சிரசு உயர்வாகுமே அதனாலிங்கு.

வெண்பா

நூற்று இருபத்தைந் தாண்டுக்குமுன் கல்விச்சுனை
யூற்றை மெதடிஸ்த மிஷன் தன் - ஆற்றுப்
படுத்தலையா ஆரம்பித் தரசடியில் ஏற்று
எடுத்தோ மாவட்ட வாழ்த்து.

ஆயிரத்தெண்ணூற்றெண்பத் தெட்டாம் ஆண்டிலா ரம்பித்து
ஆயிர மாயிரம் மாணவர் - தாயிடம்
தாம் வளரும் கல்வியமு தச்சுரபிப் பேறாகத்
தாம் பெற்றார் மாவட்ட வாழ்த்து

வளரும் பயிரை முளையில் தெரிந்து
வளரவைக் குமதிபர் ஆசான் - தளரா
மனத்துப் பெற்றோர் பழைய மாணவ சங்கம்
அனைத்து மொன்றாய் சித்தமகிழ் வாழ்த்து.

விஞ்ஞானம் மெய்ஞானம்
அஞ்ஞானம் அகன்றிட
எஞ்ஞான்றும் எம்முன் ஊறும்
அஞ்ஞான மகற்றிட ஆசான்
எஞ்ஞான்றும் எடுத்துரைக்கும் கல்வி
விஞ்ஞான மெய்ஞான ஊற்று புலமையே.

அரசடியை வாழ்த்தாத நா என்ன நா
அப்புலமை பேசாத நா என்ன நா
அரசடி ஆசிரிய ரதிபர் புலமை ஊட்டும் நா
அரசுரிமைத் திணைக்களம் அதை வாழ்த்தும் நா
தரமான தரவுகளால் வாழ்த்தும் மாவட்ட நா
கரதலம் தட்டி அகமுகமாக வாழ்த்துமே எம் நா.

வான் முட்டித் தானுயர்ந்த கோபுரமும் அத்திபார
கான் வெட்டி வைரவித்த தால்
ஒரே பணி ஒரே இடம் ஒரே இலக்கு
ஒரே வழி ஒரே புலமை ஒரே வெற்றி!

அகவல்

அதியற் புதந்த சித்தியின் புலமை
வதிரிநெல் லியடியின் மெதடிஸ்த மிசன்தன்
உதிரச் சகோத ரக்கல வன்கூடம்
நதியாகிக் கல்விப் புலமோடிக் கடலாகி
உதிக்கும் சூரியப் பிரகாச
அதிசய அரசடி யாளாய் மலருதே!

விருத்தம்

மெதடிஸ்த பள்ளியின் மேன்மை நிதம்
மேதகு மாவட்ட உயர்வாகுதே
எதெப்படி யென்னாது அதிபர் ஆசான்
இது இப்படியெனும் பணி ஓங்கவே
மெதடிஸ்த மிசன் பள்ளி ஐந்தாமாண்டு
மங்காத புலமை மனம் கொள்ளவே
மெதடிஸ்த பள்ளியெனும் அரசடியாளே
மேற்குலகும் போற்ற உயர்வாகுதே!

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் - அது இதயத்தின் ஓசை
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் - அது சக்தியின் பிறப்பிடம்
விளையாட நேரம் ஒதுக்குங்கள் - அது இளமையின் ரகசியம்
படிக்க நேரம் ஒதுக்குங்கள் - அது அறிவின் ஊற்று
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் - அது மகிழ்ச்சிக்கு வழி
உழைக்க நேரம் ஒதுக்குங்கள் - அது வெற்றியின் விலை

வாழும் வகுப்பறைகள்

நடா. ராகீவன் LL.B

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்,

சத்திய ஆணையாளரும்,

பதிவு செய்யப்பட்ட கம்பனி செயலாளரும்.

ஒவ்வொருவரின் வாழ்விலும் குடும்பத்திற்கு அடுத்தபடியாக அதிக செல்வாக்கு செலுத்தும் நிறுவனமாக (institution) பாடசாலை உள்ளது என்றபோதும் இன்றைய நாளில் குடும்பத்தைவிட பாடசாலையே அதிகமாக செல்வாக்கை (Greatest influence) செலுத்துகின்றது என்றால் அது மிகையாகாது. பாடசாலை என்பது நாம் வெறுமனே கற்றல் செயற்பாட்டிலும், அறிவை நிரப்பலிலும் காலத்தை கழிப்பது என்பதன்றி எமது குணங்களை உருவகப்படுத்தலுக்கும் (Moudling our character), ஆளுமை வளர்க்கப்படுமிடமாகவும் (Personality development), மற்றவருடனான புரிதல்களை வளர்க்குமிடமாகவும் (Understanding the others), வாழ்விற்கான அடிப்படைக் கொள்கைகளைக் கற்றுக்கொள்ளும் இடமாகவும் இப் பாடசாலைகளே அமைகின்றன. ஒவ்வொரு மனிதனினதும் ஆளுமையின் பண்புகள் பாடசாலைக் காலத்திலே உருவகிக்கப்படுகின்றன. (The basic traits of our personality are formed during our school days) அதனால் தான் நாங்கள் ''வளரும் பயிரை முளையிலே தெரியும்'' என்கிறோம்.

ஒருவன் வரும்போதும் அழுது அதனை விட்டு போகும்போதும் அழுது செல்லும் இடம் தான் பாடசாலை. ஆரம்ப பாடசாலையானது கபடமற்ற எண்ணத்துடன் எதிர்காலம் பற்றிய சுமைகளுமின்றி வரும் மாணவர்கள் ஆசிரியர்கள் எனும் சிற்பிகள் மூலமாக செதுக்கப்படுகிறார்கள். அவ்வாறு அன்றைய ஆசிரிய சிற்பிகளால் செதுக்கப்பட்ட சிற்பங்களே இன்று தலைவர்களாகவும், தொழில்சார் வல்லுனர்களாகவும், நற்பிரஜைகளாகவும் வலம் வருகிறார்கள்.

எனக்கும் யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்குமான பந்தமானது 1989 இல் ஆரம்பமானது. இன்றைக்கு இருபத்தைந்து வருடத்திற்கு முன்பாக எனது தந்தையார் என்னை தன் வழியில் அழைத்து வந்த முதலிடம் இப் பாடசாலையாகும். அன்றிலிருந்து 1993 வரையான காலப்பகுதியில் இப் பாடசாலையே என்னை வளப்படுத்தி, என் மனத்தைத் திடப்படுத்தியது. எனது ஆசிரியர்களாக திருமதி நடராஜா, திருமதி பாமினி, திருமதி சிவக்கொழுந்து, திருமதி சிவசுப்பிரமணியம் ஆசிரியைகளும் திரு. கதிர்காமசேகரன் ஆசிரியரும் கற்பித்தார்கள். இவர்கள் அறிவூட்டலுடன் மட்டுமன்றி கண்டிப்புகளுடனும் எம்மை சகல விடயங்களையும் வழிநடத்தியவர்கள் ஆவார்கள். திரு. கதிர்காமசேகரன் ஆசிரியர் எமது வகுப்பாசிரியர் என்றால் அடுத்த வகுப்பு நண்பர்களே சற்று நடுங்குவார்கள். ஆனால் அவர் எத்தகைய கண்டிப்பு காட்டுகின்றாரோ அத்தகைய பரிவுடன் எம்மை வழிநடத்தினார். தனது கையெழுத்து போல் எமது கையெழுத்தைக் கூட செம்மையாக்கினார்.

நாங்கள் யார்? எமது பின்புலம் என்ன? எமது எதிர்கால நிலை என்ன? என்ற எண்ணங்கள் அற்ற புதியவர்கள் கொண்ட ஒரு உறவு அறிமுகமானது. நட்பின்

அறிமுகம் பாடசாலைக்கு வரவேண்டும் என்ற ஆவலை மேலும் அதிகமாக்கியது. பல ஏற்றத்தாழ்வுகளை பாடசாலைக் காலத்தில் சந்தித்திருப்பினும் எப்போதும் பக்கபலமாக நண்பர்களை கொண்டிருந்தது மனதிற்கு ஆறுதலானது. பாடசாலைக்குச் சென்ற முதல் நாளே எனதருகே அமர்ந்திருந்த என் போல் ஒரு சிறுவனுடனான (அஜீஸ்குமார்) பரிச்சயம் நாட்கள் கடக்கையில் அவ்வுறவை மேலும் வலுப்படுத்தியது. அரசடிக்காலம் வரை எனது அருகாசனம் கொண்டவன். நானும் அஜீஸும் நான்காம் வகுப்பில் எமக்கு அறிமுகமான நண்பன் பாலமுரளி இன்னும் ஏனைய நண்பர்களும் இன்றும் எமது பாடசாலைக் காலத்து குறும்புகளை கூடி எண்ணிப் பகிர்ந்து களிப்பதுண்டு.

அரசடியிலேயே முதன்முதலில் மேடை ஏறினேன். அக் காலப்பகுதியில் திரு. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களின் எழுத்து, இயக்கம், நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'கவரிமான்' நாடகம் அரசடியில் அரங்கேறி பின்னர் பல்வேறு இடங்களில் மேடையேறியது. அதில் சோழ அரசனாக நானும் சேர மன்னனாக அஜீஸும் எழுச்சி மிகு வசனங்களை முழங்கியது இன்றும் என் மனதில் வரி வடிவம் கொண்டுள்ளன. இன்றும் எம்மைக் காணும் போது திரு. சிவசுப்பிரமணியம் ஆசிரியர் எம்மை சோழ, சேர மன்னன் பெயர் கொண்டு அழைப்பது பெரு மகிழ்வன்றி வேறல்ல.

இப் பாடசாலைக்கு ஒரு நிகழ்வில் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டபோது நான் அன்று இப்பாடசாலையில் எனது மாணவ காலத்து நிகழ்வுகளை எண்ணத்தில் மீட்டியது மட்டுமன்றி அதனை இன்றைய மாணவர்களுடனும் பகிர்ந்து மகிழ்வுகொண்டேன். அரசடியின் முற்றத்தில் வீழ்ந்த விதைகள் என்றும் வீண்போவதில்லை. அவ்வகையில் இன்றைய விதைகளான இம் மாணவர்கள் நாளை பெரு விருட்சங்களாக வலம் வருவார்கள் என்பதில் ஐயமில்லை. ஒன்றேகால் நூற்றாண்டு கொண்ட பாரம்பரியம் இன்னும் பல நூற்றாண்டுகள் இவ்வாறே வீறுநடை போடும் என்பது திண்ணம்.

ஒருவன் வாழ்வில் பெற்ற தாய், பிறந்த பொன்னாடு, கற்ற கல்லூரி இவை மூன்றும் என்றும் அவன் மனதிலிருந்து பிரிக்கப்படமுடியாதவையாகும். உடல் தந்து அதில் உயிர் தந்த தாய், உலவவிட்டு உணர்வூட்டிய தாயகம், உயர்த்திவிட்டு மகிழ்வு கொண்ட கல்லூரி இவை எம் வாழ்வில் மறந்தும் மறக்கக்கூடாதன. அவ்வகையில் எனது இப் பாடசாலைக் காலமானது என் எண்ணத்தில் வாழும் வகுப்பறைகளாகவே குடிகொண்டுள்ளது.

கற்பூரம் போலக் கடலுப்பிருந்தாலும்
கற்பூரமா மோ கடலுப்பு - பொற்பூரும்
புண்ணியர் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியராவாரோ புகல்.

- நீதி வெண்பா

இலங்கையில் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்களில் தொழில்நுட்பவியல் பாடத்துறையின் அறிமுகமும் நடைமுறைச் சவால்களும்



ஆ. நித்திலவர்ணன்
விரிவுரையாளர்,
கல்வியியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அறிமுகம்

இலங்கையின் பொதுக் கல்வியில் தற்போது நடைமுறையிலுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரக் கலைத் திட்டத்தில் உள்ள கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய நான்கு பாடத் துறைகளுக்கு மேலதிகமாக ''தொழில் நுட்பவியல்'' (Technology) என்னும் பாடத் துறை இவ்வாண்டு ஜூலை 15ஆந் திகதி தொடக்கம் புதிதாக பாடசாலைகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. உத்தேச கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர தொழிநுட்பத் துறையினது அறிமுகமானது, இலங்கையின் பொதுக் கல்வி முறைமையில் ஏற்பட்ட ஒரு திருப்புமுனையாகுமென தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் டபிள்யூ. எம். அபேரத்ன பண்டார அவர்கள் குறிப்பிடுகின்றார். இத் துறையைப் பயிலும் மாணவர்கள் 2015 ஆம் ஆண்டு முதன்முதலாக உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவார்கள். பின்வருவன தொழில்நுட்ப பாடத்துறையின் நோக்கங்களாக பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. நாளாந்த வாழ்விற்குப் பயன்படத் தக்க வகையில் மாணவர்களை தொழிநுட்பத் திறன்கள் கொண்டோராக ஆயத்தம் செய்தல்.
2. பிரச்சினைகளுக்குத் தொழிநுட்ப ரீதியான தீர்வுகளை விருத்தி செய்வதற்கான திறன்களை மேம்படுத்துதல்.
3. மேலதிக தொழிற்றகைமையை வழங்குதல்.
4. தேசிய தொழிற்துறைத் தகைமைத் தொகுதி (NVQ) சட்டகத்தின் அடிப்படையில் மாணவர்களை அவர்களின் தொழில்சார் கல்வியைத் தொடர இயலுமானவர்களாக்குதல் என்பவையாகும்.

முதற்கட்டமாக நாடளாவிய ரீதியில் 250 பாடசாலைகளில் தொழில்நுட்பப் பாடத் துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் குறைந்தபட்சம் ஒரு பாடசாலையிலேனும் இப் பாடத்துறை கற்பிக்கப்படக்கூடியதாக பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தற்போது இப் பாடத்துறையில் கல்விகற்க விரும்பும் ஏனைய பாடசாலை மாணவர்கள் தமக்கு அருகிலுள்ள பாடசாலையில் இணைந்து தொழில்நுட்ப பாடத்துறையில் பயிலலாமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

காலப்போக்கில் இப் பாடத்துறையைப் போதிக்கும் பாடசாலைகளில் தொழில்நுட்ப பாடத்துறையைப் போதிக்க கல்வியமைச்சு திட்டமிட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் குறைந்தபட்சம் மூன்று பாடசாலைகளில் இந்த பாடத்துறை கற்பிக்கப்படக்கூடியதாக பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலைகளின் வகைப்படுத்தலிலும் தொழில்நுட்ப பாடத் துறையைக் கொண்ட பாடசாலைகள் '1AB

super' என்ற விசேட வகைப்படுத்தலின் கீழ் உட்படுமென கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்கள் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய விருத்தி

தொழிநுட்பக் கல்வியை அறிமுகப் படுத்துவதன் முக்கியத்துவத்தை ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூக மற்றும் பண்பாட்டு அமையம் (UNESCO) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமையத்தின் (ILO) 2002 ஆம் ஆண்டின் விதப்புரை ஆகியன இனங் கண்டுள்ளன.

தற்போது அபிவிருத்தி அடைந்துள்ள ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் வெற்றிக்குக் காரணம் அந்நாடுகளில் தொழிநுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறைக்குரிய தொழிநுட்ப பாடத் துறையை பல்கலைக்கழகக் கல்விக்கு ஏற்றவகையில் சமாந்தரமான ஒரு கல்வித் துறையாக அபிவிருத்தி செய்தமையும் அந் நாடுகளிலுள்ள தொழிநுட்பப் பாடத் துறையை அப் பாடசாலைகளில் காணப்பட்ட பாடங்களுடன் மிக முறையான வகையில் கலந்தமையும் ஆகும்.

சிரேஸ்ட இடைநிலைக் கல்வியில் தொழிநுட்பத்துறையை அறிமுகப்படுத்துதல் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்து வரும் மலேசியாவின் அனுபவம் இதனைச் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடத்துறையின் தேவை

- வருடாந்தம் 23,000 மாணவர்கள் மாத்திரம் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியை முடித்து தொடர் கல்வி வாய்ப்புக்கள் ஏதுமின்றி பாடசாலைக்கல்வி முறைமையில் இருந்து விலக்கப்படுகின்றார்கள். இவர்களில் ஒரு பகுதியினருக்கேனும் தொடர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் வழங்க தொழில் நுட்ப பாடத்துறை அவசியமாகும்.
- இலங்கையில் க.பொ.த. (சாதாரண தரத்தில்) எல்லா மாணவர்களுக்கும் அளிக்கப்படும் தொழில்சார் பாடங் களின் தொகுதியானது உலகளாவிய பணிக்கும், உலகளாவிய தொழில் நுட்பத்திற்கும் ஒரு ஆரம்பப் படியாக இருப்பினும், மேலதிகமாக தொழிநுட்ப ரீதியாக முனைப்புற்ற கல்விக்கு அதாவது மூன்றாம் நிலைக் கல்வியைக் கற்பதற்கோ, பொருத்த மான தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கோ போதுமான வாய்ப்புக் களை அவர்களுக்கு வழங்கவில்லை.
- தற்போது க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் அதிக எண்ணிக்கை யான மாணவர்கள் கலைத்துறையைத் தெரிவு செய்து கற்பதனால் நாட்டின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையில் ஒரு பொருத்தமற்ற தன்மை ஏற்படு கிறது. வருடாந்த பல்கலைக்கழக உள்வாங்கலில் கலைத் துறையின் ஆதிக்கமே அதிகமாகக் காணப்படு கிறது. இத்தகைய நடவடிக்கையானது எமது நாடு எதிர்பார்க்கும் தொழிநுட்பம் சார்ந்த தொழில்விருத்திக்குப் பாரிய தடையாக இருப்பது இனங்காணப்பட் டுள்ளதுடன் படிப்படியாக நாட்டின் அபிவிருத்திக்கும் தடையாக மாறு வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.
- ''இலத்திரனியல், சிவில் மற்றும் பொறியியல் தொழில்நுட்பம், விவசாயம், உணவு விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பல்கலைக்கழகங் களுக்கான அனுமதி வரையறுக்கப்பட்ட தாகும். இத்துறைகளை க.பொ.த உயர்தரத்தில் பயில்வதனூடாக, மாணவர்கள் செயன்முறை அறிவைப் பெறுவதுடன் அவர்கள் சுலபமாக தொழில்வாய்ப்பை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்'' என

மொறட்டுவப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வித்தியஜோதி பேராசிரியர் தயானந்த விஜயசேகர அவர்கள் குறிப்பிடுகின்றார்.

- ❖ இளைஞர்களின் வேலையின்மை விகிதத்தைக் குறைப்பதற்காக தொழிநுட்பத்தையும் பொருத்தமான மென்திறன்களையும் கொண்ட, சவால்களை எதிர்நோக்கக்கூடிய இளைஞர்கள் உருவாக்கப்பட வேண்டியிருக்கின்றமை.
- ❖ எமது பட்டதாரிகளின் மத்தியில் காணப்படும் தேர்ச்சியின்மை அல்லது தேர்ச்சிக் குறைவு தமது தொழிலை சிறப்பாகச் செய்வதற்குத் தடையாக அமைந்துள்ளது.
- ❖ தொழிற் சந்தையில் அதிகரித்துவரும் கேள்விக்குப் பொருத்தமான தொழிற் றிறனுள்ள இளைஞர்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளமை.

தொழில்நுட்பப் பாடத்துறையின் பாடச் சேர்மானங்கள்

பிரேரிக்கப்பட்டுள்ள தொழிநுட்பத் துறையானது, உயர்தர வகுப்பில் ஒரு தனியான பிரிவாக, தெளிவான வகையில் அடையாளங் காணப்படும். அது தேவையான பாடநெறிகளுடன் கூடிய பரந்த தொழிநுட்பக் கற்கைப் பரப்பினை உள்ளடக்கியுள்ளது. கல்வியமைச்சிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிலும், தேசிய கல்வி நிறுவகத்திலும் நடைபெற்ற கலந்துரையாடல்களின் பேறாக, ''பொறியியல் தொழிநுட்பவியல்'' (Engineering Technology) மற்றும் ''உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல்'' (Bio systems Technology) எனும் இரண்டு பரந்த தொழிநுட்பப் பரப்புகள் இனங்காணப்பட்டது. இவை இரண்டிலும் ஏதாவதொரு பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்யலாம்.

இந்தச் சேர்மானத்தில் இரண்டாவது பாடமான ''தொழிநுட்பத்திற்கான விஞ்ஞானம்'' (Science for Technology) என்பது விஞ்ஞானம், கணிதம் மற்றும் தகவற் தொழிநுட்பம் ஆகியன தொடர்பான அடிப்படை அறிவை வழங்கி, தெரிவுசெய்த தொழிநுட்பப் பாடநெறியைக் கற்க உதவியாக அமையும். இச் சேர்மானத்தின் மூன்றாவது பாடம், ஏற்கனவே க.பொ.த. உயர்தரத்திற்கான பாடங்களின் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும்.

தொழிநுட்பக் கற்கைத் துறையில் அடங்கும் பாடங்கள் வருமாறு.

1. பொறியியற் தொழிநுட்பவியல் / உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல் (ஏதாவதொன்று)
2. தொழிநுட்பவியலிற்கான விஞ்ஞானம்
3. பின்வரும் 10 பாடங்களில் ஒன்று
   - பொருளியல்
   - புவியியல்
   - மனைப்பொருளியல்
   - ஆங்கிலம்
   - தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை
   - தகவல் மற்றும் தொடர்பாடற் தொழிநுட்பவியல்
   - சித்திரம்
   - வணிகக் கல்வி
   - விவசாய விஞ்ஞானம்
   - கணக்கியல்

பிரதான தொழில்நுட்பப் பாடங்கள் உள்ளடக்கியுள்ள விடயதானங்கள்

உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்

தரம் - 12

01. உயிர்முறைமைகள் தொழிநுட்பத்தின் அறிமுகம்
02. நீரியலும் காலநிலையியலும்
03. மண்ணும் நீரும்
04. அளவையும் மட்டப்படுத்தலும்
05. தாவர இனப்பெருக்கத் தொழிநுட்பம்
06. உணவுப் பாதுகாப்பும் சட்ட வரையறைகளும்.
07. அறுவடைக்குப் பிந்திய தொழிநுட்பம்

08. உணவுகளைப் பொதியிடலும் பெயர்ச் சுட்டியிடலும்
09. உணவுச் சேர்மானங்கள்
10. அடிப்படை இலத்திரனியல்
11. நீரின் தரம்
12. நீருயர்த்தல்
13. நீர்ப்பாசனத் தொழிநுட்பம்
14. பீடை முகாமைத்துவம்
15. செயற்றிட்டங்கள்

தரம் - 13

16. கால்நடை வளர்ப்பு
17. உணவு நற்காப்புத் தொழிநுட்பம்
18. பண்ணைக் கட்டமைப்புகள்
19. ஆளுகை நிபந்தனைகளின் கீழான பயிர்ச்செய்கை
20. மலர்ச்செய்கையும் தரையலங்கரிப்பும்
21. பண்ணைப் பொறிமுறைப்படுத்துகை
22. மீன்பிடியும் நீருயிரின வளர்ப்பும்
23. காடுகளும் வன உற்பத்திகளும்
24. தொழில்சார் சுகாதாரமும் பாதுகாப்பும்
25. முயற்சியாண்மை

பொறியியற் தொழிநுட்பவியல்

தரம் - 12

1. பொறியியல் தொழிநுட்பத்திற்கான அறிமுகம்
2. அடிப்படை மோட்டார் வாகன தொழிநுட்பம்
3. அடிப்படை மின் தொழிநுட்பம் / வீட்டு மின்சுற்று
4. அடிப்படை கட்டுமான தொழிநுட்பம்
5. அடிப்படை உற்பத்தி தொழிநுட்பம் / பொருத்தும் தொழிநுட்பம்
6. பொறியியல் வரைபுகள்
7. அலகுகளும் அளவீடுகளும்
8. இயக்க மற்றும் வலு ஊடுகடத்தும் மூலங்கள்
9. தொழிநுட்பம் தொடர்பான பாதுகாப்பும் சுகாதாரமும்

தரம் - 13

1. மின் இயந்திரங்களும் வலு முறைமைகளும்
2. அடிப்படை இலத்திரனியலும் அவற்றின் பிரயோகமும்
3. வீட்டு நீர் விநியோகமும் சுக நல வசதிகளும்
4. திரவ இயந்திரங்கள் (பம்பி, சுழலி)
5. பொறியியல் தரங்களும் தரக் கட்டுப் பாட்டு முறைமைகளும்
6. அளத்தல்
7. மதிப்பீடும் B.O.Q வை தயாரித்தலும்
8. முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்

தொழிநுட்பத் துறையை கற்பதற்கான தகைமை

இத் தொழிநுட்பத் துறைக்கான ஆகக் குறைந்த தகைமைகளாக பின்வருவன அமைந்துள்ளன.

- க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தாய் மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங் களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- மேற் கூறப்பட்டவற்றுள் ஏதாவது மூன்று பாடங்களில் திறைமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

கணிப்பீடும் மதிப்பீடும்

பொறியியற் தொழிநுட்பவியல் மற்றும் உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு அறிமுறைப் பரீட்சைக்காக 75% புள்ளிகளும், செய் முறைப் பரீட்சைக்காக 25% புள்ளிகளும் வழங்கப்படும். செய்முறைப் பரீட்சையானது தொழிற்பயிற்சி நிறுவனங்களில் அல்லது தொழில்நுட்ப கற்கை அலகுகளில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டக் கணிப்பீடானது பாடசாலைகளிலேயே நடாத்தப்படும் எனவும் அதற்கான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல் களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் வழங்கப்படும் எனவும் பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று இறுதி மதிப்பீடானது பரீட்சைத் திணைக்களத்தி னால் நடாத்தப்படும் எனவும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மாதிரி

வினாத்தாள்கள் பிரசுரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்

தேசிய கல்வி நிறுவகம், கல்வி அமைச்சு, இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றுடன் தேசிய கல்வி ஆணைக்குழுவும் இப் பாடத் துறை நடைமுறைப்படுத்தலில் தொடர்ந்து இணைந்து பணியாற்றி வருகின்றன. பாட நூல்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வழி காட்டல்கள் கல்வியலாளர்கள், புலமை யாளர்கள் மற்றும் ஏனைய வளவாளர்களின் உதவியுடன் தயாரிக்கப் பட்டுள்ளது.

இத் தொழில்நுட்பப் பாடங்களை பயிற்றுவிப்பதற்காக 300 ஆசிரியர்கள் ஏற்கனவே பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 700 ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் களை வளவாளர்களாக பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இவர்களுக்கு மேலதிக வேதனமாக பத்தாயிரம் ரூபா வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பான ஆரம்பக்கட்ட அறிவூட்டல்கள் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப் பட்டிருப்பதுடன் பாடநூல்கள், பாடத் திட்டங்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் என்பனவும் கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பத்துறை மாணவர்களுக் கான உயர்கல்வி வாய்ப்புக்கள்

இந்தப் பாடப்பிரிவைப் பயிலும் மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயர் அடைவுகளைப் பெறுவார் களாயின் நிச்சயமாக தேசிய பல்கலைக் கழகங்களில் அனுமதியைப் பெற்றுக் கொள்வார்கள். 2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பத்தில் இளமாணப் பட்டங்களை (Bachelor of Technology - B. Tech) வழங்குவதற்காக இலங்கையிலுள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகங்களிலுமுள்ள விஞ்ஞானபீடங்கள், விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களாக மாற்றியமைக்கப்படும். இவற்றினூடாக நாற்பது வரையிலான புதிய கற்கை நெறிகளை தொழில்நுட்பத்துறை மாணவர்கள் பயில்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

இளைஞர் விவகாரம் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு ஒவ்வொரு மாவட்டத்திலும் ''பல்கலைக்கழக கல்லூரி களை'' (University Colleges) ஆரம்பிப் பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இவற்றின் மூலம் தொழிற்றுறைக்குப் பொருத்தமான டிப்ளோமா, உயர் டிப்ளோமா மற்றும் தொழில்நுட்பத்தில் இளமாணப் பட்டங்களை வழங்கக்கூடியதாக இருக்கும்.

இத்துறை மாணவர்கள் ''ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்'' போன்ற தொழில் கற்கை நிறுவனங்களில் இணைந்து டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பை மேற் கொள்ளும் வாய்ப்புக்களும் வழங்கப்படும். பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையா விடினும், அவர்கள் பெற்ற செய்முறை அறிவுக்காக, அவர்களுக்கு தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (National Vocational Qualification - NVQ - III) வழங்கப்படும். இது தொழில் பெறுவதற்கான அடிப்படைத் தகைமையாகும் என்பதுடன் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் இது உதவும்.

இலங்கையில் தொழில்நுட்பக் கல்வியை சிரேஸ்ட இடைநிலை வகுப்பில் வழங்குவதால் ஏற்படும் நன்மைகள்

- ❖ தொழிநுட்பக் கல்வியின் அறிமுக மானது வேலையுலகிற்கும் தொழிநுட்ப

உலகிற்கும் அறிமுகத்தைத் தருவதுடன் கல்விப் புலத்தையும் விரிவுபடுத்த உதவுவதாக அமையும்.

❖ இதன் விளைவானது கற்றல் சாதனங்கள், கருவிகள், உத்திகள் மற்றும் உற்பத்திப் படிமுறைகள், பகிர்வு, முழுமையான முகாமைத்துவம் என்பவற்றை தேடியாய்வதாக அமைவதோடு செயன்முறை அனுபவங்கள் மூலமாகக் கற்றல் செயன்முறைகளைப் பெறுமதி மிக்கதாக்குகிறது.

❖ இலங்கையின் பொதுக்கல்வியின் ஒரு மைல்கல்லான, தற்போது பிரேரிக்கப் பட்டுள்ள உயர்தர தொழிநுட்பத் துறையை அடையாளங் காணமுடியும். ஏனெனில், இது உயர்தரத்தில் கலைத் துறையைத் தெரிவுசெய்யும் மாணவர் களின் எண்ணிக்கையைக் குறைக்கும். அத்துடன் தொழிநுட்பம் மற்றும் விஞ்ஞானத்துறை மாணவர்களின் எண்ணிக்கையை 2016ஆம் ஆண்டள வில் சுமார் 40%தினால் அதிகரிக்கச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

க.பொ.த. (உயர்தரம்) பாடத்துறை	தற்போது பயிலும் மாணவர் எண்ணிக்கை (சதவீதத்தில்)	2016ஆம் ஆண்டில் எதிர்பார்க்கும் மாணவர் எண்ணிக்கை (சதவீதத்தில்)
கணிதம் மற்றும் விஞ்ஞானத்துறை	21 %	40 %
வர்த்தகத்துறை	27 %	35 %
கலைத்துறை	52 %	25 %

❖ தொழில்நுட்பத்திறன் கொண்ட மாணவர் கள் பட்டதாரிகளாகும்போது, நாட்டின் பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த அபிவிருத்திக்கு அவர்களால் ஆக்கத் திறனுடன் வினைத்திறன் மிக்க பங்களிப்பை வழங்கக் கூடியதாக இருக்கும்.

❖ கோட்பாட்டு அறிவு ரீதியாக மட்டுமன்றி க.பொ.த. உயர்தரத்தில் பயிலும் இலங்கை மாணவர்கள் செயன்முறை ரீதியான அறிவைப் பெற்றுக் கொள்வதில் இத் தொழிநுட்பப் பாடத் துறையின் அறிமுகமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது.

நடைமுறைப்படுத்தலில் உள்ள சவால்கள்

❖ தொழில்நுட்பவியல் பாடத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமை யால், இதனைப் பயில விரும்பும் ஏனைய பாடசாலை மாணவர்கள், அயல் பாடசாலைக்குச் செல்ல இலகுவில் விரும்பமாட்டார்கள். பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் ஊக்குவிக்கமாட்டார்கள்.

❖ இப் பாடத்துறைக்கான தயாரிப்புக்கள் அவசரமாக மேற்கொண்டமையால், பாட உள்ளடக்கம் மற்றும் வழிகாட்டல் தயாரிப்புக்களின் தரம் தொடர்பாக ஐயப்பாடு எழுகின்றது.

❖ இது தொடர்பான அறிவுறுத்தல்கள், பாடத் திட்டங்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் முறையாகப் பாடசாலைகளைச் சென்றடையவில்லை.

❖ கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் தொழில் நுட்பவியல் பாடத்துறை தொடர்பான போதிய விழிப்புணர்வு காணப்பட வில்லை.

❖ ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஆரம்பக்கட்டமாக தெரிவு செய்யப் பட்டுள்ள பாடசாலைகளைவிட, அத்

தொகுதியில் வேறு சில பாடசாலைகள் பொருத்தமானதாக உள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் ஆண் பிள்ளைகள் மட்டும் அல்லது பெண்பிள்ளைகள் மட்டும் கல்வி கற்றும் பாடசாலைகளாக உள்ளன.

- ❖ செய்முறைப் பயிற்சிக்குத் தேவையான தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் இன்னும் பாடசாலைகளில் முழுமையாக உருவாக்கப்படவில்லை.
- ❖ இப்பாடத்துறையை தெரிவுசெய்வது தொடர்பாக மாணவர்கள் மற்றும் பெற்றோரிடத்தில் போதியளவு நேர் மனப்பாங்கு காணப்படவில்லை.
- ❖ இது தொடர்பிலான மாகாண மட்டத்திலான, கல்வி வலய மட்டத்திலான மற்றும் பாடசாலை மட்டத்திலான கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் போதியளவு நடாத்தப்படவில்லை.

தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பாக கட்டுரையாசிரியரின் அவதானிப்புக்கள்

- ❖ க.பொ.த. உயர்தரத்தில் கலைத் துறையைப் பயில எண்ணும் மாணவர்களும், கணித விஞ்ஞானத்துறைக்கு தோற்றி சித்தியடையத் தவறும் மாணவர்களும் தொழில்நுட்பவியல் பாடத்துறையைப் பயில்வதைப் பற்றி சிந்தித்து தீர்மானம் எடுக்கலாம்.
- ❖ இத்துறைப் பாடங்களை தனியொரு ஆசிரியர் மட்டும் கற்பிக்க முடியாது. பாடசாலையிலுள்ள கணிதம், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், தகவல் தொழிநுட்பம், விவசாயம் மற்றும் பொருத்தமான ஆளணியினர் இணைந்து ஓர் கூட்டு முயற்சியாகவே இதனை முன்னெடுக்க முடியும். பாடசாலை அதிபர்கள் இத்னைக் கருத்தில் கொண்டு நேரசூசிகளை தயாரிக்க வேண்டும்.
- ❖ இத்துறையைப் பயில்வதற்கான அடிப்படைத் தகைமையில், க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான திறமைச் சித்தி அவசியமில்லை. ஆனாலும் கட்டுரை ஆசிரியர் தொழில்நுட்பவியல் பாடத்துறை பாடங்களின் விடய தானங்களை பரீட்சித்துப் பார்த்ததில் மேற்படி பாடங்களில் திறமைச்சித்தி பெறாதவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் துறையைப் பயில்வது சற்றுக் கடினமானதாக இருக்கும். எனவே இதன்மூலம் க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கான உயர் அடைவின் முக்கியத்துவம் அதிகரிக்கின்றது.
- ❖ க.பொ.த. சாதாரண தரத்தில் மாணவர்கள் விவசாயம், தகவல் தொழில்நுட்பம், கடல்வளம் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்து கற்பது, க.பொ.த உயர்தரத்தில் தொழில்நுட்பத் துறை பாடங்களை கற்பது இலகுவாக அமையும். எனவே இதற்கான வழிகாட்டல்கள் கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களிலேயே வழங்கப்பட வேண்டும்.
- ❖ இப் பாடத்துறையை பயில்வது தொடர்பான மனப்பாங்குகள் மாணவர்கள் மற்றும் பெற்றோரிடமும் ஏற்பட வேண்டும்.
- ❖ தொழில்நுட்பவியல் பாடத்துறை தொடர்பான விழிப்பூட்டல்களையும், ஏனைய வளங்களையும் பாடசாலைகளுக்கு பல்கலைக்கழகங்களும், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன வழங்க வேண்டும்.

தரம் 01 மாணவர்களுடன் அதிபர் பகுதித்தலைவர் வகுப்பாசிரியர்கள் - 2013

தரம் 02 மாணவர்களுடன் அதிபர் பகுதித்தலைவர் வகுப்பாசிரியர்கள் - 2013

தரம் 03 மாணவர்களுடன் அதிபர் பதுதித்தலைவர் வகுப்பாசிரியர்கள் - 2013

தரம் 04 மாணவர்களுடன் அதிபர் பகுதித்தலைவர் வகுப்பாசிரியர்கள் - 2013

தரம் 05 மாணவர்களுடன் அதிபர் பகுதித்தலைவர் வகுப்பாசிரியர்கள் - 2013

செல்வி மனோராஜா அபிநயா
2010ஆம் ஆண்டு ஆங்கில தினப் போட்டியில்
தேசிய மட்டத்தில் முதலாம் இடம்
பெற்றுள்ளார்.

செல்வி சாந்தராஜன் சாம்பவி 2011ஆம் ஆண்டு
உயரம் பாய்தல் நிகழ்ச்சியில்
மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப்
பெற்றுள்ளார்.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்
வலய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவியின்
கௌரவிப்பின்போது பாராட்டுப் பெற்ற வகுப்பாசிரியை
திருமதி பாமினி தனபாலசிங்கம்.

செல்வி இராஜகுரு மாதுமை
தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை – 2012 இல்
வலய மட்டத்தில் முதலாமிடம் பெற்றார்.

செல்வி மோகன் சங்கீர்த்தனா
2008ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில்
பரீட்சையில் தமிழ் மொழிமூலம்
தேசிய மட்டத்தில் 2ம் இடம்.

செல்வன் மோகன் அர்ஜீன்
2013 ஆம் ஆண்டு ஆங்கில தின
எழுத்தாக்கற் திறன் போட்டியில் மாகாண
மட்டத்தில் 2ம் இடம்.

குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்கு பெற்றோர்கள் செய்யத் தகுந்தவையும் தகாதவைகளும்



வைத்தியகலாநிதி S. குமரன் (MBBS, DFM)

குடும்ப வைத்தியர்,
விரிவுரையாளர்,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

வளமான எதிர்காலம் என்றால் என்ன?

வளமான வாழ்வு என்பது உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் ஒருவர் ஆரோக்கியமாக இருப்பதையே உணர்த்தும். மேலும் உடல்ரீதியான ஆரோக்கியமென்பது நாமெல்லோரும் அறிந்ததே. ஒருவர் சுகதேகியாக, நோய் நொடியின்றி வாழ்வதையே நாம் உடல்ரீதியான ஆரோக்கியமான வாழ்வு என்கின்றோம். இதனையே நம் மூத்தோர்கள் ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என கூறியிருக்கிறார்கள். ஒருவர் தமது நாளாந்த உணவு முறைப் பழக்கத்தில் சீரான ஆரோக்கியம் தரும் சத்துணவுகளை உட்கொள்வதுடன், முறையான உடற்பயிற்சி மேற்கொள்வதோடும் அவரது உடல்ரீதியான ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்துகிறார்.

அடுத்து உள ரீதியான ஆராக்கிய மான எதிர்காலத்தை ஆராய்வோம். உளரீதியான ஆரோக்கியம் என்பது, ஒரு மனிதன் தனது எதிர்காலத்தை வளம் பெறக் கூடியவாறு உரிய நேரத்தில் தகுந்த முடிவுகளை எடுத்து செயற்படுத்த வல்ல ஆற்றலும், தனது வாழ்வில் ஏற்படுகின்ற சிக்கல்களை கண்டு மனம் தளராது, அவற்றை சீர்செய்து, தன் வாழ்வை சீர் செய்யக்கூடிய திறமையை வளர்ப்பதே ஆகும். ஒருவர் உளரீதியான ஆரோக்கிய மான வாழ்வினை பெற அவரிற்கு அதி அத்தியாவசியமானது அவரது அடிப்படை கல்வியே ஆகும். இதனூடாக தனது பிரச்சனைகட்கு தீர்வு காணக்கூடிய வல்லமையையும், தனித்து நின்று செயற் படக்கூடிய மனத்துணிவையும் ஒருவர் வளர்த்துக் கொள்கிறார். அத்தோடு தன் சார்ந்த சமுதாய முன்னேற்றத்திற்கும் உழைக்கின்றார்.

சீரான கல்வி முறையை அளவிடுவது எப்படி?

கல்வித் தரம் என்பது மாணவர்கள் பெறும் சித்திகளில் மட்டுமோ, புள்ளிகளில் மட்டுமோ தங்கியிருப்பதில்லை. முறையான கல்வி முறையானது மாணவர்களின் பாடமாக்கும் திறனை மட்டும் வளர்ப்பதாக இருக்காது. மாணவர்கள் தமது பாடத்தை கிரகித்து விளங்கிக் கொள்வதோடு, அந்த பாட அலகிலுள்ள பிரச்சினைகளை முழுமை யாக விளங்கிக் கொண்டு, அதற்கான தீர்வு காண்பதற்கும் பழகிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து அந்த பாட அலகை முழுமையாக மனப்பாடம் பண்ணி சிறந்த பெறுபேறுகளை பெறுவதோடு மட்டுமே முடிவுக்கு கொண்டு வருதல் பயனற்றதாகின்றது. ஆனால் கிரகித்து, பிரச்சினைகளையும் தீர்வுகளையும் சரிவர பிரித்து கற்றறியும் குழந்தையானது, தனது எதிர்கால வாழ்விலும் யாரினதும் உதவியும் இன்றி தனது சொந்த பிரச்சினைகளுக்கான தீர்வை கண்டறியும் ஆற்றலை வளர்த்து கொள்கிறது.

கல்வி தொடர்பான பெற்றோர்களின் நிலைமை

குழந்தைகளின் கல்வியானது தற்பொழுது பெற்றோர்களின் மத்தியில் பலத்த பிரச்சினைகளை உண்டாக்குகின்றது. அதாவது பெற்றோர்களுக்கிடையில் தமது குழந்தைகளின் கல்விப் பெறுபேறுகளைக் கொண்டு போட்டி நிலைமை தோன்றியுள்ளது. பெற்றோர்களானவர்கள் தமது சுயகௌரவத்தை நிலைநாட்ட குழந்தைகளின் கல்வியை ஒரு சாதனமாக பாவிக்கிறார்கள். தாம் சமுதாயத்தில் மேல் அந்தஸ்திற்கு வருவதற்கும், தமது கௌரவத்தை மேம்படுத்தவும் குழந்தைகள் நன்றாக கல்வி கற்கவேண்டும் என்று அவா கொள்கிறார்கள். சமுதாயத்தில் சிறந்த அந்தஸ்தில் இருக்கும் பெற்றோர்கள், தமது அந்தஸ்தும் கௌரவமும் குழந்தைகளின் கல்வி பெறுபேறாலும் அவர்கள் தேர்ந்தெடுக்கும் கல்வித் துறையினாலும் கீழிறங்கிவிடுமோ என்று அச்சமுறுகிறார்கள்.

எல்லா பெற்றோர்களும் தமது குழந்தைகள் தாம் எதிர்பார்க்கும் ultimate target இனை அடைந்து குழந்தையின் கல்வியினால் தமக்கு சமுதாயத்தில் ஒரு மரியாதையும் கௌரவமும் உருவாக வேண்டும் அல்லது மேலோங்கி நிற்கும் தமது மரியாதையோ கௌரவமோ குறைந்து விடக்கூடாது என்று எதிர்பார்க்கின்றார்களே அல்லாது, தாம் எதிர்பார்க்கும் கல்வித்துறை தன் குழந்தையின் திறமைக்கு ஏற்றதா என்றோ, குழந்தை விரும்பும் துறையில் அதனது கல்வியை தொடர முட்டுக்கட்டையாக உள்ளார்கள்.

தமது குழந்தைகளின் தனிப்பட்ட ஆற்றலும் திறமையும் எந்தத் துறையில் உள்ளது என்பதை கண்டறியாது அவர்களின் சுயவிருப்பத்தோடு அவர்களது துறையை தேர்ந்தெடுப்பதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதால் பிள்ளைகளின் திறமை இலைமறை காயாக மழுங்கடிக்கப்படுகின்றது. அத்தோடு இல்லாமல் விருப்பமில்லாத துறையை பலவந்தமாக திணிப்பதால் குழுந்தைகளுக்கு தேவையற்ற மன உளைச்சலையும் stress இனையும் தாமே தேடிக் கொடுக்கிறார்கள்.

பரீட்சைகளுக்கு தயார்படுத்தும் குழந்தைகளின் எதிர்காலம்

தனது குழந்தை நடக்க தொடங்கும் போது அதன் கையை பிடித்து அது தனது அடியை சரிவர நடக்க பெற்றோர்கள் ஊன்றுகோலாக இருக்கிறார்களே அல்லாது, தனது குழந்தைக்காக தானே நடக்க எத்தனிக்கவில்லை. தனது குழந்தை பேசத் தொடங்கும்போது அதன் பேச்சுத் திறனை வளர்க்க பலமுறைகளில் பாடுபடும் பெற்றோர்கள், தமது குழந்தைகளுக்கு பதிலாக தாமே பேசணும் என்று யோசிக்கவில்லை. ஆனால் அவர்கள் தமது குழந்தைகளின் கல்வியில் மட்டும் அவர்களின் போக்கிற்கு கற்கக்கூடிய திறனை வளர்க்காது, தாங்களே படித்து அதனை குழந்தைகளுக்கு திணிக்கிறார்கள். இதனால் குழந்தை தானாக எதையும் அறிந்து கற்றுக்கொள்ளும் திறமை மழுங்கடிக்கப்படுகிறது. குழந்தைகளின் கல்வி முறை ஒரு இயந்திர மயமாக்கப் படுகிறது. தனது பெற்றோர்களின் உதவியை எப்போதும் குழந்தை எதிர்பார்க்கிறது. தனது பெற்றோர்களின் உதவியுடன் அதியுயர் புள்ளிகளை பெற்று பழக்கப்பட்ட குழந்தை மேற்படிப்பின்போது பெற்றோர் உதவியின்றி தனித்து விடப்படும்போது செயலிழந்து தத்தளிக்கிறது. மேற்படிப்பின் போதோ, இல்லை பெற்றோர்களின் உதவிக் கரத்தை விட்டு தனித்து செயற்படும் நிலைமைக்கு வரும்போது குழந்தையினால் சுயமாக இயங்க முடியாத நிலைக்கு உண்டாவதால் வீண் மருத்துவ உபாதைகளுக்கு உள்ளாகின்றார்கள். சலரோகம், இரத்த அழுத்தம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் போன்ற இன்னாரென்ன தொல்லைகளுக்கு

உள்ளாகின்றார்கள். அத்தோடு கல்வி முறையில் ஏற்படும் திடீர் மாற்றத்தை ஜீரணித்து, சுயமாக இயங்கும் திறமை இல்லாத கட்டத்தில் அவர்கள் தங்களை அறியாது தற்கொலை முயற்சிக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

அதைவிடுத்து, இதுவரை உயர் பெறுபேறுகளை பெற்று வெற்றிவாகை சூடி பழக்கப்பட்ட குழந்தைகள் தம்மால் தனித்து இயங்க முடியாமல் போனதாலும் தம் பெறுபேறுகளில் கண்ட திடீர் வீழ்ச்சி யினாலும் நிலைகுலைந்து போகிறார்கள். அத்தோடு அவர்களது தாழ்வு மனப்பான்மை மேலோங்கி நிற்பதால், அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகி நிற்கின்றது. நட்டாற்றில் தத்தளிக்க விடப்பட்டது போல செய்வதறியாத நிலைக்கு தள்ளப் படுகிறார்கள்.

பெற்றோர்களின் கடமை

தமது குழந்தைகளின் வளமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை உளரீதியான ஆரோக்கியமான பிரஜையாக சமுதாயத்திற்கு கொணர்விக்க வேண்டிய ஆயத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும். தாமில்லாமலும் தம் குழந்தை கள் சொந்தக் காலில் நிற்கக் கூடிய திறமையை வளர்க்க வேண்டும். தனித்து அவர்களை செயற்படக்கூடிய நிலைக்கு வழிவகுத்து, தமது பிரச்சனைகளுக்கு தாமே தீர்வு காணக்கூடிய ஆற்றலை வளர்க்க வேண்டும். கல்வி முறையில் இயந்திர மயமாக்கலை விடுத்து, அவர்களது பாடங்களை தாமாகவே சுயமாக கிரகித்து உணர்ந்து கொள்ளும் ஆற்றல் வளம்பெற உதவிபுரிய வேண்டும்.

முக்கியமாக தமது சமுதாய அந்தஸ்தையோ, சுய கௌரவத்தையோ கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கு விருப்பமில்லாத துறைகளை தேர்ந்தெடுப்பதில் நாட்டம் காட்டாமல் தமது குழந்தைகளின் தனிப்பட்ட திறமை எந்தத் துறையில் உள்ளது என்பதை கண்டறிந்து அவர்களது சுயவிருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கு பிடித்தமான துறையை தேர்ந்தெடுக்க அனுமதிக்க வேண்டும். குழந்தை பிறந்ததிலிருந்து தம் குழந்தை களுக்காக தமது வாழ்வை தியாகம் பண்ணும் பெற்றோர்கள் அவர்கள் வாழ்வு திறம்பட வேண்டும் என்று அல்லும் பகலும் கனவு காணும் நீங்கள், உங்கள் குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்கு ஊன்றுகோலாக மாறி தன்னம்பிக்கை உள்ள பிரஜைகளாக சமுதாயத்திற்கு கொணர்விக்க வேண்டும்.

"வாழ்க இளம் சமுதாயம்
வளர்க தம் பெருமை"

குருவின் மனதில் இடம்பிடித்துவிட்டால் முக்கால்வாசி கல்வி கிடைத்த மாதிரி. இதையே குருகுலவாசம் என்பர். ஆதிசங்கரர் தனக்கென ஒரு குருவைத்தேடி நர்மதா தீரம் சென்றார். கீதாச்சாரியாரான கிருஷ்ண பரமாத்மா சாந்தீப முனிவரிடத்தில் சீடனாகி வித்தைகள் கற்றார்.

ஆரம்பக்கல்வி அற்புதமானது

திருமதி றஞ்சினி தர்மலிங்கம்
பிரதி அதிபர்,
யா/ நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.

ஒரு மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைப்பது கல்வி. இக் கல்வியிலும் மிகவும் அற்புதமானது ஆரம்பக் கல்வி. ஒரு கட்டடமானது நிலைபெற்று நேர்த்தியாக எழுந்து நிற்பதற்கு அத்திவாரம் மிகவும் உறுதியாக அமைக்கப்படவேண்டும். அதேபோன்று ஒரு மனிதன் சிறந்த கல்வியுடையவனாக விளங்குவதற்கு ஆரம்பக் கல்வியை மிகவும் அவதானமாகக் கற்க வேண்டும். கல்வி கேள்விகளால் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் மனிதராயினும் மிக ஏழ்மையிலிருக்கும் மனிதராயினும் தனது பாடசாலை முதல் நாள் அனுபவத்தையும், தனது ஆரம்பக் குருவையும் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டார்கள். ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொள்ளும் மாணவர்களும் தமது கல்வியை கற்பிக்கவும் கற்கவும் மிக அவதானத்துடனும் எளிமையுடனும் இருத்தல் வேண்டும். இவ் ஆரம்பக் கல்வியே வாழ்க்கையில் மிகவும் அற்புதமானது என்ற உண்மையை உணர வேண்டும்.

ஆரம்பக்கல்வி மாணவர்கள் கிளிப் பிள்ளைகளைப் போன்ற குழந்தைகள். பெற்றோர்களின் அரவணைப்பிலிருந்து பிரிந்து வீட்டிலிருந்து பாடசாலை என்ற மிகவும் பழக்கப்படாத சூழலுக்குள் அடி எடுத்து வைக்கும் இவர்கள் பயந்த சுபாவத்துடன், ஏக்க உணர்வுடன் ஆசிரியர்களையே தமது பெற்றோராக நினைத்து அவர்களுக்கு அடங்கி நடக்கும் அற்புதமானவர்கள்.

''குழந்தையும் தெய்வமும் குணத்தாலொன்று" என்பதற்கிணங்க ஆரம்பக் கல்வி மாணவர்கள் கள்ளங்கபடமற்று தங்கள் மனதிலிருக்கும் உண்மைகளை அப்படியே வந்து தமது ஆசிரியர்களுக்கு கூறுவார்கள். இவர்கள் ஆசிரியர்களின் வாக்கை தேவ வாக்கு என நினைத்து செயற்படுவார்கள். தமது பெற்றோர்களுக்கு கூட அடங்கி நடக்காத செல்லக் குழந்தைகள் ஆசிரியருக்கு அடங்கி நடப்பதுடன் ஆசிரியர் கூறும் அனைத்து விடயங்களையும் தமது சிரமேற் கொண்டு, வீடு செல்லும் மட்டும் மனனஞ் செய்வது போல நினைத்துக் கொண்டு வீடு சென்றவுடன் அதை அப்படியே தம் பெற்றோருக்கு கூறி மகிழும் அற்புதச் சிட்டுக்கள். ஆசிரியர் சொல்லி விடுவதை அப்படியே வீடு சென்று தமது பெற்றோருக்கு தொந்தரவு கொடுத்து செய்து விடுவார்கள். செய்துகொண்டு வந்தவுடன் மிக ஆர்வத்துடன் ஆசிரியரை அணுகிப் பாராட்டைப் பெற விரும்பும் பிஞ்சு உள்ளம் படைத்தவர்கள்.

மேலும் தாம் செல்லுமிடங்களில் ஆசிரியர்களைக் கண்டால் பெரு மகிழ்வு கொண்டு ஆசிரியரை அணுகி ஓடி வருவார்கள். குரல் கொடுப்பார்கள். தம் பெற்றோருடன் செல்லும்போது தமது ஆசிரியர்களைக் கண்டால் தம் பெற்றோருக்கு ஆசிரியரை அறிமுகப்படுத்த ஆசைப்பட்டு அவர்களைப் பெரும் பாடுபடுத்தி எப்படியோ ஆசிரியருடன் கதைக்கச் செய்துவிடும் கள்ளங்கபடமற்ற அற்புதச் சிறுவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட வண்ண மலர்களைப் போல் மலர்ந்து காணப் படுவார்கள். குழந்தை உள்ளம் படைத்த சின்னஞ் சிறியவர்களுடன் பழகும்போது கல்

நெஞ்சம் படைத்தவர்களும் கசிந்துருகி விடுவார்கள்.

அடுத்து ஆரம்பக்கல்வி ஆசிரியரை நோக்குவோமானால், சின்னஞ்சிறு பாலகராய் மழலை மொழி பேசி பெற்றோரின் மடியிலே தவழ்ந்த பிஞ்சு உள்ளங்கள் பாடசாலையில் தடம் பதித்ததும் அள்ளி அணைத்து அன்பு சொரிந்து அவர்களது அழுகைக்கு ஆறுதல் கூறி அன்னைக்கு அன்னையாய் தந்தைக்குத் தந்தையாய் இருப்பார்கள். இவை மட்டுமா? சின்னஞ்சிறிய பாலகர்கள் சீராக தமது கருமங்களைச் செய்வதற்கு ஒழுங்காகப் பழக்கி, அவர்களது மனநிலை அறிந்து கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தான் எவ்வளவு அற்புதமானவர்கள். மாணவர்கள் பெறும் அனுபவங்களையும் கற்றலையும் மகிழ்ச்சி தரும் செயலொழுங்காக ஆக்குவது ஆரம்பக் கல்வி ஆசிரியரே.

பல்வேறுபட்ட சூழலிலிருந்து வரும் பல்வேறுபட்ட மாணவர்களது குணாதிசயங்கள், குடும்பச்சூழலை அறிந்து அவர்களுக்கு நற்பழக்கங்களை பழக்குவதுடன் ஒற்றுமையுணர்வு, நல்லொழுக்கங்கள் நிறைந்த சகோதர மனப்பாங்கை பழக்குபவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள். ஒரு மரம் வளர்ந்து விருட்சமாவதற்கு சிறு கன்றிலேயே மிகவும் அவதானத்துடன் வளர்த்தால்தான் அம் மரம் வளர்ந்து பயன் தரும். அவ்வாறு சிறு பராயத்திலேயே நல்ல முறையில் வளர்க்கப்பட வேண்டியவர்கள் ஆரம்ப சிறார்கள். இதனை அறிந்து மாணவர்களது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு நல்லறிவு புகட்டுபவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்.

எனவே இவை யாவற்றையும் பார்க்கும் போது மனித வாழ்க்கையிலே ஆரம்பக் கல்வி என்பது மிகவும் முக்கியமானது. அவ் ஆரம்பக்கல்வியை அற்புதமாக்கிக் கொள்வது ஆசிரியர், மாணவர்களது தலையாய கடமை என்பதனை அறிந்து செயற்பட வேண்டும்.

மனதில் உறுதி வேண்டும்

மனதில் உறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்;
கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்கவேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானக மிங்கு தென்பட வேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்.

மகாகவி பாரதியார்

சிறுவர்களும் உணவுப் பழக்கமும்

Dr. S. சியாமளன்
மகப்பேறு பெண் நோயியல் நிபுணர்

ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம் சிறார்களுடைய சக்தி தேவையைச் சமநிலைப் படுத்துவதுடன் அவர்களது சிந்தனைத் திறன் மற்றும் உளவள நிலையையும் உறுதியாக்குகிறது. நவீன விரைவுணவுகள் சம்பந்தமான தொலைக் காட்சி விளம்பரங்கள் மற்றும் சக மாணவ அழுத்தங்கள் போன்றவற்றால் பெற்றோருக்குத் தமது பிள்ளைகளின் போசணைத் தரம் தொடர்பில் அதிக சிக்கல்கள் ஏற்படுகிறது. இளவயதுச் சிறார்களின் உணவுப் பழக்கவழக்கங்களில் பெற்றோர் கவனயீனமாக இருப்பின் அது எதிர்காலத்தில் சுகதேகியான உறுதிப் பாடான பிரஜைகள் உருவாகுவதில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

எவ்வாறு பிள்ளைகளை ஆரோக்கியமான உணவுப் பழக்கத்திற்குட்படுத்தலாம்?

1) கிரமமான வீட்டு உணவுகள் :

இராப்போசனம் நேரகாலத்துடன் தவறாது ஒரே நேரத்திற்கு வழங்கப்பட வேண்டும். முழுக் குடும்ப உறுப்பினர்களும் ஒன்றாக அமர்ந்து உணவருந்துதல் வசதியானதும் உணவின் மீதான விருப்பை அதிகரிக்கக் கூடியதுமாகும். காலையுணவு மிக முக்கியமானது. கிரமமாக காலை உணவை முடித்துப் பாடசாலை செல்லும் சிறார்கள் வகுப்பிலும் நல்ல பெறுபேறுகள் பெறுவதை அவதானிக்க முடியும்.

2) வீட்டில் சமைத்த உணவுகள் :

கடைகளில் தயாரிக்கப்படும் உணவுகளில் அதிக கொழுப்பு, சீனிச்சத்து மற்றும் உப்புச் செறிவு பொதுவாக அதிகமாகவே இருக்கும். இது எதிர்காலத்தில் உடற் பருமன் கூடிய, பல்வேறு நோய்களுக்கு உள்ளாகிய பிரஜைகள் உருவாகுவதற்குத் தூண்டுகோலாகிறது. எனவே வீட்டில் சமைத்த உணவுகளை உண்ணப் பிள்ளைகளைப் பழக்கவேண்டும்.

3) பிள்ளைகளை உணவு தயாரிப்பில் ஈடுபடுத்துதல் :

உணவுகள் தயாரிக்கும்போதும் உணவு கொள்வனவு செய்யும் போதும் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதனால் பல்வேறு உணவுகளிலுள்ள போசாக்கு விபரங்களை அவர்களுக்கு கற்பிக்க முடிவதுடன் பிள்ளைகள் சுயமாக உணவு பொதிகளிலுள்ள விபரங்கள், காலாவதியாகும் திகதி போன்றவற்றை வாசித்துப் பழகவும் முடியும்.

4) போசணை மிக்க சிற்றுண்டிகளைத் தயாரித்து வழங்குதல் :

சோடா, சிப்ஸ், குக்கீஸ் போன்ற கலோரிப் பெறுமானம் கூடிய சிற்றுண்டிகளைத் தவிர்த்து அதிகளவு பழங்கள், காய்கறிகள், முழுத்தானிய சிற்றுண்டிகள் போன்றவற்றைச் சேர்ப்பதும், அதிக நீராகாரம், தூய பழச்சாறு, பால் போன்ற பானங்களை அருந்துவதும் மிக ஆரோக்கியமானது.

5) உணவுப் பாத்திரத்திலுள்ள உணவுகளை முழுமையாக உண்டு பாத்திரத்தை வெறுமையாக்க வேண்டும் எனப் பிள்ளைகளைக் கட்டாயப்படுத்த வேண்டாம். அத்துடன் ஒரு நற்காரியத்தை முடித்ததற்கு வெகுமதியாக உணவுப் பதார்த்தங்கள் வழங்குவதும் நல்லதல்ல.

எவ்வாறு உணவில் நுணுக்கம் பார்க்கும் பிள்ளைகளைச் சமாளிப்பது? (Picky eaters)

சில பிள்ளைகள் வீட்டில் வழங்கப் படும் உணவுகளில் அதிக நுணுக்கம் பார்ப்பர். இப் பிள்ளைகள் தமது உணவுத்

தட்டுகளில் உணவுப் பகுதிகளாகப் பிரித்து ஒன்றுடனொன்று கலக்காமல் பார்த்துக் கொள்வர். புதிய உணவுகளை ஏற்றுக் கொள்ள அதிக தயக்கம் காட்டுவர். இவர்களைச் சமாளிக்கப் பின்வரும் யுக்திகளைக் கையாளலாம்.

1) புதிய உணவுகளை அவர்கள் நல்ல பசியுடனிருக்கையில் அறிமுகப்படுத்த வேண்டும்.
2) ஒரு தடவையில் ஒரு புதிய உணவையே அறிமுகப்படுத்த வேண்டும்.
3) விளையாட்டுத்தனமாக உணவை அறிமுகப்படுத்தல். குறிப்பாக, உணவை அவர்கள் விரும்பும் உருவங்களின் வடிவில் வெட்டி அறிமுகம் செய்தல்.
4) புதிய உணவை அவர்களுக்குப் பிடித்த இன்னொரு உணவுடனோ அல்லது அதன் ஒரு பகுதியாகவோ வழங்குதல்.
5) பானங்களின் வழங்கலைக் குறைத்தல். (ஏனெனில் நுணுக்கப் பார்த்து உண்பவர்கள் கூடுதலாக பானங்களால் வயிற்றை நிரப்ப முற்படுவர்).
6) சிற்றுண்டிகளின் அளவைக் குறைத்தல்.

உணவில் சீனிச்சத்து எவ்வளவு இருக்க வேண்டும்?

சிறுவர்களுக்கான தினசரி உணவுகளில் 3 தேக்கரண்டி (12 g) சீனிக்கு அதிகமாகச் சேர்க்கக் கூடாது.

1) இனிப்பான பானங்களைத் தவிர்க்கவும். 12 அவுன்ஸ் சோடாவில் 10 தேக்கரண்டி சீனி உள்ளது. இது தேவையை விட 3 மடங்கு அதிகம்.
2) பெரும்பாலான சிற்றுண்டிகள் சீனி சேர்ப்பதால் சுவை கூடுவதில்லை. எனவே சீனி சேர்ப்பதைத் தவிர்த்தல் நன்று.
3) பாண், கேக் வகைகளை அதிகமாக உள்ளெடுக்க வேண்டாம். இது அவர்களின் இரத்தத்தில் சீனியின் அளவைக் கூட்டி பின் சடுதியாக மந்தமாகக் காணப்படுவதற்கு ஏதுவாகிறது.
4) அதே சமயம் இனிப்பு வகைகளை முற்றாகத் தவிர்ப்பதும் நல்லதல்ல. இவ்வாறு தவிர்ப்பதனால் இனிப்புணவுகளின் பால் பிள்ளைகளுக்கு அதீத ஆசையும், சந்தர்ப்பம் கிடைக்கும்போது அளவுக்கதிகமாக இனிப்புகளை உட்கொள்ளும் மனநிலையும் ஏற்படும்.

பதின்ம வயதினருக்கான (Teenagers) போசணைத் திட்டம் எவ்வாறானது?

காலையுணவு கட்டாயமானதும் நிறைவானதுமாக இருக்கவேண்டும். (தானிய உணவுவகை, பகுதிபட ஆடை நீக்கிய பால், யோகட், பழச்சாறு / பழ வகை ஒன்று, அவித்த முட்டை போன்றவை)

கல்சியம் நிறைந்த உணவுகள் (பால், யோகட், வெண்ணெய், அவரை வகை) மிக அவசியமானது. ஏனெனில் உடலின் என்புத் திணிவில் 90% ஆனது இவ் வயதிலேயே உருவாகிறது.

இரும்புச் சத்து அதிகமாகத் தேவைப்படும். குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கு மாதவிடாயில் ஏற்படும் இரத்த இழப்பினால் உடலின் இரும்புச்சத்து சேமிப்பு குறைவடையும். சிவப்பு இறைச்சி, ஈரல், முட்டை, மீன், விதை வகைகள், பச்சைக் காய்கறி, அவரை போன்றவற்றில் இரும்புச் சத்து அதிகமாகக் காணப்படும்.

அதிக நீராகாரம் அருந்துதல் அவசியம். ஒரு நாளைக்கு 6 - 8 கோப்பை நீர் அருந்துதல் இன்றியமையாதது. நீராகாரங்களில் சீனியினளவை மிகவும் குறைவாகப் பேண வேண்டும்.

உணவில் அதிக கொழுப்பு, அதிக உப்பு சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இடையில் ஏற்படும் பசியைத் தணிக்க பழங்கள், குறை கொழுப்பு யோகட், பேரீச்சம்பழம் போன்றவற்றை உண்பது நலம்.

ஆரோக்கியமான உணவுப் பழக்கம் நோயற்ற ஆரோக்யமான இளம் சந்ததியினரை உருவாக்க உதவுகின்றது.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

ஆனந்தமான ஆரம்பக்கல்வி ஆளுமையுடையதாக....

திருமதி பாமினி தனபாலசிங்கம்
ஆசிரியை,
யா/ நெ.மெ.மி.த.க. பாடசாலை

ஆரம்பக்கல்வியானது ஒரு பிள்ளையின் வாழ்வில் மிகவும் பெறுமதியானது. இதனை பிள்ளை கற்கும்போது மகிழ்வுடனும் சுய விருப்புடனும் கற்கவேண்டும். இக்கல்வியினை வழங்கக்கூடிய வழிகாட்டிகளாக பாடசாலையும், பெற்றோரும், ஆசிரியரும் பெரும் பங்கினைக் கொண்டுள்ளனர்.

தாய் தந்தையர் தமது குழந்தைகளுக்குச் செய்யும் தலையாய பணி ஆரம்பக் கல்வியை ஒழுங்குற அமைத்து வழங்கும் பாடசாலையை தெரிவுசெய்து கல்வி வழங்குதலாகும். பாடசாலைக் கல்வியை தொடர்வதற்குரிய விருப்பத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஆரம்பக் கல்விக்கு உள்ளது. அத்துடன் இக்கல்வி இடைநிலைக் கல்வி, உயர் கல்விக்கு அத்திவாரமாக அமைகின்றது. எனவே ஆரம்பக் கல்வியை கவர்ச்சியும் பெறுமதியும் மிக்கதாக வழங்குதல் ஒவ்வொரு பாடசாலையினதும் பொறுப்பு ஆகும். பாடசாலையில் கலைத்திட்டத்தில் அடங்கும் பாடங்கள், பாட விடயங்கள், கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு முறைகள், பின்னூட்டல் பயிற்சி போன்றனவும் இணை பாட கலைத்திட்ட செயற்பாடுகளும் ஆரம்பக் கல்வி மாணவருக்கு பொருத்தமானவையாக ஒழுங்கமைக்கப்படுதல் பாடசாலையின் பாரிய கடமையாக அமைகின்றது.

ஐந்து வயதைப் பூர்த்தி செய்த பிள்ளையொன்று ஆரம்பக்கல்வியின் வாயிலான ஆண்டு ஒன்றில் பிரவேசிக்கின்றது. அது தனது பெற்றோரின் அரவணைப்பில் இருந்து பிரிந்து, பழக்கமற்ற சூழலொன்றில் சம வயதுடையோருடன் வரையறுக்கப்பட்ட காலமொன்றைக் கழிக்கவுள்ளது. இவர்களை சிறந்த பிரசைகளாக்கும் பாதையில் இட்டுச் செல்லும் உயரிய கடமை ஆரம்பக்கல்வி ஆசிரியரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆரம்பக்கல்வி பருவத்தில் மாணவரிடையே காணப் படக்கூடிய முக்கிய பண்பு ஆவல் ஆகும். இவ்வயதுப் பிள்ளைகள் பெரும்பாலனவற்றை அறியத் தூண்டப்படுவர். ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் இப்பண்பை வளர்த்து எடுத்தல் வேண்டும். ஆரம்பப் பாடசாலையில் அவர்கள் பெறும் அனுபவங்களையும், கற்றலையும், மகிழ்ச்சி தரும் ஆக்கபூர்வமான செயலொழுங்காக ஆக்குவது ஆசிரியரின் பொறுப்பாகும். ஆரம்பக் கட்டத்தில் கட்டியெழுப்பப்படும் நல்ல மனப்பாங்குகள் பாடசாலைக் காலத்தினுள் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் முக்கியமானது என்பதனை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையின் சுற்றாடற் பண்புக்கேற்ப முன்மாதிரியான செயற்பாடுகளை அமைத்தல் மூலம் ஆசிரியரொருவர் தேவையான வழிகாட்டலைச் செய்யமுடியும். ஆரம்பப் பாடசாலை

பிள்ளையொன்று சிந்திக்கும் விதத்தை நோக்கின்,
''நான் எடுக்க வேண்டிய தீர்மானங்களை நீங்களே எடுப்பின் தீர்மானிப்பதற்கு எனக்கு முடியாமல் போகும்''

''நான் எவ்வாறானவனாக இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறுவதானால் நான் என்னை இழந்து விடுவேன். என்னை எனது போக்கில் சிந்திப்பதற்கு இடமளித்தால் அதுவே போதும்''

பிள்ளைக்கு சுதந்திரமான சுய ஆளுமையை கட்டி எழுப்புவதற்கு தேவையான ஆளுமையை கட்டி எழுப்புவதற்கு தேவையான வசதிகளை வழங்குதலின் முக்கியத்துவம் இக் கூற்று களில் இருந்து புலனாகின்றது.

எனவே பிள்ளையின் ஆரம்பக் கல்வியானது ஆனந்தமானதாகவும் ஆளுமையுடையானதாகவும் அமைவதற்கு ஆவன செய்ய வேண்டியது மேற்குறிப்பிட்ட தரப்பினரது முக்கிய பங்களிப்பாக அமைகிறது.

நான் ஓர் ஆரம்பக்கல்வி ஆசிரியர் என்ற வகையில் இச்சிறார்களின் இவ் ஆரம்பக்கல்வியை எனது ஆசிரியர் சேவையில் முடிந்தவரை இனிதே விருப்புடன் செயற்படுத்த வேண்டுமென ஆவல்கொண்டு செயற்படுகிறேன். தொடர்ந்தும் எனது பணியை செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

கற்பிப்பவன் கற்றுக் கொண்டேயிருப்பான்

நமக்கு கிடைக்கும் நல்ல அனுபவங்கள் சுகபோகங்கள் எல்லாவற்றுக்கும் தெய்வத்தின் அருளே காரணம் என்பதை மறந்து அறியாமையில் சுழன்று வருகின்றனர் தற்கால மனிதர். அன்றாட வாழ்க்கையில் என்ன பணி செய்திடினும் அது தெய்வத்தை சார்ந்ததாகவே செய்திட வேண்டும். அப்போதுதான் அதன் மதிப்பு உயரும்.

- பேரானந்த பேருரைகள்

அர்ப்பணம் செய்யப்படும் பொருள் என்ன என்பது முக்கியமல்ல அர்ப்பணம் செய்பவரின் இதயத் தூய்மையும் நம்பிக்கையுமே முக்கியமானது. தூய அன்புடன் அர்ப்பணம் செய்யப்படும்போது இறைவன் எதுவானாலும் அதை ஏற்றுக் கொள்கின்றான்.

- பேரானந்த பேருரைகள்

THE ART OF THE STORYTELLING

S. Muguntthan
Lecturer,
Jaffna National College of Education,
Kopay.

Storytelling is as old as speech. Once upon a time, everyone was a storyteller. To fight boredom and keep themselves company, these early storytellers chanted as they worked, telling the story of what they were doing. Then "I" stories became narratives involving other people and the elements, and storytellers told tales of heroes, myths, and legends. The art of storytelling evolved naturally because some people preferred telling tales and other preferred listening to them.

As society developed, people wanted to keep a historical account of events. The storyteller occupied an honoured position and his role was very important. Tribes competed to see who could tell the best stories, which led to exaggerated imaginary tales of elaborate heroic feats. Gradually, some stories featured animals to satirize tribal events. By using animals, storytellers could make fun of kings and chief tans without fear of retribution.

The Egyptians were the first to write down their stories. The Romans were good at spreading stories, as were the gypsies whose nomadic life enabled them to carry tales far and wide. Royalty hired storytellers or troubadours who told tales of court scandals or heroic accomplishments, accompanying themselves on musical instruments. The troubadour gradually surrounded himself with a retinue of tumblers, pages and buffoons who helped him tell the story in an entertaining way. Troubadours were succeeded by minstrels and mummers who travelled from town to town making their livelihood by entertaining people with their storytelling performances.

Today, the art of storytelling continues as we tell stories to children to communicate with them, entertain them, and pass on information. Anyone can read a story but, when a story is told, children feel a bond between the teller and themselves. In a society where parents lead busy lives and children are entertained by the impersonal communication media of films and television, storytelling can be an invaluable part of your program. An experience shared between teller and listener, it helps children develop the skills of listening and encourages them to visualize the story in their imaginations - to relax and fantasize safely.

What kinds of stories to Beaver-aged boys like ? They don't care for instructional stories that sermonize. They do enjoy stories such as 'Chicken Little' or 'The Little Red Hen' in which animals or objects have feelings, even when they are "lesson" stories.

Children believe in magic. A kiss can transform the ugly frog into a handsome prince. They also recognize justice and injustice, crime and punishment. For young boys, it is important for stories to convey magic and fantasy. Like 'The Wizard of Oz' or 'Aladdin and his Magic Lamp', they can be as far-fetched as the imagination will take them, but they also need to have a sense of real life and fair play.

Tips for the Storyteller

There are certain steps that storytellers follow. They select a story appropriate to the occasion, interests, and age of the audience, commit it to memory, prepare the audience by sitting them in a circle, and begin the tale. Professional storytellers generally memorize seven stories a year and have a repertoire of about 20 stories handy at all times.

If you are an inexperienced storyteller, look for short stories with repetitive phrases. Choose tales that you like because Beavers can sense when you aren't keen on what you're telling. You want stories that build up suspense to a good climax, preferably tales where characters speak for themselves rather than straight narratives. Length is important - never more than 20 minutes for Beaver-aged boys. Leave them wanting more. Generally, children's magazines are not a good source of stories because the material is meant to be read by the child, not out loud.

When you've chosen the story, you need to memorize it. It will take a few hours spread over time. First, read it silently and try to see the story in your mind's eye by visualizing it as a series of pictures. Then learn it by reading it aloud repeatedly, enjoying the words and the sound of the phrases. Think about words that may be new or unfamiliar to your audience and incorporate their meanings into the story so that you won't need to interrupt it during the telling to explain.

Time yourself when you read the story aloud. After you have memorized it, time yourself again. If you use less time, you are either telling it too fast or skipping parts. If it takes much longer, you are telling the story too slowly. Tell your story to anyone who will listen. Before going to bed, read it aloud again. If you can, tape or videotape yourself telling the story.

Once you've memorized the story, you are ready to tell it. These points will help you do it more effectively. Smile and make eye contact with your listeners. Vary the pitch of your voice and use facial expressions and hand spirit of the story - unless you do, don't

tell it. In choosing stories it is a good idea to select a theme for the hour, week, etc. (Honesty, courtesy, loyalty, safety).

Be sure to read the story out loud first because some are better read than told. Don't be afraid to use high and low tones to impersonate characters.

Be sure of your sequence of events; then practice out loud, in front of a mirror if possible, until you are used to the sound of your own voice and gestures. These gestures should be very simple - if used at all.

Be sure your facial expression interprets the mood of the story. Your eyes are most important - use them.

Atmosphere can make or break a storytelling period. Be sure it is quiet, secluded, and that there will be no interruptions once the story begins.

Try some of the tricks used by experienced storytellers - a "story hat", which goes on when the story begins and comes off when it ends, or a mascot such as a teddy bear, doll or hand puppet to tell the story to or take the part of a character. This is a simple device for taking your mind off the listening audience if you are a little shy.

And the opening sentence! Don't always say "Once upon a time..." Why not try:

"Once, in the long, long ago and very far away..."

"On the very highest mountain in the whole world lived an old man..."

"Those were the days when mighty beasts roamed the jungle..."

Telling the Story

Atmosphere

- Have a definite place
- Have sufficient time
- Have listeners seated comfortably in front of you (semi-circle)
- Don't allow questions or interruptions during the story
- Look directly at the children as you tell the story

Voice

- Speak simply, quietly and directly
- Use sufficient volume to be heard easily
- Be careful with enunciation
- Use low, pleasing tone quality

Expression

- Know what you want to say
- Express what you feel
- Think what you mean
- Be natural

Timing

- Pause
- Change the speed
- Change the pitch
- Vary the emphasis
- Build up to the climax

Ending the Story

- Do not detract from the climax
- Make sure not to suggest another story.

- Do not point up a moral
- End the story quickly
- Then STOP!

Some Further Helpful Hints

- Keep your group small - not more than thirty.
- Sit or stand close to the group.
- Three different types of stories are enough in one period.
- All good stories will stand repeating
- Use 'chatty' language but don't over-simplify.
- Vary the time of your story hour
- Avoid long descriptions of people and places
- Serial or installment stories don't hold interest.
- Don't change the story - discard it!
- Use poetry occasionally.
- Use different types of stories:
- Myths
- stories of heroes
- current events
- Legends
- humour
- history
- nature stories
- real-life stories
- circus tales
- animal stories
- romances
- patriotic stories
- mysteries
- adventure
- special holidays
- folk tales
- sports tales

Remember: short stories for little people; longer stories for bigger ones. If it's funny, laugh with them! My beloved English Guru known as 'Thevy teacher' used to have this method once a week to motivate us to speak English.

Story telling is one of the best strategy to teach English in cooperate with different skills of the language such as listening, speaking and reading. Besides, power of vocabulary and grammatical structures can easily be taught without much difficulties. When story telling is used in the process of teaching a language in the classroom, it will be a great change among the students to use the particular language confidently.

மாணவர்களின் கற்றல் திறன் வளர்ச்சி

செல்வி ந. மனோராணி
ஆசிரியர்

நவீன கல்வி முறையில் மாணவர்களின் கற்றலானது தேர்ச்சியை மையமாகக் கொண்டு ஆசிரியர்கள் வசப்படுத்துநர்களாக வகிபங்காற்றி மாணவர்களின் சுய கற்றலை மேம்படுத்துவதனூடாக கற்றல், கற்பித்தல் செயற்பாடு இடம்பெற வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் மாணவர்கள் நல்ல அனுபவங்களைப் பெற்று தமது அறிவு, திறன், மனப்பான்மையினை விருத்தி செய்யலாம் என்ற அடிப்படையிலேயே 5 E method பாடசாலை மட்டக் கணிப்பீடுகள் என்பன வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மாணவர்கள் தம்மை இணைத்துக் கொண்டு கற்றலின் நோக்கத்தினை அடைய வேண்டுமாயின் கற்றல் திறன்களின் விருத்தி செய்துகொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் கற்றலுக்கான அடிப்படையைக் கற்றல் திறன்களே வழங்குகின்றன. அத்துடன் இன்றைய நவீன தொழிநுட்ப உலகில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான தளங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் அவை மாணவர்களின் அறிவு விருத்திக்கு பயன்பட வேண்டுமாயின் தாமாகவே அவற்றைத் தேடிப்பெற்று சுய கற்றலை மேற்கொண்டு புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே இன்றைய கல்வி நடவடிக்கைக்கு கற்றல் திறன் வளர்ச்சி என்பது முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதால் அவற்றைப் பற்றி அறிந்து வளர்த்துக் கொள்வதன் மூலம் கற்றலைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும். இந்த வகையில் பின்வரும் திறன்களை அடிப்படைக் கற்றல் திறன்களாகக் கொள்ளப்படுகின்றன.

1. வாசிப்புத் திறன்
2. செவிமடுக்கும் திறன்
3. குறிப்பெடுக்கும் திறன்
4. எழுத்தறிவுத் திறன்

வாசிப்புத் திறன் :

வெற்றிகரமான கற்றல் செயற்பாடு ஒன்றை மேற்கொள்வதற்கு அடிப்படையான திறனாக வாசிப்புத்திறன் காணப்படுகின்றது. அதாவது நூல்களில் உள்ள விடயங்களை முதலில் வாசிப்பதன் மூலமே விடயங்களை அறிந்து கொள்ளலாம். இத்தகைய வாசிப்பை மேற்கொள்ளும்போது

1. பொழுதுபோக்கிற்காக வாசித்தல்
2. அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக வாசித்தல் என இரு முறைகளில் வாசிப்பை மேற்கொள்ளலாம். பொழுதுபோக்கிற்காக வாசித்தலானது விடயத்தை மேலெழுந்தவாரியாக வாசிப்பதன் மூலமாக மேற்கொள்ளப்படலாம். மாறாக அறிவை பெற்றுக்கொள்வதற்காக வாசிக்கும்போது சில விடயங்களைக் கருத்தில் கொண்டே வாசிப்பை மேற்கொண்டு முழு விடயங்களையும் கிரகித்துக்கொள்ள முடியும். இதற்கு உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் எளிய முறையான 5 கட்ட திட்டம் காணப்பட்டபோதும் இன்று அது ஆறு கட்டமாக வளர்ச்சியடைந்துள்ளது.

S - Survey (தேடுதல்)
Q - Question (வினாவுதல்)
R - Read (வாசித்தல்)

R - Recite (ஒப்புவித்தல்)
R - Review (மீட்டுப்பார்த்தல்)
R - Reflect (பிரதிபலித்தல்)

வாசிப்புச் செயற்பாட்டில் ஈடுபடும் போது எதை வாசிக்கப் போகின்றோம் என்பதை தேடுதல் வேண்டும். அதாவது விடயம், தலைப்பு, பக்கங்கள், படங்கள், வரைபுகள் ஏனைய அறிவுறுத்தல்கள் என்பவற்றை ஆராய வேண்டும். அடுத்து என்ன தலைப்பில் என்ன விடயத்தை அறிந்துகொள்ளப் போகின்றேன் என்பதைத் தனக்குள்தானே வினாவி வாசிப்பிற்கான முன் தயாரிப்பை மேற்கொள்ளும்போது அது பாடத்தைக் கிரகித்துக் கொள்ளத் துணையாக அமையும். அதன்பின் விடயத்தை வாசிக்க வேண்டும். வாசிக்கும்போது விடயம் விளக்கமின்றிக் காணப்பட்டால் மெதுவாகத் தெளிவு ஏற்படுத்தும் வரை வாசிக்கலாம். அடுத்து குறிப்பிட்ட பகுதியை வாசித்து முடிந்த பின் அதை மீட்டுப்பார்த்து சொந்த மொழிநடையில் கிரகித்து வாசித்த விடயத்தை விளங்கிக் கொண்டு ஒப்புவித்தல் வேண்டும். இப்படிப் பாட உள்ளடக்கம் முழுவதையும் பகுதி பகுதியாக மேற்கொண்டு பூரண விளக்கம் கிடைத்த பின் மீட்டல் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் அல்லது சுயமாக வினாக்களை வினாவி விடையளித்து மீட்டல் செய்யும்போது பாடத்தில் தெளிவு ஏற்பட்டதை உணர முடியும். இறுதியாக படித்துக் கிரகித்த விடயத்தை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்வதன் மூலம் அவை குறுங்கால ஞாபகத்திலிருந்து நீண்ட கால ஞாபகத்திற்குக் கொண்டு சென்று எப்பொழுதும் பிரதிபலிக்கக் கூடியதாக அமைந்துவிடும்.

செவிமடுத்தல் திறன் :

உன்னிப்பான செவிமடுத்தல் என்பதும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய முக்கிய திறனாகும். ஏனெனில் வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்கள் கற்பிக்கும் விடயங்கள், செயற்பாடுகள், பரிசோதனைகள் என்பவற்றை உன்னிப்பாக உற்று நோக்குவதன் மூலமே விளங்கிக் கொள்ள முடியும். எனவே பின்வரும் நுட்பங்களைப் பயன்படுத்தி அவதானத்துடன் செவிமடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

1) ஆசிரியர்களின் கண் தொடர்பு கிடைக்கும்படி வகுப்பில் அமர்தல்
2) ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களுக்கு அவதானத்தை முழுமையாக செலுத்துதல்.
3) செவிமடுப்பவற்றை முழுமையாக விளங்கிக்கொள்ள முயற்சி செய்தல்.
4) ஆசிரியர்களின் பௌதீக தோற்றத்தில் கவனத்தை குவிக்காதிருத்தல்.
5) வகுப்பறைச் சுற்றாடலில் கவனத்தை திசைதிருப்பாதிருத்தல்.
6) விடயங்களில் தெளிவின்மை காணப்படின் வினாக்களை வினாவி உடனுக்குடன் தெளிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

குறிப்பெடுத்தல் திறன் :

குறிப்பெடுத்தல் என்பது வாசித்து கிரகித்துக் கொண்ட விடயத்தையோ செவிமடுத்து பெற்ற விடயத்தையோ பிரத்தியேகமான ஒரு குறிப்புப் புத்தகத்தில் சொந்த மொழிநடையில் குறித்துக் கொள்வதைக் குறிக்கின்றது. இப்படி குறித்துக் கொண்ட விடயங்களை அடிக்கடி மீட்டுப் பார்ப்பதன் மூலம் அவற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். இக் குறிப்பெடுத்தலானது தலைப்பு வாரியாகவோ, வரைவிலக்கணக் குறிப்பெடுத்தலாகவே, வரைபடக் குறிப்பெடுத்தலாகவோ மேற்கொள்ளலாம். அது விடயத்தையும் விளங்கிக் கொண்டுள்ள முறையினையும் பொறுத்து அமையும்.

எழுத்துத் திறன் :

எந்த ஒரு வெற்றிகரமான கற்றலின் வெளிப்பாடானது அந்த விடயத்தை

பரீட்சைக்கு விடையளிக்கும்போதே அளவீடு செய்யப்படுகின்றது. ஏனெனில் இன்று பெரும்பாலான மாணவர்கள் பரீட்சையில் தோல்வியடைவதற்கு விடயத் தெளிவின்மை காரணமாக அமைவதை விட குறிப்பிட்ட விடயத்தை சரியாகவும் பொருத்தமாகவும் வினாவிற்கு ஏற்ப விடையளிக்கத் தெரியாமையே காரணமாகும். எவ்வளவு தான் படித்து விடயங்களை ஞாபகப்படுத்தக் கூடியதாக இருந்தாலும் பொருத்தமாக விடையளிக்கத் தெரியாதுவிடின் பரீட்சையில் தோல்வி அடையவேண்டி வரும். இதை அன்றாடம் விடையளித்து பயிற்சி செய்வதன் மூலமே வளர்த்துக்கொள்ள முடியும். அத்துடன் பயிற்சி செய்யும்போது விடயங்களைச் சுருக்கி விரிவாக எழுதப் பழகுவதுடன் பொருத்தமான மொழி நடை பயன்படுத்தவும், புள்ளிக்கேற்ப விடையளிக்கவும், நேர மட்டுப்பாட்டிற்கேற்ப விடயங்களை முன்வைக்கவும் பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

மேற்கூறிய திறன்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்வார்களாயின் சுயமாகவே நூல்களை தேடிக் கற்று அவற்றை குறிப்பெடுத்து வைத்திருந்து பரீட்சையில் பொருத்தமாக முன்வைத்து தமது அறிவுத் திறனை அளவிட்டுக் கொள்வதுடன் கற்றலின் நோக்கத்தினையும் அடைந்து கொள்ளலாம்.

ஒரு மனிதனை உருவாக்குகின்ற அடிப்படைக் காரணிகள்

உனக்குள் நீ பிறந்த நாடு வாழ்ந்திருக்கும்
நீ நடந்த பாதை அதில் பதிந்திருக்கும்
நீ குடித்த பானம் உன்னில் இருக்கும்
நீ உண்ணும் உணவு உன்னைக் காட்டிக் கொடுக்கும்
நீ ஏறிச்செல்லும் வாகனம் உன்னை இனங்காணும்
நீ பிள்ளையாக இருந்தபோது விளையாடிய விளையாட்டுகள்
உன் மனதில் உறங்கிக்கிடக்கும்
உன் பாட்டன், பாட்டி சொல்லிய கதைகள் நினைவிருக்கும்
நீ கேட்டிருந்த வம்புக்கதைகளும் உன்னைச் சீண்டும்
நீ கற்ற பாடசாலை உன்னைச் சீராக்கும்
உன் பாடசாலை மைதானம் உனக்கு படியமைக்கும்
நீ பாடிய கவிதைகளே உன்னைத் தாலாட்டும்
நீ நினைத்த நினைக்காத தெய்வங்கள் உன்னை வாழ்விக்கும்.

- சமர்செட் மோகம் என்ற ஆங்கில எழுத்தாளரின் கவிதை வரிகள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்

இடமிருந்து வலம் :

நிரை 1 : திரு. கு. சுரேந்திரன், திரு. சி. சிவபாலன் (செயலாளர்), திரு. ந. தேவராசா (தலைவர்), திரு. ப. நிர்மலன், திரு. சி. கணேசலிங்கம்

நிரை 2 : திருமதி வி. தவேந்திரராசா (பொருளாளர்), திருமதி. ரே. சிவகுமார், திருமதி ரோ. செல்வக்குமார், திருமதி ந. உதயகுமார், திருமதி த. பிரபாகரன், திரு. அ. அன்பழகன்

பாடசாலை அபிவிருத்திக் குழு

இடமிருந்து வலம் :

நிரை 1 : திரு. இ. உதயகுமார், திருமதி ற. தர்மலிங்கம் (பகுதித்தலைவர்), திரு. ந. தேவராசா (அதிபர்), திரு. ம. மகேஸ்வரன், திரு. வ. மகீபன்

நிரை 2 : திருமதி ந. கந்ததாசன், திருமதி சீ. மதுசூதனன், திருமதி கொ. சிறாந்தினி, திருமதி பா. தனபாலசிங்கம், திருமதி க. தவேஸ்வரன்

மாணவர் ஒவ்வொருவரதும் தேர்ச்சி நோக்கியனவாக ஆரம்ப வகுப்பறைகள்

கலாநிதி செல்வி நி. நல்லையா
உப பீடாதிபதி (நிதியும் நிர்வகமும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்லூரி,
கோப்பாய்.

பாடசாலை என்பது சமூகத்தினால் உருவாக்கப்பட்ட சமூகத்தினால் ஊட்டம் பெறுகின்ற, சமூகத் தேவைகளை நிறைவு செய்தலை நோக்காகக் கொண்ட ஒரு சமூக ஒழுங்கமைப்பாகும். சமூகம் என்பது ஒரு சிக்கலான அமைப்பாகும். அவ்வகையில் சமூக ஒழுங்கமைப்பாகிய பாடசாலையும் தமக்கே உரித்தாக்கப்பட்ட கலைத்திட்ட நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற் கொள்ளல், அயற் சமூகத்தினதும் பரந்த சமூகத்தினதும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்தல், சமூகத்தில் தமது இருப்பை உறுதிப்படுத்தல் எனப் பல்வேறு வகையான செயற்கூறுகளை உள்ளடக்க வேண்டி யுள்ளது. இவற்றை நிறைவு செய்யும் வகையில் ஒவ்வொரு பாடசாலையும் பொதுக்கல்வி நோக்கங்களுக்கமைய தமக்கென விசேடமான தூரநோக்கு, பணிக் கூற்று, இலக்குகள் என்பவற்றை வரையறுத்து செயற்படுகின்றன.

பாடசாலையின் இலக்குகள் நிறைவேற்றப்படுதலை உறுதி செய்கின்ற பிரதான இடம் வகுப்பறையாகும். வகுப்பறை யில் பெற்றுக்கொண்ட அறிவு, ஆற்றல்கள், அனுபவங்கள், திறன்கள், விழுமியங்கள் என்பனவே பாடசாலை முழுமைக்குமான வெற்றியைத் தீர்மானிப்பன. எனவே ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஒவ்வொருவரும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் வெற்றி கருதி பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- மாணவர் கற்கும் நேரத்தினை உச்சப் படுத்தல்
- இடையீடுகளைக் குறைத்தல்
- மாணவரது கட்டொழுங்கு சார் பிரச்சினைகளைக் குறைத்தல்
- மாணவரிடையே விரும்பத்தக்க நடத்தைகளை விருத்தி செய்தல்
- மாணவரது தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளல்

மாணவர் கற்கும் நேரத்தினை உச்சப் படுத்தல்

பெற்றோர் தமது பிள்ளைகளின் முன்னேற்றகரமான எதிர்காலம் பற்றிய கனவுகளுடன் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். பாடசாலைக் கல்வி ஊடாக தமக்கும் நாட்டிற்கும் பயன்மிகு நற்பிரசைகளாக மாணவர்கள் உருவாக வேண்டும் என்பது பெற்றோரினதும் சமூகத்தினதும் எதிர்பார்ப் பாகும். பாடசாலையில் மாணவரது கற்கும் நேரத்தினை உச்சப்படுத்துவதன் ஊடாக இடைவிலகல், சித்தியின்மை, பொருத்தப் பாடின்மை ஆகிய எதிர் விளைவுகளை இழிவளவாக்க முடியும்.

கற்றல் இடம்பெற்றமையை உறுதி செய்தல்

ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்ட நேரத்தினை உச்சப் பயன் மிக்கதாக்கும் வகையில் நேர முகாமை தொடர்பான விழிப்புணர்வு மிக்கவர்களாக விளங்குதல் வேண்டும். நேர முகாமைத்துவம் என்ற வகையிற் பொதுவாக, உரிய நேரத்திற்கு பாடசாலைக்கு வருதல், நேரம் தவறாது வகுப்பறைக்குச் செல்லுதல், நேரத்தை வீணாக்காது கற்றல் - கற்பித்தற்

செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பன கருதப்படுகின்றன. ஆனால் வகுப்பறை முகாமையாளர்கள் என்ற வகையில் ஆசிரியர்கள் மாணவர்களிடையே கற்றல் இடம்பெற்றமையை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்கான வழிகளில் ஒன்று மாணவர்கள் உண்மையாகவே கற்றலில் ஈடுபட்ட நேரத்தைக் கணிப்பிடுதல் ஆகும். கற்றல் நேரத்தை முகாமை செய்தல் என்பது சிக்கலான, கடினமான செயலாகும் எனக் குறிப்பிடும் R.I. Areands அவர்கள் அதனைப் பின்வரும் பிரிவுகளின் கீழ் விளக்கியுள்ளார்.

- மொத்த நேரம் : குறிப்பிட்ட ஆண்டிற்கான பாடசாலை நாட்களின் பாடசாலை நேரம்
- சமூகமளித்த நேரம் (Attended Time) : மாணவர்கள் பாடசாலைக்குச் சமூக மளித்த நாட்களின் பாடசாலை நேரம்
- கிடைக்கக் கூடிய நேரம் (Available Time) : மாணவர்கள் பாடசாலைக்குச் சமூகமளித்த போதும் விழாக்கள், விருந்துபசாரங்கள் போன்ற மேலதிக கருமங்களுக்காக ஒதுக்கப்படும் நேரம்
- கல்விக்காக திட்டமிடும் நேரம் (Planned Acadamic Time) : ஆசிரியர் தமது பதிவுகள் தொடர்பான வேலை களில் ஈடுபடும் நேரம்
- கல்விக்காக உண்மையில் செலவிடும் நேரம் (Actual Acadamic Time) : ஆசிரியர்கள் உண்மையில் கற்றல் - கற்பித்தலில் ஈடுபடும் நேரம். இது ஒதுக்கப்பட்ட நேரம் எனவும் கற்பதற் கான வாய்ப்பு எனவும் குறிப்பிடப்படும்.
- ஈடுபடும் நேரம் (Engaged Time) : மாணவர்கள் கற்றற் செயற்பாடுகளிற் பங்குபற்றும் நேரம். செயற்பாடுகளின் போது கவனத்தை ஒருமுகப்படுத் தாமை, விடயத்திற்குப் புறம்பாகக் கதைத்தல், செயற்பாடுகளில் ஈடுபடுவது போலக் காட்டிக் கொண்டு ஈடுபடாதிருத்தல் ஆகியனவும் இந்நேரத்தில் இடம்பெறலாம்.
- கல்வி கற்கும் நேரம் (Acadamic Learning Time) : மாணவர் உண்மை யாகவே கற்ற நேரம். அதாவது இலக்கு நோக்கி வினைத்திறனாகச் செயற்பட்டு பயனடைந்த நேரம்.

கற்றல் - கற்பித்தலின் போது அவதானிப்பு, வினவுதல், உருவாக்க மதிப்பீடு முதலான பல உத்திகளைப் பயன்படுத்தி மாணவரிடையே கற்றல் இடம்பெற்றமையை உறுதிப்படுத்த முடியும். நேரத்தை முகாமை செய்யும் ஆசிரியர் ஒருவர் தொடர் கணிப்பீட்டுச் செயன் முறைகள் ஊடாக ஒவ்வொரு பிள்ளையும் உண்மையாகக் கற்ற நேரத்தைக் கணிப்பிடுவாராயின் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைப்பதற்கு முன்னரே மாணவர்களின் தேர்ச்சி நிலையை எதிர்வுகூற முடியும்.

வகுப்பறையின் பௌதீக ஒழுங்கமைப்பு

ஆரம்ப வகுப்பறைகளில் மாணவர் கள் இடையீடுகள் இன்றி கற்பதற்கு வசதியளிக்கும் வகையில் வகுப்பறையின் பௌதீகச் சூழல், ஒழுங்கமைப்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். வகுப்பறை யின் பௌதீக ஒழுங்கமைப்பு என்ற வகையிற் பின்வரும் அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படத்தக்கன.

- காற்றோட்டமும் வெளிச்சமும் கொண்ட வகுப்பறைகள்.
- இலகுவில் இடமாற்றக்கூடிய பாரம் குறைந்த கதிரை மேசைகள்.
- கற்றற் செயற்பாடுகளின்போது மாணவர் களும் பயன்படுத்தக் கூடிய பலகை வகைகள் - தாழ் மட்டத்தில் அமைந்த கரும் பலகைகள், பிளனல் பலகைகள்,
- பிள்ளைகள் நிலத்தில் இருந்து வேலை செய்வதற்குப் பொருத்தமான இட வசதியும் இருப்பதற்கான விரிப்புகளும்
- உபகரணங்களைக் காட்சிப்படுத்துவதற் கான, பாதுகாப்பதற்கான வசதிகள்.
- மாணவரது கற்றலுக்கு உதவக் கூடிய கற்றல் மூலைகள்

வகுப்பறையின் உளவியற் சூழல்

வகுப்பறையின் உளவியற் சூழலானது பாதுகாப்பானதாகவும் சவாலானதாகவும் அமைதல் வேண்டும். மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் இயல்பாக ஈடுபட வேண்டுமாயின் வகுப்பறைச் சூழல் தொடர்பாக நம்பிக்கை கொள்ளல் வேண்டும். தாம் அச்சப்படக்கூடிய சூழ்நிலைகள் எதுவும் ஏற்படாது எனும் நம்பிக்கை ஏற்படும் போது அவர்களால் மன உறுதியுடன் கற்றலில் ஈடுபட முடியும். ஆனால் வகுப்பறை நிலைமைகள் சில மாணவரிடையே பாதுகாப்பான சூழல் தொடர்பான எதிர் மனப்பாங்குகளை விளைவிப்பனவாகவும் உள்ளன. எடுத்துக் காட்டாக வகுப்பறைச் செயற்பாடுகளின் போது உளத்தாக்கங்களுக்கு உள்ளாகும் பின்வரும் மாணவர்களைக் குறிப்பிட முடியும்.

- தமது இயலுமைக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டி வருமோ என அச்சமடையும் மாணவர்கள். (உதாரணமாக சொற்களை வாசிக்க இடர்ப்படும் மாணவர்களை உரையாடலொன்றை வகுப்பின் முன் வந்து வாசிக்குமாறு பணிக்கும் போது ஏற்படும் தயக்கமும் பயமும்)
- வழங்கப்படும் உபகரணங்களை சில மாணவர்கள் மட்டும் கையாளும் போது ஆர்வமிருந்தும் சந்தர்ப்பம் கிடைக்காத நிலையில் ஒதுங்கியிருக்கும் மாணவர்கள்.
- வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆசிரியரது கவனத்தைப் பெறமுடியாத, ஆசிரியரால் பெயர் கூறி விளிக்கப்படாத மாணவர்கள்.
- செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய அடிப்படைத் தேர்ச்சிகள் அற்ற நிலையில் வகுப்பறைக்குப் பொருத்த மற்ற நடத்தைகளை வெளிக்காட்டும் மாணவர்கள். அதனால் ஆசிரியரது தண்டனைக்கு உள்ளாகும் மாணவர்கள்.

மேற்படி மாணவர்கள் வகுப்பறை தமக்குப் பாதுகாப்பற்றதெனக் கருதுவார்கள். எனவே நல்ல ஆசிரியர் ஒருவர் ஒழுங்கு முறைகளைப் பேணுவதுடன் மாணவர்கள் நோக்குடைச் செயல்களில் வினைத் திறனுடன் ஈடுபடும் வகையிலான பாதுகாப்பான சூழல் ஒன்றையும் உருவாக்குவார் (Elizabeth Knight and Sue Chedzoy, 1997) எனும் கருத்திற்கமைய ஆசிரியர்கள் செயற்படுதல் வேண்டும்.

மாணவர்களது ஆற்றல் மட்ட வேறுபாடு களைக் கருத்திற் கொள்ளல்

மாணவர்கள் தமது ஆற்றல்களுக்குச் சவாலானதும் புதுமையானதுமான செயற் பாடுகளில் ஈடுபடுவதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். மாணவர்களது ஆற்றல் மட்ட வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது எல்லா மாணவர்களுக்கும் ஒத்த தன்மைத்தான செயற்பாடுகளை வழங்கும் போது மீத்திறன் மாணவர்கள் ஆக்க ரீதியாக பல்வேறு கோணங்களிற் சிந்திப்பதற்கோ, விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்யவோ தர்க்க முறையில் ஆராய்வதற்கோ வாய்ப்புகள் அற்ற நிலையில் சலிப்படையும் நிலையும் உருவாகலாம். இந்நிலைமைகளைத் தவிர்க்கும் வகையில் மாணவர்களது ஆற்றல் மட்ட வேறுபாடுகளுக்கமைய குறித்த ஒரு செயற்பாட்டை இலகுவில் இருந்து கடினம் என்ற வகையில் ஒழுங்கமைத்து வழங்க முடியும். கலப்புக் குழுவிற்குப் பொருத்தமான அத்தகைய செயற்பாடு ஒன்று கீழே தரப்படுகின்றது.

செயற்பாடு - கிரகித்தற் பயிற்சி

ஆசிரியர் குறித்த ஒரு பந்தியை எல்லாக் குழுக்களுக்கும் வழங்குதல். குழுவிலுள்ள மாணவர்கள் பந்தியை வாசித்து குழு நிலையில் கலந்துரையாடி விடயத்தை விளங்கிக் கொள்வர். பின்னர் குழுவிலுள்ள மாணவர்களின் ஆற்றல் மட்ட வேறுபாடுகளுக்கமைய தனியாள் செயற்பாடுகளை வழங்குதல்.

அவ்வகையில் ஆற்றல் மட்டம் கூடிய மாணவர்களுக்கு குறிப்பிட்ட பந்தியின் அடிப்படையில் வினாக்களை வழங்கி விடை எழுதுவிப்பதற்குப் பதிலாக அவர்களையே வினாக்களை உருவாக்குமாறும் அவ்வினாக்களுக்கான விடைகளை எழுதுமாறும் கேட்கலாம். வினாக்களுக்கு விடை எழுதுதல் கிரகித்தலுடன் மட்டும் தொடர்புடையது. ஆனால் வினாக்களை உருவாக்குதல் மாணவரது உயர்மட்ட சிந்தனை ஆற்றல், மொழியாற்றல் என்பவற்றுடன் தொடர்புடையதாகும்.

குழுவிலுள்ள சராசரி மாணவர்/ மாணவர்கள் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுவர். அவ்வினாக்கள் தர்க்கித்தல் காரணம் காணல் ஆகிய திறன்களுடன் தொடர்புடையனவாக இருக்கும். மெல்லக் கற்கும் மாணவர்/ மாணவர்கள் மீள நினைவுபடுத்தும் வகையிலான வினாக்களுக்கு விடையளிப்பர்.

இவ்வாறு மாணவரது கற்கும் வேகத்திற்கு அமைய செயற்பாடுகள் இலகுவில் இருந்து கடினம் என்ற வகையில் வழங்கப்படும் போது எல்லா மாணவர்களும் பெரும்பாலும் ஒரே நேரத்தில் செயற்பாடுகளை நிறைவு செய்வர்.

பின்னர் தாம் மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பாக முழு வகுப்பு நிலையில் கலந்துரையாடும் போது மெல்லக் கற்கும் மாணவர்களும் தமது நிலையை உயர்த்திக் கொள்வார்கள். மேலும் விடயம் தெரியாமை காரணமாக செயற்படாமல் இருக்கும் நிலையோ, விளக்கமின்றிப் பிரதி பண்ணும் நிலையோ காணப்படமாட்டாது. இவ்வாறு மாணவர்களது தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்வதாக வகுப்பறைச் சூழல் அமையும் போது மாணவர் ஒவ்வொருவரதும் கற்றலில் ஈடுபடும் நேரம் அதிகரிக்கும்.

மேலும் வகுப்பறை உளவியற் சூழலானது பின்வரும் நிலைமைகளைப் பிரதிபலிப்பதாகவும் அமைதல் வேண்டும்.

- ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானது என்பதை ஏற்றுக் கொண்டு அவர்களது தனியாள் வேறுபாடுகளுக்கு மதிப்பளித்தல்
- ஒவ்வொருவரது ஆற்றல்களுக்கும் ஏற்ப முன்னேறச் சந்தர்ப்பம் வழங்கல்
- இடர்ப்படும் இடங்களில் இலகுவான படிமுறைகள் ஊடாகச் சிந்தனையைத் தூண்டும் வகையில் ஆதரவாக வழிகாட்டல்
- பிள்ளைகள் கூறுவனவற்றை ஆதரவாகக் கேட்டல்
- பிள்ளைகள் மகிழ்ச்சியாகக் கற்றலில் ஈடுபடக் கூடியதாக இருத்தல்.
- கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு வகுப்பறைக்குள் மட்டுமன்றி இயற்கையமைப்பில் இயல்பாகவே கற்கும் வகையில் வெளிக்களங்களிலும் இடம்பெறும்.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல். இச்செயற்பாடானது மாணவர்கட்கு ஒரு வெகுமதியாக அமையும்.
- ஆசிரியர் ஒருவரோடொருவர் ஒத்துழைத்தலும் கற்பித்தற் கருமங்களில் இணைந்து செயற்படுதலும்
- பெற்றோருடனும் அயற் சமூகத்துடனும் நல்லுறவு பேணல்.
- மாணவர்களது குடும்பச் சூழலை (உறவு நிலை, தொழில், வறுமை) குறிப்பிட்டு அவர்களது மனதைப் புண்படுத்தாமை
- கற்றல், கற்பித்தற் செயலொழுங்கு கற்பவர் மையமாக இருத்தல்

வகுப்பறை விதிகள்

பொருத்தமான வகுப்பறை விதிகள் ஊடாக மாணவரிடையே எழக்கூடிய கட்டொழுங்கு சார் பிரச்சினைகளைக்

குறைப்பதுடன் விரும்பத்தகு நடத்தைகளையும் விருத்தி செய்ய முடியும். மாணவரிடையே நடத்தைப் பிரச்சினைகள், கட்டொழுங்குப் பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு தவிர்த்தல் முகாமைத்துவ உத்தியே வகுப்பறை விதிகள் ஆகும். மாணவர்களது நடத்தைகளை முகாமை செய்தலில் தவிர்த்தல் முகாமைத்துவம், தாக்கமுறல் முகாமைத்துவம் ஆகிய இரண்டையும் பயன்படுத்த முடியும். தவிர்த்தல் முகாமைத்துவம் என்பது வினைத்திறனான முன்திட்டமிடல், சிறப்பான செயலாற்றுகைகள் என்பவற்றின் ஊடாக பிரச்சினைகள் எழாமல் தவிர்த்தலைக் குறிக்கும். தாக்கமுறல் முகாமைத்துவம் என்பது பிரச்சினைகள் உருவாகியதன் பின்னர் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஊடாக அப்பிரச்சினைகளைக் கையாளலும் மீண்டும் அத்தகைய நிலைமைகள் உருவாகாத வகையிலான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளலும் என்பவற்றைக் குறிக்கும். பிரச்சினைகள் எழுந்த பின் அவற்றுடன் தாக்கமுறல் என்பது மாணவர்களிடையே மனவெழுச்சிச் சமமின்மைகளையும் மன அழுத்தங்களையும் உருவாக்கலாம்

பாடசாலை ஆளணியினரிடையே, மாணவர்களிடையே ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல் எனும் உணர்வு காணப்படுமிடத்து வகுப்பறை விதிகள் தேவையற்றனவாகும். ஆயினும் சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப வகுப்பறை விதிகளை உருவாக்கும் தேர்ச்சியுடையவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். அத்தகைய வகுப்பறை விதிகள் சில வருமாறு.

- காலைப் பிரார்த்தனை ஆரம்பிப்பதற்கு 10 நிமிடங்களின் முன்னர் எல்லோரும் வகுப்பறையில் இருப்போம். (ஆசிரியருக்கு மதிப்பளிப்பவர்களாக இருந்தால் பாடசாலைக்கு நேரத்திற்கு வருவீர்கள்)
- வகுப்பறையை எப்போதும் சுத்தமாக வைத்திருப்போம். (அவ்வாறு வைத்திருக்கும் போது அதிபர் உட்பட சகலரும் எம்மைப் பாராட்டுவார்கள்)
- எங்களது பொருட்களை உரிய இடத்தில் வைப்போம். (அவ்வாறு வைத்திருந்தால் தேவையானவற்றை இலகுவாக எடுக்க முடியும்)
- வகுப்பறைக்குள் தேவையற்று எழும்பித் திரிய மாட்டோம். (அவ்வாறு திரிந்தால் மற்றவர்களது செயற்பாடுகளுக்கு எம்மால் இடையூறு ஏற்படும். அத்துடன் எம்மாலும் கற்க முடியாது)
- பாட நேரத்தில் வகுப்பறைக்கு வெளியே செல்ல வேண்டியிருப்பின் ஆசிரியரது அனுமதி பெற்றே செல்வோம். (அவ்வாறு செல்லும்போது தண்டனைக்கு இடமிருக்காது)
- மற்றவர்களது கருத்துக்களை அவதானமாக செவிமடுப்போம். (அப்போதுதான் எங்களது கருத்துக்களையும் மற்றவர்கள் செவிமடுப்பார்கள்)
- குறிப்பிட்ட நேரத்தில் வேலைகளை முடித்து எமது ஆற்றலை வெளிப்படுத்துவோம். (தேவையற்றுக் கதைத்துக் கொண்டிருந்தால் உரிய நேரத்தில் வேலைகளை நிறைவு செய்ய முடியாது. அத்துடன் எமது குழுவிற்கும் எம்மால் பங்களிப்புச் செய்ய முடியாது)
- சாப்பிட முன்னர் கைகளைக் கழுவுவோம். (இது ஒரு நல்ல சுகாதாரப் பழக்கமாகும். இது நோய்த் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்கும்)

இவ்வாறு மாணவர்கள் விதிகளின் பெறுமதியை உணர்ந்து பின்பற்றும் வகையில் வகுப்பறை விதிகள் அமைக்கப்படுதல் வேண்டும். வகுப்பறை விதிகளை உருவாக்கும் போது மாணவரது பங்குபற்றலுக்கும் இடமளித்தல் அவற்றின் அமுலாக்கத்தை இலகுபடுத்தும்.

தனியாள் வேறுபாடுகளுக்கு மதிப்பளித்தல்

வகுப்பறை முகாமையாளர்களாகிய ஆசிரியர்கள் மாணவரது தனியாள் வேறுபாடுகளுக்கு மதிப்பளித்தல் ஊடாக

மாணவரிடையே நடத்தைப் பிரச்சனைகள் எழும் நிலைமைகளைத் தவிர்க்கமுடியும் கல்வி அடைவையும் உறுதிப்படுத்த முடியும். எனவே கற்கும் விடயத்தினைவிட கற்கும் மாணவருக்கு, அவர்களது தனியாள் இயல்புகளுக்கு முதன்மை வழங்குதல் வேண்டும். வகுப்பிலுள்ள மாணவர் ஒவ்வொருவரும் ஒப்பற்ற தனியாள்கள் என்ற வகையில் தமக்கென தனித்துவமான இயல்புகளைக் கொண்டிருப்பர். பிள்ளைகள் இயற்கையாகவே உடலியல் ரீதியாக ஒருவரிலிருந்து இன்னொருவர் வேறுபடு கின்றனர். பின்னர் அவர்கள் வாழும் அண்மிய சமூகத்தில் இருந்தும் பரந்த சமூகத்திலிருந்தும் பெறும் அனுபவங்களும் அவர்களிடையேயான வேறுபாடுகளை விரிவாக்குகின்றன. எனவே வகுப்பில் உள்ள மாணவர்கள் ஒருவர் மற்றவரைப் போலச் செயற்படுவர் என்றோ, தொடர்பாடுவர் என்றோ நடத்தைப் பாங்குகளை வெளிக் காட்டுவர் என்றோ எந்த ஒரு சந்தர்ப்பத் திலும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அவர்கள் அனைவரும் மனித வர்க்கத்தினர் என்ற வகையில் சில ஒத்த தன்மைகளையும் கொண்டிருப்பர் என்பதும் கருத்திற் கொள்ளப் படல் வேண்டும். எனவே மேற்படி வேறுபாடு களையும் ஒத்த தன்மைகளையும் கருத்திற் கொண்டு மாணவர் ஒவ்வொருவரதும் முழுமையான விருத்திக்கான அடித்தளம் ஆரம்பக் கல்விப் பருவத்தில் இடப்படல் வேண்டும்.

மாணவர்களை அவர்களது ஆற்றல் மட்டம், நுண்மதி வேறுபாடுகளுக்கமைய மீத்திறன் மாணவர், சராசரி மாணவர், மெல்லக் கற்கும் மாணவர் என வகைப் படுத்துவர். இவற்றுக்கு மேலாக Galton, மற்றும் Simon, ஆரம்ப வகுப்பு மாணவர்களை விரிவாக அவதானிப்பிற்கு உட்படுத்தியதனூடாக மாணவர்கள் வகுப்பறையில் வெளிக்காட்டும் நடத்தைப் பாங்குகளின் அடிப்படையில் நான்கு வகையான கற்போரை இனங்காட்டி யுள்ளனர்.

1. Attention Seekers : தமது நேரத்திற் பெரும்பகுதியை தமது இருக்கையில் இருக்காது வகுப்பறையிற் சுற்றித் திரிவதனூடாக ஆசிரியரது கவனத்தைப் பெற முயற்சிப்பவர்கள் கவனத்திற்காகக் காத்திருப்பவர்கள்.

2. Intermittent Workers : அடிக்கடி தமது வேலையில் இருந்து விலகுபவர்கள் ஆயின் ஆசிரியரது கவனத்தைப்பெற முயற்சிப்பவர்கள் தங்களது செயலுக்குப் பொருந்தாத வகையில் ஒரு உரை யாடலில் இருந்து இன்னொன்றிற்கு மாறிக் கொண்டிருப்பவர்கள்.

3. Solitary Workers : ஆசிரியரது கவனத்தை மற்றவர்களிலும் பார்க்க மிகக் குறைந்த அளவிற் பெறுபவர்கள். ஆயின் மற்றவர்கள் கவனத்தைப் பெறும் சந்தர்ப்பங்களில் அவதானத் துடன் செவிமடுப்பவர்கள்.

4. Quite Collaborators : வேலையில் ஆர்வம் மிக்கவர்கள், இணைந்து செயற்படுபவர்கள்.

இத்தகைய மாணவரது நடத்தைகள் கற்பித்தல் நுட்பங்கள், தேவைகள், சந்தர்ப்பங்களைப் பொறுத்து மாறுபடும். (Galton, & Simon, 1980)

தனியாள் வேறுபாடுகளுக்கமைய செயற்பாடுகளைத் திட்டமிடல் தொடர்பாக Williams, J பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கின்றார். பயிற்சி ஆசிரியர்கள் மட்டுமன்றி சகல ஆசிரியர்களும் மாணவரது வேறுபாடுகளுக்கமையத் திட்டமிடலில் இடர்ப்படுகின்றனர். ஆயினும் எல்லாப் பிள்ளைகளாலும் வினைத்திறனுடன் கற்க முடியும் எனின் அவர்களது வேறுபாடுகட் கேற்ப, விசேட தேவைகட்கேற்ப கற்பித்தல் வேறுபடுத்தப்படல் வேண்டும். விசேட தேவையுள்ளவர்கள் என்பது ஆற்றல் குறைந்தவர்களை மட்டுமன்றி மிகவும்

ஆற்றல் உள்ளவர்களையும் குறிக்கும். (Williams, 1999)

கற்றல் கற்பித்தற் செயன்முறைகள்

வகுப்பறை முகாமைத்துவம் சிறப்பாக அமைய வேண்டுமெனில் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளில் விருப்புடன் ஈடுபடக்கூடிய நிலை காணப்படல் வேண்டும். அவ்வகையில் போதனா செயற்பாடுகள் சிறப்பாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். போதனா செயற்பாடுகள் என்ற வகையில் பாட அறிமுகம், பாடத்தை வளர்த்துச் செல்லல், முன்னேற்றத்தை அளவிடல் என்பன குறிப்பிடத்தக்கன.

பாட அறிமுகம் ஆனது கற்றலிலான ஈடுபாட்டை உருவாக்கல், கற்றற் செயற்பாடுகள் மகிழ்ச்சியாகத் தொடரும் எனும் மன நிலையை உருவாக்கல், பிற கவனங்களில் இருந்து விடுவித்து குறிப்பிட்ட பாடத்தைக் கற்பதற்கான தயார் நிலையை உருவாக்கல் ஆகிய நோக்கங்கள் கருதி மேற்கொள்ளப் படும். ஆரம்ப வகுப்பறைகளைப் பொறுத்த வரையில் பாட அறிமுகமானது பெரும் பாலும் விளையாட்டுகள், செயற்பாடுகள் சார்ந்ததாக அமைதல் வேண்டும்.

பாட வளர்ச்சிப் படிகளில் படிமுறைத் தொடரொழுங்கு பேணப்படல் வேண்டும். ஒவ்வொரு படிமுறையிலும் கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்குப் பொருத்தமான கற்றற் சாதனப் பயன்பாடு மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையிலான வினவுதல் நுட்பங்கள் ஆசிரிய மாணவ இடைவினை உறவு என்பன சிறப்பாக அமையும் போது மாணவரது கற்றலிலான ஈடுபாடு அதிகரிக்கும்.

கணிப்பீடு என்ற வகையில் முடிவுச் செயல்கள் அன்றி ஒவ்வொரு படிமுறை யிலும் மாணவர் செயற்படும் முறை அதன் ஊடாக அவர்கள் தாமாகவே அறிவைக் கட்டுருவாக்கம் செய்யும் தன்மை ஆகியன கணிப்பிடப்படும். இவ்வாறு சிறப்பாக போதனா உத்திகளைப் பின்பற்றும்போது மாணவர்கள் விருப்புடனும் சுய கட்டுப் பாட்டுடனும் செயற்பாடுகளில் ஈடுபடுவர். இந்நிலையில் நடத்தைப் பிரச்சினைகள் எழுவதற்கான சந்தர்ப்பங்கள் குறை வடையும்.

- மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடை யிலான நல்லுறவைக் கட்டியெழுப்புதல்

வினைத்திறனான வகுப்பறைச் செயற் பாடுகளுடன் தொடர்புடைய இன்னொரு அம்சம் நிலைமாறல் முகாமைத்துவம் (Transition Management) ஆகும். நிலை மாறல் என்ற வகையில் ஒரு பாடத்தில் இருந்து இன்னொரு பாடத்திற்கு மாறுதல், ஒரு படிமுறையில் இருந்து இன்னொரு படிமுறைக்கு மாறுதல், ஒரு செயற்பாட்டில் இருந்து இன்னொரு செயற்பாட்டிற்கு மாறுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் மாணவர்களிடையே குழப்ப நிலைகள் உருவாகுதல் கற்றலிலான சீரான ஓட்டத்திற்குத் தடையாகும் என்பதைக் கருத்திலிருத்தி இம்மாற்றங்களைக் கற்றலிற் கவனம் சிதைவுறாத வகையில் முன்னெடுப் பதற்கான உபாயங்களை ஆசிரியர்கள் பின்பற்றுதல் வேண்டும்.

நிர்வாகம் எனும் பதத்தின் விருத்தி நிலையில் முகாமைத்துவம் எனும் எண்ணக்கரு உருவாகியதன் காரணமாக ஆசிரியர்களிடம் நிர்வாகத் தன்மைகளே மேலோங்கியுள்ளன. ஒரு செயலை முகாமைத்துவச் செயன்முறைகள் ஊடாக வினைத்திறனாக மேற்கொண்டு உச்சப்பயன் பெறுதல் எனும் கருத்தினை விட இறுக்கமான கட்டுப்பாடுகளையும் ஒழுங்கு முறைகளையும் பேணுவதனூடாக செயற் பாடுகளை உரிய முறையில் மேற் கொள்ளலாம் எனும் கருத்து வலுப் பெற்றுள்ளது. இதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் விதிவிலக்கல்ல. இந் நிலைக்கு எடுத்துக் காட்டாக E.C.Wragg

அவர்களின் பின்வரும் உதாரணத்தைக் குறிப்பிடமுடியும். மாணவர் ஒருவரை வகுப்பறையில் இரண்டு நிமிடம் ஆசிரியர் போல் பாத்திரமேற்று நடியுங்கள் என்று சொன்னால் உண்மையில் நடப்பது என்ன? குறிப்பிட்ட மாணவர் வகுப்பின் முன்பகுதிக்கு வருவார். சக மாணவர்களை நோக்கி 'நீங்கள் அங்கே இருங்கள்; கொப்பியை எடுங்கள்; அமைதியாக இருங்கள்; நான் சொல்வதை எழுதுங்கள்' எனக் கட்டளையிடும் செயற்பாடுகள்தான் நாம் அவதானிப்பவை. எந்த ஒரு மாணவரும் பாத்திரமேற்று நடிக்கையில் அன்பாக உரையாடுவதோ அல்லது செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதோ இல்லை. ஆசிரியர் என்பவர் வகுப்பில் கட்டுப்பாட்டை நிலைநாட்டி அமைதியை ஏற்படுத்துபவர் என்பதே அவர்களது மனப்பதிவு. (Wragg, 2001)

அதாவது ஆசிரியர்களும் தம்மை வகுப்பறை முகாமையாளர்களாகக் கருதிக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு அதிக நேரம் எடுக்கின்றனர். வகுப்பறை முகாமைத்துவத்துடன் இணைக்கப்பட்ட போதனா உபாயங்கள் ஊடாகக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு வழிவழிவந்த வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பான அவர்களது கருத்தேற்றம் தடையாக இருக்கின்றது எனலாம்.

தன்னைப் பெற்றெடுத்து அன்புடன் வளர்த்து கவனத்துடன் காத்துவரும் தாயிடம் அன்பு கொண்டு அவ்வன்பினை இதயத்தில் போற்றி வைக்கவேண்டும். தாயின் அன்பினுக்கு அருகதை இல்லாதவனுக்கு யாருடைய அன்பினையும் பெற இயலாது.

பற்பலநூல் கதறுணர்ந்த பண்டிதனே யானாலும்
நற்குணங்கள் எள்ளளவும் நண்ணாத - துர்க்குணனை
முற்ற வெறுக்க முடிமேல் மணியிருந்தென்
புற்ற ரவைக் கிண்டார் புகுந்து.

- அ. குமாரசுவாமிப்புலவர்

நாடா(கு) ஒன்றோ காடா(கு) - ஒன்றோ
அவலா(கு) ஒன்றோ மிசையா(கு) ஒன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நில்னே!

- ஔவையார்

பழைய மாணவர் சங்கத்தினரை பழைய மாணவரும் பொறியியலாளருமான
திரு. த. வசந்தகுமார் அவர்கள் சந்தித்தவேளை - 2013

மாணவர் தலைவர்களுடன் அதிபர், பகுதித்தலைவர் - 2013

இடமிருந்து வலம் :

நிரை 1 : பா. பானுஜன், யோ. அகல்யன், கு. சஞ்சிகா, ப. கிருஷாளினி, திருமதி ற. தர்மலிங்கம் (பகுதித்தலைவர்), திரு. ந. தேவராசா (அதிபர்), வி. காவியா, ச. அவந்திக்கா, சு. மயூரவேணி, கி. பிரதீபன், சி. ஷாயித்தியன்

நிரை 2 : க. காவியா, சி. சோபிகா, சி. சிவானுஜன், நா. ஆகாஷ், சி. கஜன், பா. மனோஜ், செ. சதுர்ஜன், மோ. இந்து, சு. யதுசா

சிறுவர் அரங்கு - பண்பும் பயனும்

திரு. த. திலகநாதன்
விரிவுரையாளர்,
யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

அரங்கு என்பது நுண் கலைகளுள் ஒன்று. அவ்வரங்கு கலைத்துறையாக இருக்கின்ற அதே வேளை கல்வித்துறையாகவும் உள்ளது. கல்வி சார்ந்து அழகியல் சார்ந்து அரங்கின் செயற்பாடுகள் உள்ளன. அழகியற் கல்வியாக உள்ள அரங்கு மாணவர்களிடையே அழகியல் பற்றிய உணர்வையும் ரசனையுணர்வையும் வளர்ப்பதற்கு வழிவகுப்பதாகும்.

மனிதர்களிடையே மனிதத்தன்மையை வளர்ப்பதற்கு அரங்கு பயன்படுகிறது. மானுடநோக்கு என்பது மாணவர்களிடையே வளர்த்தெடுக்கப்பட வேண்டியதொன்றாகும். கலைகள் பற்றிய அறிவும் கலைப் பயில்வும் மாணவரிடையே ரசனை உணர்வையும் மானுட சிரத்தையையும் ஏற்படுத்தும். அவர்களின் சிறந்த உணர்வுகள் செம்மையான முறையில் வளர்த்தெடுக்கப்பட்டால் அவர்கள் எதிர்காலத்தில் சமனிலைப்பட்ட ஆற்றுகையை வளர்த்துக் கொள்ளும் வினைத்திறனுடைய மாணவர்களாகத் திகழ்வர். மனித முக்கியத்துவத்தை உணர்வதற்கு/ உணர்ந்து கொள்வதற்கு அரங்கு முக்கியமானதொரு பயில்துறை என்பதனை நாம் மறந்து விட முடியாது.

பாடசாலைகளில் நாம் பொதுவாக இரண்டு வகையான அரங்கச் செயற்பாடுகளை நோக்கலாம். ஒன்று தரம் 5 மாணவர்களிற்கும் அதற்கு கீழேயுள்ள மாணவர்களிற்குமான அரங்கச் செயற்பாடுகள். மற்றையது தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களின் செயற்பாடு சார்ந்த அரங்கு. இப்பிரிப்பு முடிந்த முடிவல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு முதலாம் கட்ட அரங்கு பற்றி பேசுகின்றபோது அதாவது சிறுவர் அரங்கு பற்றி கூறுகின்ற போது இவ் அரங்கின் நடிகர் யார்? இவ்வரங்கில் பேசப்படும் விடயப் பொருள் யாது? இவற்றின் இசை, காட்சி, ஒளி, ஒலி, வேட உடை, வேடப் புனைவு என்பன எவ்வாறு அமையும் என்கிற விடயங்களை அலசி ஆராய வேண்டும்.

சிறுவர் அரங்கு என தமிழில் பேசுகின்ற போது கலாநிதி குழந்தை. ம. சண்முகலிங்கம் எழுதிய 'கூடி விளையாடு பாப்பா' எனும் சிறுவர் நாடகமே எம் மனக்கண்ணில் வந்து நிற்கின்றது. இது சிறுவர் அரங்கிற்குரிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதான சிறுவர் நாடகமாகும். இலங்கைத் தமிழரங்கில் சிறுவர் நாடகங்களை அதிகளவிலும் பல் பரிமாணத் தன்மையுடனும் எழுதியவர், எழுதிக் கொண்டிருப்பவர் குழந்தை. ம. சண்முகலிங்கம். காட்டுராஜசிங்கம், நட்பு, முயலார்முயலுகிறார், ஒற்றுமையின்சின்னம், கூடி வாழ்வோம், பாலுக்குப் பாலகன், இடுக்கண் வருங்கால், ஆச்சி சுட்டவடை, வேட்டைக்காரன், பந்தயக் குதிரையார், பஞ்சவர்ண நரியார், கண்டறியாத கதை, கண்மணிக்குட்டியர், குழந்தைகள் பாவனை செய்யும், அன்னத் தடாகம், செல்லும் செல்லாத செட்டியார், ஒரு பூனையின் விலை என்ன?, ஒற்றுமையே பலம், மந்திரத்தால் மழை போன்ற பல சிறுவர் நாடகங்களை எழுதியுள்ளார். அதேநேரம் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களால் எழுதப்பட்ட தப்பிவந்த தாடி ஆடு, வேடனை

உச்சிய வெண்புறாக்கள் போன்ற நாடகங்களும் முக்கியம் வாய்ந்தன.

பின் வந்த காலத்திலே கோகிலா மகேந்திரன், முத்து. இராதாகிருஸ்ணன், பேராசிரியர் சி. சிவசேகரம், மாவை நித்தயானந்தன், கலாநிதி சி.ஜெயசங்கர், கலாநிதி க. ஸ்ரீகணேசன் போன்றோர் சிறுவர் நாடகங்களை எழுதி வருகின்றனர்.

இலங்கை சிங்கள அரங்க மரபிலே சிறுவர் நாடகங்களை எழுதிக் கொண்டிருப்பவர் சோமலதா சுபசிங்க ஆவார். அதேபோன்று தமிழ் நாட்டிலே வேலு சரவணன் (தேவலோகயானை, பல்லி, தங்கராணி) பேராசிரியர் இராமானுஜம் (குட்டி யானைக்கு கொம்பு முளைத்தது) போன்றோர் சிறுவர் நாடகங்களை எழுதுகின்றனர்.

சிறுவர் அரங்கு 30 வருடத்திற்கு மேலாக இலங்கைத் தமிழரங்கில் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. இதன் காரணமாக பல்வேறு சிறுவர் அரங்க செயற்பாடுகள் முன்னேற்றமடைந்து வருவதனைக் காணமுடிகின்றது. புதியவர்கள் நாடக வகைகளை எழுதுதல், தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் இருக்கின்ற அதேவேளை சிறுவர் அரங்கு பற்றிய கட்டுரைகள், புத்தகங்களும் வரத் தொடங்கிவிட்டதை அவதானிக்க முடிகிறது. நாடக அரங்கக் கல்லூரி, செயல்திறன் அரங்க இயக்கம், திருமறைக் கலாமன்றம் போன்ற அரங்க நிறுவனங்களும் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்கலாம்.

குறிப்பாக சிறுவர் அரங்க போட்டிகள் பாடசாலை மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என போட்டிக்காக தயாரிக்கப்படும் போது அதன் வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைகிறது. எல்லாப் பாடசாலைகளும் அதன் மாணவர்களை பயிற்றுவிக்க முயல்கின்றன. இதன் காரணமாக சிறுவரிடையே ஆக்கத்திறன், கற்பனைத்திறன் என்பன வளர்த்தெடுக்கப் படுகின்றன.

சிறுவருக்கான அரங்கு என்பது என்ன?

''சிறுவருக்கான அரங்கம் என்பது சிறுவருக்கென அதாவது சிறுவரைப் பார்வையாளராகக் கொண்ட அரங்கினையே குறிக்கின்றது. இது ஒரு நியம அரங்காகும்'' என்கிறார் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள். சிறுவர் மகிழ்ச்சிக்காக தயார் செய்யப்படும் அரங்கு சிறுவர் அரங்கு. சிறுவர்களே பார்வையாளராக இருப்பர். விரும்பின் அவர்களின் பெற்றோரும், சிறுவர் மீது அக்கறை கொள்வோரும் பார்வையாளராக இருக்கலாம்.

நடிப்பவர்களும் கூட சிறுவராக இருக்கலாம் (நட்பு) அல்லது சிறுவர்களும், வளர்ந்தவர்களுமாக இருக்கலாம் (இடுக்கண் வருங்கால்) அல்லது வளர்ந்தவர்கள் தனியாகவும் நடிக்கலாம் (கூடி விளையாடு பாப்பா). உண்மையில் பெரியவர்கள் நடித்தால் குழந்தைகளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும். சிறுவரே நடிக்கும்போது வித்தியாசமான ரசனையை பார்ப்போர் உணர்வர்.

சிறுவர்களை அவர்களது வயதை அடிப்படையாகக் கொண்டு குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் இவ்வாறு பிரிப்பார்.

- ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரையான சிறுவர்
- ஆறு வயது தொடக்கம் எட்டு வயது வரையான சிறுவர்
- ஒன்பது வயது தொடக்கம் பதினொரு வயது வரையான சிறுவர்

இவ்வாறான சிறுவர்களின் உள முதிர்ச்சிக்கேற்பவே நாடகங்களை எழுத வேண்டும். சிறுவர் நாடகத்திற்கான கதை சுவை மிக்கதாக அமைதல் வேண்டும். கதைகள் மனித வரலாறு, பண்பாடு,

பாரம்பரியம், அறிவியல் என அவர்களின் உளவியல் போக்கை அவதானித்து அதற்கேற்ப எழுதப்பட்டு, நடிக்கப்பட்டு தயாரிக்கப்படவேண்டும். பஞ்சதந்திர கதைகள் தெனாலிராமன் கதைகள், பீர்பால் கதைகள் முல்லா கதைகள் இதிகாச புராண கதைகள் போன்றவற்றிலிருந்தும் கதைகளைப் பெறலாம் மாணவர்களிற்கு ஆர்வத்தை தூண்டுவதாக விரும்பியவை களை பேணக் கூடியதாக கவர்ச்சிகரமான கதைகளைத் தெரிவு செய்ய வேண்டும். பெரும்பாலும் பாட்டி சொன்ன கதை, ஆசிரியர் சொன்ன கதை, அம்மா அப்பா சொன்ன கதை, நண்பர்கள் சொன்ன கதை, பிள்ளைகள் வாசித்து அறிந்த கதை, பாடப் புத்தகங்களிலுள்ள கதை என பிள்ளை களுக்கு பரீட்சயமான கதையாக இருப்பது விரும்பத்தக்கது. சிக்கலான முரண்பாடுகள் இக் கதைகளில் இருக்கக்கூடாது. சீரான தெளிவான சிக்கலற்ற கதையாக இருக்க வேண்டும்.

சிறுவர் நாடகங்களில் மிருகங்கள், பறவைகள் மட்டும்தான் பாத்திரங்களாக இருக்கவேண்டும் என்பது கிடையாது. மனிதர்கள், உயிரற்றவை எல்லாமே பாத்திரங்கள் தான். இங்கு மரங்கள் பேசும், ஆடும், பாடும். பாடகர் வருவர். உரைஞர் வருவர் எல்லோரும் இணைவர்.

இவ்வாறாக சிறுவர் நாடகத்தில் குறிப்பாக விலங்குப் பாத்திரங்களும் மனிதப் பாத்திரங்களும் இடம்பெறுவதைக் காண்கிறோம். பெரும்பாலான சிறுவர் நாடகங்கள் மிருகங்கள், பறவைகள் பற்றியனவாகவே காணப்படுகின்றன. உண்மையில் மிருகங்கள் பறவைகள் பற்றி அவற்றின் செயற்பாடுகளை ரசிப்பது சிறுவருக்கு பிடித்தமான ஒன்று. காட்டூன் களிலும் அவற்றையே அவர்கள் பெரும்பாலும் ரசிக்கின்றார்கள்.

மிருகங்களின் வரவுகள் அவற்றின் நடைகள் என்பன விரும்பத்தக்கன. நாம் அவற்றை ஒரு ஒழுங்கு முறையில் ஓரளவிற்கு கொண்டு வந்திருக்கின்றோம். ஆனால் இதுதான் நியதி என்பது அல்ல. பெரும்பாலானவர்கள் இவ்வாறான நடை முறைகளையே கடைப்பிடிக்கின்றார்கள். அந்தந்த மிருக வகைகளின் இயல்புகளை எடுத்துக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக சிங்கம் என்கிற மிருகம் வருகின்ற போது அதன் வீரம், கோபம், துணிவு, பாய்ச்சல் போன்ற எல்லா உணர்வு நிலைகளையும் ஒத்ததாக கருதிக் கொண்டு குழந்தை. ம.சண்முகலிங்கம் அவர்கள் தனது ''முயலார் முயல்கிறார்'' எனும் நாடகத்திலே சிங்கத்தின் வரவைக் குறிக்க வடமோடி நாடகமான இராவணேசன் நாடகத்தில் வரும் இந்திரஜித்தின் வருகைக் கான தாளக்கட்டைப் பயன்படுத்துகிறார். இந்திரஜித்தின் துடிப்பு, வீரம், துணிவு போன்ற இயல்புகள் சொற்கட்டினூடாக வெளிவருவதைக் காணலாம்.

''தந்த தகிர்த தகிர்த தாம்
திந்த திகிர்த திகிர்த தெய்'' (2)
''மச்சம் தின்னும் சிங்கம் நான்
மகா வீர சிங்கம் நான்''

இது சிங்கத்தின் வரவுக்காக பயன் படுத்தப்படுகின்றது. பொதுவாக இவற்றை நான்கு தட்டுக்குள் அடக்கிவிடலாம். 1, 2, 3, 4 என்கிற தாளத்தில் அது வரும்.

தந்த - 1	திந்த - 1
தகிர்த - 2	திகிர்த - 2
தகிர்த - 3	திகிர்த - 3
தாம் - 4	தெய் - 4

சிங்கத்திற்கு ஆடுபவர் கிட்டத்தட்ட அரை மண்டியில் நின்று வலது முன்னங் காலைக் குத்தி பின் காலை தட்டி பின் இடது முன்னங்காலைக்குத்தி பின்னங் காலைத் தட்ட வேண்டும்.

தந்த	குத்தி	1
தகிர்த	தட்டி	2
தகிர்த	குத்தி	3
தாம்	தட்டி	4

இவ்வாறு ஆடினால் வேகமான வீரமான சிங்கத்தை ஒத்த இயல்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

அடுத்து சிறுவர் நாடகங்களில் அதிகம் பேசப்படும் மிருகம் நரி அதன் தாளக்கட்டு

''தாச் சொணங்கின
ததிங்க தத்துமி''

தாச் - 01
சொணங்கின - 02
ததிங்க - 03
தத்துமி - 04

நரி என்கிறபோது அதன் இயல்பு குள்ளத்தனம், கள்ளத்தனம் என்பது மனிதர் மதிப்பீடு. அதைக்காட்ட மெல்ல மெல்ல அடியெடுத்து வைப்பது போலக் காட்ட வேண்டும். நின்று ஒருபாத இடைவெளி விட்டு கால்களை மெல்ல அகட்டி 45^0 பாகை அளவில் இடுப்பிலிருந்து வளைந்து தலையை உயர்த்தி மெல்ல நடக்க வேண்டும். நடக்கும் போது கால்கள் முழங்காலுக்குள் மடியக் கூடாது. கைகளையும், தலையினையும் விரும்பியவாறு அசைக்கலாம். மேற்கூறியவாறு நான்கு தட்டுக்களிலும் பழக வேண்டும்.

அடுத்த மிருகம் குரங்கார். இவர் மரங்களில் தாவி நிலத்தில் குதித்து விளையாடுவார். வேகமாகவோ மெதுவாகவோ அசைவுகள் இருக்காது. இரண்டுக்கும் இடைப்பட்ட அசைவு கொண்டவர்.

''தொம் குதி மிதி நட''

தொம் - 01
குதி - 02
மிதி - 03
நட - 04

குரங்கிற்காக நடிக்கும் ஒருவர் கால்களை அகட்டி கொஞ்சம் குனிந்து கைகளை விரும்பியவாறு அசைத்து தலையையும் அசைத்து ஆடலாம். ''தொம்'' எனும்போது வலது கால் முன்வைத்து பாய்தல் வேண்டும். ''குதி'' எனும்போது இடது காலை வலது காலுக்கு சமமாக வைக்க வேண்டும். ''மிதி'' க்கு வலது காலை அதே இடத்தில் வைக்க வேண்டும். ''நட'' வுக்கு இடது காலால் மெல்ல நடக்க வேண்டும். அதாவது இடது காலை மெல்லத் தூக்கி வைத்து மீண்டும் ''தொம் குதி மிதி நட''.

குரங்கின் வருகைக்கு ம. சண்முகலிங்கத்தின் ''கூடி விளையாடு பாப்பா'' நாடகத்திலிருந்து பின்வரும் பாடலை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

''நாட்டிலை காத்து கடுமையா அடிக்குது
பாட்டிலை மரம் தடி பாறி விழுகுது
வீட்டிலை இருக்கிற மனிசருக்கென்ன
மேட்டிலை இருந்திட்டு மழை விடப் போவம்

எங்கடை சந்ததி தாம் என்ற சங்கதி
எங்கடை மனிசருக்கெல்லாம் தெரிஞ்சுமே
எங்களைத் தங்களில் ஒருவராய் நினைப்பது
தங்களுக்கவமானம்எண்டெல்லோ நினைக்கினம்''

அடுத்த மிருகமான கரடி நடக்கும் போது கால்களை அகட்டி விழுவது போல நடக்கும். குழந்தைப் பிள்ளை நடப்பது போல ''தத்தக்க பித்தக்க'' என நடக்கும். ஆகவே அதன் தாளக்கட்டு

''கரடி நத்தோம் தத்தக்க பித்தக்க''

கரடி - 01
நத்தோம் - 02
தத்தக்க - 03
பித்தக்க - 04

கால்களை அகட்டி கொஞ்சம் அரை மண்டிக்கு வந்து கைகளை இடுப்பளவிற்கு நீட்டி நின்றவாறு ''கரடி'' எனும் போது வலப்பக்கம் பாய்தல் ''நத்தோம்'' எனும் போது அப்படியே இடப்பக்கம் பாய்தல் ''தத்தக்க'' எனும் போது வலது காலை முன்னே வைத்தல் ''பித்தக்க'' எனும் போது

இடதுகாலை முன்னே வைத்தல். தொடர்ந்து செய்ய கரடி அசைவு வரும்.

அடுத்து நாய் எனும் போது நாயின் இயல்பு கத்துதல், பாய்தல் ஆகும். ஆகவே அதன் தாளக்கட்டு

''நாய் நாய் வவ் வவ் வவ் (2)
வவ் வவ் வவ் வவ் வவ் (2)
நாய் நாய் நாய் வவ் வவ் வவ் (2)''

நாய்	-	1
நாய்	-	2
வவ் வவ்	-	3
வவ்	-	4

நின்று கால்களை V வடிவில் வைத்து கைகளை தோள்மூட்டுக் கிட்ட வைத்து (நாயின் முன்னங்கால் போன்று) துள்ளிப் பாய வேண்டும்.

அடுத்து குதிரை எனும் போது இது வேகமாகப் போகக் கூடியது. அதன் வேகத்திற்கேற்ப இதன் தாளக்கட்டு பின்வருமாறு அமைகின்றது.

''டகுடகு டகுடகு டட்டா ....
டட்டிடி டட்டிடி டட்டிடி டீடீ''

இதுவும் நான்கு தாளக்கட்டுக்குள் வருவது

டகு டகு	-	01
டகு டகு	-	02
டட்டா	-	03
....	-	04

டட்டிடி	-	01
டட்டிடி	-	02
டட்டிடி	-	03
டீடீ	-	04

இவ்வாறு தாளத்திற்கு ஏற்ப ஆடி நடிக்க வேண்டும். குதிரையின் அசைவினை குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் ''பந்தயக் குதிரையார்'' நாடகத்தில் வரும் பின்வரும் பாடலினூடாக அவதானிக்கலாம்.

''என் பெயர் தெரியுமா உனக்கு
பிடரியில் மயிருண்டு வாலெல்லாம் குஞ்சம்
டகுடகு டகுடகு டட்டா ....
டட்டிடி டட்டிடி டட்டிடி டீடீ
என்னைப் போல் உருவங்கள் செய்து
எனக்குள்ளே நின்று ஆடுவர் மனிதர்
டகு ....''

அடுத்து சிறுவர் நாடகம் ஒன்றில் ஒட்டகத்தின் வருகையைக் காட்டும் போது

''ஒட் டக டக கம்''

ஒட்	-	01
டக	-	02
டக	-	03
கம்	-	04

இந்த வகையில் ஒட்டகம் உயர்ந்த மிருகம் ஆகையால் முன் காலை உயர்த்தி வைத்து நடக்க வேண்டும். வலது, இடது என வைத்து பின் பக்கம் இரண்டு கைகளையும் வைத்து தலையை தலையை உயர்த்தி நடந்தால் ஒட்டகத்தின் நடையைக் கற்றுக்கொள்ளலாம்.

அடுத்து மானின் வருகையினை பின்வரும் தாளக்கட்டிற்கு அமைவாக மேற்கொள்ள வேண்டும்.

''தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதன தா''

தனத்த தனதன	-	01
தனத்த தனதன	-	02
தனத்த தனதன	-	03
தா	-	04

மான் பயந்த சுபாவம் உடையது. ஆனால் வேகமாக ஓடும். நின்றால் அங்கும் இங்கும் பார்க்கும். துள்ளித் துள்ளிப் பாயும். 01, 02, 03 க்கு பாய்ந்து ஓடி 04 க்கு நின்று அங்கும் இங்கும் பார்க்கும். இவ்வாறு செய்தல் வேண்டும்.

அடுத்து முயல் எனும்போது துள்ளித் துள்ளி ஓடும் நிற்கும் பார்க்கும்

இயல்புடையது. இதனால் இதன் தாளக்கட்டு பின்வருமாறு அமையும்.

''தத்தித்தா தித்தித் தெய்''

தத் - 01
தித - 02
தா - 03
..... - 04
தித் - 01
தித் - 02
தெய் - 03
..... - 04

முன் போய் பின்னர் பின் வந்து பாய வேண்டும். கால்கள் ஒடுங்கி இருத்தல் வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு மிருகத்திற்கும் செய்யலாம். செய்யும்போது அது அழகியல் சார்ந்ததாக அமையவேண்டும். சிறுவர் ரசிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். அந்தந்த பாத்திரத்தின் இயல்புகள் வெளித் தெரிய வேண்டும். இவ்வாறு கூறியவை நியதி அல்ல. விரும்பின் கடைப்பிடிக்கலாம். பெரும்பாலானவர்கள் இவ்வாறே செய்கிறார்கள்.

ஆற்றுகையின் போது,

சிறுவருக்கான சிறந்த கதை எழுத்துருவாக்கப்பட்டு (சிறுவருக்குரிய உள முதிர்ச்சிக்கு ஏற்ப) பாத்திரங்கள் மூலம் மேடையிலே அவைக்கு ஆற்றுகை செய்யும் போது பின்வரும் விடயங்களை கவனிக்க வேண்டும்.

நடிக்கும் போது பாத்திரங்கள் சிறுவர் அரங்கிற்கான மொழிநடையைக் கையாள வேண்டும். அதாவது பார்ப்போர் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஆடலும் பாடலும் பார்ப்போரைக் கவரும் சிறந்த அம்சங்கள். ஆகவே ஆடலும் பாடலும் இணைக்கப்படல் வேண்டும். பாடல்கள் எளிமையான வரிகளைக் கொண்டதாக இருக்கவேண்டும். நடிகர்களும் பார்ப்போரும் நயக்கும் வகையில் பாடல்கள் அமைய வேண்டும். உதாரணமாக ''ஒற்றுமையின் சின்னம்'' நாடகத்தில்

''சிறுவர் நாங்கள் கூடி இங்கு
சிறியதொரு நாடகம்
விறுவிறுப்பாய் நடிக்கப் போறோம்
விரைவில் வந்து பாருங்கள்''

அதேபோன்று ''கண்டறியாத கதை'' யில்

''ஆஹா ஓஹோ டொக் டொக் சறுக்புறுக்
ஆஹா ஓஹோ டொக் டொக் சறுக்புறுக்
காலணிகள் ஆஹா பாதணிகள் ஓஹோ
காலணிகள் பாதணிகள் சப்பாத்து செருப்பு
கால்களை நன்றாகவே பாதுகாக்கும்
பொறுப்பு''

போன்ற பாடல்களை குறிப்பிட முடியும்.

ஆடல்களும் மெல்லிய அசைவி லிருந்து செல்லலாம். இயல்பான அசைவு கள், ஆக்கியல் அசைவுகள் என்பன இடம்பெறலாம்.

வசனங்களும் இயல்பாகவும் கவிதை யாகவும் கூட இருக்கலாம். மேடைச் செயல்களையும் மெல்லிய அசைவினூடாக வசனங்கள் பேசி நடிக்கலாம்.

சிறுவர்களிற்கு விளையாடுவதில் அதிக நாட்டம் உள்ள காரணத்தால் விளையாட்டுகளையும் பயன்படுத்தலாம். நாடகம் என்பதே விளையாட்டு தானே. நாடகங்களில் விளையாட்டுக்கள் சேர்க்கப்படும்போது சிறுவர்களின் மகிழ்ச்சி அதிகரிக்கும். நடிக்க முன்வராத சிறுவர் விளையாட விரும்புவர். எனவே இவ்வகை நாடகங்களில் ஆடல், பாடல், விளையாட்டுக் கள் என்பவற்றை இணைத்துக்கொள்ளல் விரும்பத்தக்கது.

அதேவேளையில் இசையும் பிரதான மானது. பாடும்போதும் ஆடும்போதும் இசைக்கருவிகள் பிரதான இடத்தைப்

பெறுகின்றன. தேவையான இசை வாத்தியங்களையும் பயன்படுத்தலாம்.

மேடையிலே காட்சியும் சிறுவரின் உள்ளத்தைக் கவர்வதாக அமைய வேண்டும். நடிகர்களின் நிலைகள், அசைவுகள் ஊடாகவும் காட்சிகள் அமைக்கலாம். காட்சிகள் அமைக்கும்போது செலவுகளைக் குறைப்பது விரும்பத்தக்கது. பல வர்ணங்களைக் கொண்டும் காட்சிகள் தயாரிக்கப்படலாம்.

வேடஉடை, வேடப்புனைவு என்பன பொருத்தமானதாக பாத்திரங்களிற்கு ஏற்ற வகையில் அமைதல் வேண்டும். பொருத்தமான நிறங்களை, அசைவுகளை, இசைகளைப் பயன்படுத்த வேண்டும். அதே போன்றே வேடப்புனைவும் சுவருக்கென வரைதலுக்கெனத் தயாரிக்கப்பட்ட நீர் வர்ணத்தையோ (water paint) அல்லது எண்ணை வர்ணத்தையோ (enamel paint) அல்லது துணிக்காக செய்யப்பட்ட (Fabrick paint) வர்ணத்தையோ நடிகரின் முகத்தில் பூசுதல் தவிர்க்கப்பட வேண்டும். இவற்றைக் கவனத்தில் கொள்வதால் பூசப்படும் இடத்தில் ஒவ்வாமை ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். சிறுவரின் முகத்தில் இலகுவாக பூச, அழிக்கக்கூடிய ஒப்பனைப் பொருட்களையே பயன்படுத்துவது சிறந்தது.

வேட முகங்களையும் பயன்படுத்தலாம். ஆனால் நடிகரின் முகத்தை மறைக்காது பயன்படுத்தவேண்டும். தலையில், தலைக்குமேல், முகத்திற்கு கீழ் என இவ்வாறாகவே பயன்படுத்த வேண்டும். முகம் மறைக்கப்படுவதால் முகத்தினூடாக அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகள் அசைவுகள் வெளிப்பாடுகள் தெரியாமல் போய்விடும்.

இவற்றுடன் பொருத்தமான ஒளி யமைப்பும் செய்யப்படலாம். பலவர்ண ஒளியை சிறுவர் விரும்புவர்.

இவ்வாறு சிறுவர் அரங்கிலே கதை, மொழி, ஆடல், பாடல், வசனம், விளையாட்டுக்கள், இசை, காட்சி, வேட உடை, வேடப் புனைவு, வேட முகம், ஒளி, ஒலி என பல விடயங்களை அவதானித்து செயற்படுத்தவேண்டும்.

இவ்வாறான சிறுவர் அரங்கின் பயன்பாடுகளாக நோக்கப்படுவது என்ன?

- மாணவர்கள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே உணர்ந்து கொள்ள முடிகிறது.
- மகிழ்ச்சியான கற்றல் ஊடகமாகிறது.
- வெளிப்பாட்டு அனுபவமாக பயன்படுகிறது.
- நெருக்கீட்டு நிலைகளை தாங்கி மீண்டு வர பயன்படுகிறது.
- தெளிவான சிந்தனை படைப்புக்கான வலுவை வழங்குகிறது.
- தம்மிடமிருக்கும் திறன்களை தாமே இனங்காண உதவுகிறது.
- நல்ல விழுமியங்களை கண்டு கொள்ள உதவுகிறது.
- பிள்ளைகளின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தூண்ட உதவுகிறது.
- உண்மையான நிலையை அறிந்து கொள்ள உதவுகிறது.
- கல்வியிலும் குணத்திலும் மேம்பட்ட ஆளுமை கொண்ட மனிதனை உருவாக்க வழிவகுக்கிறது.

இந்த அடிப்படையிலே சிறுவர் நாடகங்களை எழுதவும், தயாரிக்கவும், நடிக்கவும் முற்படுவது வரவேற்கத்தக்க ஓர் விடயமாகும்.

CHILDREN LEARN ENGLISH FASTER THAN ADULTS



K.Sanmuganathan
(Reading Ph.D in Ling, M.Phil in Ling,
M.A in Ling, PGD in Edu, B.A,
Dip in ELT, English Trd)
Senior Lecturer in ELT,
University of Jaffna.

English language teaching as it is practiced in Sri Lanka can be classified into three categories. The first and the foremost are the schools where primary and secondary education is taught to the students. This is the most important period in ESL teaching-learning activities "There is a period during which language learning must take place and after which a language can never be learned in quite the same way" (Judith Chun 1980). The kind of ESL teaching and learning activities varies from school to school and are influenced or affected by various factors.

An English language learner is a person who is learning the English language in addition to their native language. This can refer to any learners of English as a foreign or second language, often termed as but more often the term is used to refer to learners of English as a second language in the schools where English is taught as a second language. The instruction and assessment of students, their cultural background, and the attitudes of English teachers towards English Language Learners have all been found to be factors in students' achievement. Some ways that have been suggested to assist English Language Learners include bringing their home cultures into the classroom, involving them in language - appropriate content - area instruction from the beginning, and by integrating literature into the learning program.

Second-Language Acquisition

The theory has often been extended to a critical period for second-language acquisition (SLA), although this is much less widely accepted. Certainly, older learners of a second language rarely achieve the native-like fluency that younger learners display, despite often progressing faster than children in the initial stages. David Singleton states that in learning a second language, "younger = better in the long run," but points out that there are many exceptions, noting that five percent of adult bilinguals master a second language even though they begin learning it when they are well into adulthood—long after any critical period has presumably come to a close.

While the window for learning a second language never completely closes, certain linguistic aspects appear to be more affected by the age of the learner than others. For example, adult second-

language learners nearly always retain an immediately identifiable foreign accent, including some who display perfect grammar (Oyama 1976). Some writers have suggested a younger critical age for learning phonology than for syntax. Singleton (1995) reports that there is no critical period for learning vocabulary in a second language. Robertson (2002)] observed that factors other than age may be even more significant in successful second-language learning, such as personal motivation, anxiety, input and output skills, settings and time commitment.

Universal Grammar

Chomsky (1965) asserts that environmental factors must be relatively unimportant for language emergence, as so many different factors surround children acquiring L1. Instead, Chomsky claims language learners possess innate principles building a 'language acquisition device' (LAD) in the brain. These principles denote restricted possibilities for variation within the language, and enable learners to construct a grammar out of 'raw input' collected from the environment. Input alone cannot explain language acquisition because it is degenerated by characteristic features such as stutters, and lacks corrections from which learners discover incorrect variations.

Singleton and Newport (2004) demonstrate the function of UG in their study of 'Simon'. Simon learned second language as his L1 from parents who had learned it as an L2 after puberty and provided him with imperfect models. Results showed Simon learned normal and logical rules and was able to construct an organized linguistic system, despite being exposed to inconsistent input. Chomsky developed UG to explain L1 acquisition data, but maintains it also applies to L2 learners who achieve near-native fluency not attributable solely to input and interaction (Chomsky, 1965).

Although it does not describe an optimal age for SLA, the theory implies that younger children can learn languages more easily than older learners, as adults must reactivate principles developed during L1 learning and forge an SLA path: children can learn several languages simultaneously as long as the principles are still active and they are exposed to sufficient language samples (Pinker, 1995). The parents of Singleton and Newport's (2004) patient also had linguistic abilities in line with these age-related predictions; they learned second language after puberty and never reached complete fluency.

Advantages of bilingual education for children

It is commonly believed that children are better suited to learning a second language than are adults. However, general second - language research has failed to support the critical period hypothesis in its strong form (i.e., the claim that full language acquisition is impossible beyond a certain age). According to Linda M, the number of children growing up with a home language that is not English is constantly increasing. Therefore these children have to learn the English language before kindergarten as a second language. It is better for young children to maintain both their home language and their second language. Cultivating their home language, children create their own cultural identity and become aware of their roots.

This fact leads to the question whether having the ability to speak two languages helps or harms young children. Research shows that the acquisition of a second language in early childhood confers several advantages, especially a greater awareness of linguistic structures. Furthermore it is advantageous for young children to grow up bilingually because they do not need to be taught systematically but learn languages intuitively. How fast a child can learn a language depends on several personal factors, such as interest and motivation, and their learning environment. Communica- tion should be facilitated rather than forcing a child to learn a language with strict rules. Education in early childhood can lead to an effective educational achievement for children from various cultural environ- ments.

Another aspect worth considering is that bilingual children are often doing code switching, which does not mean that the child is not able to separate the languages. The reason for code switching is the child's lack of vocabulary in a certain situation. The acquisition of a second language in early childhood broadens children's minds and enriches them more than it harms them. Thus they are not only able to speak two languages in spite of being very young but they also acquire knowledge about the different cultures and environments. It is possible for one language to dominate. This depends on how much time is spent on learning each language.

Stages of Language Acquisition

Researchers define language acquisition into two categories: first-language acquisition and second-language acquisition. First-language acquisition is a universal process regardless of home language. Babies listen to the sounds around them, begin to imitate them, and eventually start producing words. Second-language acquisition assumes knowledge in a first language and encompasses the process an individual goes through as he or she learns the elements of a new language, such as vocabulary, phonological components, grammatical structures, and writing systems.

The Six Stages of Second - Language Acquisition

Pre-production

This is also called "the silent period," when the student takes in the new language but does not speak it. This period often lasts six weeks or longer, depending on the individual.

Early production

The individual begins to speak using short words and sentences, but the emphasis is still on listening and absorbing the new language. There will be many errors in the early production stage.

Speech Emergent

Speech becomes more frequent, words and sentences are longer, but the individual still relies heavily on context clues and familiar topics. Vocabulary continues to increase and errors begin to decrease, especially in common or repeated interactions

Beginning Fluency

Speech is fairly fluent in social situations with minimal errors. New contexts and academic language are

challenging and the individual will struggle to express themselves due to gaps in vocabulary and appropriate phrases.

Intermediate Fluency

The individual is able to speak almost fluently in new situations or in academic areas, but there will be gaps in vocabulary knowledge and some unknown expressions. There are very few errors, and the individual is able to demonstrate higher order thinking skills in the second language such as offering an opinion or analyzing a problem.

Advanced Fluency

The individual communicates fluently in all contexts and can maneuver successfully in new contexts and when exposed to new academic information. At this stage, the individual may still have an accent and use idiomatic expressions incorrectly at times, but the individual is essentially fluent and comfortable communicating in the second language.

The basic principles of teaching English to Children

The ability to understand

Children understand basic meanings of their native language significantly before they are able to express themselves. Teaching a foreign language to young children is derived from the same principle. Children react to certain instigators expressed in a foreign language without having to form any sort of message. Foreign languages are acquired just as naturally as their native language; children understand the sense of the statement as a whole. The teacher continues to stimulate and motivate by using gestures, pictures, puppets and miming etc.

The use of games and movement (body language)

Methods of experiential and cooperative learning via games and such activities, which are based on the direct experience of children, support children's curiosity and desire to discover. The greatest motivation to communicate is often created while playing games. We create suitable conditions for teaching when the games are fun and exciting and are created so that they enable all children to participate. Movement is an important tool of non-verbal communication and creating a relaxed learning environment.

Indirect learning

Language is not separable from the reality children are experiencing. They like to imitate voices from songs and scenes from stories, and also imitate characters and people in terms of their manners of expression. They enjoy fairytales, rhymes, riddles, and new sounds that they can discover in themselves. In this form, children engage the same part of their minds, which they use to develop their mother tongue. It is an indirect form of learning and also one of the most effective.

Developing imagination

Children live scenes and stories to the maximum. Teachers help to create a relaxed fairytale like environment. The well-developed children's fantasy enables children to work with stories, fairytales or songs in a foreign language just as in their mother tongue.

Activation of all senses

Cognitive development of children is based on engaging all senses. The mother tongue is acquired by the child via multi-

sense motivational factors, which is the same way that we have to approach teaching young learners foreign language skills. In addition, when children are learning a language they practice manipulation activities, constructive and graphic activities, sense and psychomotor games and games with music and movement to music can be used.

Alternating activities

Children concentrate for short periods at a time, which is why learning has to be lively and a mix of games and movement. It is recommended to alternate activities every five to ten minutes, and to organize games, and stimulating or relaxing activities according to need. It is a good idea to use games often, which are familiar to children as it increases their self-confidence.

Strengthening

Children gain the necessary self-confidence through repetition. Children need to confirm the meaning of the message in the foreign language. It is necessary to realize that the process of absorbing a language before the child is capable of producing the language may be a lengthy one. The possible stress resulting from vocalization of new language can be eliminated by repeating through songs and rhymes in groups or various fun forms of drills.

Individual approach

The teacher must devote as much individual attention as possible to each child. An important process of learning is encouraging and commending the children for their efforts. Teachers should foster all forms of individual communication and praise effort while correcting in a positive manor. Correction should not discourage the child's "have a go" mentality which the teacher is always trying to build by and harness.

How can I help my child like English?

Many parents are eager to help their kids learn English from a young age. One of the most important factors in teaching foreign languages to young children is helping them form positive perceptions of communicating with foreign languages.

A great advantage of early childhood second language exposure is that it helps children form a positive impression of foreign languages. When children are exposed to a foreign language from a very young age, they tend to view the language positively and learning another language becomes something they are very comfortable with. However, if you force a young child to speak a second language even when they are resisting, you run the risk of creating a negative impression of that language.

Here are some suggestions for helping your children enjoy English:

Ease up when necessary

Some parents think a great way to help their children learn another language is to use only that language at home. It's a commendable idea, but it's not unusual for children to grow frustrated and want their parent to speak to them in their native tongue. The last thing you want is for your child to develop negative feelings towards foreign languages, or to have any difficulty communicating with Mom and Dad.

Nothing is more important than you having good communication with your children. If your children are expressing frustration when you try to communicate in English, it may be best to ease up and use your native language. You want your children to feel 100% comfortable communicating with you.

Let your children see YOU enjoying English

One of the best ways to get children interested in doing something is to let them observe you enjoying that activity. Don't make a big deal out of it, but let your children see you reading English books or newspapers. Watch English DVDs, listen to English music or let them see you speaking English with a friend. Your children look up to you. When they are playing, they pretend to be you. If you'd like them to be interested in English, show them that you are interested in English.

Use English that doesn't require them to answer in English

If a child is forced to respond in a second language they find difficult, they can become frustrated and disappointed easily. You can use a lot of English with your children that don't pressure them to speak.

- Use simple commands, such as "Put on your shoes." "Let's go." or "Give me an apple, please."
- Give praise, like "Good job!" "Well done!" or "What a beautiful drawing!"
- Make observations or point things out, "It's cold today!" "Look at the brown dog." or "This ice cream is sweet."
- Ask basic questions that can be answered through gesture or short answers, such as "Which shirt do you want to wear?" - While holding up two shirts to choose from, or "Where are your shoes?"

These are all great ways to communicate naturally with them in English without forcing them to speak.

Expose your children to English

Remember that INPUT is essential. Identify some English media (such as DVDs and CDs) that your children like and let them enjoy it on their own terms without pressuring them to produce English right away. Sometimes we have unrealistic expectations for young foreign language learners. Just as a young native English speaker needs time to start producing English, so does a young foreign language learner. Almost all language learners go through a "silent period" before they begin producing language on their own. Naturally, the silent period for a child can often be quite long.

Provide as much enjoyable input as you can, and let them start producing English at their own pace. Read to your children in English as well. Find some good English picture books that your children enjoy looking at with you and read to them at storytime. Just be careful not to completely replace books in your native language with English books. For developing literacy, it's extremely important that you read to your child in their native language regularly.

How children learn

Children are active learners and thinkers. (Piaget, 1970) Children construct knowledge from actively interacting with the physical environment in developmental

stages. They learn through their own individual actions and exploration. Children learn through social interaction. (Vygotsky, 1962) Children construct knowledge through other people, through interaction with adults. Adults/teachers work actively with children in the Zone of Proximal Development (ZPD). Zone of Proximal Development (ZPD) = difference between the child's capacity to solve problems on his own and his capacity to solve them with assistanceChildren learn effectively through scaffolding by adults. (Bruner, 1983).The adult's role is very important in a child's learning process. Like Vygotsky, Bruner focused on the importance of language in a child's cognitive development. He shows how the adult uses "scaffolding" to guide a child's language learning through finely-tuned talk. (Cameron, 2001).

Effective Scaffolding

(Bruner, 1983), Parents who scaffold effectively

- create interest in the task;
- break the task down into smaller steps;
- keep child "on task" by reminding him of the purpose or goal;
- point out the important parts of the task;
- control the child's frustration during the task;
- model the task, including different ways to do the task.

Motivation

Motivation to learn English is generally high because, in the world we live in; even kids understand that it is of advantage for them if they know English. But learning motivation needs to bekept alive. It can be killed by listless and uninspiring teaching and by lack of success. Learners will be discouraged from making the strong and sustained efforts needed for language learning if they do not feel that they make progress. For them progress is measured by the ability to understand and say a growing number of 'things' in the target language. And initially formal errors are of inferior importance for language learners.

That is not to say that learners do not wish to be able to say things correctly, but they may feel that the time for a 'more correct' wording of what they want to say will still come. That is why teachers must handle error correction sensitively and with care. Frequently it helps if they provide implicit correction by taking up a learner's expression but rephrasing it in a correct form.

Maintaining and enhancing learning motivation is a direct function of a learner's experience that s/he can do a growing number of things with the target language. That is why extended frontal instruction, which keeps learners in a receptive role, does not contribute to learning motivation. There must be a dynamic alternation of phases of presentation, imitation and practice with ample opportunities for communicative experiments with the new items presented or discovered in teacher directed phases of learning. Practice and experimenting generally are the time for partner directed or group work.

Learners also like visible evidence of the progress they have made. In that context a collection and possibly revised and edited version of all the papers

children produced in the course of their varied activities in class serves a useful purpose. Researchers call it a portfolio. It is a kind of learner diary. It contains pictures drawn or cut and pasted into the diary by the learner, possibly with words copied from the blackboard or some other written source. It contains notes of rules of grammar discovered by the learner and in concerted efforts by the whole class. It serves not only as a document for the work done but also as the basis for revision. In classes which do not work with a textbook that prescribes which lexico-grammatical forms all learners must learn in what sequence, portfolios replace one of the functions of textbooks: They offer learners a chance for reviewing what they did before. They do so with the difference, however, that the notes created by the learner herself/himself should have a more vivid touch to them.

References

- Lenneberg, E.H. (1967). *Biological Foundations of Language*. Wiley. ISBN 0-89874-700-7.
- Robertson, P. (2002). "The Critical Age Hypothesis". *Asian EFL Journal*.
- Scherag, A; Demuth, L; Rösler, F; Neville, HJ; Röder, B (October 2004). "The effects of late acquisition of L2 and the consequences of immigration on L1 for semantic and morpho-syntactic language aspects". *Cognition***93** (3): B97–108. doi : 10.1016 / j. cognition . 2004.02.003. PMID 15178380.
- Singleton, David, and Lengyel, Zsolt. (1995). *The Age Factor in Second Language Acquisition*. Clevedon: Multilingual Matters. *See also*http://web.archive.org/web/20060319062202/http://www-rcf.usc.edu/~ionin/SLAgroup/Ling527papers / Singleton + Critical + Periods + iral . 2005 . 43 . 4 . 269 . pdf [dead link]
- Hurford, J. R. (1991). "The evolution of critical period for language acquisition". *Cognition***40** : 159–201.
- Chomsky, N. (1982). The generative enterprise: A discussion with Riny Huybregts and Henk van Riemsdijk. Dordrecht: Foris.
- Pinker, S.; Bloom, P. (1990). "Natural language and natural selection". *Behavior and Brain Sciences* **13** : 707–784.
- Chomsky, N. (1980). Rules and representations. New York: Columbia University Press.
- Chomsky, N. (1993). A minimalist program for linguistic theory. In The view from building 20 (Eds. K. Hale &S. J. Keyser). Cambridge, MA: MIT Press.

ஆரம்பக் கல்வியின் விழுமியங்கள்

திருமதி சிவறஞ்சினி விஜயகுமாரன்
ஆசிரிய ஆலோசகர்,
ஆரம்பக் கல்வி
வலயக் கல்வி அலுவலகம் (வடமராட்சி)

மனிதன் வாழப் பிறந்தவன். தானும் வாழ்ந்து மற்றயவர்களையும் வாழவைக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமையாகும். கற்பவை கற்க வேண்டும் கற்றபின் அதற்கு தக நிற்க வேண்டும் என்பது வள்ளுவரது கல்வி பற்றிய மகுட வாசகம். மனித இரக்கமும் சகோதரத்துவமும் அளிக்காத கல்வி கல்வி ஆகாது. அது உலகளாவிய மனப்பாண்மையை எங்கும் பரப்புதல் வேண்டும். நேர்மை தூய்மை, நீதி போன்ற பண்புகள் மனிதனின் இயல்பான தன்மையை உருவாக்குவதற்கு கல்வி உதவி வேண்டும். ஒவ்வொரு மனிதனின் உணர்ச்சி பேதங்களை நெறிப்படுத்தவும் அவற்றால் விளையும் பேராற்றலைப் பயன்படுத்தவும் கல்வி உதவுதல் வேண்டும்.

மாண்புடைய மனிதனது நல்வாழ்வு சமூகத்தின் நல்வாழ்வுடன் பிரிக்கமுடியாதபடி பின்னிக் காணப்படுவது ஆகும். சமூகத்தின் வளர்ச்சியிலும் தனி மனிதனது வளர்ச்சியும் இணைந்தவை ஆகும்.

ஒருவனது முழு ஆளுமை வளர்ச்சியானது வாழ்க்கையை பொலிவுற மலரச் செய்கிறது. வாழ்க்கையின் உயரிய நோக்கம் மனித பெரும்பான்மை பொலிவுடன் மலரச் செய்தல்.

கல்வி ஆனது தற்கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதுடன் மனிதனை சமூகத்துடன் பொருந்தி வாழச் செய்தல் வேண்டும். உண்மைக் கல்வி என்பது மனிதனை கருணையும் மானிடப்பண்பும் உள்ளவராக்கல் வேண்டும். குழந்தை பருவத்திற்கும் வளர்ந்தோர் பருவத்திற்கும் இடைப்பட்ட இளமைப் பருவம் சிறந்த விழுமியங்களை பதித்து கொள்ளுதல் பொருத்தமான பருவம் பிள்ளைகள் இப்பருவத்தை பாடசாலையிலேயே களிக்கின்றனர்.

''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'' என்கிறார் ஔவைப்பாட்டி. குழந்தையின் மனதிலே இளமையில் படிக்கின்ற விடயங்கள் நன்கு பதிந்துவிடும். குழந்தைகளின் சூழல் நிலைமைகள், உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, மனப்பாங்கு வளர்ச்சி என்பன ஆரம்பக் கல்வியில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை ஆகும். ஆரம்பக்கல்வி தொடர்பான 1999ஆம் ஆண்டு புதிய சீர்திருத்தம் தரம் 1 - 5 வரையான தரங்களில் உள்ள மாணவர்களை ஆரம்பக் கல்விப் பிரிவாக வரையறுக்கிறது.

ஆரம்பக் கல்வி பிரிவில் உள்ள பிள்ளைகளிடம் உள்ளடங்கிய விசேட சாமர்த்தியம், உள்ளார்ந்த ஆற்றலாகிய வற்றை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய ஆரம்பக்கல்வி கலைத்திட்டம் உதவ வேண்டும். விரிவடைந்து வரும் பிள்ளைகளின் மனதை மேலும் விருத்திசெய்ய, சிந்தித்து வினாக்களை உசாவி அவற்றுக்கான பதில்களை கண்டுபிடிக்குமாற்றலை விருத்தி செய்யவேண்டும். ஆரம்பக் கல்வியானது உயர் கல்வி வரை மட்டுமல்லாது வாழ்வுப் பரியந்தம் வரை நின்று நிலைக்க வழிசெய்வது. தானாக அறிவைப்பெற, பிரயோகிக்க, சமூகத்தினரை கனம் பண்ண,

ஆதரிக்க கல்வி வழிகாட்ட வேண்டும். தாவரங்கள் விலங்கினங்கள் உட்பட்ட சுற்றாடலை பாதுகாக்க உதவும் திறன்களை ஆரம்பக் கல்வியிலேயே போதிக்க கலைத் திட்டம் புதுமெருகு பெறுதல் அவசியம்.

தேசத்தின் செல்வங்களான குழந்தைகளின் முழுக் கல்விச் செயற்பாட்டிற்கும் ஆரம்பக்கல்வியே அடிநாதமாக விளங்குகின்றது ஒரு சமூகத்தின் ஒருமைப் பாட்டிற்கும், மேம்பாட்டிற்கும், விருத்திக்கும் வழிகாட்டியாகவும் அமைகின்ற விழுமியங்கள் எனப்படும். சமூக ஒற்றுமை, சமூக நலன் பற்றிய உணர்வு, நீதிக்கான செயற்பாடு பொறுப்புணர்வுடன் செயலாற்றுதல் என்பன சமூக விழுமியங்களுள் சிலவாகும்.

மலரும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியானது அறிவை வளப்படுத்துவதோடு சிறந்த ஆளுமை மிக்க மனிதப் பண்புகளை வளர்ப்பதற்காக அமைய வேண்டும். இந்த நோக்கம் நிறைவுபெற மனித ஆளுமைப் பண்புகளுடன் மனித விழுமியங்களும் இணைய வேண்டும். மனித உடல் மேம்பாடு, உள ஆற்றல், மன எழுச்சி, ஆன்மா, தெய்வீகம் என்ற ஆளுமைப் பண்புகளுடன் தர்மம், சத்தியம், சாந்தி, பிறேமே, அகிம்சை என்றும் விழுமியங்கள் ஆகும். இணையும்போது மனித பெரும் பண்பு மலர்கின்றது. கல்வியை குறிக்கும் Education என்பதன் வேர்க் கருத்து ''வெளிக்கொணர்தல்'' ஆகும். கல்வி எனப்படுவது குழந்தைகளிடம் உள்ளமைந்து கிடக்கும் பல்வேறு ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக்கொணர உதவும் செயன்முறை ஆகும். இளைய தலைமுறையினரிடையே சமூக விழுமியங்களை மேம்படுத்துவதன் வாயிலாக நாட்டின் மேலான பிரசைகள் உருவாக்கப்படுகின்றார்கள். ''தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்பதற்கு இணங்க வாழ்க்கை முழுவதும் கலைத்து நின்று நன்மை பயக்கத்தக்க விழுமியங்களை ஆரம்ப நிலையிலேயே வலியுறுத்துவதும் மிகவும் மிகவும் அவசியமானதும், அவசரமானதுமாகும். ஆரம்பக் கல்வியிலேயே இதற்கான கால்கோள் இடப்பட வேண்டும்.

சமூக அமைப்பிலே வாழத் தொடங்கிய மனிதன் காலப்போக்கில் அச்சமூகத்தின் மரபுகள், வழக்குகள், விழுமியங்கள் என்பவற்றுக்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்ளும் அவன் தான் பிறந்து வளர்ந்து சமூகத்தின் எல்லைக்குள் கட்டுப்பட்டு வாழ்வதோடு அதன் நோக்கங்கள் இலட்சியங்கள் ஆகியவற்றை பரப்பும் கடமையும் கொண்டிருக்கின்றான். அத்தகைய நிலையை ஆரம்பக் கல்வியிலேயே மகிழ வைக்கவேண்டும்.

தமிழர் வாழ்வின் குருகுலக் கல்வியானது அவர்கள் வாழும் பாரம்பரிய பிரதேசமான வடக்கு கிழக்கு பிரதேசங்களின் தமிழ் பாண்பாட்டுடனும், சூழலுடனும் இணைந்ததாக இருந்தமையினால் அந்நியர் ஆட்சிக்கு முன்பு மிகவும் மேலோங்கிய நிலையிலே காணப்பட்டதை வரலாற்று சான்றுகளில் காணலாம். காலனித்துவ ஆட்சி முறையினால் மேலைத்தேய நலன் சார்ந்த கல்வி, பொருளாதார முறை எமது விழுமியங்களை சிதைத்து விட்டதை கண் முன்னே காணமுடிகிறது.

''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்பதைப் பாடசாலைகள் குறிப்பாக ஆரம்பக்கல்விப் பாடசாலைகள் உறுதிப் படுத்துவதற்கு தவறுகின்ற நிலைமை புள்ளி விபரங்கள், மாணவர் குறிப்பு புத்தகங்கள் சான்று காட்டுகின்றன. கணித பாடத்தில் சித்தி வீதமும் மொழிப்பாடத்தில் வெளிப் படுத்தும் ஆர்வமும் இதனை காட்டுகின்றன. மொழித்திறன் போட்டிகளில் மாணவர்கள் தமது திறமையை தேசிய மட்டத்தில் காட்டும் அதேவேளையில் போட்டிகளில் பங்கு கொள்ளும் சராசரி எண்ணிக்கை மிக தாழ்ந்த மட்டத்தையே காட்டுகின்றது.

பாடசாலை இணைப்பாடவித செயற்பாடான விளையாட்டு போட்டியில் மாணவர்களின் சராசரி எண்ணிக்கை மிக தாழ்ந்த மட்டத்தையே காட்டுகின்றது. மாணவர்களின் உடல் உறுதி, உள உறுதிக்கு அடிப்படையானது விழுமிய சிந்தனை பெற்றோரிடத்தும் மாணவர்களிடத்தும் மனதில் பதியவில்லை என்பதை இச்செயற்பாடு காட்டி நிற்கின்றது.

மாறிவரும் உலக நடைமுறைகள் பெரும்பாலான குடும்ப நடைமுறைகளை தவறவிடுகின்ற பண்பை எடுத்தியம்புகிறது. சமய அனுட்டானங்கள், உணவும் பழக்க வழக்கங்களை மதிக்கும் பண்பு, இயற்கையை பேணுதல், கற்பதற்கும் நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு, வருமானம் பெறும் வழிகள் ஆகிய பலவற்றில் எமது பண்பாட்டு விழுமியங்களை உதாசீனப்படுத்துகின்ற நிலைமையையே காணமுடிகின்றது.

நாளாந்த செயற்பாடுகளில் சமய அனுட்டானத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவது இல்லை. பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட வகுப்புக்கள், இலத்திரனியல் தொடர்பு சாதனங்களின் அதிகரித்த பாவனை, பிள்ளைகளை வேறு பாதைக்கு மாற்றுவதனால் ஆத்மீக ரீதியான சிந்தனை மனங்களில் வளர்க்கப்படுவது இல்லை. விளைவு மாணவர்கள் பிறழ்வான நடத்தைகளை காட்டுகிறார்கள்.

பெற்றோரின் பொறுப்பின்மை, கவர்ச்சியான உணவுப் பொதிகள், வாசனை என்பவற்றால் மாணவர்களின் உணவுப் போசாக்கு மிகவும் கீழ்மட்டத்திலேயே உள்ளது. அதன் தாக்கத்தினால் கண் பார்வை குறைவு நரம்புத்தளர்ச்சி, தொற்று நோய்த் தாக்கம், தொற்றாத நோய்கள், அதிகரித்த செலவு, ஒவ்வாமை ஆகியவை உண்டாகின்றன.

பிறரை மதிக்காத தன்மைக்கு காரணமாக அதிகரித்த பண வருவாய், மேலதிகமாக பல ஆசிரியர்களிடம் கற்கும் வாய்ப்பு, பெற்றோரிடம் இருந்து மட்டுமல்லாது பணம் உறவினர்கள், நண்பர்களிடமிருந்து கிடைத்தல், சகபாடிகளின் தவறான வழிகாட்டல் என்பன அமைகின்றன.

இயற்கையை போற்றி பாதுகாக்கும் பண்பு மெல்லமெல்ல இல்லாமல் போய் விடுகின்றது. செயற்கை அழகுகளின் மலிவான வருகை, மலிவான உணவுப் பொருட்கள், இடப் பற்றாக்குறை, நேர்மை இன்மை என்பன காரணமாக சுத்தமான காற்று அழகுக் காட்சி இயற்கை உணவுகள் சூழல் பாதுகாப்பு என்பன கிட்டாமல் போய் விடும் நிலை உண்டாகின்றது.

சூழலில் காணப்படும் நாளாந்த செயற்பாடுகளும், திரைப்படங்களும், மெகாத் தொடர்களும் பத்திரிகை செய்திகளும் சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பினைக் காட்டவில்லை. அதனால் கற்றபின் நிற்க அதற்கு தக என்ற குறள்மொழியை குழந்தைகள் பின்பற்ற மறுக்கிறார்கள்.

எமது தமிழ் பண்பாட்டுடன் காலம் காலமாக நிலவி வந்த சுயதொழில் முறைகளும் அதன் வழி கிடைக்கும் பண வருவாயும் சிக்கனமான வாழ்க்கை முறைகளும் புலம்பெயர் உறவுகளின் டொலர்களால் வலிந்த கற்றப்படும் நிலைமையை உண்டாக்குகிறது. உடல் உழைப்பின் மகத்துவத்தையும் சுதந்திரமான சுய வாழ்க்கை முறைகளையும் இழிவாக காணும் பிற்போக்குத்தனம் பெரும்பான்மையாக உருவெடுக்கின்றது.

இவ்வாறான இழி நிலைமைக்கு காரணம் பாரம்பரியமாக போற்றிய உயிர் விழுமியங்களை எமது தாய், தந்தையர் மட்டுமல்ல அறிவு போதிக்கும் பாடசாலைகள், கல்வி சிந்தனையாளர் பலரும் பாராமுகமாக இருப்பது. நாம் இன்றே ஆற்ற வேண்டிய அரும்பெரும் பணி நமது இந்துப் பாரம்பரிய சமய, கலை, கலாசார அம்சங்களை போற்றவேண்டும். சமயம் மனிதனது வாழ்வு. அவன்

ஆன்மாவிற்கு ஒளிபாதைக்கு தீபம் என்ற நிலையை மனதில் இருந்தும் பழியை கல்வி செயற்பாடுகள் ஊடாக வெளிக்கொணரு வதன் மூலம் உடன்பாடான சமாதான சமூகமொன்றை காணலாம். பௌத்த பாரம்பரியத்திலே சாந்தம், ஈயை, தூய சிந்தனை, வாய்மை ஆகிய நற்குணங்கள் கல்வியின்பால் எழுவன. அது மட்டுமல்ல மக்களை வழிப்படுத்தும் கிறிஸ்தவ ஸ்வாமிய இலக்கியங்களும் குழந்தைக் கல்வியை நெறிப்படுத்தி உள்ளன.

எமது பாரம்பரியத்தின் சிறப்பு விருந்தோம்பல். அத்தகைய பண்பு வெறுமனே வயிற்றை நிரப்புதல் என கொள்ள முடியாது. வயதுப் பருவத்திற்கும் பருவ காலங்களிற்கும் ஏற்ப நன்கு திட்டமிட்டிருந்ததை அறியக்கூடியதாக இருந்தது. பசு தெய்வமாக போற்றப்பட்ட நிலையை சமயம் என்ற நம்பிக்கைக்கு அப்பால் நிறையுணவு தரும் தெய்வம் உடலுறுதிக்கு அடிப்படையான சகல போசாக்குகளையும் தருவதால் ஆகும். அது மட்டும் அல்லாது உழுத்தங்கஞ்சி, இலைக் கஞ்சி, பயிற்றங்கஞ்சி, ஒடியற்கூழ், பனை வெல்லம், முக்கனி என்பன எல்லாம் நம் முன்னோர் கண்ட உணவின்பாற்பட்ட விழுமிய நடைமுறைகள்.

சமூகத்தில் பிறரை மதிக்கும் பண்பு எமது மரபிலே சிறந்து விளங்கியதை பண்டைய இலக்கியங்கள் காட்டுகின்றன. அதனைப் பேணுவதற்கு பெயர் சொல்லி அழைக்காது உறவுமுறைகளை சொல்லி அழைப்பது செயற்பாட்டு ரீதியாக எழுந்து நிற்றல், வணக்கம் செலுத்துதல், வழியனுப்பி வைத்தல் ஆகிய நடைமுறைகளை வீட்டிலும், பாடசாலையிலும் செயற்படுத்தி காட்ட வேண்டும்.

எமது சூழலில் வீட்டுத்தோட்டம் அமைப்பதன் மூலம் சூழல் அழகு பெறுவ துடன் தூய்மையான உணவு கிடைக்கும் பண வருவாயும் பெறக்கூடியதாகவும் சிக்கன நடைமுறைகளை பின்பற்றக் கூடியதாகவும் உடல் உழைப்பினை பெறக்கூடியதாகவும் அமையும் சிறந்த விழுமியங்களை போதிக்கலாம்.

இன்றைய பூகோள மயமாதலின் இன மத மொழி மேம்பாட்டு கலாசாரங்களிடையே புரிந்துணர்வுடன் வாழக்கூடிய மனப்பாங்கு, விருத்தி மாணவருக்கு ஏற்படவேண்டும். சுதந்திரமும் மனித உரிமைகளும் எந்த ஒரு சனநாயக சமூகத்தினதும் உயிர் நாடியும் நியமமும் ஆகும். இது ஒவ்வொரு மனிதனுடைய உடல் சார்ந்த சமூக ஆத்மாத்த மட்டங்களிலும் கௌரவத்தை மதிப்பதுடன் சமூக, பொருளாதார தனிப்பட்ட சுதந்திரங்களை முன்னேற்றுவதாக. அமையும் என்பதன் மூலம் பல்லின கலாசாரங்களின் சுதந்திரமும் மனித உரிமையும் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை அறியமுடியும். பன்மைத்துவ தன்மை கொண்ட சமுதாயத்தின் கோரிக்கைகளும் கட்டளை களுக்குமான அரசியல் போக்கை வழங்குவது தான் மிகப்பெரிய பிரச்சனை ஆகும். பிரச்சனைகள் உரிய நோக்கத்தில் கருத்தில் கொள்ளப்படாவிட்டால் நன் நோக்கத்துடன் மெய்யான அக்கறை களுக்கும் அபிலாசைகளுக்கும் இடமளிக்க படாவிட்டால் அவை இருந்துகொண்டே இருக்கும். ''பன்மைத் தன்மை கொண்ட சமூகங்கள் அரசியல் யாப்பு ரீதியான பிரச்சனைகள் கருத்தில் கொள்ளப்படுவதற்கு கைவிட்டு விடுவதற்கு முயலக்கூடாது. ஆரம்பக்கல்வியின் பன்மைத்துவ கலாசாரத் திற்கு குழந்தைகள் தயார்படுத்தப்பட வேண்டும் என்பது புலனாகின்றது.

தீர்வாக ஆரம்பக் கல்வியில் விழுமியங்கள் என்னும் கருத்தியல் தனிமனித வாழ்க்கையின் அடிநாதமாக அவன் வாழ்வு பிரியந்தம் வரை உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து ஏனையோரையும் வாழ வழிவகுக்கும் விழுமியங்களை ஆரம்பக்கல்வி நிலையி லிருந்து கால்கொள்ள வேண்டும் என்பது உறுதியாகின்றது.

பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டில் குடும்பங்களின் பங்களிப்பு

பேராசிரியர் மா. சின்னத்தம்பி
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அறிமுகம்

பிள்ளைகளின் கல்வி முன்னேற்றங்களில் பாடசாலைகள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்ற எதிர்பார்க்கை வலுவானது. ஆனால் பாடசாலைகள் கற்பிக்கும் அனைத்து மாணவருக்கும் அதே பாடங்களை அதே மாதிரியில் சில சமயங்களில் சற்றுப் பலவீனமான முறையில் வழங்கும் ஏற்பாடுகளாக தனியார் கல்வி நிலையங்கள் செயற்படுவதை எவரும் சட்டபூர்வமாக எதிர்க்கவில்லை. இத்தகைய மாற்றுக் கல்வி வசதிகளை வழங்கும் நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகள் விரிவாக்கம் பெற்றுச் செல்வதற்கு பல காரணங்கள் உள்ளன. எனினும் அத்தகைய காரணங்களில் குடும்பங்களின் பங்களிப்பு குறைந்து சென்றமையும் மிக முக்கியமானதென்பதால் அத்தகைய அம்சம் பற்றியே இக்கட்டுரை ஆராய்கிறது.

குடும்பம் முதல்நிலை நிறுவனம்

பிள்ளைகள் குடும்பங்களின் ஊற்றுக்கள், குடும்பங்களின் சொத்துக்கள், குடும்பங்களின் விளைபொருள்கள் குடும்பங்களில் பிறந்து வளர்ந்து சமூகத்தில் பலவற்றைக் கற்று மற்றொரு குடும்பத்தை உருவாக்குவதன் மூலம் சமூக விருத்தியையும் சமூக நிலைப்படுத்தலையும் உறுதிப்படுத்துபவராக காணப்படுபவர்களே குழந்தைகள்.

குடும்பங்கள் பிள்ளைகள் தாமாக கற்பதற்கு வழிகாட்டுகின்றன. தாய் மொழியை கேட்கவும், புரிந்துகொள்ளவும், பேசவும் குடும்பம் அடிப்படையில் துணை செய்து வருகிறது. தாயிடம் தொடங்கி சகோதரர்கள், மூத்தோர் போன்றோர் பலரிடமும் இதனைக் கற்றுத் தெளிகின்றனர். பாடசாலை ஒழுங்குபடுத்தி பல மறுவாய்ப்புக்களை வழங்கி மொழி விருத்திக்கு உதவுகின்றனர்.

அன்றாட வாழ்வியல் பழக்கங்கள் குடும்பங்களினால் அனுபவமுறைகளாக கற்பிக்கப்படுகின்றன. ஒழுங்கு, சுத்தம், நம்பிக்கை, தொடர் செயல், நேர முகாமை போன்ற பலவும் குடும்ப பழக்கங்களிலிருந்து வடிவமைக்கப்படுகின்றன. உடை, உணவு, ஒழுங்குக்கிரமங்கள் கடவுள் வழிபாடு, கற்கும் நேரங்கள் போன்ற பல விடயங்களையும் அவை பற்றிய உணர்வுகளையும் நடத்தைகளையும் குடும்பம்தான் போதித்து வந்திருக்கிறது.

சமயப் பழக்கங்கள் குடும்பங்களினால் வளர்க்கப்படுவது வழமை. சில குடும்பங்களில் வலுவான சமய ஆசாரங்கள் பிள்ளைகளின் நடத்தை மாதிரிகளின் தன்மையை கூர்மையாக நிர்ணயித்து வருவதுண்டு. சமய குருமார், போதகர்கள், ஓதுவார்கள், இசைக் கலைஞர்கள் போன்றோரின் பிள்ளைகளிடம் விசேடித்த கற்றல் மற்றும் பயிற்சியை குடும்பங்கள் வலியுறுத்தி வருவதையும் காண்கின்றோம். பொலிஸ் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் போன்றோரின் பிள்ளைகளிடமும் செயல் ஒழுங்குகளும் கட்டுப்பாடான நடத்தைகளும் தீவிரமாக வலியுறுத்தப்படுவதை நன்கு அவதானிக்க முடியும்.

வீட்டுக்கு வெளியே தொழிலின் நிமித்தம் செல்லாத தாய்மாரின் பிள்ளைகள் பலவகை அறிவையும், திறன்களையும், தேர்ச்சிகளையும், மனப்பாங்கையும் முறையில் மாதிரியில் கற்றுத் தேர்வதை வரலாற்று ரீதியாக அவதானித்து வந்துள்ளோம். சமைத்தல், உடைகளை பராமரித்தல், தைத்தல், வீட்டுத் தோட்டப் பராமரிப்பு, கால்நடை வளர்ப்பு போன்ற பல்வகைத் திறன்களையும் தாய்மாரிட மிருந்து பெண்பிள்ளைகள் கற்று வந்தனர். தொழில் பார்க்கும் தேவை தாய்மாருக்கு கட்டாயமான போது இப்பணிகளிலிருந்து மெல்ல மெல்ல தாய்மார் தம்மை விடுவித்தனர். வேலையாட்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அவை கையளிக்கப் பட்டன. இது சமூக வளர்ச்சியின் ஒரு படிமுறை தான். பெண் விடுதலையின் முதன்மை மிக்க பரிமாணம்தான். இதனால் பிள்ளைகள் தாயிடமிருந்து முன்பு கற்றுக் கொண்ட பலவற்றை இன்று இழந்துவிட்டனர்.

இதே போல் மரபுவழித் தொழில்கள் பல வசிப்பிட வீடுகளுடன் இணைக்கப்பட்ட தொழிற் கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட போது தொழில்சார் கண்ணோட்டம், தொழில் ஈடுபாடு, தொழில் மகத்துவம் போன்ற பலவற்றையும் உணர்ந்து கொண்டதோடு கருவிகளைக் கையாளும் திறன்கள், தொழிற்தேர்ச்சி போன்றவற்றையும் கற்றுக் கொண்டிருந்தனர். தொழில் அடிப்படையில் முன்னேற்றகரமான மேல்நிலைத் தொழில்கள் நோக்கி நகர்வதை இவை தடுத்துவிட்டன என்ற குற்றச்சாட்டு சமூகவியல் நோக்கில் முன்வைக்கப் படுவதையும் நிராகரிக்க முடியாது. தொழில் அடிப்படையிலான சாதி முறை சார்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களிலான பாரபட்சம், புதிய திறன்களை குடும்ப மாதிரியில் நிராகரிக்கும் நடைமுறைகள் போன்றனவே இளம் பருவத்தில் இயல்பாகவே குடும்பத்தொழில் களைக் கைத்தொழில்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஆண் பிள்ளை களுக்கு இல்லாமற் செய்துவிட்டன என்பதும் வருத்தம் தரும் உண்மையாகும்.

குடும்ப விழுமியம், தொழில், மானிட திறன் விருத்தி என்பன தொடர்பான வரலாற்றைக் காலத்தில் செய்துவந்த பங்களிப்பு கைவிடப்பட்டுவிட்டது.

கல்வி - தொழில் - வாழ்க்கை என்ற தொடர் ஒழுங்குமுறையிலான வாழ்வை குடும்பங்களிலிருந்து பிள்ளைகள் பெற்று வந்த வாய்ப்பு பெரிதும் கைநழுவிப் போவதை நன்கு அவதானிக்க முடியும். இது வருத்தம் தருகின்ற மாற்றம் தான்.

தாயின் கண்காணிப்பில் கற்றல்

பிள்ளைகள் விடலைப் பருவத்தை அடையும்வரை தாயின் நிழலில் மகிழ்ச்சி யுறுபவர்கள் அதில் வளருபவர்கள். அவர்கள் அதிகம் நேசிக்கும் நபராகவும் நம்புகின்ற நபராகவும் வாழ்பர்கள் அன்னையர்தான். இது உயிரியல் முறைசார்ந்த உறவுதான். எனினும் எமது சமூக வாழ்வு அதனைப் பலமடங்கு வலிமைப்படுத்தியுள்ளது.

எமது பண்பாட்டின் வலிமையும் பாதுகாப்பும் இதுதான். இது தான் எமது சிறார்களின் கற்றலில் தாய் என்பவர் அன்புரிமை மிக்க மேற்பார்வையாளராக, கண்காணிப்பாளராக, வழிகாட்டியாக செயற் படுவதற்கு வழிவகுத்தது.

மிகவும் வறிய எழுத்தறிவற்ற தாய்மார் நீங்கலாக ஏனையவர்கள் மாலை வேளை களில் பிள்ளைகளின் கற்றலை ஒழுங்கு படுத்தி வந்தனர். இது நாளாந்த குடும்ப மாலை நிகழ்ச்சி நிரலாக இருந்து வந்தது. இதில் தாய்மார் பின்வரும் மாதிரிகளில் பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர்.

1. பிள்ளைகள் பள்ளியில் பயன்படுத்தும் பயிற்சிப் புத்தகங்களை பார்வையிடல்.
2. பிள்ளைகளை கடவுள் வழிபாட்டின் பின் பள்ளியில் படித்த பாடங்களைப்

பயிலுமாறு பணித்தல், மேற்பார்வை செய்தல், தம்மாலியன்றளவு உதவுதல்.

3. பிள்ளையின் பள்ளிக்கூட வாழ்வு பற்றி உசாவுதல் - அதாவது பிள்ளையின் நண்பர்கள், ஆசிரியர்கள், பள்ளிக்கூட நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றைப் பற்றிக் கேட்டறிதலும், அபிப்பிராயம் உருவாக்கலும், வழிகாட்டலும்.
4. பரீட்சைக் கால அடைவுப் புள்ளிகள் பற்றி கலந்துரையாடல் விசாரித்தல், வலியுறுத்தல், முதன்மையை உணரச் செய்தல் மீள் ஊக்கங்களை வழங்குதல்.

இந்த மேற்பார்வைப் பங்குதான் மாலை வேளையில் பிள்ளைகள் கற்றலை குடும்பப் பண்பாடாக மாற்றியிருந்தது. பிள்ளைகள் நிறைய கற்றார்கள், கருத்துப் பரிமாற்றம் செய்தார்கள். தாயின் ஈடுபாடு பற்றி வகுப்பில் சகபாடிகளுடனும் ஆசிரியர்களுடனும் தேவைக்கேற்ப உரையாடி மகிழ்ந்தனர்.

தற்போது இந்த மாலை வேளை குடும்ப மட்ட கற்றல் மேற்பார்வை முறை கைவிடப்பட்டுவிட்டது. இதற்குப் பல காரணிகள் பொறுப்பாக உள்ளன.

1. பெரும்பாலான பெற்றோர் தொழிலின் நிமித்தம் வீட்டுக்கு வெளியே செல்லுதல், அதிக தூரம் பயணம் செய்தல், வேலைக் களைப்புடன் வீடு திரும்புதல், இரவு நேர வீட்டு வேலைகளில் பரபரப்புடன் ஈடுபடுதல்.

2. பிள்ளைகள் பாடசாலை விட்டபின் ரியூசன் வகுப்புக்கு சென்று அதிக மாணவருடன் அமர்ந்து பாடம் கேட்டல் (கிரகிக்கின்றனரா என்பது உறுதிப் படுத்தப்படவில்லை) அதனால் அதிக உடற்களைப்புடன் வீடு திரும்புதல், ஓய்வுத் தேவை உணர்வுடன் வீட்டிற்கு வருதல்.

3. நடுத்தர வருமானம் உள்ள குடும்பங்களின் மாலை வேளை பொழுது போக்கு எஜமானாக தொலைகாட்சி தொடர் நாடகங்களும், பிற கலை நிகழ்ச்சிகளும் அமைந்திருத்தல். இதில் 50% நேரம் விளம்பர மோகினியின் மின்னியல் அட்டகாசத்தின் ஆதிக்கத்தில் குடும்ப அங்கத்தவர் அனைவரும் கட்டுப்படுதல், இது இரவு 11.00 மணி வரை நீண்டு செல்லுதல். குடும்பத்தில் எல்லா வயதினர் மீதும் இந்த செலவு மிக்க மின்னியல் பொழுதுபோக்கு அரக்கனின் ஆதிக்கம் மேலாண்மையுடனிருத்தல்.

4. தாயும் களைத்து, பிள்ளைகளும் களைத்து வீடு திரும்பும் நகர்மய குடும்ப வாழ்வு பொறிமுறையில் தாய் பிள்ளைகள் மட்டத்திலான உணர்வுப் பரிமாற்றம், தகவல் பரிமாற்றம், கற்றல் மதிப்பீடு, கற்றல் உறக்கம் என்பன அடிபட்டுப் போய்விட்டன.

இத்தகைய குடும்ப நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட புரள்வு பாதகமான திசை நோக்கிய குடும்ப செயலாற்று அசைவானது பிள்ளைகளின் சுய கற்றலை பெரிதும் பாதித்து விட்டது. பிள்ளையின் படிப்புப் பற்றிய பெற்றோர் இடைவினையுறவை மிக மோசமாக சிதைத்துவிட்டது.

இத்தகைய குடும்ப செயல் முறைகளில் ஏற்பட்டுள்ள கிடையான அசைவியக்கமானது பிள்ளைகளில் கற்றல் தொடர்பான குடும்ப ஈடுபாட்டை வெட்டிப் பிரித்துவிட்டது.

குடும்ப வாசிப்பும் அதற்குதவும் நூல்களும்

இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு யாழ்ப்பாணப் பிரதேச வீடுகளில் எல்லோரும் பொதுவாக வாசிப்பதற்கான நேரமும் பழக்கமும் காணப்பட்டன. குடும்ப சஞ்சிகைகள் பல இந்தியாவிலிருந்து

அதிகளவில் வந்துசேர்ந்தன. அவற்றில் வெளிவரும் படைப்புகளின் இலக்கு வாசிப்பாளர் குடும்பத்துப் பெண்கள் தான் என வலுவாக நம்பப்பட்டது. அதில் உண்மையுமிருந்தது.

மென்மையான முறையில் பண்பாடு மிக்க உரையாடல்களும் முதிர்ச்சி பெற்ற கதாபாத்திரங்களும் யதார்த்த சம்பவங்களும் தொடர்புபடும் பல புனைவுகளை அந்த நூல்கள் தாங்கிவந்தன. இதனால் குடும்பத்தில் எல்லோரும் வாராவாரம் காத்திருந்து போட்டிபோட்டு வாசித்தனர். இதனால் வாசித்தல் என்பது குடும்பத்தினரின் இன்றியமையாத கடமைக் கூறுகளில் ஒன்றாகியது. இந்த நூல்களே குடும்ப அங்கத்தவரிடையில் உறவுகளை ஒன்றிணைக்கும் அறிவுச் சங்கிலிகளாகவும் விளங்கின. இதனால் மொழியறிவும் வாசிப்புத் தேர்ச்சியும் வளர்ந்ததோடு பண்பட்ட உணர்வுகளும் செம்மைப் படுத்தப்பட்ட குணச்சித்திரங்களும் வளர்க்கப் பட்டன. இது பிள்ளைகளிடமும் வாசிப்பு நாட்டத்தையும் வாசிக்கும் ஆசையையும் உருவாக்கியிருந்தது.

இத்தகைய நூல்களையும் வாசிப்புக் களையும் சுற்றி வளர்த்த பிள்ளைகளின் கற்றல் கலாசாரம் தேய்ந்து மறைந்து போய்விட்டது. இது குடும்பங்களில் ஏற்பட்ட கல்விசார் தேய்மானம்தான், தோல்விதான். தொலைக்காட்சிகள் இந்த நூல்களைப் பதிலிடுவதாகக் கூறுவது பூந்தோட்டங் களுக்குள் உலாவுவதற்குப் பதிலாக இரைச்சல் மிக்கதும் ஆபத்து ஏற்படுத்து வதுமான இரசாயனத் தொழிற்சாலையில் உலாவுவது போலானதே. நூல்கள், பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கம் குடும்பப் பண்பாடாக உயிர்ப்புடன் இல்லாமல் போனதால் பிள்ளைகளின் வாசிப்புத்திறன் தேய்ந்து போய்விட்டது என்பது பேருண்மை யாகும்.

கதை செல்லும் பாட்டிகள் காணாமல் போனதெப்படி?

முன்பெல்லாம் குடும்பம் குதூகலப் பூந்தோட்டமாக இருந்தது. சகோதரர், அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா என்ற குடும்ப உறவுகளினால் பிணைக்கப்பட்ட உயிர்ப் புள்ள இல்லங்களாக அவை விளங்கின.

முதியோரின் அறிவுரை, ஆலோசனை, அதிகாரமும், அன்புரிமையும் இணைந்த கட்டுப்பாடு, கடமை மீதூரப் பெற்ற கண்காணிப்பு என்றவாறு அனுபவ வழிகாட்டல்கள் இருந்தன. பிள்ளைகளும் மதித்தல், கட்டுப்படுதல், கடமை செய்தல் என்ற வாழ்வியல் மாண்புகளை மூத்தோரிடமிருந்து பெற்று வளர்த்தனர். அனுபவங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட அறிவையும் செயலாற்றங்களையும் பாட்டிமார் இரண்டாம் தலைமுறையினரான பேரப்பிள்ளைகளுக்கு கை மாற்றிவந்தனர். இந்த வாழ்வியல் கல்வி பிள்ளைகளின் கற்றல் உன்னதங்களை உறுதிப்படுத்தின. அவற்றுக்கு உரமூட்டின.

மாலை மற்றும் முன்னிரவுகளில் பிள்ளைகள் பாட்டியைச் சுற்றி உலாவருவர். கதை சொல்லும் மானிடத் தொலைக்காட்சி யாக பாட்டி இருந்தார்.

''ஒரே ஒரு ஊரிலே ஒரு இராசா இருந்தார்...''

''ஒரு நாள் அவர்..''

இவ்வாறு ''ஒரு'' மைய கதைத் தொடர்களை கூறினார்கள். ஆவலைத் தூண்டும் வகையில் கதைகளை நிறுத்தி விட்டுப் பிள்ளைகளிடம் கேள்விகளை மதிப்பீட்டு வினாக்களாக கேட்பார்கள்.

''காட்டில் இராசா எதைக் கண்டார்''

''அந்த குரங்கு முதலைக்கு என்ன சொன்னது''

இந்த மாதிரி வினாக்களை எறிந்து விட்டு பாட்டி ஓய்வெடுத்தார். பிள்ளைகள் ஞாபகத்தை உறுதிப்படுத்தினார்கள், கலந்துரையாடினார்கள். திரும்பவும் சொல்லியதையே சொல்லும்படி கெஞ்சிக் கேட்பார்கள். இப்படிப் பிள்ளைகளுக்கும் பாட்டிக்குமான அன்புரிமை அறிவுத்தேடலை வளர்ப்பதாகவே பாட்டி கதை சொல்லும் கலாசாரம் உயிருடனிருந்தது.

இன்று வீடுகளில் பாட்டிமார் இல்லை. அவர்கள் வயோதிபர் இல்லங்களில், பிள்ளைகள் பச்சை இரத்தம் சொட்டும் வன்முறைக் காட்சிகளைக் கொப்பளிக்கும் தொலைக்காட்சிகள் முன்னால்.

பாட்டிகள் இருந்தாலும் பலருக்கு கதைகள் தெரியாது அல்லது அவர்களும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் கைதிகளாகி விட்டிருப்பர்.

இந்த குதூகலம் நிறைந்த உயிரோட்டமான இரண்டு தலைமுறையினரிடையிலான தொடர்பாடல்கள் கற்றல் திறன்களை வளர்த்தன. அறிவை மேம்படுத்தின, மானிட உணர்வுகளின் மேன்மையை உணர்த்தின. குதூகலக் குடும்பங்களில் பிள்ளைகள் முறையில் கல்வியால் மேம்பாடடைந்தனர்.

இந்தக் கலாசாரத்தை தொலைத்து விட்டதால் வீட்டில் கற்றல் சூழல் காணாமல் போய்விட்டது எங்கோ தொலைந்து போய் விட்டது.

முடிவுரை

இப்படி குடும்பங்களின் கட்டமைப்பு மாற்றங்களினால் கற்றல் வாய்ப்புக்களும் ஊக்கமும் குறைந்து போய் விட்டது.

தாய்மாரின் பங்களிப்பும், பணிநிலையும் மாறிப்போனதால் அவர்களின் உதவியற்ற அநாதைகளாகிப் போனார்கள் குடும்பப் பிள்ளைகள்.

அனுபவச் சுரங்கங்களான மூத்தோரை இழந்துவிட்டு தொழில்நுட்பக் கருவிகளினாலும் பணப்பசியுடன் அலையும் வணிகமயப்பட்ட கல்வி நிறுவனங்களினாலும் பள்ளிப் பிள்ளைகள் சிறைப் பிடிக்கப்பட்டு விட்டார்கள்.

பொருள்தேடல் முனைப்பும், போட்டி நிலை அந்தஸ்துணர்வும் குடும்பத்தவர்களை பணம்தேடும் இயந்திரங்களாக்கிவிட்டன. அவர்கள் தம் பிள்ளைகளை அடைப்பதற்காக சரணாலயங்களாக புதிய பள்ளிகளைத் தேடியலைகின்றனர்.

குடும்பங்களின் கட்டமைப்பும் இலக்கும் குலைந்ததால் பிள்ளைகள் கற்றல் ஊக்கங்களை வெளியுலகில் பணம் கொடுத்து தேடிக் கொண்டிருக்கின்றார்கள். உணர்வுகளும் விழுமியங்களுமற்ற சடங்குமுறைக் கல்வி வழங்கும் நிறுவனங்களில் பொறிமுறையில் செயற்படும் ஆசிரியர்களைத் தேடி அலைகின்றார்கள். இதுவே இன்றைய பிள்ளைகளின் கற்றல் வாழ்க்கையாகும்.

குடும்பங்களிலிருந்து கல்வித்தேவைக்காக குடும்பங்களைவிட்டு அதிக தொலைவிற்கு பிள்ளைகள் போய்விட்டார்கள். அவர்களை திரும்பவும் அழைக்க முடியுமா? குடும்பங்கள் உண்மையானவர்களை உருவாக்குமா? சமூகம் தான் விடைகாண வேண்டும்.

பாடசாலை இந்துமாமன்றத்தினர் - 2013

இடமிருந்து வலம் :

நிரை 1 : த. சந்தோஷ் (தலைவர்), திருமதி வி. தவேந்திரராசா (பொறுப்பாசிரியர்), திரு. ந. தேவராசா (போஷகர்), திருமதி ஜெ. சிவநடராசா, ப. அஜானா (செயலாளர்)

நிரை 2 : மோ. கிர்திகா, சி. விஸ்னுகா, உ. ஹாவியா, கே. கேஷிகா, க. சாகித்யன் (பொருளாளர்), மு. அனுதர்சன், வ. மிதுன், பி. துவாரகா

2013 மாகாணமட்ட வினாடிவினாப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்ற மாணவர்களும் அதிபர் மற்றும் வகுப்பாசிரியர்களும்

தொற்றா நோய்களை வருமுன் தடுப்போம்

Dr. கி. சிவராமன்
MBBS (Colombo), MD (Colombo), MRCP(UK)
பொதுவைத்திய நிபுணர்
ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை.

மாரடைப்பு, புற்று நோய், சலரோகம், உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல், பாரிசவாதம், மிக உடற் பருமன் போன்றவை தொற்றா நோய் களாகும். மிகை உடற் பருமனினால் இருதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம், பக்கவாதம், நீரிழிவு, மூட்டுவாதம் போன்ற நோய்கள் அதிகமாக ஏற்படுகின்றன.

எமது நாட்டின் வருடாந்த இறப்பு வீதத்தின் மூன்றில் இரண்டு பங்கு இறப்பு களிற்கு தொற்றா நோய்களே காரணமாக அமைந்துள்ளன. இவற்றில் முப்பது வீதமான இறப்புகளிற்கு இருதய நோய்கள் காரணமாகின்றன. பெரும்பாலான இறப்புக்கள் 65 வயதிற்கு உட்பட்ட மக்களில் ஏற்படுகின்றன. இதன் காரணமாக தொற்றா நோய்கள் சமூகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை பாதிக்கின்றன. எனவே தொற்றா நோய்களைத் தடுப்பது மிக முக்கியமானதொன்றாக உள்ளது.

சரியான உணவு, உடற்பயிற்சி, தியானம், மதுபானம் மற்றும் புகைத்தல் பாவனையை நிறுத்துதல் மூலம் தொற்றா நோய்கள் ஏற்படுவதை தடுக்கமுடியும்.

Food Pyramid



சரியான உணவு வகைகளைத் தேர்ந் தெடுப்பதன் மூலம் நாம் ஆரோக்கியமாக நீண்ட காலம் உயிர் வாழலாம். உணவுப் பிரமிட்டுக்கு ஏற்ப உணவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எமது உணவில் அதிகளவில் மரக்கறி வகைகளும் எண்ணெய் கொழுப்பு சேர்ந்த உணவுகளை குறைவாகவும் உட்கொள்ள வேண்டும். உதாரணமாக முழுஆடைப் பால்மா, பாலுணவுகள், பாற்கட்டி, வெண்ணெய் மற்றும் கொழுப்பு அதிகமாக உள்ள இறைச்சி வகைகளான ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி மற்றும் சிற்றுண்டி வகைகளான றோல், பற்றிஸ், கட்லட், கேக் வகைகளை குறைந்த அளவில் உட்கொள்ளவேண்டும். உப்பு மிக குறைந்த அளவில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். நோயற்ற ஒருவருக்கு தினமும் தேவையான உப்பின் அளவு 5 g (ஒரு தேக்கரண்டி) ஆகும். எமது உடம்பிற்கு தேவையானவற்றில் நீரும் மிக முக்கியமான தொன்றாகும். தினமும் சுத்தமான நீரை தாகத்திற்காக அதிகளவில் பருகுதல் வேண்டும். குளிர்பானங்கள் அருந்துவதை கூடிய அளவில் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாம் தினமும் 30 நிமிடங்கள் உடற் பயிற்சி செய்தல் வேண்டும். அலுவலகத்தில் இருந்து வீடு செல்லும்போது இரண்டு பஸ் தரிப்பு நிலையங்கள் முன்பாக இறங்கி கைகளை நன்கு வீசி நடந்தால் எமக்கு தேவையான உடற்பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம். தினமும் மின்தூக்கியில் செல்லாது படிக்கட்டுகளில் நடந்து செல்வது மிகவும் நல்லது. தினமும் குறைந்தது பத்து நிமிடங்களாவது தியானத்தில் ஈடுபட வேண்டும்.

மதுபானம், புகைத்தல் போன்றவற்றி னால் மேற்குறிப்பிட்ட நோய்களுக்கு உள்ளாக வேண்டிவரும். எனவே புகைத்தல் மதுபானம் அருந்துதல் போன்ற வற்றை தவிருங்கள். புகைப்பிடிப்பதனால் நீங்கள் மட்டுமல்லாது உங்கள் அன்புக் குரியவர்களையும் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாக்கும் செயலாகும் என்பதை மறக்க வேண்டாம்.

சுகமான வாழ்வுக்கு ஐந்து வழிகள்.

1. சரியான உணவுக்கு பழக்கப் படுவோம்.
2. சுறுசுறுப்பான வாழ்க்கைக்கு பழக்கப் படுவோம்.
3. உயரத்திற்கு ஏற்ப நிறையைப் பேணுவோம்.
4. மதுபானம் புகையிலைப் பாவனை யிலிருந்து விடுபடுவோம்.
5. மனநலத்தோடு வாழ்வோம்.

நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாள் உண்டநீரைத்
தலையாலே தான் தருதலால்.

- வாக்குண்டாம்

வாய்ச் சுகாதாரத்தைப் பேணுவோம்

திருமதி நந்தினி உதயகுமார்
பாடசாலைப் பற்சிகிச்சையாளர்

''பல்லுப் போனால் சொல்லுப் போச்சு'', ''ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி'' என்றெல்லாம் எமது முன்னோர்கள் பழமொழிகள் மூலம் எமக்குப் பல்லின் அவசியத்தை உணர்த்தியிருக்கின்றார்கள். முகத்தின் அழகான தோற்றத்திற்குப் பற்கள் என்றென்றும் அவசியம். முத்துப் போன்ற பல்வரிசையை விரும்பாதோர் யாருமுண்டோ? நாம் உயிரோடு உள்ளவரை எமக்குப் பல்வேறு தேவைகளுக்குப் பற்கள் மிகவும் அவசியமாகின்றது. ஆகவே பல்லின் அவசியம் பற்றியும் பல்லில் ஏற்படும் நோய்கள், அவற்றிலிருந்து பல்லைப் பாதுகாப்பது பற்றியும் நாம் அறிந்திருத்தல் அவசியமாகின்றது.

பற்கள் எமக்குப் பின்வரும் தேவைகளுக்கு அவசியமாகும்.

1. **உணவை அரைத்துச் சாப்பிடுவதற்கு.** பிள்ளைகளின் சீரான ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு பல்வேறு உணவுகளிலிருந்து கிடைக்கும் ஊட்டச்சத்துக்கள் அவசியமாகும். உள்ளெடுக்கும் உணவுகளைச் சிறுதுண்டுகளாக்கி நன்றாகமென்று அரைத்து உண்பதன் மூலம் போசணைச் சத்துக்கள் உடலினுள் இலகுவாக அகத்துறிஞ்சப்படும்.

பற்கள் சிதைவடைந்தால் அல்லது பற்சூத்தையால் பாதிக்கப்பட்டிருப்பின் எல்லா விதமான உணவுகளையும் உள்ளெடுப்பது கடினம். இதனால் மந்த போசணை ஏற்பட்டு உடல் வளர்ச்சி குன்றும். பிள்ளைகளில் உடல் வளர்ச்சி குன்றுவதனால் மூளை வளர்ச்சி குறைவடையும். மந்த போசணை ஏற்படுவதால் இலகுவில் நோய்த் தாக்கத்திற்குள்ளாகலாம்.

2. **சொற்களைச் சரியாக உச்சரிப்பதற்கு.** பிள்ளைகள் கல்வியில் சிறந்த நிலைக்கு வரவேண்டுமாயின் சிறு பராயத்திலிருந்தே நன்கு பேசப் பழகிக் கொள்ளுதல் அவசியமாகும். குழந்தைகளின் சிறு பராயத்திலேயே பற்கள் குறிப்பாக வெட்டும் பற்கள் (முன் பற்கள்) இல்லாமல் போவதனால் சொற்களைச் சரியான முறையில் உச்சரிப்பது கடினமாகும். இதனால் பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றமற்ற நிலை உருவாகும்.

3. **முகத்தின் வசீகரமான தோற்றத்திற்கும் அழகிய புன்னகைக்கும்.** முன்பற்கள் சிறுபராயத்தில் இழக்கப் படுவதனால் பிள்ளைகளுக்குச் சிரித்தல், சமூகத்தில் கலந்து பழகுதல், ஏனைய விடயங்களில் வெறுப்புப் போன்ற காரணிகளால் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையில் முன்னேற்றமற்ற நிலைக்குத் தள்ளப்படலாம். வகுப்பில் சகபாடிகளின் ஏளனத்திற்குள்ளாவதால் தாழ்வு மனப்பான்மை ஏற்படலாம்.

பற்கள் 2 வகையாக வகைப்படுத்தப்படும்.

1. **பாற்பற்கள்**

ஒரு குழந்தை பிறந்து 8 - 9 மாதத்திலேயே முதலாவது பல் முளைக்கத்தொடங்கி 30 - 36 மாதத்திற்குள் 20 பற்கள் முளைத்து விடும். இவை உருவத்தில் சிறிய பற்கள். இப் பாற்பற்கள் அனைத்தும் விழுந்து முளைக்கும் வரை பற்சூத்தையிலிருந்து பாதுகாக்கப்படுவது அவசியமாகும்.

வெட்டும் பற்கள் 2/2

வேட்டைப்பற்கள் 1/ 1
கடவாய்ப்பற்கள் 2/ 2

2. நிரந்தரப்பற்கள்

நிரந்தரப்பற்களின் எண்ணிக்கை 32 ஆகும். 6 வயதில் பாற்பற்கள் இருக்கும் போதே அவற்றின் பின்பகுதியில் தாடையில் முதலாவது கடவாய்ப் பல் தோன்றும். முதலாவது கடவாய்ப் பல் முளைத்தபின் பாற்பற்கள் ஒவ்வொன்றாக விழத்தொடங்கி நிரந்தரப் பற்கள் தோன்றும். முன்பற்களே முதலில் விழத்தொடங்கும். 12 - 13 வயதுகளில் பிள்ளைகளில் அனைத்துப் பாற்பற்களும் விழுந்து நிரந்தரப்பற்கள் 28 முளைத்து விடும். 1 - 24 வயதிற்குள் அனேகமானோருக்கு அனைத்து நிரந்தரப் பற்களும் முளைத்து 32 நிரந்தரப்பற்கள் காணப்படும்.

வெட்டும் பற்கள் 2/ 2
வேட்டைப்பற்கள் 1/ 1
முன்கடவாய்ப் பற்கள் 2/ 2
பின்கடவாய்ப்பற்கள் 3/ 3

சில குழந்தைகளில் பல் தோன்றும் காலம் சாதாரண வயதை விட சில மாதங்கள் முன்பாகவோ அல்லது தாமதமாகவோ இருக்கலாம். சிலருக்குப் பிறக்கும்போதே பற்கள் தோன்றியிருக்கும்.

பல்லின் நெடுக்கு வெட்டு முகம்



பல்லில் ஏற்படும் பிரதான நோய்களாவன

1. பற்சூத்தை

உணவை உண்டபின் பற்களுக் கிடையில் சிக்கியுள்ள உணவுத் துணிக்கை களான காபோவைதரேற் (Fermentable carbohydrate) இனிப்பு வகைகள் வாய்க் குழியில் உமிழ்நீரிலுள்ள பக்ரீரியாக்களுடன் (Strepto coccus mutans, Lactobacillus) தாக்கமடைந்து வெளியேற்றும் அமிலமானது (Lactic acid) பல் மிளிரியிலுள்ள கல்சியத் துடன் தாக்கமடைந்து பல்மிளிரியை அகற்றும். இதனால் பல்லின் மேற்பரப்பில் பற்சூத்தை ஏற்படும்.

பற்சூத்தையின் அறிகுறிகள்.

1. பல்லில் வெள்ளை நிறப்புள்ளிகள் உருவாதல். (White patches)
2. பின் நாளடைவில் வெள்ளை நிறப்புள்ளி கபிலநிறமாகிக் கறுப்பு நிறமாகும். (Black patches)
3. கறுப்புப் புள்ளியுள்ள இடத்தில் தொடர்ந்தும் அமிலம் தேங்குவதால் துவாரம் ஏற்படும். (Cavity)
4. சூடான அல்லது குளிரான பதார்த்தங் களை உள்ளெடுக்கும்போது பல்லில் கூச்சம் ஏற்படும். (Sensitivity)
5. பல்லில் நோ ஏற்படும். (Pain)

6. வீக்கம் தோன்றி சீழ் கட்டி ஏற்படும். (Swelling & Pus formation)

பற்சூத்தையின் படிமுறைகள்.



நிலை I நிலை II நிலை III நிலை VI

நிலை I - வெள்ளை நிறப் புள்ளி கறுப்பு நிறமாகி பல் மிளிரியில் காணப்படும் - பல் அடைக்கலாம்.

நிலை II - கறுப்புப் புள்ளியுள்ள இடத்தில் துவாரம் ஏற்படும். - பல் அடைக்கலாம்.

நிலை III - துவாரம் பன்முதலிலும் பரவுவதால் பல்லில் கூச்சம் ஏற்படும் - பல் அடைக்கலாம்.

நிலை IV - பற்சூத்தை பச்சைக் குழியில் பரவுவதால் நோ ஏற்படும் - வீங்கி முரசுப்பகுதியில் சீழ் கட்டி ஏற்படும். - பல் அடைக்க முடியாது, பிடுங்க வேண்டும்.

பற்சூத்தையைக் கட்டுப்படுத்துதல்.

1. **இனிப்பு உணவுக் கட்டுப்பாடு.**

- இனிப்பு உண்ணும் தடவை, காலம், அளவு என்பன குறைக்கப்படல்.
- இனிப்பு உணவுகளைப் பிரதான உணவு வேளைகளில் உணவு உண்டபின் உண்ணல். அடிக்கடி உண்ணுதலைத் தவிர்த்தல்.
- குழந்தைகளுக்கு இனிப்பு உணவுகளை அறிமுகப்படுத்தலைத் தாமதித்தல்.
- பாலில் சீனி சேர்த்தலைத் தவிர்த்தல்.
- இனிப்பு உணவுகளுக்குப் பதிலாக உள்ளூரில் கிடைக்கக்கூடிய பழவகைகளை உண்ணல். பழங்களிலுள்ள விற்றமின் உடலுக்கு அவசியமானது.

2. பற்களுக்கு நன்மை விளைவிக்கக் கூடிய (Tooth friendly foods) உணவு வகைகள், பழங்கள், மரக்கறி வகைகள், பால் உணவு வகைகளை உள்ளெடுத்தல்.

3. பிரதான உணவு வேளைகளின் பின் நறுக்கென்று கடிபடக்கூடிய பற்களைச் சுத்தமாக்கும் (Detergent foods) உணவு வகைகளை உண்ணவேண்டும்.
உ - ம் கரட், அப்பிள், வெள்ளரிக்காய்.

4. பற்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய ஒட்டும் தன்மையுள்ள உணவுகளை (பிஸ்கற், ரொபி, கேக், லொலிபொப், சோடா) உள்ளெடுத்தலைக் குறைத்தல் அல்லது தவிர்த்தல்.

5. தினமும் குறைந்தது 2 தடவையாவது (காலை, இரவு உணவு உண்டபின்) சரியான முறையில் பற்தூரிகை, புளோரைட் அடங்கிய பற்பசை கொண்டு பல் துலக்கல்.

6. பற்சூத்தையை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதற்குரிய சிகிச்சையை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளல்.

பிள்ளைகளில் பாற்பற்களில் ஏற்படும் பற்சூத்தையைக் கவனயீனமாகவிடாது உரிய நேரத்தில் உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

தகுந்தநேரத்தில் பாற்பற்களில் ஏற்படும் பற்சூத்தையைக் கவனிக்காவிடின் அல்லது இழப்பின் நிரந்தரப் பற்கள் முளைக்கும் போது பாதிப்பு ஏற்படலாம். பற்சூத்தையால் பாற்பற்கள் விழவேண்டிய காலத்தின் முன் இழக்கப்படின் இவ்விடைவெளியினை மூடுவதற்கு அதற்குப் பின்னாலுள்ள பற்கள் முன்தள்ளப்படுகின்றன. இதனால் இழக்கப்பட்ட பாற்பல்லின் இடைவெளியில் முளைக்கவேண்டிய நிரந்தரப்பல் இடம் மாறி முளைப்பதால் பல் வரிசை ஒழுங்காக அமையாது ஒன்றின் மேலொன்று முளைத்து அசிங்கமான தோற்றத்தை ஏற்படுத்தும்.

பற்சூத்தைக்குக் காரணமான பக்ரீரியாக்கள் அம்மாவிடமிருந்து குழந்தைகளுக்குத் தொற்றக்கூடியவை. இதன் காரணமாகக் கர்ப்பமான பெண்கள் தங்கள்

வாய்ச் சுகாதாரத்தை நல்ல நிலையில் பேணவேண்டியது அவசியமாகும். தற்போது ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்மாரும் கர்ப்ப காலத்தில் பல் வைத்தியரிடம் ஆலோசனை யைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

2. முரசு வியாதி

முரசு வியாதியின் முக்கிய காரணி நுண்கிருமிகளின் படலமாகிய பிளாக் (Plaque) ஆகும். உணவு உட்கொண்ட பின் பற்களைச் சரியான முறையில் துலக்காதுவிடின் உணவுத் துணிக்கைகள் பற்களுக்கிடையிலும் முரசின் விளிம்புகளில் முரசிற்கும் பற்களிற்குமிடையேயுள்ள இடைவெளிகளிலும் தங்கியிருக்கும். இந்த உணவுத் துணிக்கைகளுடன் வாய்க்குழியில் உமிழ்நீரிலுள்ள பக்ரீரியாவும் தாக்கமடைவத னால் ஏற்படும் பிளாக் படலம் உருவாகும். இந்த பிளாக் ஒட்டும் தன்மையுள்ள இளம்மஞ்சள் நிறமுடையது. இந்த மஞ்சள் நிறமுள்ள பிளாக்கை சரியான முறையில் பல் துலக்குவதன் மூலம் அகற்றாவிடின் நாளடைவில் உமிழ்நீரிலுள்ள கல்சியத்துடன் சேர்ந்து கடினமாகி கடும்மஞ்சள் நிறமாகிப் பின் கறுப்பு நிறமடைகின்றது. (Calculas or Tartar) இப் படலத்தைப் பல் துலக்குவதன் மூலம் அகற்றமுடியாது. பல் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெறவேண்டும். கவனிக்காது விடின் பின்வரும் அறிகுறிகள் தோன்றும்.

- முரசு சிவந்திருக்கும்.
- முரசின் விளிம்புப் பகுதி வீங்கியிருக்கும்.
- தொடும்போதோ அல்லது பல் துலக்கும் போதோ முரசிலிருந்து இரத்தம் வரும்.
- வாய் துர்நாற்றம் வீசும்.

முரசின் விளிம்புப் பகுதி பாதிக்கப் படுவதன் மூலம் முரசு அழிவடைந்து முரசின் உயரம் குறையத் தொடங்குவதால் பல்லின் வேர் தெரியத் தொடங்கும். வேர் வெளியே தெரிவதால் பல் கூசும். அதிக வலி ஏற்படும். உரிய சிகிச்சை பெறப்படா விடின் நோயின் தாக்கம் அதிகரித்து பல்லை அசையாமல் பிடித்து வைத்திருக்கும் முரசு கரைவதனால் பல் ஆடத்தொடங்கி விழத்தொடங்கும்.

முரசு வியாதியின் படிமுறைகள்
Progression of Gum Disease



படம் I - ஆரோக்கியமான பல்.
நிலை I - முரசு சிவந்திருக்கும்.
நிலை II - முரசின் விளிம்புப் பகுதி வீங்கி யிருக்கும். முரசிலிருந்து இரத்தம் வரும்.
நிலை III - முரசின் உயரம் குறைவத னால் பல்லின் வேர் வெளியே தெரியும்.
நிலை IV - முரசின் பெரும்பகுதி அழிவ தால் பல் ஆடத் தொடங்கும்.
படம் II - பல்லை இழத்தல்

பல் வரிசையின் ஒழுங்கீனம், வாயில் அணியும் கட்டுப் பல், கிளிப் போன்ற உபகரணங்கள், நோய் நிலைமைகள் (நீரிழிவு, லியுக்கேமியா, HIV), ஓமோன் மாறுபாடுகள் (பூப்படைதல், கர்ப்பம் தரித்தல்), தீய பழக்கங்களான புகைத்தல், வெற்றிலை உண்ணுதல் போன்ற சந்தர்ப்பங்களும் முரசு நோய்க்குக் காரணியாக அமைகின்றன.

பற்சூத்தை, முரசு நோய் போன்ற வற்றால் வாய்க்குழியிலுள்ள பக்ரீரியாக்கள் குருதிச் சுற்றோட்டத்திலும் கலந்துகொள்ள ஏதுவாகின்றது. இதனால் இதய நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிக மாகும். அத்துடன் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிறை குறைந்த குழந்தைகள் பிறப்பதற்குரிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

ஆகவே பற்சூத்தை, முரசு நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு சரியான முறையில் பல் துலக்குவது அவசியமாகின்றது. முதலில் சரியான பற்தூரிகையைத் தெரிவு செய்யவேண்டும்.

சரியான பற்தூரிகையைத் தேர்ந்தெடுத்தல்.


X


X


√


X

பற்தூரிகையின் வகை	Soft	√
	Medium	√
	Hard	X

பற்தூரிகையின் தலைப்பகுதி சிறிய தாக இருக்கவேண்டியதுடன் முனை வளை வானதாக இருக்கவேண்டும்.


√


X


X

முனை கூரான விளிம்புகளைக் கொண்டிருப்பின் கடவாய்ப் பற்களைத் துலக்கும்போது கன்னத்தின் உட்பகுதியைக் காயப்படுத்தும் சந்தர்ப்பம் ஏற்படும்.

பற்பசையின் அளவு - சிறிய கடலையின் அளவு போதுமானது.



புளோரைட் அடங்கிய பற்பசையைப் பாவிக்க வேண்டும். புளோரைட் பற்களைப் பற்சூத்தையிலிருந்து பாதுகாப்பளிக்கும். எனவே குறைந்தது 2 தடவையாவது தினமும் பல் துலக்க வேண்டும். பற் தூரிகையில் பற்பசையைப் போடமுன்போ அல்லது போட்ட பின்போ பற்தூரிகையை நீரில் நனைக்கக்கூடாது. கழுவினால் பல் துலக்கும் போது பற்பசை வாயில் நுரைத்து அதனைத் துப்பும் போது புளோரைட் வெளியேற்றப்படுகின்றது.

பல் துலக்கும் முறை

வாயை நன்கு திறந்து வைத்து கீழ்த்தாடை, மேற்றாடைப் பற்களைத் தனித் தனியே துலக்க வேண்டும். வாயிலுள்ள கடைசிப் பல்லிலிருந்து துலக்க ஆரம்பிக்க வேண்டும். முதலில் ஒவ்வொரு பற்களின் வெளிப்பக்கத்தை முரசு விளிம்பில் பற் தூரிகையை வைத்து கடிக்கும் மேற்பரப்பை நோக்கி துலக்கவேண்டும். பின் பல்லின் உட்பக்கத்தையும் முரசின் விளிம்பிலிருந்து கடிக்கும் மேற்பரப்பை நோக்கித் துலக்க வேண்டும். தாடையின் ஒருபக்க மூலையிலிருந்து மறுபக்க மூலைவரை ஒழுங்காகத் துலக்க வேண்டும். பின் கடிக்கும் மேற்பரப்பை முன் பின்னாகத் துலக்கவேண்டும். இறுதியாக நாக்கைச் சுத்தப்படுத்தவேண்டும்.





சரியான முறையில் பல் துலக்க 2 நிமிடங்கள் போதுமானது. பல் துலக்கிய பின் பற்தூரிகையை நன்கு கழுவி தலைப் பகுதியை அதற்குரிய மூடியினால் மூடி தலைப்பகுதி மேல் நோக்கியவாறு அதற்குரிய தாங்கியில் வைக்கவேண்டும். ஒருவரின் பற்தூரிகையை இன்னொருவர் பாவிக்கக்கூடாது. பற்தூரிகையின் தும்புகள் வளைந்து அல்லது சரியாகத் துலக்க முடியாத சந்தர்ப்பத்தில் புதிய பற்தூரிகை மாற்றலாம்.

பற்களைத் துலக்க கை விரல் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும். கை விரலால் பல்லின் எல்லாப் பக்கங்களையும் துலக்கமுடியாது. இரண்டு பற்களுக்கிடையே யுள்ள இடைவெளியினுள்ளும் துலக்க முடியாது. அத்துடன் துலக்கப் பயன் படுத்தும் உமிக்கரி, பற்பொடி போன்றன பல்லின் மேற்பரப்பிலுள்ள பல் மிளிரியைக் கீறி நாளடைவில் வெண்மையான பல்மிளிரி (Enamel) தேய்ந்து மஞ்சள் நிறமான பன்முதல் (Dentine) வெளியே தெரியும். இதனால் பல் கூசும். தாங்கமுடியாத வலி ஏற்படும். ஆகவே கைவிரல், பற்பொடி, கரி போன்றவற்றைப் பாவித்துப் பல் துலக்கு வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

எமது முன்னோர்கள் தமது உணவு களாக ஓடியல், குரக்கன், தினை, சாமை போன்றவற்றை பயன்படுத்தினார்கள். இவை நார்த்தன்மையுள்ள ஒட்டும் தன்மையற்ற உணவுகளாகும். இவை பற்களுக்கு நன்மையே விளைவிக்கின்றது. தற்போதைய உணவுப் பழக்கவழக்கங்களே எமது பல்லுக்குக் கெடுதலை ஏற்படுத்துகின்றது. தற்போதைய உணவுகளில் அனேகமானவை ஒட்டும் தன்மையுள்ளவை. இதனால் பற்களைச் சுத்தமாக்க பற்தூரிகை, பற்பசை அவசியமாகும்.

குழந்தைகளில் பாற்பற்கள் முளைக்க ஆரம்பித்ததும் பற்களைச் சுத்தமாக்க ஆரம்பிக்க வேண்டும். பால் குடித்த பின் சுத்தமான ஈரத்துணியினால் துடைத்து விடவேண்டும் அல்லது சிறிதளவு கொதித் தாறிய நீரைப் பருக்கலாம். அத்துடன் கிழமைக்கு ஒரு தடவை குழந்தையின் பற்களில் வெண்ணிற அல்லது மண்ணிறப் புள்ளிகள் காணப்படுகின்றனவா எனச் சோதிக்க வேண்டும். இவ்வாறான புள்ளிகள் காணப்படுமாயின் பல் மருத்துவரிடம் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வாயிலே 4 பற்கள் முளைத்ததும் பற்தூரிகையைப் பயன்படுத்துவது கட்டாய மானதாகும். மிக மெல்லிய படலமாக புளோரைட் அடங்கிய பற்பசையை பற் தூரிகையில் இடவேண்டும். 12 மாத வயதின் பின் புளோரைட் கொண்ட பற்பசையைச் சிறிய அளவில் மெல்லிய படலமாக இட்டுப் பாவிப்பது கட்டாயமான தாகும்.



பற்தூரிகையில் பற்பசையை மெல்லிய படலமாக இடும் விதம்

ஆகவே பற்களைச் சரியான முறையில் பற்தூரிகை, புளோரைட் அடங்கிய பற்பசை பாவித்துத் தினமும் குறைந்தது 2 தடவை யாவது பல்துலக்குவதன் மூலமும் 6 மாதங்களுக்கு ஒரு தடவை பல் வைத்தியரிடம் சென்று பற்களைப் பரிசோதித்தல் மூலமும் எமது பற்களை ஆரோக்கிமாகப் பேணி சுகதேகியாக வாழ்வோம்.

''நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை''

- வாக்குண்டாம்

''கற்றறிந்தார் நாவினார் சொல்லார் தம் சோர்வஞ்சி
மற்றையவ ராவார் பகர்வர் - பனையின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை ஒலி''

- நாலடியார் : 256

''பல்லான்ற கேள்விப் பயன் உணர்வார் பாடழிந்(து)
அல்லல் உழைப்ப(து) அறிதிரேல் - தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து''

- நாலடியார் : 252

ஆரம்பப் பிரிவு மாணவர்களின் உளநலம் பேணுதலில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் செயற்பாடுகள்

கலாநிதி திருமதி ஜெ. இராசநாயகம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம் :

இன்றைய பாடசாலை மாணவர்கள் மத்தியில் உளச் சீர்குலைவுடன் தொடர்புபட்ட பல பிரச்சினைகள் நாளாந்தம் தோன்றிய வண்ணமுள்ளன. வீட்டில், பாடசாலையில், நாட்டில் என்று எங்கும் குழப்பங்களும் சிக்கல்களும் மலிந்த நிலையில் அவர்கள் மத்தியில் பதட்டம், மனப்பதகளிப்பு, வெறுப்பு, விரக்தி, கவலை போன்றவைகள் அவர்களின் கல்வி அடைவு மட்டங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன. மாணவர்களின் உளநலம் என்பது முக்கியமாக ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும் அவதானிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும். ஆனால் பிள்ளைகளின் பரீட்சை அடைவு மட்டம் என்ற ஒன்றையே கருத்திற் கொண்டு ஆசிரியர்கள், பெற்றோர்கள் செயற்படுகின்றார்களேயொழிய அவர்களின் உளச் சுகாதாரம் பற்றிய எண்ணம் சிறிது கூட இல்லாமல் இருப்பது எதிர்காலத்தில் ஏற்படும் சிறுவர் சார்ந்த ஆபத்தை வளர்த்து விடுவதாகவே அமைகின்றது.

உளநலம் என்பது தனியான ஒரு விடயத்தை மட்டும் குறிப்பிடுவதல்ல. ஆரோக்கியமான உடல்நிலை, ஆரோக்கியமான சமூகச் சூழல், ஆரோக்கியமான ஆன்மீக ஈடுபாடு என்பவற்றோடு தொடர்புடையதாகவே இருக்கின்றது. உளநலம் சிறப்பாக அமைகின்ற பிள்ளை தனது வயதிற்கு ஏற்றதாகத் துலங்கவும், செயற்படவும் முடிகின்றது. பிள்ளைகளின் ஒவ்வொரு தொகுதியினதும் இயக்கப்பாடுகள் ஆரோக்கியமாக அமைகின்றபோது பிள்ளைகள் உளநலமுடன் இருக்கின்றார்கள் என அறியமுடிகின்றது.

உளநலம் - விளக்கம்

உடல் நலமாக இருப்பது போல் உளமும் நலமாக இருத்தல் அவசியம். நலமாக இருத்தல் என்னும்போது உடல் சார்ந்த நிலைமைகளையும் தாண்டி உளம் சார்ந்த, சமூகம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த நிலைமைகளையும் விபரிப்பதாகவே அமைகின்றது. உடல், உளம், சமூகம், ஆன்மீகம் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாக அமையும்போது அவற்றுள் ஒன்றில் ஏற்படும் ஒரு பிரச்சினை ஏனையவற்றையும் பாதிப்பதாக அமைகின்றது. ஆகவே உளத்தை மகிழ்வுடன் வைத்திருத்தல் பிள்ளைகளை எதிர்காலத்தின் அபாயத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றும்.

உள நலம் என்பது எம்மால் நேரடியாகக் காணமுடியாது. ஆனால் அதே நேரத்தில் அதற்குப் பரிகாரம் தேட வைத்தியர்களை நாடிச் செல்கின்றோம். உடலில் ஏற்படும் நோய்களை உடனடியாகக் கண்டுவிடலாம். ஆனால் உளம் நலமில்லாத நிலையில் அவர்கள் சோர்ந்து போகின்றார்கள். பிள்ளைகளது சிந்தனை, செயற்பாடு, உணர்ச்சி வெளிப்பாடு, நடத்தைக் கோலங்கள், கற்றல் விருத்தி, ஆக்கத்திறன் போன்றவைகளில் பிள்ளைகள் சிறப்பாக இயங்கும் நிலையானது பிள்ளை

களின் சிறந்த மனநிலையைக் குறித்து நிற்கின்றது.

உள்ளத்தின் செயற்பாடுகள், அதன் மூலமான வெளிப்பாடுகள் பலவாகும். இதன்படி அவர்களின் கற்றற் செயற்பாடுகளும் அவர்களது உளநலத்தில் தங்கியிருக்கின்றன எனலாம். கற்றலுக்கான ஆர்வம், உந்துதல், கருத்தூன்றல், கிரகித்தல், ஞாபகத்தில் இருந்தல், நுண்ணறிவு விருத்தி எனக் கற்றலின் எல்லா நிலைகளும் ஒழுங்காக நடைபெறுவதற்கு மாணவர்களது உளநலம் சிறப்பாக இருக்க வேண்டும். மாறாக உளநலப் பிரச்சினைகளை உடைய பிள்ளைகள் பெரும்பாலும் மற்றையவர்களுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துபவர்களாகவே இருப்பர். ஏனைய மாணவர்களைக் குழப்புதல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியர்களுடன் ஒத்துழையாமை, சமூக மயமாகும் தன்மைகள் குறைவாக இருத்தல் போன்ற வெளிப்பாடுகளைக் காட்டுவர்.

தற்போதுள்ள கல்வி முறைகள் பரீட்சையையும் சிறந்த பெறுபேறுகளையும் முக்கியத்துவப்படுத்துவதனால் மாணவர்களுக்கு ஆரம்ப வகுப்புகளிலிருந்தே மன அழுத்தம், மனக் குலைவு போன்றவைகள் ஏற்படுகின்றன. பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்களின் உயர்ந்த பெறுபேற்றை நோக்காகக் கொள்கின்றார்களேயல்லாமல் பிள்ளைகளின் உள நலத்தைக் கவனத்திற் கொள்வதில்லை. இதனால் எல்லாப் பிள்ளைகளும் ஒரேயளவான உளநலத்தைக் கொண்டிருப்பார்கள் என எண்ணுவது தவறாகும். ஆளுக்கு ஆள் இது வேறுபடலாம்.

பிள்ளைகளின் உளநலத்திலே இரு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

1) பரம்பரைக் காரணிகள்
2) சூழற் காரணிகள்

பிள்ளைகளின் வளர்ச்சியில் பரம்பரைக் காரணிகளின் செல்வாக்கு ஓரளவு இருக்கின்றபோதிலும் அவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கண்டால் அதற்குரிய சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்கள், ஆசிரியர்களினது கடமை ஆகும். இயலுமான அளவு பிள்ளைகளின் உள நலத்தை மேம்படுத்தப் பெரியவர்கள் முயற்சி எடுக்கவேண்டும். அதீதமான மனக் குழப்பம் உள்ள பிள்ளைகளை ஆசிரியர்கள் இனங்கண்டால் பெற்றோர்களிடம் கலந்தாலோசித்து உளவியல் நிபுணர்களின் ஆலோசனையைப் பெறுதல் அவசியமாகும்.

மாணவர்களின் உளநலப் பாதிப்புக்கான காரணம் :

இன்றைய அவசரமான, பதட்டம் நிறைந்த உலகிலே பிள்ளைகள் நாளாந்தம் பல நெருக்கடிகளுக்கு ஆளாகுகின்றார்கள். சில பிள்ளைகள் தமது குடும்பங்களில் இருந்தே உளநெருக்கீட்டின் தாக்கத்தினால் அவதிப்படுகின்றனர். பெரியவர்கள் தம்மைப் போலவே பிள்ளைகளையும் பொருத்திப் பார்ப்பதனால் பிள்ளைகளைப் பிள்ளைகளாகப் பார்க்காமல் பெரியவர்களாகவே நோக்குகின்றார்கள். உண்மையில் ஒரு பிள்ளையின் ஆரோக்கியமானதும் மகிழ்ச்சிகரமானதுமான வளர்ச்சிக்குக் குடும்பமே முக்கியமாகக் கொள்ளப்படுவதனால் பிள்ளைகளின் உளநலத்தில் குடும்பத்தின் பங்களிப்பு அதிகமானது எனலாம். எனவே எல்லா விடயங்களும் ஆரம்பிக்கும் இடம் குடும்பம் எனலாம். அவ்வகையில் பிள்ளைகளின் உளநலக் கோளாறுக்கு முக்கியமான சில காரணிகள் உள்ளன.

1. குடும்பம் :

குடும்பம் கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என்று அழைக்கப்படும் நிலையில் இன்று பெரும்பாலும் தனிக் குடும்பங்களே பரவலாகக் காணப்படுகின்றன. இக் குடும்ப

அமைப்புகள் நாளாந்தம் பல பிரச்சனைகளைச் சந்தித்தே வருகின்றன. குடும்பங்களின் பிரச்சினைக்கு முக்கிய காரணம் பொருளாதாரப் பிரச்சினையாகும். பல குடும்பங்களின் வறுமை காரணமாகப் பிள்ளைகள் மத்தியில் கல்விக்குப் பெரும் சவால் ஏற்பட்டு விடுகின்றது. இத்தகைய குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. பெற்றோர்களின் போதைவஸ்துப் பாவனை, விவாகரத்துப் பெற்ற பெற்றோர், ஒன்றுக்கு மேற்பட்ட திருமண உறவு, அளவுக்கதிகமான பிள்ளைகள் போன்ற பல காரணிகளால் பிள்ளைகள் மத்தியில் கல்வியில் பல பின்னடைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே பிள்ளைகளின் கல்வியைக் கருத்திற் கொண்டு பெற்றோர்கள் வேண்டத்தகாத பழக்கங்களைக் கைவிடவேண்டும்.

மாறாக ஆரோக்கியமான குடும்பம் ஒன்றில் குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் அன்பும், ஆதரவும் மிகுந்து காணப்படும். குடும்பத் தலைவன், தலைவி என்ற உறவு முறையின் கீழ் பிள்ளைகள் செயற்படும் போது ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக அது விளங்கும். குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கு மற்றவர் ஆதரவாக விளங்குவர். குடும்ப அங்கத்தவர்களின் உணர்வுகளைப் புரிந்து வாழ ஏனையோர் முற்படுவார்கள். குடும்பத் தலைவனிடம் தலைமைத்துவப் பண்புகள் காணப்படும் அதேவேளையில் அவர் ஏனையோருக்கு முன்னுதாரணமாக நடக்க முற்படுவார். இவ்வாறான குடும்ப அமைப்பில் இருந்து வரும் பிள்ளையானது கல்வியில் ஆர்வமாக இருக்கும் அதே வேளையில் தேவையற்ற மன உளைச்சல்களுக்கு ஆளாகாமல் இருப்பதோடு மகிழ்ச்சியாக இருக்கும். மகிழ்ச்சியான தருணங்களில் அதன் கல்வி நிலையில் நல்ல மாற்றம் ஏற்படலாம்.

எனவே குடும்ப அமைப்பு என்பது பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமானது. பொருளாதார நிலையில் பின்னடைவு அடைந்த குடும்பமாக இருந்தாலும் பிள்ளைகளின் அன்புத் தேவை நிறைவு செய்யும் அளவுக்குப் பெற்றோர்கள் மத்தியில் பாசப் பிணைப்பு இருந்தால் பிள்ளைகளுக்கும் வாழ்க்கையில் ஒரு அர்த்தம் தென்படும். இலட்சிய வாழ்க்கை ஒன்றை வாழ வைப்பதற்கான வழிகாட்டல் குடும்பத்தில் இருக்கும்போது பிள்ளைகளும் அவ்வழியைப் பின்பற்றுவர். ஆயினும் சில குடும்பங்களில் பெற்றோர்கள் மத்தியில் எதுவிதமான மேம்பட்ட சிந்தனைகள் இல்லாத பட்சத்தில் பிள்ளைகளின் வளர்ச்சி முற்றாகத் தடைப்படுகின்றது. அவர்களுக்குப் போதியளவு அன்பு, போசாக்கு, பாதுகாப்பு போன்றவைகள் வழங்கப் படுவதில்லை. இதனால் பிள்ளைகளின் குடும்பத்தை அறிந்து ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு அவர்களுடனான தொடர்பைப் பேணிக் கொள்ளல் அவசியமாகின்றது.

உளரீதியாகப் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் ஆதரவினை வழங்குதல் அவசியமாகும். பிள்ளைக்கு ஏற்படும் பாதிப்பினை அறிந்து பெற்றோருடன் தொடர்பை ஏற்படுத்தலாம். சில நிறுவன அமைப்புகள் ஊடாகப் பிள்ளையின் பெற்றோருடன் தொடர்பை ஏற்படுத்தி சில பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டலாம். இதனால் ஆசிரியர்கள் இவ் விடயத்தில் கவனம் எடுத்து பிள்ளையின் உளநலத்தை மேம்படுத்த முன்வர வேண்டும். ஆகவே ஆசிரியர்கள் இதனைச் செய்ய வேண்டும் என்று முன்வர வேண்டும்.

1. குடும்ப ஒற்றுமை பற்றியும் அதன் நன்மை பற்றியும் பெற்றோருக்கு விளக்கமளித்தல்.
2. வகுப்பிலும் பாடங்கள் கற்பித்திடும் வேளையிலும் குடும்பம் தொடர்பான நல்ல கருத்துகளை முன்வைத்தல்.
3. குடும்ப அங்கத்தவர் மத்தியில் நல்ல உறவுகளைக் கட்டியெழுப்ப ஆலோசனை வழங்குதல்.

4. பிள்ளைகள் தமது பெற்றோரை மதித்து நடக்க வழிகாட்டுதல்.
5. குடும்பத்தின் கூட்டுச் செயற்பாடு களுக்கு ஊக்கம் அளித்தல்.
6. தேவையற்ற ஆடம்பரச் செலவுகளின் விளைவுகள் பற்றி விளக்குதல்.
7. சில இடங்களில் தனது தனிப்பட்ட செல்வாக்கைக்கூடப் பயன்படுத்தி குடும்பத்தின் சில தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்.

இவ்வகையில் ஆசிரியர்கள் பாடசாலை யில் கற்பித்தலோடு மட்டும் நின்றுவிடாது குடும்பத்தின் நிலையை அறிந்து அதற்கேற்ப ஆலோசனை வழங்கலும் முக்கியமானது. எனவே சிக்கல்களில் இருந்து பிள்ளைகளை மீட்டெடுக்க வேண்டும்.

2) பிள்ளைகளிடம் ஏற்படும் பய உணர்வு கள் :

பயம் என்பது சிறியவர்களுக்கு மட்டுமல்லாமல் பெரியவர்களுக்கும் ஏற்படும் ஒரு உணர்வு ஆகும். ஆனாலும் சில ஆபத்துக்களில் இருந்து எம்மை விடுபட வைப்பதும் எம்மிடமுள்ள பய உணர்வு ஆகும். எனவே இப் பயம் சில இடங்களில் தவிர்க்க முடியாததாகும். உதாரணமாக இரவில் ஒரு திருடனைக் கண்டால் அல்லது ஒரு பாம்பைக் கண்டால் ஏற்படும் பயம் அர்த்தமுள்ளது.

சில பிள்ளைகள் பாடசாலையின் முதல்நாளில் பயந்து அழுவார்கள். இதுவும் தவிர்க்கமுடியாதது. ஆனாலும் பாடசாலை என்றவுடன் நாளாந்தம் பயம் ஏற்படுதல் ஆபத்தான ஒரு விடயம் ஆகும். அவர் களையறியாமலே அவர்களிடம் ஒருவித பய உணர்வு இருந்துகொண்டேயிருக்கும். காரணம் இல்லாமல் பயப்படுதல், அழுகை என்பன பிள்ளைகளின் மன உளைச்சல் களை மேலும் அதிகமாக்கும். பயத்தினால் பாதிக்கப்படுவதனால் பதட்டப்படுபவர் களாகவும் அனேகமான நேரங்களில் எல்லாம் சமநிலை இழந்தவர்களாகவும் இருப்பார்கள். எனவே பிள்ளைகளைத் தேவையற்ற பயத்தில் இருந்து விடுவிக்கப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர் களைச் சரியான முறையில் வழிநடத்த வேண்டும்.

வீட்டில் பெற்றோர்களின் செயற்பாடு களும் பிள்ளைகளைப் பயம் என்ற உணர்வுக்குள் தள்ளிவிடுகின்றது. தேவையில்லாத விடயங்களுக்கெல்லாம் பிள்ளைகளைப் பயமுறுத்தி வைக்கின்றார் கள். பயமுறுத்தி எதனையும் பிள்ளை களைக் கொண்டு செய்விப்பது பெற்றோர் களின் ஒரு செயலாகும். குழுந்தைப் பருவத்தில் உணவு ஊட்டுவதில் இருந்து பயமுறுத்த ஆரம்பிக்கப்படுகின்றது. பிள்ளை கள் சாப்பிடமாட்டேன் என்று அடம்பிடிக்கும் போது பெற்றோர்கள் பயமுறுத்தி உணவு உண்ண வைக்கின்றார்கள். இப் பழக்கம் நிரந்தரமாகிவிடும். இதனால் சிறு வயதிலேயே பிள்ளைகள் பயப்பட ஆரம்பிக்கின்றார்கள். இது மனதில் ஒருவித பதட்டத்தைப் பிள்ளைகள் மத்தியில் ஏற்படுத்திவிடுகின்றது. அத்துடன் பாடசாலையில் சகபாடிகள் ஒன்று சேர்ந்து பயங்கரமான கதைகளைக் கதைத்தல், பேய், பிசாசு என்ற மாயைகளை ஏற்படுத்துதல், இரவில் பயங்கரமான கனவு கண்டு அலறிப் பயப்படுதல் போன்றவைகள் எல்லாம் பிள்ளைகள் மத்தியில் மனக் குலைவை ஏற்படுத்திவிடுகின்றன. இவை யெல்லாம் மனம் சார்ந்த பிரச்சினைகளே. ஆதலால் பிள்ளைகளை உடல், உள ரீதி யாக உறுதியுள்ளவர்களாக மாற்றி யமைத்தல் பெற்றோர்கள் ஆசிரியர்களது கடமையாகும்.

சில பிள்ளைகள் மத்தியில் அவர்களை யறியாமலேயே ஒருவித பய உணர்வு ஏற்பட ஆரம்பிக்கும். இது நாளடைவில் அதிகமாகி விடும். இவ்வாறான பிள்ளைகள் மற்றையவர்களுடன் பழகுவதை இயலுமானவரை தவிர்த்து விடுவார்கள். பாடசாலையிலும் கற்றலின்போது தெரிந்த

விடயங்களையும் கூறாது பேசாமல் இருப்பார்கள். இவர்களுக்கு ஏதோ ஒருவிதமான அச்சுறுத்தல் ஏற்பட்டு இருக்கலாம். இல்லையேல் தமக்குத்தாமே ஒருவிதமான பயம் என்ற மாயையை உருவாக்கி இருக்கலாம். இதனால் இவ்வகையில் பாதிக்கப்படும் சிறுவர்களுக்குப் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் ஆதரவான வார்த்தைகள், செயற்பாடுகள் மிகமிக அவசியமாகும். பாடசாலையில் ஆசிரியர்கள் இவ்வாறான பிள்ளைகளின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு ஆதரவான வார்த்தைகளைக் கூறி சூழலுக்கு ஏற்றவகையில் இசைவாக்கமடைந்து தமது பயத்தை நீக்கி வாழப் பக்கபலமாக இருக்கவேண்டும். இவர்களில் பலர் பல சந்தர்ப்பங்களில் பெற்றோரின் உதவியின்றித் தனிமைப்படுத்தப்படல், ஏதோ ஒரு வகையான அச்சுறுத்தும் நிகழ்வு அல்லது ஒரு அசம்பாவிதம் ஏற்பட்டிருத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகியிருத்தல் என்பவற்றிற்கு ஆளாகியிருப்பார்கள். ஆகவே எதற்கும் தேவையற்ற பயம் ஏற்பட்டிருக்கும். இதனால் இவர்கள் தமது பயத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம் :

இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வருகின்ற சிறுவர் மீதான துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை மிகவும் அதிகமாகப் பாதித்துவருகின்றது. இத்தகைய துஷ்பிரயோகங்கள் காரணமாகச் சிறுவர்கள் உடல் - உள ரீதியாகத் தாக்கமடைந்து வருவதோடு கல்வியிலும் மோசமான பின்னடைவைச் சந்தித்தும் வருகின்றனர். இதனால் கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றன. இத்தகைய துஷ்பிரயோகங்கள் காரணமாகப் பிள்ளைகள் மட்டுமல்லாமல் பெற்றோர்களும் பாரிய மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றார்கள்.

யாழ் மாவட்டத்தில் இத்தகைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதனைக் காணமுடிகின்றது. பொதுவாக வடக்கில் போருக்குப் பின்னரான சூழலில் இவை அதிகரித்துச் செல்கின்றமையைப் புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறுகின்றன. சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பல்வேறுபட்ட பிரிவுகளைக் கொண்டது.

உடல் ரீதியானது

உள ரீதியானது

என்ற வகையில் பிரித்து நோக்கத் தக்கது. பிள்ளையின் உடலுக்கு ஊறு விளைவிப்பது பாடசாலைகளில் தண்டனை வழங்குவது, அதிகளவு சுமையான வேலைகளில் ஈடுபடுத்துவது போன்ற செயற்பாடுகள் எல்லாம் உடல் ரீதியானதாகும். உடல் ரீதியாகப் பிள்ளைகளுக்கு ஊறு விளைவிக்கும் பல செயற்பாடுகள் பாடசாலையில் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்றது. சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுதல், சிறுவர் துஷ்பிரயோகம் என்ற வகையில் அடங்குகின்றன. சில பாடசாலைகளில் பிள்ளைகள் ஆசிரியர்களால் உதாசீனம் செய்யப்படுகின்றனர். தேவையில்லாத திட்டுகள், தண்டனைகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மத்தியில் ஆசிரியர்கள், பெற்றோர்களின் இத்தகைய செயற்பாடுகள் பிள்ளைகள் மத்தியில் மனக் குலைவை ஏற்படுத்தி விடுகின்றன. தொடர்ச்சியான இத்தகைய செயற்பாடுகளினால் பிள்ளைகள் உளவியல் தாக்கங்களுக்கு ஆளாகின்றார்கள். இதனால் அவர்களுக்கு சரியான முறையில் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் இடம்பெற வேண்டும்.

இவற்றைவிட வீட்டில் பெற்றோர்களின் கடுமையான போக்கு, பிள்ளைகளுக்கு அடித்தல், ஏசுதல், அதிகமான வேலைகளைச் சுமத்திவிடுதல், சிறுவர் உழைப்பை அங்கீகரித்தல், கல்வியை நிறுத்திவிடுதல்

போன்ற பல செயற்பாடுகளால் பிள்ளைகள் ஒருவிதமான மனச்சோர்வுடனும், மன உளைச்சலுடனும் காணப்படுகின்றார்கள். சில சமூகங்கள் மத்தியில் பிள்ளைகள் வேலைகளுக்குச் சென்று உழைத்துக் குடும்பத்தினருக்குத் தம் உழைப்பை வழங்குவதையும் காண முடிகின்றது. இவையெல்லாம் அடிப்படை உரிமை மீறலாகும். இதனால் பிள்ளைகள் தமது கல்வியில் அக்கறை காட்டமுடியாத நிலை தோன்றுகின்றது. ஆகவே குடும்பத்தில் பிள்ளைகளது கருத்துகளுக்கு மதிப்பளித்து அவர்களது பிரச்சினைகளை விளங்கி அவர்களை மனச் சோர்வுக்கு ஆளாகாது பாதுகாத்தல் வேண்டும். சில பெற்றோர்கள் மத்தியில் இத்தகைய பிரச்சினைகள் அவர்களால் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. எனவே ஆசிரியர்கள் இப் பிரச்சினைகளை இனம் கண்டு பாதிப் படைந்த பிள்ளைகளுக்கு வழிகாட்டிவிடுதல் அவசியமானதாகும்.

ஆசிரிய மாணவ உறவுமுறையில் விரிசல்

மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுக்கு வழிகோலுபவர்கள் ஆசிரியர்களாவர். ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிப்பவர் மட்டுமல்லாமல் அவர்களுடைய ஒவ்வொரு முன்னேற்றத்தின் படிக்கற்களாகவும் விளங்க வேண்டும். அறிவாகிய ஒளியைப் பரப்புவதனால் இவர்கள் ஞானவிளக்குகள் என்று பிளேட்டோவினால் வர்ணிக்கப் பட்டார்கள். இத்தகைய ஆசிரியர்கள் பல்வேறு நடிபங்குகளைத் தாங்குபவர்கள். பிள்ளைகளின் நல்வாழ்விற்கான வளர்ச்சி யையும் அபிவிருத்தியையும் மேம்படுத்து வதற்குப் பக்கபலமாக இருப்பது ஆசிரியர் களது அன்பும் அரவணைப்புமேயாகும். பெற்றோர்களை விட்டுப் பிரிந்து பாடசாலைக்கு வரும் பிள்ளைகளுக்குப் பெற்றோராக இருந்து அவர்களை வழிப் படுத்த வேண்டும். இதனால்தான் பிள்ளை களின் முதலாவது ஆசிரியர்களாகிய பெற்றோர்களுக்கும் இரண்டாவது பெற்றோர்களாகிய ஆசிரியர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு அவசியம் எனப்படுகின்றது.

ஆசிரிய மாணவ உறவு எப்போதும் நெருக்கமாக இருக்கவேண்டும். மாணவர் களின் கற்றல் வளர்ச்சிக்கு இது ஒரு முக்கியமான காரணி ஆகும். ஆசிரிய மாணவ உறவில் விரிசல் நிலை ஏற்படும் பட்சத்தில் பிள்ளைகளுக்குக் கல்வியில் ஆர்வம் குறையும். ஆசிரியர்கள் பிள்ளை களுக்குக் கற்பிப்பதில் விழிப்புணர்ச்சியும் அவதானமும் உடையவர்களாக இருக்க வேண்டும். மாறாகச் சில ஆசிரியர்கள் மாணவர்களுடன் தமது உறவை ஒரு அதிகாரத் தொனியில் வைத்திருப்பார்கள். பிள்ளைகளைப் பயமுறுத்தி அச்சமான ஒரு சூழலில் வைத்திருப்பதையே அவர்கள் விரும்புவார்கள். அடக்கியாளுபவர்களாக ஆசிரியர்கள் இருப்பது சரியானதல்ல. பிள்ளைகளை அன்புடன் அணுகி அவர்கள் தேவைகளை நிறைவேற்றுபவர்கள் ஆசிரியர் களாவர்.

இன்று ஆசிரிய மாணவ உறவில் நெகிழ்வுத்தன்மை காணப்படுகின்ற போதிலும் சில ஆசிரியர்கள் அதிகாரத் தன்மை அதிகமுள்ளவர்களாக மாணவர் களால் அணுகமுடியாதவர்களாக உள்ளார் கள். இதனால், மாணவர்கள் கல்வியில் அக்கறை காட்டமுடியாதவர்களாக இருப்பதோடு அவர்களுடைய உளச் சுகாதாரம் பாதிப்படைகின்றது. இதனால் கல்வியின் அடைவுமட்டம் குறைவுபடு கின்றது. ஆகவே பல்வேறு குடும்ப அமைப்பில் இருந்து பல பிரச்சினைகளோடு பாடசாலைக்கு வரும் பிள்ளைகளை அன்பு காட்டி அரவணைத்துப் பாடம் புகட்டும் போது பிள்ளைகளின் உளநலம் சிறப்படைகின்றது.

சமூகப் பொருத்தப்பாடின்மை :

பிள்ளைகளின் உளச் சுகாதாரம் பாதிப்படைவதில் அவர்கள் சமூகப் பொருத்தப்பாடு காணாமல் இருப்பதும்

முக்கிய காரணியாகின்றது. சமூகம் என்பது நாளாந்தம் பலவகை மாற்றங்களுக்குள்ளாகின்றது. இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியால் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் மக்களது அறிவு நிலை, சமய நம்பிக்கைகள், சடங்குகள் பின்பற்றப்படும் மரபுகள் போன்றவற்றிலும், நாடகம், இலக்கியம் முதலிய நுண்கலை வடிவங்களிலும் மக்களின் இரசனையிலும் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டும் சமூகமாற்றம் ஏற்படுகின்றது.

எனவே ஒரு சமூகத்தில் பிறக்கின்ற ஒரு பிள்ளையானது எக் காரணம் கொண்டும் சமூக நியமங்களில் இருந்து விலகி நடக்கமுடியாது. ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் சமூகத்தின் பல்வேறு விதமான பங்களிப்புகள் உண்டு. ஒவ்வொரு மனிதனும் தனது நாளாந்தத் தேவைகளுக்காகச் சமூகத்தையே நம்பியிருக்கும் நிலை உண்டு. இதனால் பிள்ளைகளைப் பொறுத்தவரையில் சமூகம் என்பது முக்கியமானதொரு விடயமாகும். ஆகவே அச் சமூகத்தோடு பொருத்தப்பாடு காணாது விட்டால் பிள்ளைகள் மத்தியில் பல வேறுபட்ட மனக்குழப்பங்கள் ஏற்படுவதற்கு இடமுண்டு.

இவ்வகையில் உளநலம் பாதிப்படையும் போது பிள்ளைகளின் கற்றல் வேகம் குறைவடையும். எனவே பாடசாலைச் சூழலானது பிள்ளைகளது கற்றற் செயற்பாடுகளில் மாத்திரமன்றி உளநல விருத்தியிலும் உடல்நல விருத்தியிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே பாடசாலைச் சூழலானது பிள்ளைகளது உளநல விருத்திக்கு உகந்ததாகக் காணப்படும்போது அவர்களது மனமும் கற்றற் செயற்பாடும் இயல்பாக விருத்தி நிலையை அடையும். எனவே சமூக மயப்படுத்தப்பட்ட பிள்ளைகளிடம் சில இயல்புகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

- ❖ ஆசிரியர் கூறும் அறிவுறுத்தல்களுக்கு இணங்கிச் செயற்படுவதுடன் தாமாகவும் சில செயல்களைச் செய்ய முன்வருவர்.
- ❖ ஆசிரியரை விருப்புடன் ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாமல் ஆசிரியர்களோடு பரஸ்பரம் கலந்துரையாடித் தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வார்.
- ❖ தமது கற்றற் செயற்பாடுகளை மகிழ்ச்சியோடு முன்னெடுப்பார்கள்.
- ❖ பாடசாலையின் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்படுவார்கள்.
- ❖ எதிலும் திருப்தி அடைந்து கொள்வார்கள்.

இவ்வகையில் மாணவர்கள் மத்தியில் இன்று ஒரு சமுகமாகப் பங்குபற்றும் நிலை காணப்படுகின்றது.

எனவே மாணவர்கள் ஏனைய மாணவர்களோடு சேராமல் தனித்து ஒதுங்கியிருக்கும் நிலையில் அவர்களது உளநலம் பாதிப்படைகின்றது. இந்நிலையில் அவர்களைச் சமூகப் பொருத்தப்பாடு உடையவர்களாக மாற்றி அவர்களது உளநலத்தைப் பேணுவதில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் கூடுதலான கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

பரீட்சை அடைவு மட்டம் குறைவடைதல் :

பாடசாலைகளில் மாணவர்களின் நிலை தொடர்பாக அறிவதற்குக் கணிப்பீடு என்பது மிகவும் முக்கியமானது. இத்தகைய கணிப்பீட்டு முறைகள் வேறுவேறுபட்டதாக அமைந்திருந்தாலும் அவற்றின் நோக்கம் ஒன்றுதான். எமது பரீட்சை முறைகள் இன்று மாணவர்களின் மன உளைச்சல்களை அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. கற்றல் நோக்கங்களை மாணவர்கள் அடைந்துள்ளனரா என அறிவதற்கு

ஆசிரியர் பல்வேறு வகையான மதிப்பீட்டு முறைகளைக் கையாள்கின்றார். பாடசாலைகளில் சாதாரணமாக இடம்பெறும் தவணைப் பரீட்சைகளை (Term Test) விடத் தொடர் அகவய மதிப்பீடு (Continuous internal Assessment) ஒப்படைகளைத் தயாரித்தல் (Submission of Assignments) போன்ற பரீட்சைகளும் இடம்பெறுகின்றன. இப் பரீட்சைகள் மாணவர்களின் வகுப்பையும், வயதினையும் கருத்திற் கொண்டு வேறுபடுகின்றன. ஆனால் ஒரு வகுப்பில் மீத்திறன், சராசரி, மெல்லக் கற்போர் என்ற வகையில் மாணவர்கள் இருப்பார்கள். இவற்றுள்ளும் ஏதோ ஒரு முறையில் ஒரு சோதனையை வைக்கும் போதும் இத்தகைய மாணவர்கள் கருத்திற் கொள்ளப்படவேண்டும். இன்றைய கலைத் திட்டத்தில் இத்தகைய சுதந்திரப் போக்கு இல்லாத காரணத்தினால் மெல்லக் கற்கும் மாணவர்கள் மனமுறிவுகளுக்கு ஆளாகின்றார்கள்.

குறிப்பாக இன்று ஆரம்பப்பிரிவு மாணவர்களின் தரம் 5 வகுப்புக்குரிய புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களைப் பொறுத்தவரையில் அது மிகப் பெரியதொரு சவாலாக அமைகின்றது. மாணவர்களின் வயதிற்கும், வகுப்பிற்கும் அவர்கள் கொள்ளும் சக்திக்கும் அப்பாற்பட்டதொரு பரீட்சையாக அமைந்து விடுகின்றது. வறிய மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்கு வதற்காக வழங்கப்படும் இப் பரீட்சையின் நோக்கம் இன்று திசைமாறியே நிற்கின்றது. வசதி படைத்த மாணவர்கள் மிகப் பெரிய அளவு பணத்தினைச் செலவழித்து தனியார் கல்வி நிலையங்களிலும் தனிப்பட்ட வகுப்புகளுக்கும் சென்று கல்வி கற்பதனால் அவர்கள் பரீட்சையில் கூடுதலான புள்ளி களைப் பெற்று சித்தியடைவதன் மூலம் ஏழைப் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை அவர்கள் எட்டிப் பிடிக்க முடியாத நிலையில் இருக்கின்றார் கள். இதனால் அவர்கள் மத்தியில் மன முறிவுகள் ஏற்படுகின்றன. இதன்மூலம் அவர்களின் உளச் சுகாதாரம் பாதிக்கப் படுகின்றது.

ஆரம்பப்பிரிவு மாணவர்களைப் பொறுத்தவரையில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை பிள்ளைகளின் மகிழ்ச்சி யையும் சுதந்திரத்தையும் பறித்தெடுத்து அவர்களின் குழந்தைப் பருவத்தை அவர்கள் அனுபவிக்காது செய்து விடுகின்றது. தூரத்தில் தெரிகின்ற நிச்சய மற்ற எதிர்காலத்துக்காக நிகழ்காலத்தில் பிள்ளை களை வாட்டி வதைக்கக்கூடாது என்ற இயற்கைவாதியான ரூஸோவின் சிந்தனை களை ஆசிரியர்களும் பெற்றோர்களும் உணர்ந்து செயற்படும்போது நிச்சயமாகப் பிள்ளைகளின் எதிர்காலம் இன்பமயமான தாக இருக்கும். இதனால் அவர்களின் உளநலம் சிறப்பானதாக மாற்றமடையும்.

இணைபாடவிதானச் செயற்பாடுகளின் பங்குபற்றல் :

முன்பள்ளிகளோ அல்லது பாடசாலை களோ கற்றல் என்னும் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்குத் தனித்துப் பாடநூல்கள் மட்டும் துணை போவதல்ல. ஆரம்பப் பிரிவு மாணவர்களைப் பொறுத்த வரையில் பல்வேறு விதமான முறைகளில் பிள்ளைகள் நாளாந்தம் கற்பதற்கான வாய்ப்புகள் இருந்தபோதிலும் பாடசாலைகள் அவற்றையெல்லாம் பெரிதுபடுத்துவதில்லை. பாடத்திட்டத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட பாடநூல்கள் இல்லையெனில் கற்பித்தலும் இல்லை என்று கருதும் அளவிற்கு இன்றைய பெற்றோர் தவறான எண்ணம் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால், இணைப் பாடவிதானச் செயற்பாடு களினூடாக ஒரு பிள்ளை ஆளுமை, தலைமைத்துவம், அழகியல், உடல் உறுதி, தன்னம்பிக்கை போன்ற தன்னம்பிக்கைகளை வளர்த்துக் கொள்கின்றது. அதாவது விளையாட்டு, மன்றச் செயற்பாடுகள், அழகியற் செயற்பாடுகள் போன்றவற்றோடு

பலவிதமான போட்டிச் செயற்பாடுகளில் அவர்களைப் பங்குபெறச் செய்வதன் மூலம் அவர்கள் சிறந்த உளநலத்தைப் பெற்று கல்வி நடவடிக்கைகளில் விருப்புடன் ஈடுபட வாய்ப்பளிக்கப் பெற்றோர்களும் ஆசிரியர் களும் முன்வர வேண்டும்.

ஆகவே ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மத்தியில் உளநலம் பேணுவதோடு மகிழ்ச்சி யாகக் கற்றல் என்னும் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய பல வழிகாட்டல்கள் இருந்தபோதும் பெற்றோர் கள் அதனை எண்ணிப் பார்ப்பது குறைவு. குழந்தைகள் கற்கும் பாடசாலைகள் மகிழ்ச்சிகரமான ஒரு பூங்காவாக விளங்க வேண்டும். அவர்கள் தம் விருப்பப்படி ஓடியும் ஆடியும் விளையாடியும் கல்வி கற்க வேண்டும் என்பதையே உளவியலாளர் களும் வலியுறுத்தியுள்ளார்கள். எனவே இன்றைய பரீட்சை நெருக்கடிகளில் இருந்து பிள்ளைகளை மீட்டெடுத்து அவர்களின் உள மகிழ்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் கலைத்திட்டம் அமைவதோடு பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களுக்குச் சிறந்த மகிழ்ச்சியான எதிர்காலத்தைப் பெற்றுக் கொடுத்தல் அவர்களின் கடமையுமாகும்.

அடிக்குறிப்புகள் :

1) Santrock, 2006, Educational Psychology, Tata MC - Graw Hill Publishing Company Ltd, New delhi.

2) Scott Brand, 2002, Teaching Technology, Neal schuman Publishers, London.

3) தேசிய கல்வி ஆணைக்குழு, 2003, இலங்கையின் பொதுக் கல்வி பற்றிய தேசிய கொள்கைச் சட்டகமொன்றுக் கான ஆலோசனைகள், இலங்கை.

4) பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு, 2009, இலங்கையில் பொதுக் கல்விக்கான புதிய கல்விச் சட்டம், முன்மொழிவுகள்

5) Jeffreychin, 2011, Included in Sociology, Americal sociological Association.

கேடில் விழுச்செல்லம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.
எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழ முயிர்க்கு.

- திருக்குறள்

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு.

- நல்வழி

சிறந்த வெற்றிக்கு முறையான கற்றல் இலகு வழியில்

செல்வி இராஜசுலோசனா அமிர்தலிங்கம்
ஆசிரியை,
யா/ வெ.வை.மி.த.க. பாடசாலை

இன்றைய மாணவர்கள் கற்றல் என்பது ''பரீட்சைக்கு ஆயத்தமாதல்'' என்னும் தவறான எண்ணத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் பரீட்சைக்கு ஆயத்தமாதல் என்பது கற்றல் செயற்பாட்டின் ஒரு பகுதி என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

கற்றல் என்பது அறிவினையும், திறமையையும் பெற்றுக் கொள்ளல் எனப் பொருள்படும். பரீட்சையை மட்டும் மையமாகக் கொள்ளாது சிறந்த அறிவையும், திறமையையும் பெற்றுக் கொள்ள முயற்சிப்பவர்களே கற்றல் என்னும் பதத்தின் அர்த்தம் புரிந்த சிறந்த மாணவர்கள்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் ''கற்றல்'' செயற்பாட்டைத் திறம்பட மேற்கொள்வதற்கான வழிவகைகளைச் சரியாக அறிந்து கொள்ளாததால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

- போதியளவு கற்றல் செயற்பாட்டில் ஈடுபடமுடியாமை
- கல்வி கற்கும்போது நேரத்தை வீண் விரயம் செய்தல்
- கற்பதற்கு ஆயத்தமாவதற்கான மனநிலையை உருவாக்க முடியாமை
- சிறந்த கற்றல் நுட்பங்களை அறிந்து கொள்ளாமை

போன்றன அவற்றுட் சிலவாகும்.

கற்றல் செயற்பாட்டை இலகுவாக்கக் கூடிய சில அடிப்படை உண்மைகளைப் புரிந்துகொள்வதன் மூலம் மாணவர்கள் சிறந்த பயனை அடைந்து கொள்ள முடியும்.

நேர முகாமைத்துவம்

ஒரு நாளின் 24 மணித்தியாலங்களையும் சரியாகப் பயன்படுத்துபவர்கள் முன்னேற முடியும்.

மாணவர் எவ்வாறு நேரத்தைச் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ய முடியும்?

1. சுயமாகக் கால அட்டவணை தயாரித்தல்.

   மாணவர்கள் சுயமாகத் தமக்கென ஒரு கால அட்டவணையைத் தயாரிக்கலாம். அதிகளவான நேரத்தைக் கற்றல் செயற்பாட்டிற்கு ஒதுக்கி, உற்சாகம் தரும் பொழுது போக்கிற்குக் கணிசமான நேரத்தையும் ஒதுக்கிக் கொள்ளலாம்.

2. கற்றலுக்கான இடத்தைத் தெரிவு செய்தல்.

   கற்றலுக்கான இடம் சிறந்த காற்றோட்டம், வெளிச்சம் உள்ள இடமாக இருத்தல் வேண்டும். அத்துடன் வேறு விடயங்களின்பால் கவனத்தை சிதறடிக்காமல் இருக்க வேண்டும். வேறு விடயங்கள் கவனத்தைக் கவரும்போது (தொலைக்காட்சிப்பெட்டி, தொலைபேசி அருகில் இருத்தல்) கற்றல் நேரம் வீணாகிவிடும்.

3. கற்றலுக்கு உகந்த நேரத்தைத் தெரிவு செய்தல்.

   சிலர் அதிகாலையில் படிப்பதையும், சிலர் இரவில் படிப்பதையும் விரும்புவர். ஒவ்வொருவரும் தமக்குப் பொருத்தமான நேரத்தைத் தெரிந்தெடுத்து அந்தந்த

நேரங்களில் தினமும் கற்றுக்கொள்ள வேண்டும். எப்படியாயினும் காலையில் சிறிதளவு நேரத்தை ஒதுக்கிக் கொண்டால் சில விடயங்களை இலகுவாகப் பதிக்கலாம்.

4. கடினமான பாடங்களுக்கு முதலிடம் வழங்கல்.

கடினமான பாடங்களை முதலிற் படிக்கலாம். புத்துணர்வுடன் படிக்க ஆரம்பிக்கும்போது இலகுவாகவும், விரைவாகவும் கிரகிக்கமுடியும். இதன் மூலம் நேரத்தைச் சேமிக்கலாம்.

5. தொடர்கற்றலைத் தவிர்த்தல்

மூளை களைப்படையாதிருக்க ஒவ்வொரு 50 நிமிடங்கள் கற்றபின் 10 - 15 நிமிட இடைவேளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ் இடைவேளையில் மூளை கற்றவற்றைச் சிறப்பாக ஒழுங்கமைத்துக் கொள்ளும். எனவே தொடர்ந்து கற்றலைவிடச் சிறு இடைவேளை எடுத்துக் கற்றல் விரைவாகவும், சிறப்பாகவும் இருக்கும்.

6. களைப்படையும்போது வேறு வேலைகள் செய்தல்.

கவனத்தைக் கற்றலில் சரியாக ஈடுபடுத்த முடியாது போகும்போது கற்பதை நிறுத்தி, வேறு வேலைகள் இருப்பின் அவற்றைச் செய்தபின் மீண்டும் கற்க ஆரம்பிக்கலாம். கவனம் குலைந்து கற்க முடியாதுள்ளபோது கற்குமிடத்தில் இருந்து நேரத்தை விரயம் செய்ய வேண்டியதில்லை.

7. குறிப்பு எடுக்கப் பழகுதல்.

கற்றவற்றின் சுருக்கங்களை சிறிய அட்டையில் எழுதி வெளியே செல்லும் போது கொண்டு செல்லலாம். வெளியிடங்களில் காத்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படின் அந்த நேரத்தில் எழுதிக் கொண்ட அட்டைகள் உதவி புரியும்.

8. நித்திரைக்குப் போதிய நேரம் ஒதுக்குதல்.

நித்திரை செய்யும் நேரத்தில் நன்றாகத் தூங்கி ஓய்வெடுக்க வேண்டும். குறைந்தது ஆறு மணித்தியாலமாவது நித்திரைக்காக ஒதுக்கவேண்டும்.

கற்றலுக்கு ஒதுக்கிய நேரத்தினைப் பயனுள்ளதாக்கச் சிலநுட்பங்கள்

1. இருக்கையிலிருந்து கற்றல்.

பொருத்தமான ஆசனத்தில் சரியான நிலையில் இருந்து கற்றல் வேண்டும். அதன் மூலம் பரீட்சை நேரங்களில் கற்றுக்கொண்ட விடயங்களை இலகுவில் ஞாபகப் படுத்தலாம். படுத்திருந்து கற்றலைத் தவிர்க்க வேண்டும்.

2. வாசிப்புத் திறனை மேம்படுத்தல்.

- வாசிக்க ஆரம்பிக்க முன் ஒரு தடவை தலையங்கங்களையும், உள்ளடக்கங்களையும் மேலோட்டமாக அறிந்து கொண்டபின், பாடத்தின் ஆரம்பத்தில் அல்லது முடிவில் பாடத்தின் சுருக்கங்கள், வினாக்கள் இருப்பின் அவற்றினை விரிவாக வாசிக்க வேண்டும். இவை பாடத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களை அறியத்தரும்.
- வாசித்து முடிந்த தகவல்களைச் சுருக்கிச் சொந்த மொழிநடையில் எழுதிக் கொள்வது சிறந்த பயனைத் தரும்.
- வாசிப்பில் கவனத்தைச் சரியாகச் செலுத்த முடியாதபோது தொடர்ந்து வாசிப்பதை நிறுத்த வேண்டும்.
- குறித்த விடயத்தை வாசித்தபின், வாசித்தவற்றை நினைவுபடுத்த வேண்டும். வினாக்களிற்குச் சொந்தச் சொற்களை உபயோகித்து விடையளிக்கலாம். விடைகள் சரிபார்த்து தவறாயின் வாசித்தவற்றை மீண்டும் வாசிக்க வேண்டும்.
- வாசித்த விடயங்களை மறக்கமால் இருக்க குறித்த விடயத்தை வாசித்த மறுநாள் 10 நிமிடங்களில் மேலோட்டமாக வாசிக்கலாம். மீண்டும் ஒரு வார

இடைவெளியில் 5 நிமிடங்கள் அதே விடயத்தை நினைவு படுத்திப் பார்க்கலாம். ஒரு மாதத்தின் பின்னர் அப்பாடத்தை வாசிப்பின் 1 - 2 நிமிடங்களில் சுருக்கத்தை மிக இலகுவாகக் கூறிவிடலாம்.

- மனனம் செய்ய வேண்டிய சொற்களில் முதலெழுத்துக்களைச் சேர்த்து ஒரு சொற்பதத்தை உருவாக்கி இலகுவில் மனனஞ் செய்யலாம்.
  (உ - ம்) வானவில்லில் ஏழு நிறங்களின் ஒழுங்கை மனனஞ்செய்ய VIBGYOR (விப்ஜியோர்) எனும் பதம் உபயோகப் படுத்தப்படுகின்றது. Violet, Indigo, Blue, Green, Yellow, Orange, Red)

வகுப்பறைக் கற்றலைச் செப்பனிடச் சில வழிகள்

1. வகுப்புகளிற்கு ஒழுங்காகச் செல்ல வேண்டும். அதிக வரவுகள் பெற்ற மாணவர்கள் திறமையானவர்களாகக் காணப்படுகின்றனர்.
2. வகுப்பறைக் கற்றற் செயற்பாட்டில் சிரத்தையுடன் பங்கெடுத்து, ஆசிரியருடன் நேருக்குநேர் தொடர்பினை ஏற்படுத்தி சந்தேகங்களை உடனுக்கு உடன் தீர்த்துக்கொள்வதன் மூலம் கற்றல் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபடலாம்.
3. ஆசிரியர் கூறும் விடயங்களை உன்னிப்பாகக் கேட்டு விளங்கிக் கொள்ள வேண்டும். புதிதாக அறியும் விடயங்கள் மீது அதிக அக்கறை காட்டுவதுடன், குறிப்பெடுக்கப் பழக வேண்டும்.
4. நண்பர்கள் ஒன்று சேர்ந்து வகுப்பறையிற் கிடைக்கும் நேரங்களிற் குழுவாகக் கற்றலில் ஈடுபடுதல் சிறந்தது.
5. பாடசாலைத் தவணை ஆரம்பித்த நாளிலிருந்து தினமும் படித்துவர வேண்டும். தவணை முடிவிற் படிக்கலாம் என்று காத்திருக்கக்கூடாது.

பரீட்சைக்கால அமைதியின்மை

பரீட்சை நெருக்கும் காலங்களிற் பலர் பின்வரும் விடயங்களால் அவதிப்படலாம்.

- தலையிடி
- நித்திரையின்மை
- பசியின்மை
- மூச்செடுத்தலிற் சிரமம்
- கைகள் வியர்த்தல்
- படபடப்பு
- வயிற்றுக்கோளாறு, வயிற்றோட்டம், அடிக்கடி சிறுநீர் கழிதல்
- நகம் கடித்தல்
- நண்பர், பெற்றோரிடமிருந்து விலகித் தனிமையை விரும்பல்

இப்படியான அமைதியின்மை காரணமாக கற்றற் செயற்பாடுகள் பாதிப்படையலாம் அல்லது பரீட்சையை எதிர்நோக்குவதிற் சிக்கல்கள் ஏற்படலாம்.

இந்த அமைதியின்மையைக் குறைத்துக்கொள்ள

- போதியளவு ஓய்வெடுத்தல்
- ஊட்டச்சத்து நிரம்பிய உணவுகளை உண்ணுதல்
- போதிய உடற்பயிற்சி செய்தல்
- நேர முகாமைத்துவம் பேணப்படல்
- கற்றல் நுட்பங்களைப் பின்பற்றல்
- மூச்சுப் பயிற்சியில் ஈடுபடுதல்
- பரீட்சைக்கு முதல் நாள் அதிக நேரம் கண் விழிக்காதிருத்தல்
- பரீட்சை முடிவடைந்த பின்னர் பிடித்தமான செயற்பாடுகளைச் செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்ளுதல்.
  (உ- ம்) குறித்த இடத்தைப் பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளல்)

போன்ற நடவடிக்கைகள் அமைதியின்மையைக் குறைத்துக் கொள்ள வழிவகுக்கின்றன.

எனவே மாணவர்கள் கற்றலில் இலகுவான வழிமுறைகளைக் கடைப்பிடித்து முறையாகக் கற்று வந்தால் சிறந்த வெற்றியை அடைய முடியும்.

உளவியலும் உதாசீனமும்

உள்ளம் இருண்டால்
ஊரே இருண்டு விடும்
சொல்ல நினைத்தால்
சோகமழை பொழிந்திடும்
கள்ளம் கபடமற்ற
குழந்தை உள்ளம் போல
மெய் வாய் விரிய
மெல்லெனச் சிரிப்பார்!

ஊரே கூடி தினம்
உண்மையே பேசுவார்
மாரே அடித்தாலும்
மாறாது அவர் மனதில்
''லூசு'' என்ற சொல்
ஆறாது அவர் உள்ளத்தின்
காயங்கள்!

மூலையில் இருத்தி
மூன்று வேளை உணவும்
முந்நூற்று அறுபத்தைந்து நாளும்
முணுமுணுப்போடு ஆராத்தி எடுத்தும்
ஆதரிப்பார் அவர்களை வெறுப்புணர்வோடு

ஏன்! மானிடனே
சோதனை அவர்களிற்கு
சொந்தம் எமக்கில்லை
மாறாத நோய் தனில்
இதுவும் ஒன்றா ....
இல்லை! இல்லை!!

ஆதாரத்தோடு ஆதரவு காட்டி
அன்பான வார்த்தைகளால் அளவளாவி
அன்னியோன்னியம் அங்கு காட்டி
அதிகாரத்தைப் புறந்தள்ளி
வாய்விட்டுப் பேசி
பிஞ்சு நெஞ்சறியாப் பிதற்றும் - அவ்
உள்ளத்தின் ஊனத்தை
உறங்காது காத்திடுவோம்.

சாஸ்திரங்கள் கற்று
சரித்திரங்கள் படைக்கும்
சம்சார உலகத்தில்
ஊனமும் ஓர் குறையாய்
ஊரார் மத்தியிலே
காலத்தின் ஓட்டத்தில்
கல்யாண பந்தத்தில்
சீதனம் சீர்வரிசை
சிகரம் வரை எட்டிற்று
ஆறாது உள்ளத்தின் ஊனமது
ஓயாது ஒழித்திடுவோம்
உள்ளத்தின் ஊனத்தை

வழிகாட்டல் ஆலோசனை
வாசல் வரை வந்து நிற்க
தட்டிக்கதை கேட்டு
தடவி ஆற்றுப்படுத்தி அவர்களை
பெற்ற துயர் நீக்கி
பேரின்பம் பெற்று வாழ்வில்
ஊனத்தை ஒழித்திடுவோம்
உடன்பட்டு உழைத்திடுவோம் - அந்த
ஊனம் எமக்கில்லையென
உறுதியோடு வாழ்ந்திடுவோம்.

மானிலத்தில் சஞ்சரித்த எம்
மாபெரும் மானிடப் பிறப்பிலே
ஊனத்தைக் களைந்து
மானத்தோடு மங்காப் புகழுடன்
மலரவேண்டும் எம் வாழ்வு
என்றென்றும் எம் மன உறுதியோடு.

தொடர்பூடக மொழிகளில் கணிதத்தின் முக்கியத்துவமும் மறைந்துபோன எமது கணிதவியல் மரபும்

து. துஷ்யந்தினி

ஆசிரியை, யா/ நெ.மெ.மி.த.க. பாடசாலை

ஒருவர் தமது எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கும் மற்றவர்களது கருத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கும் சிறந்த ஊடகமாக விளங்குவது மொழியாகும். அந்தவகையில் அமைந்துள்ள ஒரு துறையே கணித பாடமாகும். இக் கணித அறிவானது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானதொன்றாகும். கணித அறிவு இல்லையெனில் அவனால் எந்தவிதமான செயற்பாடுகளையும் அல்லது அறிவினையும் பெற்றுக்கொள்ள முடியாது. ஒவ்வொரு மனிதனும் அவனது வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு கணிதம் முக்கியமாகக் காணப்படுகிறது. பூச்சியம் இல்லாமல் இன்றைய அறிவியல் உலகைக் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது. ஒரு பொருளின் வெப்பத்தை அறிய பூச்சியத்தையே ஆதாரமாகக் கொண்டு அளவிட வேண்டும். ஒரு வண்டின் வேகத்தை அறிய அது நின்றிருக்கும்போது அதன் வேகம் பூச்சியம் என்று எடுத்துக் கொண்டு அதன் தற்போதைய வேகத்தை கணக்கிட வேண்டும். இவ்வாறு ஒவ்வோர் அளவையிலும் பூச்சியம் ஆதாரமாக அமைகிறது. பூச்சியம் இல்லாதிருப்பின் இன்றைய கணிதம் வளர்ந்திருக்காது. மற்றைய துறைகளிலும் கணிதத்தின் பயன் இன்றைய அளவுக்கு உயர்ந்திருக்க முடியாது.

மெய்ஞ்ஞானிகள் நிறைந்த எமது புண்ணியப் பிராந்தியத்தில் விஞ்ஞானம் வளரவில்லை என்பதே பொதுவான கருத்தாக இருந்து வருகிறது. ஆத்மபூமி என்று அழைக்கப்படும் புண்ணிய பாரதத்தினை தழுவிய நிலையிலுள்ள எமது வாழ்வில் ஆத்ம ஞானம் வளர்ந்ததேயொழிய விஞ்ஞானம் கருக்கட்டவில்லை என்று பலர் குறிப்பிட்டுக் கொள்வதனை இன்றும் காணலாம். இதனால் மெய்ஞ்ஞானம் என்பது எண்சாண் உடம்பு தொடர்பான வகையில் முதிர்வுபெற்றது. உண்மைதான் அதனூடே விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் பெருமளவில் ஐரோப்பாவில் நிகழ்ந்துள்ளன. இதற்கு காரணம் நாமென்பதே. அதாவது ஐரோப்பியர் கண்டுபிடித்து பயன்படுத்த முடியாத கணிதத்தை நாம் எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தியது குறிப்பிடத் தக்கதாகும்.

ஒரு மாணவன் கடைக்குச் சென்று பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் அதற்கேற்ப பெறுமதியை கணித்து பணத்தினை கொடுப்பதற்கும் கணிதமே ஊடகமாக செயற்படுகிறது. மேலும் வங்கிப் பழக்கவழக்கங்கள், அன்றாடப் பணக் கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய வியாபார நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கணிதமே ஊடகமாக அமைந்திருக்கிறது. கணிதமானது தமிழ், விஞ்ஞானம், பொருளியல், வர்த்தகம் போன்ற ஏனைய பாடங்களுடனும் தொடர்புபட்டு நிற்கிறது. ஒரு நாட்டின் உற்பத்திப் பொருட்களின் அளவு, அவற்றின் மூலம் நாட்டிற்கு கிடைக்கும் தேசிய வருமானம், தேய்மானங்கள், பொருளாதார வளர்ச்சி வீதம் போன்றன கணித பாடத்தை மையமாகக் கொண்டே கணிக்கப்படுகின்றன. கணிதமானது எப்போதும் முடிவுகள் நிச்சயத்

தன்மை வாய்ந்தவையாகவும் உண்மையான விடயங்களை கொண்டமைந்தவையாகவும் இருக்கின்றன. உதாரணமாக 10 + 5 = 15, 15 - 10 = 5 என்பதிலும் இங்கு பத்துடன் ஐந்தினைக் கூட்டினால் பதினைந்து வரும் என்பது நிச்சயத் தன்மையையும் பதினைந்திலிருந்து பத்தினைக் கழிக்கும் போது ஐந்து வரும் என்பது உண்மைத் தன்மையையும் முடிவுகள் மாறாது என்பதனையும் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

ஆரம்பத்தில் மிகவும் பயன்படுத்தப் பட்ட பூச்சியமானது பின்னர் பெறுமதி வழங்கப்படாது எமது கணிதவியலில் பாவனையற்றுச் சென்று கொண்டிருந்தது. ஆனாலும் பூச்சியம் எனப்படும் சிறப்பான இலக்க முறையை கொண்டு கணித்தல் முறையில் இந்துக்கள் நெடுங்காலமாகவே ஈடுபட்டு வந்திருந்தனர். இந்த அறிவியல் பரப்பானதுய ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட காலகட்டத்துடனேயே அங்கு நவீன கணிதவியல் பெரு வளர்ச்சி கண்டது. அது நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புக் களுக்கெல்லாம் அடிப்படையையும் இட்டுக் கொடுத்தது. பாரதத்தில் முதலில் எண்களைப் பயன்படுத்தியது அசோகன். இதனை அசோகனுடைய சாசனங்களில் காணலாம். மேலும் கி.பி. 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த கணிதமேதைகளான ஆரியப்பட்டர், வராஹமஹரர், வாக்பட்டர், பாஸ்கரர், மஹாவீரர், பிரஹம்குப்தர் ஆகியோர்கள் இந்தியக் கணிதவியலை வளர்த்தெடுத்தனர். முதன்முதலாக உலகம் உருண்டை வடிவானது என்ற கருத்தினை வெளியிட்ட விஞ்ஞானி வராஹமிஹிரர் ஆவார். அவரது ''பூச்சியத்திற்குள்ளே இராட்சியம்'' என்ற கோட்பாடு அதனை தெளிவுபடுத்துகிறது. பின்னர் நாடுகளுக்கிடையிலான வர்த்தக தொடர்பு காரணமாக சீனாவிற்கு பூச்சியம் எடுத்துச் செல்லப்பட்டு பூச்சியத்தை இணைத்து கணிதம் வளர்ச்சி பெற்றது. பின் சீனாவில் இருந்து ஐரோப்பாவிற்கு கொண்டு செல்லப்பட்டு பெரு வளர்ச்சி கண்டு நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கு வழிசமைத்துக் கொடுத்தது.

எனவேதான் இந்துக்களது விஞ்ஞானத் துறைப் பங்களிப்பானது சைப்பர் (Cipher, Zero) என்ற இரு கருத்துக்கள் தொனிக்கும் முறையில் அறிஞர்கள் குறிப்பிடுவது வழக்கமாயிற்று. இது நவீன கணிதவியலுக்கு இந்துக்கள் வழங்கிய பெரும் பங்களிப்பைப் புலப்படுத்துகிறது. அப்பங்களிப்பானது அராபியர் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டதன் காரணமாக அராபிய எண்முறை என தவறுதலாக பெயரிடப்பட்டுவிட்டது. அவ்வழியே காலத்தால் எமது கணிதவியல் மரபும் மறைக்கப்பட்டு விட்டது. ஆனால் கணிதமானது எமது வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்துள்ளமையினால் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை இக் கணிதக் கல்வி கற்பிக்கப்பட்டும், கற்றும் வரப்படுகிறது. எனவேதான் ஆரம்பக்கல்வி மாணவரிற்கும் கணித அடிப்படை அறிவு மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் இன்றைய கல்வி நிலையானது கணினி கல்வியாக மாற்றமடைந்து வருகின்ற வேளையில் மாறும் உலகிற்கேற்ப எம்மையும் மாற்றிக்கொள்ள வேண்டியவர் களாக நாம் இருப்பதனால் கணித மாறிகள், மாறிலிகள் என்பவற்றில் போதிய அறிவு படைத்தவர்களாக மாறவேண்டும். எனவே தான் மறைந்த எமது கணித அறிவை மீண்டும் வளர்ச்சிபெறச் செய்து அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சி பெற்ற ஓர் சிறந்த படைப்பாளியாகவும் சிந்தனை, நுண்மதியாற்றல் கொண்ட உயர்ந்த கல்விமான்களாகவும் திகழ்வதற்கு தொடர்பூடக மொழியாகிய கணித அறிவும் எமக்கு அவசியமான ஒன்றாகும் என்று கூறிக்கொள்வதில் எவ்வித ஐயமும் இல்லை.

சிறுவர் உரிமைகள் - ஓர் அறிமுகம்



சி. திருச்செந்தூரன்
விரிவுரையாளர்,
அரசறிவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உரிமை என்பதன் அர்த்தம்

சமகால உலகில் உரிமை என்ற எண்ணக்கரு முதன்மைப்படுத்தி நோக்கப்படுகின்றது. தனிமனிதன், சமூகம், நாடு, பிராந்தியம், சர்வதேசம் என்ற யாவுமே உரிமை வலைக்குள் கட்டுண்டே காணப்படுகின்றன. மனிதனின் நல்வாழ்விற்கும், மனிதனின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கும் நவீன அரசுகளில் மனித உரிமைகளே அடிப்படையாகவும், அத்திவாரமாகவும் அமைகின்றன. மனித உரிமைகள் மனிதன் ஒருவன் கருவில் உருவானது முதல் ஏற்படுகின்றன. அந்த உரிமைகள் அவன் இறந்தவுடனேயே இல்லாமல் போய்விடுவதில்லை. மாறாக அவனது உடல் அடக்கம் செய்வது வரையில் தொடர்கின்றன. பொதுவாக மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், வாழ்வைச் செம்மைப்படுத்திக்கொள்ளவும் உரிமைகள் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன.

பேராசிரியர் லஸ்கி (Professor Laski) யின் கருத்துப்படி ''உரிமை என்பது ஒவ்வொரு மனிதனும் தனது ஆளுமையைச் சிறப்பாக வளர்ப்பதற்கு அவசியமான பொதுவான சமூகநீதிகளே'' என வரையறுக்கின்றார். முன்னாள் ஐ. நா. செயலாளர் கோபி அனான் (Gopi Anan) கருத்துப்படி ''மனிதனை மனிதனாக இனங்காண்பதற்கு அவசியமாக இருக்கக்கூடிய பண்புகளே மனித உரிமைகள் ஆகும்'' எனச் சுட்டுகின்றார். பொதுவாக மனித கௌரவத்தை மேம்படுத்தக்கூடிய விழுமியங்கள் சமூகத்தால், அரசால், சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்படுகின்றபோது அவை உரிமை என்ற அந்தஸ்தைப் பெறுகின்றன.

நவீன உலகில் உரிமை என்பதன் வளர்ச்சிக்கு எலினோர் ரூஸ்வெல்ட் அவர்களின் முயற்சியால் ஐக்கிய நாடுகள் சபையால் 1948இல் வெளியிடப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (Universal Declaration of Human Rights) அடிப்படையாக அமைந்தது. 1948ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மனித உரிமைகள் பிரகடனம் முப்பது உறுப்பினர்கள் ஊடாக மனித உரிமைகளைத் தெளிவாக விளக்குகிறது. இம் மனித உரிமைப் பிரகடனத்தின் பிற்பட்ட கால வளர்ச்சியாக தொண்ணூறுகளில் சிறுவர் உரிமை என்ற எண்ணக்கரு முதன்மைப்படுத்தப்பட்டது.

சிறுவர் உரிமைகள்

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமை பற்றிய சமவாயம் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20இல் பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலங்கை 1991ஆம் ஆண்டு தொடக்கம் இதனை நடைமுறைப்படுத்துவதாக உறுதிப்படுத்தியது. இச் சிறுவர் உரிமை தொடர்பான சமவாயத்தில் ஐம்பத்துநான்கு உறுப்புரைகள் ஊடாக சிறுவர் உரிமைகள் செம்மையாக வரையறுக்கப்பட்டுள்ளன. பொதுவாக பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் யாவரும் சிறுவர்கள் என வரையறுக்கப்படுகின்றனர். சிறுவர்கள் விசேட கவனிப்பிற்குரியவர்களாக பெற்றோர், ஆசிரியர், அரசால் நோக்கப்படவேண்டும்.

பதினெட்டு வயதிற்கு கீழ்ப்பட்ட பிள்ளைகள் செய்யும் குற்றங்களுக்கு மரண தண்டனையோ, ஆயுள் தண்டனையோ வழங்கப்படக்கூடாது என சிறுவர் உரிமை பிரகடனம் வலியுறுத்துகிறது. பொதுவாகச் சிறிய குற்றங்களை இழைக்கும் சிறுவர்கள் நன்னடத்தை இல்லங்களுக்கு அனுப்பப்பட்டு சீர்திருத்தம் செய்யப்படுவது பெரும்பாலான நாடுகளில் உள்ள சட்ட ஏற்பாடாகும். மேலும் 15 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் மோதல்களில் நேரடியாகப் பங்கு பற்றாமல் இருப்பதை அரசுகள் உறுதிப் படுத்தவேண்டும். அத்துடன் 15 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளை ஆயுதப் படைகளில் சேர்க்கக்கூடாது என சிறுவர் உரிமை பிரகடனம் வலியுறுத்துகிறது.

சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின் பிரகாரம் முக்கியமான சிறுவர் உரிமை களாக பின்வருவன அடையாளப்படுத்தப் படுகின்றன.

- சமத்துவத்திற்கான உரிமை/ பாரபட்ச மற்றிருத்தலுக்கான உரிமை.
- உயிர் வாழ்வதற்கான உரிமை.
- பிறந்தவுடன் பெயரைக் கொண்டிருப் பதற்கான உரிமை.
- குடியுரிமையைப் பெறுவதற்கான உரிமை.
- பெற்றோருடன் வாழ்வதற்கான உரிமை.
- கருத்து வெளிப்பாட்டுரிமை.
- சிந்தனைச் சுதந்திரம்.
- மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம்.
- மத சுதந்திரம்.
- ஒன்று சேர்வதற்கான உரிமை.
- சங்கங்களில் சேரும் உரிமை.
- அந்தரங்கத்துக்கான பாதுகாப்பு உரிமை.
- தகவல் பெறுவதற்கான உரிமை.
- சமூகவிருத்திக்குப் போதுமான வாழ்க்கைத் தரத்தைப் பெறும் உரிமை.
- கல்வி கற்பதற்கான உரிமை.
- ஓய்வினை அனுபவிப்பதற்கான உரிமை.
- கலாசார நடவடிக்கைகளில் ஈடுபடு வதற்கான உரிமை.
- சித்திரவதைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கான உரிமை.
- போதைப்பொருள் து' பிரயோகம், பாலியல் சுரண்டலில் இருந்து விடுபடு வதற்கான உரிமை.
- ஆயுத மோதலில் இருந்து விடுபடு வதற்கான உரிமை.

சிறுவர் உரிமைகளும் அதன் முக்கியத் துவமும்

மேற்குறித்த சிறுவர் உரிமைகள் முழுமையாக அமுலாக்கம் செய்யப் படுவதற்கு பெற்றோர், ஆசிரியர், சமூகம், அரசு ஆகியன ஒன்றிணைந்து செயற்படுதல் வேண்டும். தற்போது சிறுவர்கள் தமது உரிமைகளை முழுமையாக அனுபவிக்கப் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன. குறிப்பாக சிறுவர் உரிமைப் பிரகடனத்தின் உறுப்புரை இரண்டில் சமத்துவத்திற்கான உரிமை கூறப்பட்டுள்ளது. அதாவது இன, மத, மொழி, பிரதேச, பால், வயது, குடும்பப் பின்னணி போன்றவற்றின் அடிப்படையில் சிறுவர்களுக்கிடையில் பாகுபாடு காட்டப் படக்கூடாது. சமத்துவம் பேணப்படல் வேண்டும் எனக் கூறப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இச் சமத்துவத்திற்கான உரிமை சமூகத்தால் கேள்விக்குட்படுத்தப் படுகின்றது.

இவ்வாறே உறுப்புரை இருபத்தெட்டில் கல்வி கற்பதற்கான உரிமை எல்லாப் பிள்ளைகளுக்கும் உண்டு எனக் கூறப்படு கின்றது. மேலும் அரசாங்கத்தின் கடமை ஆரம்பக் கல்வியானது கட்டாயமாகவும், இலவசமாகவும் கிடைக்கச் செய்யப்படல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது. எனினும் நடைமுறையில் வறுமை காரணமாக ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இலங்கையில் ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்வதில்லை.

மாறாக சிறுவர் தொழிலாளர்களாக பன்னிரண்டு வயதிலேயே சிறுசிறு தொழில் முயற்சிகளில் இறங்குகின்றனர். அல்லது பெற்றோருடன் இணைந்து விவசாயம் அல்லது கடற்றொழில் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இந்தியாவைப் பொறுத்த வரையில் பல இலட்சம் தொழிலாளர்கள் பட்டாசுத் தொழிற்சாலையில் தொழில் புரிகின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டுமாக இருப்பின் சமூகத்தில் ஓரளவிற்காவது வறுமை குறைக்கப்பட்டு சிறுவர்களின் கல்வி உரிமை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும்.

சித்திரவதைக்கு உள்ளாகாமல் இருப்பது சிறுவர்களின் முக்கியமானதோர் உரிமையாகும். உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ எத்தகைய சந்தர்ப்பத்திலும் சிறுவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப் படுதல்கூடாது. மேற்கு ஐரோப்பிய நாடு களில் இவ் உரிமை முழுமையாக அமுலாக்கம் செய்யப்படுகின்றது. அங்கு பெற்றோர், ஆசிரியர் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வு காணப்படு கின்றது. துரதிஸ்டவசமாக இலங்கை, இந்தியா போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இவ் விழிப்புணர்வு காணப்படுவதில்லை. சிறுவர்கள் விடும் சிறியசிறிய தவறுகளுக்காக கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. பரீட்சையில் குறைந்த மதிப்பெண் பெறுகின்ற போது சிறுவர்களை சித்திரவதை செய்வது என்பது நாகரீக சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது. அண்மையில் தென்னிலங்கையில் 2013இல் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த மதிப்பெண் பெற்றமைக்காகத் தனது மகளைத் தாயொருவர் நாய்க்கூண்டில் அடைத்து கொடுமைப்படுத்திய துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதேபோல இன்னொரு சமயத்தில் தந்தை ஒருவர் புலமைப்பரிசில் பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெற்றமைக்காக சிறுவனின் முகம், கை, கால்களில் குறிசுட்ட துன்பியல் சம்பவமும் இடம் பெற்றுள்ளது. இத்தகைய சம்பவங்கள் பத்திரிகை வாயிலாக வெளிக் கொணரப்பட்டுள்ளதால் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

மேலும் ஓய்வினை அனுபவிப்பதற்கும், பொழுதுபோக்குவதற்கும் சிறுவர்கள் பூரணமாக அனுமதிக்கப்படல்வேண்டும். அவ்வாறு ஓய்வினை அனுபவித்து பொழுது போக்கும்போதே அவர்களது இயல்பான ஆற்றல்கள், திறமைகள் சிறப்பாக வெளிக்கொணரப்படும். சிறுவர்கள் மீது எத்தகைய திணிப்புக்களையோ, அடக்கு முறைகளையோ கட்டவிழ்த்து விடக்கூடாது. குறிப்பாக உயர் கல்விக்குரிய பாடத்தைத் தெரிவுசெய்தல் என்பதை முழுமையாக மாணவர்களது கைகளிலேயே பெற்றோரும், ஆசிரியரும் ஒப்படைத்தல் வேண்டும். ''கலை, வர்த்தகம், கணிதம், மருத்துவம் எதுவாகிலும் பிள்ளையின் தெரிவு'' என விடல் வேண்டும். பெற்றோர் தமது கௌரவத்திற்காக பிள்ளையை மருத்துவம் படி என்றோ, வர்த்தகம் படி என்றோ திணிக்கக்கூடாது. சித்திரத்தில் நாட்டம் உள்ள பிள்ளை சித்திரம் படித்து லியானாடோ டாவின்சியாகவோ, பிக்கா சோவாகவோ வரமுடியும். விளையும் பயிர்களை ஒரு போதும் முளையிலே கிள்ளி எறியக்கூடாது.

மேலும் போதைப்பொருள் துஷ்பிரயோகம், பாலியல் சுரண்டலில் இருந்தும் சிறுவர்களை பாதுகாப்பது மிகமிக அவசியமாகும். அறியாமை, வறுமை போன்றன காரணமாகப் பாலியல் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுகின்ற சூழலில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும். அவ்வாறே நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறுவர்கள் மீது திட்டமிட்ட ரீதியில் போதைவஸ்து கும்பல் தனது நேசக் கரங்களை நீட்டுகின்ற திடுக்கிடும் செய்திகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. தொடக்கத்தில் இலவசமாக வழங்கப்பட்ட

போதைப் பொருட்கள் பின்னர் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. இந் நச்சு சூழலில் இருந்து சிறுவர்களை மீட்டெடுப்பது பெற்றோரதும், ஆசிரியரதும் தலையாய பணியாகும். இல்லையேல் எதிர்கால சமூகம் போதைக்குள் சிக்குண்டு, அள்ளுண்டு சிதைந்து விடும்.

முடிவுரை

எனவே தொகுத்து நோக்குகின்றபோது இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள். இன்னும் பத்து ஆண்டுகளில் சமூகத்தை, நாட்டை வழிநடத்தும் சிற்பிகள் அவர்கள். எனவே இத்தகைய எதிர்காலச் சந்ததி நல்ல உடல், உள ஆரோக்கியம் உள்ளதாக, பூரண கல்வியறிவு உடையதாக, பரோபகார சிந்தனையுடையதாக கட்டியெழுப்பப்பட வேண்டுமாக இருப்பின் பெற்றோர், ஆசிரியர், சமூகம், அரசு என்பவற்றின் ஒன்றிணைந்த தூர நோக்கான செயற்பாடுகள் ஊடாக சிறுவர் உரிமைகள் முழுமையாகப் பேணப்பட்டு உறுதிப்படுத்தப் படல் அவசியமானதாகும்.

உசாத்துணைகள்

01) அமிர்தின். வி, மனித உரிமைகள் ஓர் அறிமுகம், தகவல் நலன்புரி அமைப்பு, பேராதனை, 2003.

02) குணரத்தினம். வே, மனித உரிமைகள் கோட்பாடும் வியாபகமும், கிழக்குப் பல்கலைக்கழக வெளியீடு, 2007.

03) குணசேகர. ச, மனிதாபிமான சட்டம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றம், 2003.

04) திருச்செந்தூரன். சி, இலங்கையில் அடிப்படை உரிமைகள் : ஓர் அறிமுகம், தமிழ்பூங்கா அச்சகம், நெல்லியடி, 2011.

05) Brownlie lan, Basic Documents on Human Rights, Third Edition, Claren don press, London, 1994.

06) Dworkin. R, Taking Rights Seriously, Cambridge mass : Harvard University Press 1989.

''வெள்ளத்தாற்போகாது; வெந்தணலால்வேகாது; வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது; கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது;
கள்ளர்க்கோமிகவரிது; காவலோமிகவெளிது; கல்விஎன்னும்
உள்ளத்தே பொருளிருக்க, உலகெலாம் பொருள்தேடி உழல்வதேனோ?''

கற்கைநன்றே, கற்கைநன்றே
பிச்சை புகினுங் கற்கைநன்றே.

நாற்பாற் குலத்தில் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே.

எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகஎன்பர்.

- வெற்றிவேற்கை

நாமும் சைவமும்

திருமதி ஜெயமணி சிவநடராஜா
ஆசிரியை,
யா/ செ.மெ.மி.த.க. பாடசாலை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நிலைபேறு பெற உதவுபவை சமயங்களாகும். காட்டு மிராண்டிகளாக கூட்டம் கூட்டமாக வாழ்ந்த மனிதர் சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதற்காக உருவானவை சமயங்கள். அனைத்து சமயங்களும் அன்பையே போதித்து நிற்கின்றன. முழுமையான சமயங்களுள் ஒன்றாகிய சைவ சமயம் மனிதரின் அன்றாட வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்தது. மனிதருடைய ஒவ்வொரு செயலையும் இறந்ததாக மாற்றி வளமிகு வாழ்க்கையை வாழ உதவுவது சைவ சமயமாகும். சைவசமயத்திலுள்ள ஒவ்வோர் சடங்குகளும் அர்த்தம் பொதிந்ததாக காரண காரியங்களுடன் உருவாக்கப் பட்டவையாகவே உள்ளன.

சைவத்தின் தார்ப்பரியம் உணர்ந்து எமது முன்னோர்களால் பின்பற்றப்பட்ட சடங்குகள் யாவும் இனிது வெறும் கடமைகளுக்கான செயற்பாடுகளாகவே மாறி நிற்கின்றன. அர்த்தம் புரியாமல் பின்பற்றப்படுகின்ற செயற்பாடுகளால் உருவாக்கப்பட்ட நோக்கத்தையே சிதைத்து விடக்கூடியன. நேரமின்மையாலும் விளக்கமின்மையாலும் அரைகுறையாக முன்னெடுக்கப்படுகின்ற சடங்குகள் அதன் மூலவடிவத்தையே மாற்றி விடுகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப் படும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் பயனற்ற செயற்பாடுகளாகவே காணப்படுகின்றன. ஆகவே எமது இளம் சமுதாயத்தினரின் நலன் கருதி ஒரு சில சைவசமய நடைமுறைகளை அலசுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சைவ சமயத்தின் அடையாளங்களான விபூதி தரித்தல், சந்தனமிடுதல், உருத்திராட்சம் அணிதல் என்பன மனிதனின் உடலை சிறந்த முறையில் பேணிக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட நடைமுறைகளாகும். சக்தியை கடத்துகின்ற மற்றும் கட்டுப்படுத்துகின்ற சிறந்த ஊடகமாக விபூதி திகழ்கிறது. இதனாலேயே அதிகமாக சக்தி வெளிப்படுத்துகின்ற நெற்றி போன்ற உடலின் பாகங்களில் விபூதி பூசப்படுகின்றது. இவ்வாறே எமது உடலின் நரம்பு முடிச்சுகள் அனைத்தும் இணைகின்ற கேந்திரங்களான புருவங்களுக்கு நடுவே அமைந்திருக்கின்றது. சிவனின் மூன்றாம் கண்ணாகிய நெற்றிக்கண் குறித்து நிற்பது இதுவேயாகும். இதன் காரணமாகவே சந்தனம் தரிக்கின்ற பழக்கம் எமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டது. குளிர்ச்சியை விளைவிக்க வல்ல சந்தனத்தின் மூலம் உடலின் நரம்புகள் யாவும் சீராக்கப்படும். இதன் மூலம் பக்கவாதம் போன்ற நரம்பு வியாதிகள் ஏற்படுவதை தவிர்க்க முடியும். இவ்வாறே உருத்திராட்சம் என்பது அதிர்வலைகளை உறிஞ்சக்கூடிய ஓர் சக்தி வாய்ந்த பொருளாகும். எமது உடலானது அதிர்வுகளால் இயங்குகின்ற ஓர் இயந்திரமாகும். அவ்வாறே எமது சூழலும் பல்வேறுபட்ட அதிர்வலைகளால் நிரம்பியிருக்கிறது. தேவையற்ற

அதிர்வுகளிலிருந்து எமது உடலைப் பாதுகாத்து உடலின் அதிர்வோட்டத்தை சீராய் பேண உருத்திராட்சம் உதவு கின்றது.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று சொல்வார்கள் எமது முன்னோர்கள். சைவசமயியின் ஒவ்வோர் செயற்பாடும் கோயிலை சார்ந்ததாகவே அமைந்திருக்கிறது. கோயிலானது மனித மனத்தினை அமைதியாக்கி எண்ணங் களை சீராக்குகின்ற சக்தி வாய்ந்தது. ஊரிலுள்ள வீடுகள் அனைத்தும் கோயிலின் கோபுரத்தை விட உயரம் குறைந்ததாகவே அமைக்கப்பட வேண்டும் என்பது சம்பிரதாயமாகும்.

கோயில் கோபுரத்தில் காணப்படு கின்ற கலசத்தினுள் இடப்பட்டிருக்கும் நவதானியங்கள் மின்னலை கடத்தும் சக்தி வாய்ந்தவை. அதாவது சிறந்ததோர் இடிதாங்கியாக கோயில் கோபுரம் விளங்கு கின்றது. இதன் மூலம் இடி மின்னல் தாக்கங்களிலிருந்து உயிர் பாதுகாக்கப்படு கின்றது. ஆயினும் தற்காலத்தில் பாரம்பரியத்தை மீறிக் கட்டப்படும் அடுக்குமாடி வீடுகளில் மின்னல் தாக்கங்கள் ஏற்படுவது நாம் அறிந்ததே.

மஞ்சளை சிறந்ததோர் நோய்க்கிருமி நீக்கியாக இன்று உலகமே கொண்டாடு கிறது. இதனை நன்குணர்ந்த எமது முன்னோர்கள் நோய்களை ஏற்படுத்து கின்ற கிருமிகளை நீக்குவதற்காக மஞ்சளை சிறந்த முறையில் பயன்படுத்தி இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் வீடுகளிற்கு மஞ்சள் நீர் தெளிப்பதன் மூலம் வீடுகளிலுள்ள நோய்க்கிருமிகள் நீக்கப்படுகின்றன. இதன் மூலம் எமது சுகாதாரம் பேணிப் பாதுகாக்கப்படுகிறது. இவை அனைத்தும் எம்மை அறியாமலே நாம் மேற்கொள்ளும் சிறந்த பண்பு களாகும்.

இவ்வாறாக எமது முன்னோர் களால் வகுக்கப்பட்ட சம்பிரதாயங்கள் ஒவ்வொன்றும் எமது நலனிற்காகவே ஏற்படுத்தப்பட்டவையாகும். இவற்றின் தார்ப்பரியம் அறியாமல் நாம் பின்பற்றி னாலும் இச் சடங்குகளின் பலன்களை நாம் அனுபவித்தே வருகின்றோம். எமது சைவசமயம் எடுத்துக் கூறுகின்ற சடங்கு களாக வெறும் மூட நம்பிக்கைகளாக கருதி அவற்றை பின்பற்றுவதை தவிர்க் கின்ற எமது இளம் தலைமுறையினர் சைவத்தின் பலன்களை படிப்படியாக இழந்து வருகின்றனர். சடங்குகள் அனைத்தும் காரணத்துடனே உருவாக்கப் பட்டவை என்பதை இளையோருக்கு எடுத்துக்கூறி அவர்களை பின்பற்ற வைக்க வேண்டியது மூத்தோர் கடமையாகும்.

காலவோட்டத்தில் மருவி வருகின்ற எமது சடங்குகளையும் பண்பாடுகளையும் பேணிப் பாதுகாத்து அவற்றின் மூல வடிவம் மாறாது எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டியது ஒவ்வோர் சைவசமயத்தவரதும் கடமையாகும்.

பிள்ளைகளின் உள நலமும், பரீட்சைகளும்

திருமதி பாமினி செந்தூரன்
உளவள உதவி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

மனித வளர்ச்சியானது, பிறப்பு முதல் இறப்புவரை தொடர்ச்சியாகப் பல மாறுதல்களைக் கொண்டதாக அமைகின்றது. மனித வளர்ச்சியில் ஏற்படும் இத்தகைய மாறுதல் களை 'வளர்ச்சிப் படிகள்' அல்லது 'வளர்ச்சி நிலைகள்' (Stages of Development) என்று உளவியலாளர்கள் குறிப்பிடுவர்.

மனித வாழ்க்கையை எட்டுக் கட்டங்களாக எரிக் எரிக்சன் (Erik Eroson) பிரித்து விளக்கியுள்ளார். எனினும் மனித வளர்ச்சி 7 நிலைகளைக் கொண்டதாக சில உளவியலாளர் குறிப்பிடுகின்றனர். எனினும் சிலர் வளர்ச்சியானது குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், குமரப் பருவம், முதிர் பருவம் எனும் நான்கு படிகளாக மட்டுமே பிரிக்கின்றனர். எது எவ்வாறாயினும் பிள்ளைப் பருவம் என்பது மிக முக்கியமான தொன்றாகக் காணப்படுகின்றது. இதைவிட பிள்ளைப் பருவத்தில் நடாத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சையும் குறிப்பிடக்கூடிய தொன்றாகக் காணப்படுகின்றது.

பிள்ளைகளிற்கு உடல்நலம் எவ்வளவு இன்றியமையாததோ, அதே போலவே உளநலமும் மிகவும் அவசியமான தொன்றாகக் காணப்படுகின்றது. பிள்ளைப் பருவத்தின் ஆரம்பத்தில் நிகழ்கின்ற சிறந்த உடல் மற்றும் உள வளர்ச்சியானது, பிள்ளையின் பிற்காலத்தில் சிறந்த பெறுபேற்றை அடைவதற்கு உதவுகின்றது. பாடசாலை செல்லும் பிள்ளையானது நம்பிக்கை, தோழமையுணர்வு, சிறந்த மொழித்திறன், சிறந்த சமூகப் பண்புகள் கொண்ட மனவெழுச்சிகள், தொடர்பாடல் திறன், செவிமடுத்தல் போன்ற பண்புகளைப் பெறுகின்றது. பிள்ளையின் ஆரம்பகாலங்கள் தகவல் நுண்ணறிதிறன், ஆளுமை, சமூக நடத்தைகள் என்பவற்றிற்கு அடித்தளமாக அமைகின்றது. அத்துடன் ஆரம்ப பருவ விருத்தியில் காட்டுகின்ற உதாசீனம் பிற்கால வளர்ச்சியில் அவை ஒன்று திரட்டிய விளைவாக மிகப் பாதகமான நடத்தைக்கும் காரணமாக அமையலாம்.

பிள்ளையொன்றிற்கு பிறப்பினால் கிடைக்கப்பெற்ற திறமை மற்றும் சூழலினால் கிடைக்கப்பெறும் அனுபவம் போன்றவையே அக் குழந்தையின் வளர்ச்சியிலும் நடத்தையிலும் தாக்கம் செலுத்துகின்றன. குறித்த சூழலில் நடைபெறும் நிகழ்வுகளின் ஊடாகவே பிள்ளை அனுபவங்களைப் பெற்றுக் கற்றுக் கொள்கின்றது. குறித்த சூழலுக்கு பிள்ளை இயைபாக்கமடைந்து மற்றும் அச் சூழலினால் கிடைக்கப்பெறும் புத்துணர்வின் தன்மைக்கேற்பவே அப் பிள்ளையின் வளர்ச்சி, நடத்தை மாற்றம் பெறுகின்றது.

பிள்ளைகள் தமது வாழ்க்கைக்கும், இருப்புக்குமாகப் பல அத்தியாவசியத் தேவைகளைக் கொண்டிருக்கின்றனர். (உணவு, உடை, அன்பு, பாதுகாப்பு போன்றன) இவை கிடைக்காவிடின் பிள்ளையின் சாதாரண வளர்ச்சி பாதிப்புறும். இத்தேவைகள் பூர்த்தியாகின்ற போது, பிள்ளை தனது நன்நிலையை உணர்வதுடன் உடல் உள ரீதியாக விருத்தியும் பெறுகின்றது. இவற்றைவிட பிள்ளைக்குக் கிடைக்கும் அன்பு, ஆதரவு, உணவினைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய உறவுகள், கவனிப்பு, பலம் வாய்ந்த ஒற்றுமையான குடும்பத்திலிருந்து கிடைக்கும் பாதுகாப்பு, பிள்ளைகள் பார்க்க,

பின்பற்றத் தேவையான நல்ல மாதிரிகள், புதிய திறன்களைக் கற்பதற்கான சூழலை ஊக்குவித்தல், எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகள், எதிர்கால நிகழ்வுகளை நிர்ணயிக்கும் உணர்வும் நடைபெற்ற நிகழ்வுகள் ஏன் நிகழ்ந்தன என்பது பற்றிய புரிந்துணர்வும் அவற்றை எதிர்கொள்ளும் தன்மை போன்ற பல காரணிகளும் பங்களிப்புச் செய்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையென்பது பிள்ளைகளிற்கும் பெற்றோரிற்கும் மட்டுமல்ல பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரிற்கும் நெருக்கீட்டை ஏற்படுத்தும் ஒன்றாகக் காணப்படுகின்றது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்ற இலட்சியத்துடன் ஒவ்வொரு மாணவனும் விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும். மாணவர்கள் சித்தியடைதல் என்ற தென்றலின் சுகத்தை அடைய வேண்டு மெனில் பல புயல்களைச் சந்திக்க வேண்டி யிருக்கும். தோல்வி மனப்பான்மையை தோல்வியடையச் செய்யவேண்டும். தோல்வியையும் வெற்றியையும் சமனாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வளர்க்கப்பட வேண்டும்.

இன்று பிள்ளைகளின் நன்மைக்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக எனும் பெயரில் நாங்கள் அறிந்தும் அறியாமலும் இழைக்கும் துன்பம் அதிகம். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் எனப் பலரும் பல சமயங்களில் தமது சமூக அந்தஸ்து, பெருமை, வியாபார வெற்றி என்பதன் பொருட்டாக அவர்களைப் பலியிடுகின்றனர். 'பிள்ளைப் பருவமில்லாத பிள்ளைப் பருவம்' அவர்களிற்குத் தரப்படுகின்றது. ஒரு புறம் வயதிற்கு மீறிய உடற் செயற்பாடுகளாலும், போட்டிகளாலும் மறுபுறம் ஓய்வொழிச்சல் இல்லாமல் கிழமை, விடுமுறை நாட்களிலும் நடத்தப்படும் தொடர்ச்சியான வகுப்புக்களும், பரீட்சையைச் சுற்றி நிகழும் செயற்பாடுகளும் மோசமான எதிர்காலத்திற்கு கூட இட்டுச் செல்லலாம். வெற்றிபெறுதல் என்பது எல்லாமுமல்ல. ஆனால் வெற்றிக்காக இடைவிடாது போராடுதல் என்பது முக்கிய மானது. ஆனால் இன்று பல பெற்றோர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவது தான் எல்லாமாக கருதுகின்றனர். பரீட்சை யில் சித்தியடையாத மாணவர்களை கல்வி கற்க தகுதியற்றவர்கள் போல பார்க்கப்படும் கண்ணோட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். பல பெற்றோர்கள் இப் பரீட்சை தொடர்பாக பிள்ளையின் உடல், உள நலத்தையும் கடந்து தங்களிற்குரிய கௌரவம், அந்தஸ்தை நிர்ணயிக்கும் பரீட்சையாக இதை நோக்குவதும் செயற்படுவதும் பரிசீலனை செய்யப்பட வேண்டியதொன்றாகும்.

சிறுவர்களிற்குரிய சுயமான, இயல்பான, சந்தோசம் நிறைந்த, பிரியமான உடல், உளச் செயற்பாடுகளிலிருந்து கட்டாயமாக அவர்கள் அப்புறப்படுத்தப்படுவதோடு வயதினை மீறிய செயற்பாடுகளிற்கும் அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் ஆரம்ப கால பாடசாலை அனுபவங்கள் சுமை நிறைந்தவையாகக் காணப்படுவதுடன், பாடசாலைக்குச் செல்லுதல் என்பது மகிழ்ச்சியற்ற தொன்றாகவும் அமைய வாய்ப்புக்கள் உண்டாகலாம். நல்ல புத்தகங்கள், விளையாட்டுக்கள், ஆடல் பாடல் மத்தியில் இவர்களது சிறு பராயத்திற்குரிய கனவு களும், கற்பனைகளும் வளர்ந்து வருவதற்குப் பதிலாக அவை உடைந்து போவதையே நடைமுறையில் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

விளையாட்டினூடான உடற்செயற் பாடுகள் ஒவ்வொரு பிள்ளையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவசியமா வதுடன், பிள்ளைகள் தம் சுற்றாடலையும் திறன்களையும் அபிவிருத்தி செய்வதற்கும்,

உடல் மற்றும் மூளை செயற்பாடுகளை அதிகரிக்கவும் ஆதாரமாகக் காணப்படு கின்றது. ஆனால் புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் பலரிற்கு இவற்றிற் கான நேரம் ஒதுக்கப்படுவதில்லை.

புலமைப்பரிசில் பரீட்சை மாணவர் களிற்கு ஓர் உறுதியான திறனுள்ள அத்திவாரத்தை இடுகின்றது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் இது முடிந்த முடிவல்ல. இப் பரீட்சையில் சித்தியடைந்த எல்லா மாணவர்களும் தொடர்ந்தும் சாதாரண தரம், உயர்தர பரீட்சையில் சித்தியடைவார்களென்றோ, இதில் தேறாத மாணவர்கள் தொடர்ச்சியாக பின்தங்கி விடுவார்கள் என எதிர்வுகூறுதலென்பது சாத்தியமற்றதொன்றாகவே காணப்படுகிறது.

ஆசிரியர்கள் இவ் வகுப்பில் மெல்லக் கற்கும் மாணவர்களையும் அவர்களது உணர்ச்சி நிலைகளையும் புரிந்து அவர் களுடன் பக்குவமாக நடந்து அவர்களின் திறன் அளவிற்கேற்ப சிறப்பான கவன மெடுத்து அவர்களின் பாதுகாப்பிற்கும் ஏற்றுக்கொள்ளும் தன்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். ஆசிரியர் அவர்களைக் கையாளும் விதத்தில் அவர்களிற்குரிய மரியாதையிலும் சுதந்திரத்திலும் முழுக் கவனம் எடுத்து அவர்களை வளர்த்தெடுத்தல் சிறந்தது.

பிள்ளைகளின் உளநலம் தொடர்பாக அனைவரும் அறிந்திருக்க வேண்டிய தாயினும் பாலர் கல்வி, ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளின் உளநலம் தொடர்பாக அறிந்திருப்பது அவசியமானதும் ஆரோக்கிய மானதுமாகும். மேலை நாடுகளில் பிள்ளைகளின் உள நலம் தொடர்பாக அதிக அக்கறை எடுக்கப்படுகின்றது. பிள்ளையின் வளர்ச்சியில் பல்வேறு பரிமாணங்களில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் குழந்தை உளவியல் குழந்தை பிறந்தவுடன் வைத்தியசாலையில் தொடங்கி பல்கலைக் கழகம் ஈறாக பல இடங்களிலும் போதிக்கப் படுகின்றது. இங்கு அவ்வாறு இல்லா விடினும் குழந்தைகளின் உளநலம் தொடர் பாக அனைவரும் கவனித்துக் கொண்டு, உடலுள நலம் மிக்க ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உறுதி பூணுவோமாக!

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பதே நட்பு.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

- திருக்குறள்

வதிரியில் ஓர் கலங்கரை விளக்கம்!

திரு. வை. சிவசுப்பிரமணியம் J.P
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்,
(ஆரம்பக் கல்வி)
ஓடை, அல்வாய்.

வதிரியில் ஓர் கலங்கரை விளக்கமா? கேட்கின்றபோது ஆச்சரியமாக இருக்கின்றதே! ஒன்றேகால் நூற்றாண்டு காலமாக கல்விப் பணியில் ஒரு கலங்கரை விளக்கமாக சுடர்விட்டுக் கொண்டிருப்பது தான் யா/ நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையாகும். நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளமுடன் வளர்ந்து வருகின்ற பாடசாலையாகும். இப்பாடசாலை ஏறக்குறைய நூற்றி இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்பு மெதடிஸ்த மிசனரியால் ஆரம்பிக்கப்பட்டு; அவர்களாலே நடாத்தப்பட்ட ஒரு சிறந்த பாடசாலையாக அக்காலம் விளங்கியது. பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்ற பின் அதிபர்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இதன் பயனாக இந்து சமயத்தைச் சார்ந்த அதிபர்களும் மிசன் பாடசாலைகளுக்கு மாற்றம் செய்யப் பட்டனர். அதிபர்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும்; எமது பாடசாலையின் வளர்ச்சி வீறுநடை போட்டுக் கொண்டிருந்தது. எங்கள் பாடசாலையின் சுற்றுச்சூழல் இந்துக் கலாசாரத்தால் சூழப்பட்ட பெரும் பகுதியாகும். எனவே இப் பாடசாலை மெதடிஸ்த மிசன் பாடசாலை என்ற பெயரிருந்தாலும் தற்போது இந்து கலாசார முறையிலே நிகழ்வுகள் நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய சிறப்பு அம்சமாகும்.

கலங்கரை விளக்கமாக சுடர்விடும் எங்கள் பாடசாலையானது கல்விக் கடலில் நீந்துவோரை கரை சேர்க்கும் ஒரு தோணி யாக விளங்குகின்ற பெருமையுண்டு. கல்வி பெற்ற கருவூலத்தை கற்றறிய வித்திடும் நிலமாகவே எமது பாடசாலை விளங்கியது என்றால் மிகையாகாது. ''அ" என்ற அகரத்தை தொட்டு உச்சரித்து அறிவுக் கண்ணை திறந்து வைத்த பெருங்கோயிலே எமது பாடசாலை. இப் பாடசாலையே இப்பகுதி மக்களுக்கு ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து வைத்தது என்றால் மிகையாகாது. இங்கு ஆரம்பக் கல்வி மேற்கொண்டு பெருந்தகைகளாக மாறியவர்கள் எம்மத்தியில் பலர் உளர். எம் மக்களில் தொண்ணூற்றைந்து வீதமா னோருக்கு மேலாக இப் பாடசாலையில் கல்வி கற்றனர் என்ற சான்றை அவர்களின் அந்தியேட்டியின்போது அடிக்கப்படும் நினைவு மலர்களில் இருந்து அறியலாம். அன்று மட்டுமல்ல இன்றும் எமது கல்வியின் விளைநிலமாக விளங்குவது யா/ நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையாகும். இப் பாடசாலையில் இருந்து தமது கல்வியை ஆரம்பித்தவர்களில் பலர் பேராசிரியர் களாக, பொறியியலாளர்களாக, வைத்தியர் களாக உள்ளனர். எமது குடும்பத்திலும், எனது ஓடைப் பகுதியிலும் பல பொறியியலாளர்கள், வைத்தியர்கள் இன்னும் பல உயர் உத்தியோகத்தர்களும் உள்ளனர். இவர்களுக்கு கல்வியெனும் வித்திட்டு நீர்ப்பாய்ச்சி விளைபொருளாக

ஆக்கித்தந்த பெருமை எமது மெதடிஸ்த மிசன் என்னும் நல்லாளுக்கே உரியதாகும். இப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும், கற்பித்த ஆசிரிய ஆசிரியை களில் பெரும்பாலானோர் இக் கிராமத்தையே சேர்ந்தவர்கள். கிராமப் பற்றும் பாடசாலைப் பற்றும் ''ஆசிரியம்'' மேல் உள்ள பற்றும் சேர்ந்து பாடசாலை உயர்வுக்குப் பெருந் துணையாக அமைந்தன. பல ஆசிரியைகளோடு எனது மனைவியும் இப் பாடசாலையில் இருபது வருடங்கள் ஆசிரியையாக பணிபுரிந்தவர். இவரின் ஆசிரியப் பணியால் பாடசாலையும் பெருமை யடைந்தது. இவரும் பெருமை பெற்றார்.

எமது பாடசாலை ஒரு கலங்கரை விளக்கமாக சுடர் விடுவதற்கு பலரின் பொறுப்புணர்வு, கடமையுணர்வு, தொண்டுகள், பணிகள் காரண காரியங் களாக அமைந்தன. குறிப்பாக பாடசாலை வளர்ச்சிக்கு ஏற்றால் போல் நல்ல நல்ல அதிபர்களின் இட மாற்றங்கள் வந்து சேர்ந்தன. இட மாற்றங்களால் வந்து சேர்ந்த அதிபர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர் அல்லர் என்ற வகையில் தங்கள் கடமைகளையும் பொறுப்புக் களையும் திறம்படச் செய்தனர். மாணவர் கள் கல்வியில் மிகவும் ஆர்வம் காட்டும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் என்பன பாடசாலையின் வளர்ச்சிக்கு உந்துகோலாக விளங்கின. காலா காலங்களில் எமது பாடசாலை பல புதுமைகளோடு பல்வகையான வெற்றிப் பெறுபேறுகளை பெற்றுச் செல்வதற்கு இப் பாடசாலைச் சமூகம் அரும்பணியாற்றி வருகின்றது. குறிப்பாக அதிபரின் நெறியாள்கையில் நல்லதோர் ஆசிரியர் குழாம் இயங்குகின்றது. மிகவும் அனுபவமும் ஆற்றலும் நிறைந்த ஆசிரியப் பெருமக்கள் இங்கே கடமையில் உள்ளனர். ஆசிரியர்களின் தகைமை களை அறிந்து திறமைகளை தெரிந்து அவர்கள் தரத்திற்கு ஏற்ற வகையில் பாடங்களையும் வகுப்புக்களையும் ஒப்படைப்பது அதிபரின் திறமையான செயலாகும். வெற்றிகரமான அதிபரின் செயலால் பொறுப்புணர்ந்த ஆசிரியர்களின் சேவையினால் பாடசாலை பல வெற்றிகளை பெற்றுக் கொண்டிருக் கின்றது. ஆண்டாண்டு காலமாக ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சிப் பகுதியில் வெற்றிக்கொடி நாட்டுவது எங்கள் பாடசாலை என்ற பெருமை தொடர்வதற்கு காரணமாக எங்கள் ஆசிரியப் பெருமக்களின் சேவைக்கு பாராட்டுக் கூற வேண்டும். எங்கள் பாடசாலையில் ஆசிரியர்கள் பெரும்பாலும் பெண்களாகவே அன்று தொட்டு இன்று வரை காணப்படுகின்றனர். இதுவும் இப் பாடசாலை வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். ஆசிரியைகள் பெரும்பாலும் தாய்மையுள்ளம் படைத்தவர்கள் என்பார்கள். எனவே எமது ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்க வருகின்ற சிறார்களுக்கு தாய்மையான கல்வி அன்போடு ஊட்டப்படுகின்றது. ஆசிரியப் பெருமக்களின் அளப்பரிய சேவையால் இன்று வடமராட்சியின் பல பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் இப் பாடசாலையை தேடி வருவது; இது கல்விக்கொரு 'கலங்கரை விளக்கம்' என்பதனால் அல்லவா.

மேலும் இப் பாடசாலை வளர்ச்சிக்கு தோளோடு தோள் நின்று வலிமை சேர்க்க வல்ல பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் என்பன உள்ளன. அபிவிருத்திச் சங்கம் பாடசாலை

அபிவிருத்தி சம்பந்தமான கருமங்களைச் செய்து பாடசாலைக்கு பேருதவி புரிந்து வருகின்றது. இதற்கு மேலாக என்றும் மாற்றமடையாத அபிவிருத்தித் திட்ட நிகழ்வில் பாடசாலைக்கு பெருந்துணை யாக இருப்பவை பாடசாலை அபிவிருத்திக் குழுவும் பழைய மாணவர் சங்கமுமே. ஏனையவை காலத்தால் மாற்றமடையக் கூடியவை. பாடசாலை அபிவிருத்திக் குழுவும் பழைய மாணவர் சங்கமும் என்றுமே மாற்றமடையாது. பாடசாலை க்கு வேண்டிய காணி கொள்வனவு, கட்டடம் அமைத்தல் இன்னும் பல வகையான பெருந்தேவைகளை நிறைவு செய்ய பெருந்துணையாக நிற்பவை அபிவிருத்திக் குழுவும் பழைய மாணவர் சங்கமுமே. இப் பாடசாலையின் வளர்ச்சி கண்டு பெரு மகிழ்வு கொள்வோமாக.

இன்று நூற்று இருபத்தைந்து ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் யா/ நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை, இன்னும் பல்லாண்டு காலம் தன் புகழ்பூத்த கல்விப் பணியை தொடர்ந்து; பல நூற்றாண்டு விழாக்காண வாழ்த்துவோமாக.

வாழ்க புகழ்! வளர்க பணி!!

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத் - தொல்லை
இரவாம லீந்த இறைவர்போல் நீயும்
காவாமல் ஈகை கடன்.

- புறப்பொருள் வெண்பாமாலை

எடுத்தாலும் ஊறும் இறைத்தாலும் ஊறும் இடைநடுவே
மடுத்தால் மறிபடுமோ மணற்கேணித் தண்ணீர் அதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கச் செல்வமுண் டானவர் அன்புடனே
கொடுத்தாற் குறைவருமோ அச்சு தாநந்த கோவிந்தமே.

- கோவிந்த சதகம்

ஆக்கமிங் கொருவரா லணுக வேண்டுமேல்
ஊக்கமுண் டாவரே லுறுவ ரன்னதும்
நீக்கமில் கொள்கையி னிற்பரே யெனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்.

- நீதிக்கவித் திரட்டு

முயற்சிக்குச் சீதேவி முன்னாகும் சோம்பும்
அயர்ச்சிக்கு மூதேவி யாம்.

- யோகசித்தி

பனைமரம் - குறி சுட்டும் வாழ்வியல்



பொ. துஷிவ்
ஆசிரியர்,
திருக்குடும்ப கன்னியர்மடம்
(தேசிய பாடசாலை)

ஓ! என் பனைமரக் காடே
உன் நினைவு இன்னும்
உன்னளவு கடந்து
உயரம் சுமந்து என்னுள்...
ஓடறியா என் வீட்டுத்திட்டு...
கூரைப் பணியாளனாய் நீ!
உன் சிரம் கொண்ட சிறகுகளன்றோ
என் சிரசின் காய்தலைக் கழுவியவை...

உன் மீது நான் கொண்ட மோகம்...
நுங்கு சுளாவி மோர்ந்த நினைவுகளோடு!
அங்கம் புல்லரிக்க அங்குமிங்குமாய்
அலைகிறதென் அகாலம்...
நான் உன்னில் என்ன விட்டுவைத்தவன்
சொல்!!
என்னையும் நினைவுகளையும் உன்னில்
ஒப்படைத்துவிட்டல்லவா - நான்
ஓட்டம் பயின்று கொண்டிருக்கின்றேன்...

ஓரடிக்குள் அன்றி ஈரடிக்குள்
இறுகியிருப்பாய்;
ஆயின் உன் எழுச்சி மட்டும்!!
என் வீட்டுப் பல்லியும் எலியும்
மனிதரான நாங்களும்...
உன் வளையின் வைரியத்திலும்
இறுமாப்பிலும் நம்பிக்கையிலும்
வாழ்க்கைப்பட்டிருக்கிறோம்!

சிறுவயதில் நான் நொறுக்கிய
புளுக்கொடியலும் கிழங்கும்
கூழும் பிட்டும் தின்ற ஓடியல் மாவும்
கொட்டை பிளந்துண்ட பூரானும்
தனக்குள்ளே முளைக்கத்
துடித்திருந்த குருத்தும்
உன் கேசம் பிளந்து பின்னிய பாயும்
தடுக்கும் கடகமும்
முலைப்பாலையன்றோ
முன்னிறுத்தி நினைவு ஊட்டுபவை...

நீ! எம்மில் என்றும்
கொண்ட எழுச்சிகளாயும்
வீழ்ச்சி தான் காணினும்
உயர்ச்சிகளாயும்
வசந்தங்களைப் பேசும்
எம் வாழ்க்கையாகவே
வசித்துக் கொண்டிருக்கின்றாய்...
உன் வளர்ச்சி
உள்ளூர உற்பவிக்கிறது
இன்னும்...

கொட்டை விழுங்கினால் (?)
மரம் முளைக்குமாம்
சின்ன வயதில் அம்மா வெருட்டிய
நினைவு!
உன் விதைகள் கூட
முழுமையாய் விழுங்கப்பட்டிருக்கவில்லை
எனினும்;
இன்று உன்னையே விழுங்கியதாய்
ஏப்பமிட்டுக் கொண்டிருக்கிறோம்.

பாடசாலைக் கணிதத்தை விளங்கிக்கொள்ளல் ஒரு சிறுகுறிப்பு



கலாநிதி த. கலாமணி
சட்டத்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கணிதம் என்றால் என்ன?

மனித அறிவாற்றல் சார் செயல் நடவடிக்கையின் கவனத்துக்குரிய அம்சங்களில் ஒன்றாக, கணிதம் எப்போதும் உணரப்பட்டு வந்துள்ளது. கணிதமானது, தர்க்க ரீதியானதும் பகுப்பாய்வு ரீதியானதுமான சிந்தனை முறைகளைப் பற்றியதும், நிலைமைகளிடையேயோ அல்லது பொருட்களிடையேயோ உள்ள தொடர்புகளைக் கண்டறிதல் பற்றியதுமாகும்.

கணிதம் ஓர் ஆக்கச் செயல் நடவடிக்கையாகக் கருதப்படுகின்ற வகையில் கண்டுபிடித்தல், உள்ளுணர்வு, தேடிக் கண்டறிதல் என்பவற்றை அது உள்ளடக்கியுள்ளது. மேலும், வரைபடங்கள், வரைபுகள், குறியீடுகள் என்பவற்றைப் பயன்படுத்தி, குறிப்பான நிலைமைகளைச் சித்திரித்தலுடனும் கணிதம் சம்பந்தப்பட்டுள்ளது. அதே வேளை, மனித நடவடிக்கைகளுக்கு அவசியமானவையாக இன்று கருதப்படுகின்ற 'தீர்மானம் மேற்கொள்ளல்', 'பிரச்சினை விடுவித்தல்' ஆகிய செயற்பாடுகளில் கணித ரீதியான சிந்தனை முறைகளைப் பயன்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருத்தலையும் கணிதம் உள்ளடக்கியுள்ளது. எமது உலகை விபரிக்கப் பயன்படுத்தப்படுவதனாலும் உலகை விளங்கிக்கொள்ள எமக்கு உதவுவதனாலும் பொதுக்கல்வியின் ஓர் அடிப்படைக் கூறாக கணிதம் இன்று விளங்குகிறது.

பாடசாலைக் கணிதம்

கணிதத்தின் முக்கியமான மூன்று அம்சங்களில் பாடசாலைக் கணிதத்தின் மூலம் நிறைவேற்றப்படவேண்டும் என இன்று எதிர்பார்க்கப்படுகின்றது.
அவையாவன :

- கணிதத்தை நயத்தலையும் கணிதம் குறித்த நேர் மனப்பாங்குகளைக் கொண்டிருத்தலையும் மாணவரிடையே விருத்திசெய்தல்.
- கணிதம் சார் செயல் நடவடிக்கைகளில் மாணவர்களில் ஈடுபடும்போது இன்றியமையாதனவாகக் கொள்ளப்படுகின்ற, கணித ரீதியான சிந்தனையையும் செயலாற்றலையும் விருத்தி செய்தல்.
- மாணவர்களுக்குப் பொருத்தமான கணித அறிவையும் திறன்களையும் அவர்களிடையே விருத்தி செய்தல்.

இம் முக்கியமான அம்சங்கள் ஒவ்வொன்றையும் உள்ளடக்கியதான பல்வேறு கணிதம் சார் அனுபவங்கள் பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும். மாணவர்கள் பாடசாலைக் கல்வியில் முன்னேறும் போதும், அறிவு, திறன்கள், கணிதச் செயன்முறைகளின் பயன்பாடு என்பன பற்றிய அவர்களின் விளக்கங்கள் விருத்தியுறும் பொதும் மாணவர்களுக்கான செயல் நடவடிக்கைகள் எளிமையான

வற்றிலிருந்து ஆரம்பித்து சிக்கலான வற்றுக்கு விரிந்து செல்லும் வகையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ஆனால், எல்லா மாணவர்களும் ஒரே ஆற்றல் உள்ளவர்கள் அல்லர். அவர்களிடையே தனியாள் வேறுபாடுகள் உண்டு. அவர்கள் கற்றுக்கொள்ளும் வேகங் களிடையே வேடுபாடுகள் உண்டு. அவர்கள் வெவ்வேறு குடும்பப் பின்னணி களிலிருந்து பாடசாலைக்கு வருகின்றமை யால், வெவ்வேறு வயதுகளில் அவர்கள் பெற்றுக்கொண்ட கணித அனுபவங்களும் வெவ்வேறாக இருக்கும். எனவே, எல்லா மாணவர்களினதும் தேவைகளையும் நிறைவுசெய்யக் கூடிய, நெகிழ்ச்சியுள்ள கணித நிகழ்ச்சித் திட்டத்தை பாடசாலை கள் கொண்டிருக்க வேண்டும்.

பாடசாலைக் கணிதத்தின் இலக்குகள்

இவ்வகையில் பாடசாலையில் கணிதம் கற்றலானது எல்லா மாணவர் களிலும் பின்வரும் இயலுமைகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.

- தனிப்பட்ட ரீதியிலும் சமுதாய ரீதியாகவும் அவர்களுக்குக் கணிதம் முக்கியமானதும் பயனுடையதும் என உணர்தல்.
- கணிதத்தின் மூலம் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் பெறுவதோடு கணிதத்தின் ஈர்ப்புத் திறனையும் வலுவையும் நயத்தல்.
- கோலங்களை அவதானித்தல், சித்திரித்தல், பிரயோகித்தல் என்பவற்றை வேண்டுகின்ற ஒரு செயல் நடவடிக்கையாகக் கணிதத்தை உணர்தல்.
- பின்வரும் வகைகளில் கணித்தைப் பயன்படுத்தக்கூடியவாறு கணித அறிவையும் சிந்திக்கும் முறை களையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளல்.
  - பணக் கொடுக்கல்வாங்கல்கள் செய்தல், நிகழ்வுகளைத் திட்ட மிட்டு ஒழுங்கு செய்தல், அளவீடு செய்தல் போன்ற நாளாந்தக் கருமங்களை ஆற்றுதல்.
  - தனியாள்சார், குடிசார், தொழில் சார் மட்டங்களில் தீர்மானங்களை மேற்கொள்ளலில் கணிதத்தைப் பயன்படுத்தல்.
  - மேலதிக கல்விக்கும் தொழிலுக் கும் தேவையான கணிதம் சார் கற்றலில் ஈடுபடல்.
- கணித ரீதியான விவாதங்களை முன்வைப்பதற்கும் வியாக்கியானம் செய்வதற்குமான திறன்களை விருத்திசெய்தல்.
- பின்வரும் வகைகளில் கணிதக் கருத்துகள், சித்திரிப்புகள், தொழில் நுட்பம் தொடர்பான போதுமான திறமையைக் கொண்டிருத்தல்.
  - கணிதம் பயன்படுத்தப்பட்டுள்ள தகவல்களை வியாக்கியானம் செய்தல்.
  - சுதந்திரமாகவும் கூட்டிணைந்தும் கணிதத்தைத் தொடர்ந்து கற்றல்.
  - பல்தரப்பட்டோருடன் கணித ரீதியாகத் தொடர்பாடலை மேற்கொள்ளல்.
- பின்வரும் நிலைமைகளை நயத்தல்.
  - பல நாகரிகங்களில் வேர் கொண்டுள்ள, இயக்கமுள்ள ஒரு புலமாக கணிதத்தை நயத்தல்.
  - சமூகஞ்சார், தொழில்நுட்பம் சார் மாற்றங்களில் பாடசாலைக் கணிதம் கொண்டுள்ள தொடர்பு களை நயத்தல்.

பாடசாலைக் கணிதம் ஆற்ற வேண்டியவை.

நாளாந்த வாழ்க்கையில் அத்தியாவசியமான ஒன்றாகவும் ஏனைய

பாடங்களுக்கான கருவியாகவும் கணிதம் விளங்குவதனாலும் கணித உயர் கல்விக்கான அடிப்படையை பாடசாலைக் கணிதமே வழங்குவதனாலும் பாடசாலையில் கணிதக் கல்வித் திட்டம் சிறப்பாக வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படவேண்டும். கணிதம் குறித்த நல்ல மனப்பாங்குகளை வளர்த்து, கணித ரீதியான உசாவல்களை மாணவர்களிடம் ஏற்படுத்தி, பிரச்சினை விடுவித்தலுக்கான நுட்பங்களையும் மாணவர்களிடத்தில் விருத்தி செய்வதில் பாடசாலைக் கணிதம் முழுமையான பணியை ஆற்றவேண்டும்.

பாடசாலைகள் மாணவர்களை 'தொழிற்சாலை மாதிரிகளாக' (factory models) உருவாக்காமல் சிந்தனையுடன் கூடிய பிரச்சினை விடுவிப்பாளர்களாக (problem solvers) மாற்றி, பாடசாலையை விட்டு அவர்கள் நீங்கும்போது கணிதம் பற்றிய நல்ல மனப்பாங்குகளையும் நம்பிக்கையையும் கொண்டவர்களாக வெளியேறும் வகையில் பாடசாலைக் கணிதச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு, நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வகையில் கணிதச் செயன்முறைகளுக்கு பாடசாலைக் கணிதத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். அவ்வாறெனில் பாடசாலைகளில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் கணித அறிவும் கணிதத் திறன்களும் கணிதம் குறித்த நல்ல மனப்பாங்குகளும் உறுதியானவையாக விளங்கும்.

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு.

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

- நாலடியார்

ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள்

இராகம் : அரிகாம் போதி தாளம் : ஏகம்
திஸ்ரநடை

கா கா கா மா பா கா ரீ ஸா ஸா ஸா ஸா ரீ
முத் து முத் தா ன சித் தி ரங் கள் லங்கை

நீ நீ நீ தா பா பா பா கா ரீ ஸா கரி ஸரி
முற்றத் தில் சிந் தி ய ரத் தி னங் கள் ஆ ...

கா கா மா பா தா தப தநீ நி நீ நீ தி தா
பற் றும் பா ச மும் வைத் த வற் றை நல் ல

நி ஸா ஸ ஸா ஸ கா ரிஸ ரீ ஸ ஸா ஸ ஸா ஸ்நி தப மக
பா தை யில் சே ர்க் கும் ப ணி எ ம தே ... ...

தா நீ நித பம மா மா மத பத பத மா பம கா
அன் னை ம டி யில் அ ர வ ணைத் த பிள் ளை

க கா ம பா தா த ப த ஸா நிதா தநி ப தா
பள் ளி வ ரும் பிஞ் சுப் பா ல க னா ம்
(2) தா த த
னாம் அவன்

தா தா நீ ஸா ஸா ஸா ரிகா ஸ ஸா நீ நீ நீ
தன் னந் த னி மை யைப் போக் கி உள் ளத் தி னில்

ஸா ரீ ரி நி நீ ஸா ஸ த த ஸா நி ஸா நி த ப க ரி
நம் பிக் கை அன்பை யும் ஊட் டி டு வோ .. .. ம்

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே - நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்

இயற்றி இசை அமைத்தவர் : திரு. பொன். ஸ்ரீவாமதேவன்
ஸ்வரப்படுத்தியவர் : திரு. சு. கணபதிப்பிள்ளை

கடந்தகால புலமைப்பரிசில் பெறுபேறுகள்

ஆண்டு	தோற்றி யோர்	சித்தி பெற்றோர்	100 இற்கு மேல்	100 - 70 இடையில்	70 இற்கு கீழ்	வெட்டுப் புள்ளி
2004	81	25	22	18	16	124
2005	86	13	27	23	23	124
2006	74	22	27	18	07	133
2007	74	31	27	08	08	140
2008	65	23	09	17	16	114
2009	72	28	30	10	04	140
2010	59	10	32	12	05	142
2011	69	21	35	11	02	151
2012	85	23	41	15	06	148
2013	80	29	38	08	05	154



2009 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

2010 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

2012 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்

2013 ஆம் ஆண்டு மாகாண மட்ட ஆங்கில தின குழுப்பாடலில்
3ஆவது இடத்தினைப் பெற்ற மாணவர்களும் ஆசிரியர்களும்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2013
வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் விபரம்

		புள்ளி	மாவட்ட நிலை
1.	சிறிஸ்குமார் கஜன்	187	17
2.	சிவபாலன் சிவானுஜன்	185	35
3.	சுப்பிரமணியம் மயூரவேணி	184	40
4.	விமலராஜன் காவியா	182	54
5.	நாகேந்திரம் ஆகாஷ்	180	80
6.	பகீரதன் அஜானா	176	144
7.	கேதீஸ்வரன் கேஷிகா	176	144
8.	தவேஸ்வரன் சந்தோஷ்	175	173
9.	கந்ததாசன் சாகித்யன்	175	173
10.	மோகனராசா இந்து	175	173
11.	நேசலிங்கம் சசிகாந்	173	226
12.	பாஸ்கரன் மனோஜ்	172	248
13.	ஜெகதீஸ்வரன் ஹவிஸ்	172	248
14.	வசீகரன் கிருஷானி	172	248
15.	சிவானந்தஜோதி விஸ்ணுகா	172	248
16.	பிரபாகரன் துஷிகரன்	170	316
17.	தவநாதன் விருஷன்	170	316
18.	சுரேந்திரன் சஞ்சயன்	167	424
19.	சுதர்சன் யதுஷா	167	424
20.	விநாயகமூர்த்தி திருநீபன்	166	466
21.	தவராசா யாகுலன்	165	501
22.	சிவநேசன் விதுஷன்	164	537
23.	சத்தியசீலன் அவந்திக்கா	163	588
24.	கிருஷ்ணமூர்த்தி பிரதீபன்	162	645
25.	திலகநாதன் ஜனனி	162	645
26.	சோதிலிங்கம் கிருஷன்	158	837
27.	ஜெகதீஸ்வரன் ஜெயசங்கர்	158	837
28.	இராதாகிருஷணன் சாய்கீசன்	157	891
29.	புலேந்திரராஜ் கஜனிக்கா	155	1001

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012
வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் விபரம்

		புள்ளி	மாவட்ட நிலை
1.	இராஜகுரு மாதுமை	188	8
2.	மதீஸ்வரன் மாதங்கி	183	27
3.	ரவிக்குமார் சங்கவி	179	48
4.	சிறிவிமலகாந்தன் சஞ்சயன்	175	82
5.	ஆனந்தராசா ஆர்த்தி	172	126
6.	மனோராஜா அபிநயா	170	178
7.	கொலிந்திரன் ஐலின்இஷானி	170	178
8.	பிரபானந்தன் பிரபானுசன்	168	225
9.	பாக்கியதாசன் மிதிலா	168	225
10.	குணேஸ்வரன் கலாகேசவன்	167	249
11.	நித்தியஜோதி சகீர்ராம்	165	296
12.	ஆறுமுகநாதன் தர்சினி	165	296
13.	சுதர்சன் தக்ஷா	165	296
14.	சுபாகரன் கலாதரன்	162	382
15.	தேவராசா விஸ்ணுஜன்	159	488
16.	குலேந்திரம் கௌதமன்	158	519
17.	சிறிகந்தசேகரம் அபிராம்	157	553
18.	சண்முகநாதன் நிவாசிகா	155	639
19.	சந்திரபாகு விதுஷன்	153	728
20.	கனகலிங்கம் விகிர்தன்	152	764
21.	கருணாகரன் வினோஜன்	151	803
22.	ஜெயக்குமார் வர்ஷிகா	150	854
23.	ஜெகநாதன் ஆரணி	148	963

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011
வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் விபரம்

		புள்ளி	மாவட்ட நிலை
1.	விமலராஜன் சஞ்சித்	172	191
2.	யோகேந்திரன் வேணுஷன்	168	284
3.	யோகேந்திரன் மதுஷனன்	167	315
4.	யோகராசா நிருஷிகன்	166	353
5.	பிரசாத் விதுர்ஷன்	166	353
6.	குலேந்திரன் பிரகலாதன்	166	353
7.	ரவிக்குமார் அபிராம்	164	432
8.	இராஷேஸ்வரன் மதீஷன்	163	472
9.	கண்ணதாசன் கிருஷிகன்	161	547
10.	சிறிகந்தசேகரம் ஆரணன்	160	594
11.	செல்வானந்தன் மைத்திரேஜி	160	594
12.	மகேஸ்வரன் ஹர்சிகா	159	638
13.	திரவியநாயகம் சோபனா	159	638
14.	ரகு சுபீட்ஷணன்	158	685
15.	சிவராசா ஷாமிலிக்கா	158	685
16.	ஜெனார்த்தனன் ஹரிஸ்மேனன்	158	685
17.	ஜெயகாந்தன் கஜிதா	156	783
18.	சற்குணன் சாருஜன்	155	824
19.	செல்வச்சோதி அனுராஜ்	155	824
20.	குணரத்தினம் ஷதுஜா	155	824
21.	ஞானமூர்த்தி துவாரகன்	153	933

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2010
வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் விபரம்

		புள்ளி	மாவட்ட நிலை
1.	சிவநேசன் யதுர்ஷன்	172	41
2.	பிரபாகரன் கேதாரணி	170	60
3.	ரவிக்குமார் ஆர்த்திகா	169	69
4.	யோகேந்திரன் சாம்பவி	165	133
5.	குகதேவன் கஜீவன்	154	456
6.	கிருஷ்ணயோகன் ஆதனா	152	541
7.	ஜெயசீலன் சிந்துஜா	147	782
8.	தவக்குமார் ஷானுஜா	147	782
9.	திலகராசா துஷானி	146	830
10.	பரமேஸ்வரன் வைஷ்ணவி	145	875

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2009
வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றோர் விபரம்

		புள்ளி	மாவட்ட நிலை
1.	ரவீந்திரன் சாருஜன்	163	119
2.	நேசராசா சிந்துஜன்	161	154
3.	தவேந்திரன் அபிலாஷ்	159	201
4.	தேவகுமாரன் செந்தில்குமரன்	159	201
5.	சிவானந்தன் நிரோசன்	155	299
6.	அன்பழகன் ஆரணி	153	370
7.	பத்மராஜன் சதுஜன்	151	429
8.	செல்வானந்தன் ஞானானந்தன்	151	429
9.	முருகதாஸ் வித்யா	151	429
10.	சிவச்சந்திரன் நீலகானன்	149	496
11.	சற்குணன் தயானி	149	496
12.	தேவகுமார் வதுஷா	147	576
13.	இராஷேஸ்வரன் யதீஷன்	146	616
14.	பரலோகராஜா அபிராம்	146	616
15.	கௌரிபாலகுருக்கள் ஸ்ரீபாரத்வர்ஜசர்மா	145	657
16.	நாகேந்திரம் அபர்ணா	145	657
17.	கீதாப்பொன்கலன் கவிதா	144	710
18.	மங்கேஷ்கரன் அனுர்தா	144	710
19.	கருணாநிதி நிதுஷா	143	764
20.	குணரத்தினம் நிவேதன்	142	814
21.	கிருஷ்ணமூர்த்தி இலக்கணன்	142	814
22.	தவக்குமார் வதனி	142	814
23.	சிவசுப்பிரமணியம் சிந்துஜன்	141	869
24.	மகேஸ்வரன் தயானி	141	869
25.	துரைராசா கோணேஷன்	141	869
26.	சிவதாஸ் தர்சி	141	869
27.	சிவசங்கர் நிருஷாந்	140	932
28.	சுரேந்திரன் சுரேக்கா	140	932

வினாடி வினாப் போட்டி - 2013

கோட்ட நிலை	1
வலய நிலை	1
மாகாண நிலை	2

பங்குபற்றிய மாணவர்கள் தரம் - 05

1. சிவபாலன் சிவானுஜன்
2. தவேஸ்வரன் சந்தோஷ்
3. பாஸ்கரன் மனோஜ்
4. கேதீஸ்வரன் கேஷிகா
5. விமலராஜன் காவியா

ஆங்கில தினப் போட்டி - 2013

நிகழ்ச்சி	வகுப்பு	மாணவர் பெயர்	பாடசாலை மட்டம்	கோட்ட மட்டம்	வலய மட்டம்	மாவட்ட மட்டம்	மாகாண மட்டம்	தேசிய மட்டம்
Copy writing	3	மோகன் அர்ஜுன் உதயகுமார் கீர்த்தனி ஸ்ரீவிமலகாந்தன் டேரிகா	1 2 3	1	2	-	2	
	4	கருணாகரன் காவியா பாஸ்கரன் செம்பூவினி சசீந்தன் கௌசிகா	1 2 3	2	1			
	5	சத்தியசீலன் அவந்திகா விமலராஜன் ஹாவியா சுப்பிரமணியம் மயூரவேணி	1 2 3	2				
Reading aloud	3	ரவீந்திரன் சுஜானி மோகன் அர்ஜுன் உதயகுமார் கீர்த்தனி	1 2 3	2	2			
	4	கருணாகரன் காவியா குகதாஸ் சஞ்சிகா பாஸ்கரன் லகீசன்	1 2 3	2 3	1			
	5	கேதீஸ்வரன் கேஷிகா விமலராஜன் ஹாவியா பாஸ்கரன் மனோஜ்	1 2 3	3				
Recitation	3	யோகேந்திரன் சுபசங்கவி கந்ததாசன் தசரத் ரவீந்திரன் சுஜானி	1 2 3	3				
	4	சிவசுப்பிரமணியம் அட்சயா பகீரதன் கிஷாளினி குகதாஸ் சஞ்சிகா	1 2 3	2 1	2			
	5	சிவபாலன் சிவானுஜன் சிறிஸ்குமார் கஜன் கேதீஸ்வரன் கேஷிகா	1 2 3	1	1			

சித்திரப் போட்டி - 2013

தரம்	மாணவர் பெயர்	பாடசாலை மட்டம்	கோட்ட மட்டம்	வலய மட்டம்
1	தவேந்திரன் அபிஷான் மதிவண்ணன் கார்த்திகன் பரமேஸ்வரன் அஷானி	1 2 3	1	2
2	ஜெயபாலராஜா கார்த்திகாயினி குலதேவன் கருணியா பகீரதன் ஆரணி	1 2 3	2	
3	உதயகுமார் கீர்த்தனி சிவகுமார் துவிகரன் சந்திரலிங்கம் கம்ஷவி	1 2 3	1	2
4	செபகரன் மரீஷா முருகதாஸ் அனுதர்ஷன் தேவபாலன் அஸ்வினி சிவசுப்பிரமணியம் அட்சயா பாக்கியநாதன் பிரபாஜிதன்	1 2 3 3 3		
5	சிவநடராசா ஷாயித்தியன் லோகேந்திரா ஜனனி தவேஸ்வரன் சந்தோஷ்	1 2 3		

கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

1	திலீபன் நிருஷன்	நீளம்பாய்தல் ஓட்டம்	முதலாம் இடம் மூன்றாம் இடம்
2	சுரேந்திரன் சஞ்சயன்	ஓட்டம்	இரண்டாம் இடம்
3	சிவபாலன் பிரவின்ஜா	ஓட்டம் உயரம்	முதலாம் இடம் முதலாம் இடம்
4	லோகேந்திரா ஜனனி	உயரம்	இரண்டாம் இடம்

வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1	திலீபன் நிருஷன்	நீளம்	முதலாம் இடம்
2	சிவபாலன் பிரவின்ஜா	உயரம் ஓட்டம்	முதலாம் இடம் இரண்டாம் இடம்
3	லோகேந்திரா ஜனனி	உயரம்	மூன்றாம் இடம்

விரைவு கணித கணித்தற் திறன் போட்டி - 2013

தரம்	மாணவர் பெயர்	பாடசாலை மட்டம்	கோட்ட மட்டம்	வலய மட்டம்	மாகாண மட்டம்
2	இரஞ்சிதன் துஷோபன்	1	2		
	ஜெயகாந்தன் ஆற்றவன்	2			
	பகீரதன் ஆரணி	3			
	கஜேந்திரன் கவிவர்ஷா	4			
	ஞானமூர்த்தி நீரஜா	5			
3	சிவநேசன் ஆர்நிகன்	1	1	2	
	சியாமளன் நிதுஷ்	2			
	சிவநேசன் சிநோஜன்	3			
	சிவறஞ்சன் தனோஜ்	4			
	உதயகுமார் கீர்த்தனி	5			
4	உதயகுமார் ஹாவ்யா	1	3	1	
	யோகேந்திரன் அகல்யன்	2			
	முகுந்தராஜ் கவிநயா	3			
	குகதாஸ் சஞ்சிகா	4			
	நேசராசா சந்துரு	5			
5	சிவபாலன் சிவானுஜன்	1			
	விமலராஜன் காவியா	2			
	பாஸ்கரன் மனோஜ்	3			
	பாரதிராசன் ஆர்த்தி	4			
	மோகனராசா இந்து	5			

திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மனனப் போட்டி - 2013

தரம்	மாணவர் பெயர்	பாடசாலை மட்டம்	கோட்ட மட்டம்	வலய மட்டம்	மாகாண மட்டம்
1	நகுலன் சங்கீத்	1	2		
	செந்தூரன் ஆர்த்திகன்	2			
	தில்லைநாதன் வினுஷியா	3			
2	பகீரதன் ஆரணி	1	1	1	
	ஜெயகாந்தன் ஆற்றலன்	2			
	சிவராமன் துர்க்கா	3			
3	பாலகிருஷ்ணன் அபிநயன்	1	1	3	
	சிவறஞ்சன் தனோஜ்	2			
	ஸ்ரீவிமலகாந்தன் டேரிகா	3			

4	குகதாஸ் சஞ்சிகா பகீரதன் கிஷாளினி வரதராஜா மிதுன்	1 2 3	2	2	
5	பகீரதன் அஜானா பாஸ்கரன் மனோஜ் சிவானந்தசோதி விஷ்னுகா	1 2 3	3		

தமிழ்மொழித் தினம் - 2013

போட்டியின் பெயர்	போட்டியாளர் பெயர்	பாடசாலை மட்டம்	கோட்ட மட்டம்	வலய மட்டம்	மாவட்ட மட்டம்	மாகாண மட்டம்
ஆக்கம் எழுத்து	கேதீஸ்வரன் கேஷிகா பாஸ்கரன் மனோஜ் விமலராஜன் காவியா	1 2 3	1	1	3	
வாசிப்பு	சிவபாலன் சிவானுஜன் பகீரதன் அஜானா விமலராஜன் காவியா	1 2 3	1	2		
ஆக்கத்திறன் வெளிப்பாடு	தவேஸ்வரன் சந்தோஷ் தவராசா யாகுலன் சிவனேசன் விதுஷன்	1 2 3	1	3		
பேச்சு	சிறீஸ்குமார் கஜன் பகீரதன் அஜானா மோகனதாஸ் கிர்திகா	1 2 3	2	1	1	3
பாவோதல்	பகீரதன் கிஷாளினி குகதாஸ் சஞ்சிகா யோகேஸ்வரன் சுஸ்மிதா	1 2 3				
இசையும் அசைவும்	சத்தியசீலன் அவந்திக்கா பகீரதன் கிஷாளினி பிரபானந்தன் பிரதிக்ஷா	1 2 3	2	2		

நூலகப் போட்டி - 2013

வடமராட்சி ஆரம்பப் பிரிவுப் பாடசாலை நூலகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் எமது பாடசாலை நூலகம் வலய மட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளமை பெருமைக்குரியதாகும்.

சிறுவர் அரங்கு

கோட்ட மட்டம் முதலாமிடம் வலய மட்டம் இரண்டாமிடம்

பாடசாலை நிகழ்வுகளின் நிழல்கள்

கால்கோள் விழா

தரம் 3 மாணவர்களுக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பத்தின் சில பதிவுகள்

கண்காட்சி

இல்ல மெய்வன்மைப் போட்டி

இல்ல மெய்வன்மைப் போட்டி–2013

இல்ல மெய்வன்மைப் போட்டி–2013

பிரதான வாயில் திறப்பின்போது - 2013

சின்னஞ் சூட்டல்

சாரணர்களும் பொறுப்பாசிரியர்களும்

மாதிரி சந்தை

கணனி அறையில் மாணவர்கள்

5000 பாடசாலைகள் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம்

சதுரங்கப் பயிற்சி ஆசிரியர் கௌரவிப்பு

சிறுதோழியர் நிகழ்வு அங்குரார்ப்பணம்

வாணி விழா

ஆசிரியர் தின விழா

நூலக திறப்பு விழா - 20.07.2011

பரிசளிப்பு விழா

2012

2012

2012

2011

பரிசளிப்பு விழா
J/NELLIYADY. M.M.T.M. SCHOOL
PRIZE GIVING
2011

2011

2010

2010

சிலை திறப்பு விழா

அதிபர் அலுவலகம்

சிரமதானம்



தரம் 05 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் - 2012

தரம் 05 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் - 2013

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.”

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.

The twain that lore of numbers and of letters give
Are eyes, the wise declare, to all on earth that live.

YASO TEX

திருமண பட்டுப்புடைவைகள், வேட்டிகள்
மற்றும் நாளுக்குநாள் மாறும் நவீன
டிசைன்களை நவநாகரிகத்திற்கு
ஏற்ப ஆண், பெண் இருபாலாரதும்
சகல ஆடைகளையும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

யசோ ரெக்ஸ்

பிரதான வீதி,
நெல்லியடி.

தொ. பே. இல. : 021 226 4997

கோகில்ஸ் பேபி நீட்ஸ்
Kokil's Baby Needs

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பிரசவத்தின்போது
தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே
இடத்தில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

கோகில்ஸ் பேபி நீட்ஸ்

மட்டுமே.

தேவையான பொருட்கள்

தாய்க்குத் தேவையானவை

- பெட்ஜக்கேற் – 3
- லுங்கி – 3
- வெள்ளைப் பாடவாடை – 1
- வெள்ளை பப்பிளின் துணி – 6 மீற்றர்
- வெள்ளைப் பொலித்தீன் – 2 மீற்றர்
- லூப் கோட்டெக்ஸ் – 2
- பெற்சீற் – 1
- சட்டை – 1
- சோப்கேஸ்
- பவுடர் கேஸ்
- பிளேற்
- சொப்பின் பாக்
- சேவெக்சல்

குழந்தைக்குத் தேவையானவை

- துவாய் பெரிது – 1
- துவாய் சிறிது – 1
- நப்பின் தேவையானது
- பேபி சட்டை
- தொப்பி, சொக்ஸ்
- நுளம்பு வலை
- றபர் சீற்
- வெப்பமானி

இல. 65, பிரதான வீதி,
நெல்லியடி.

Tel : 021 2263545
Hot Line : 077 6661805

அம்பிகை நகை மாடம்

உங்கள் சகலவிதமான நகை தேவைகளிற்கும்
உங்கள் நம்பிக்கை வென்ற
அம்பிகை நகைமாடம்

த. விஜயமோகன்

நெல்லியடிச் சந்தி,
நெல்லியடி.
தொ. பே. 021 2263285

Royal Electronic Electrical

No. 6, Point Pedro Road,
Nelliady.
T.P. : 021 226 4789

CBD

Chithamparapillai Book Depot





No. : 60, 64
Mainstreet, Nelliady.
Tel - 021 2263223
Fax - 021 2264155
email - sivamcbd@yahoo.com

கிசோனி நகை மாளிகை

அதி நவீன டிஸைன்களில்
22 கரட் தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்

ஜனனி நகை மாடம்



உறுதியும் உத்தரவாதமும் உள்ள
22 கரட் தங்க வைர
நகைகளை பெற்றுக் கொள்ள
சிறந்த ஸ்தாபனம்.

பிரதான வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
தொ. பே. 077 3643286

மத்திய மகாவித்தியாலய வீதி,
நெல்லியடி.
தொ. பே. 077 3643286

கலைவாணி

ரெக்ஸ்

கலைவாணி

கண்ணாடிக் களஞ்சியம்

அழகுசாதனப் பொருள்கள் மற்றும் சகல விழாக்களுக்குமான
பட்டுப்புடவைகளையும்
அன்பளிப்புப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான வீதி, நெல்லியடி.

T.P : 021 226 3161, 0777111001

SINGER Plus

SINGER Plus

34, Point Pedro Road,
Nelliady.
021 2264937, 0756354832

NIDUSHA STUDIO

Main Street, Nelliady,
Srilanka.
Tel : 0771727744, 021 2262512

சானுயா சேவிஸ் ரேசன்

சானுயா சுத்திகரிப்பு நிலையம்

சகலவிதமான வாகனங்களும்
சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

நாவலர்மடம்,
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை
வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்கள்
சகிதம்
மிக உயர்ந்த வட்டி

Arunalu

COMMERCIAL

ரண் கினும்

- 0.5% மேலதிக வட்டி
- இலவச ஆயுட் காப்புறுதி (அதிகபட்சமாக ரூ. 500 000 வரை)
- டெபிட் அட்டை
- சர்வதேசரீதியில் பாவிக்கக்கூடிய டெபிட் அட்டை
- தகைமைகளுக்கு இணங்க கணக்கு வைத்திருப்போருக்கு
- இலங்கை வங்கியின் கடன் அட்டை
- குறைந்த வட்டியுடன் கடன் வசதி
- நிலையான கட்டளை வசதி
- வைப்பிற்கு இணங்க 90% வரை உடனடிகடன்
- கையடக்கத் தொலைபேசி ஊடாக வங்கிச் சேவை
- இணையத்தள வங்கிச் சேவை.

ரண் கெகுண

BOC Savings

18 plus

14+PLUS

இலங்கைவங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

வைஷ்ணவி நகைப்பூங்கா

Vysnavi Nagaipoonka



பிரதான வீதி,
நெல்லியடி.

Main Street,
Nelliady.

Tel : 021 226 4519

ஜெயாஸ் ஷெக்ஸ்

நெல்லைநகரில் ஓர் புதிய உதயம்

திருமண பட்டு புடவைகளும் மற்றும்

அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும்

118, பிரதான வீதி,
நெல்லியடி.

T.P.No. : 021 226 4444

ISHA TECH



Branded PC's,
Assembled PC's,
Laptops, Processor,
Mother Board,
Monitor, Hard disk,
Ram, Bluray drive,
DVD writer, Printer,
Scanner, Web camera,
Dongle, Keyboard,
Mouse, UPS, Flash drive,
woofer, Head phone....



போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளவும் கணனிகளில் ஏற்படும் பழுதுகளை உத்தரவாதத்துடன் திருத்தம் செய்து கொள்ளவும் நாடுங்கள்.

தரம் I முதல் தரம் 10 வரையான மாணவர்களுக்கான அடிப்படைக் கணனிப் பயிற்சிகளும், O/L, A/L மாணவாகளுக்கான ICT வகுப்புகளும் நடைபெறுகின்றது.

Kodikamam Road
Nelliady.

T.P : 021 226 2936, 0775711146
E-Mail : ishatech@hotmail.com

அட்டைப்பட வடிவமைப்பு : **ISHA TECH** - அனுசரனை : கொ.ஜலின்

என்றென்றும் நன்றிக்குரியவர்கள்

எமது பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டு செயற்பட்டு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சி. சத்தியசீலன் Sir, மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. வை. செல்வராசா Sir, வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. நந்தகுமார் Sir, மாகாண கல்வி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திரு. சி. புஷ்பலிங்கம் Sir, யாழ் வலயக் கல்விப் பணிப்பாளரும் எமது பழைய மாணவருமான திரு. செ. உதயகுமார் Sir மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள்

- பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலர் மற்றும் உறுப்பினர்கள், அபிவிருத்திக் குழு செயலர் மற்றும் உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க தலைவர், செயலர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள்
- இந்நூற்றாண்டு மலர் வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த மலர்க்குழுவினர்
- இம் மலர் சிறப்பாக மலர்வதற்கு பண உதவிகள் மேற்கொண்ட எமது பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கொமர்ஷல் வங்கி மற்றும் வணிக நிறுவனங்கள்
- நூலுக்கான ஆக்கங்கள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய மதகுருமார்கள், பெரியோர்கள்
- இந்த விழா மேடை மற்றும் ஒலிபரப்பு, பந்தல் போன்றவற்றை மிகவும் குறைந்த செலவில் அமைத்துத் தந்த ஆனந் மணப்பந்தல் உரிமையாளர்
- இன்றைய நிகழ்விற்கான இலவச VDO மற்றும் படப்பிடிப்பாளர்
- பாடசாலையில் உயர்வில் பெரும் ஊக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள்
- திரு. வ. ஆ. தங்கமயில் நில அளவையாளர் இன்றைய மலருக்கான வாழ்த்துப்பாவினை வழங்கியதுடன் பாடசாலைக்கான நில அளவை, படம் அத்தனையும் இலவசமாக அமைத்துத் தந்தார்.
- புலமைப் பரிசில் நிதியினை வழங்கும் பாஸ்கரன் புலமைப்பரிசில் நிதியத்தினர்
- சாதனை படைத்து பாடசாலையை உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் மாணவர்கள் அனைவருக்கும்

T/NEL.L.TADV.M.H.T.M. SCHOOL